
அமுதசுரபி
மே'92 - விலை ரூ:5
பொருளாதாரச் சிறப்பிதழ்



Acc. No. 10588.

அமுதசுரபி

விலை : ரூ. 5

நாற்பத்தைந்தாம் ஆண்டின் தொடக்கம்

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே
— பாரதியார்

◆ மே - 1992 ◆ ஆங்கிரஸ - வைகாசி ◆ மலர் : 45 ◆ இதழ் : 1
◆ ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன் ◆ பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா ◆ கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியன் ஐ.ஆர்.டி.எஸ். ◆ மேலட்டை வண்ணப்படம் : யோகா ◆ இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார்.

அட்டையில் : குழந்தை அருணாவுக்குச் சேமிக்கக் கற்றுக் கொடுக்கிறார் திருமதி ரஜினி.

உங்கள் 'அமுதசுரபி'

44 ஆண்டுகளுக்கு முன்பு சித்திரைப் புத்தாண்டு நாளில் 'அமுதசுரபி' பிறந்தது.

அந்த இலக்கியக் குழந்தைக்கு 'அமுதசுரபி' என்று அழகிய திருப்பெயரைச் சூட்டியவர் சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை.

முதல் இதழ் மேலட்டையை வரைந்தவர் திரு ஆர்யா.

ஆர்யா அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர். தன் உயிரைத் துரும்பென மதித்துப் போராட்ட வேள்வியில் குதித்தவர்.

சென்னைக் கோட்டையில், ஆணவச் சின்னமாகப் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷாரின் 'யூனியன் ஜாக்' கொடியை இறக்கி, மூவர்ண இராட்டைக் கொடியை ஏற்றியவர். அவருடைய துணிகரச் செயலை விவரிக்கப்போயின் காவியமாகும்.

இன்று நாம் காணும் மகாகவி பாரதியாரின் திருஉருவத்தை வரைந்து முண்டாசுக் கவிஞரை நம் இதயத்தில் பதிய வைத்த ஓவிய மேதை.

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப் பயிரைக் கண்ணீரால் காத்தோம்" என்று மகாகவி பாடுவாரே அதுபோன்று 'அமுதசுரபி' என்ற இலக்கியப் பெட்டகத்தை வளர்த்தவர்கள் யார் யார் என்று நினைவில் கொண்டு வந்தால், மெய்சிலிர்க்கிறது., வரலாறாக மாறக்கூடிய செய்திகள். பேரறிஞர்கள் பலர் 'அமுதசுரபி'யின் இலக்கியப் பண்ணையை, பூந்தோட்டத்தைப் பண்படுத்தியவர்கள்.

அமுதசுரபி இரண்டு தலைமுறைகளாக வளர்ந்து வாழ்ந்து வரும் தகுதியைப் பெற்றிருக்கிறது என்று பெருமைப்படலாம்.

நாற்பத்தைந்தாவது ஆண்டின் முதல் இதழைப் பொருளாதாரச் சிறப்பிதழாக வழங்குவதில், 'அமுதசுரபி' வெளியீட்டாளர் திரு. ஏ.வி.எஸ். ராஜா அவர்களுடன் இணைந்து நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

21ஆவது நூற்றாண்டை நோக்கிச் செல்லும் 'அமுதசுரபி' காலத்திற்கேற்றவாறு தமிழ்ப் பணி புரிய தமிழ்ப் பெரு மக்கள் ஆதரவு தருவார்கள் என நம்புகிறேன். ஃ

பாரதமும்.... சுவர்ண த்வீபமும்

இந்தோனேசிய நாட்டின் கௌரவ கான்ஸல் திரு எம்.ஏ. பதம்ஸி அவர்களைச் சந்தித்து, பாரதத்திற்கும் - இந்தோனேசிய நாட்டுக்கும் உள்ள பழம்பெருமைகளைப் பற்றியும் இரு நாடுகளுக்கும் உள்ள பொருளாதார - வாணிபத் தொடர்பு குறித்தும் உரையாடினோம். அந்தச் சந்திப்பின் சுருக்கத்தை இங்கே காணலாம்.

இந்தியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையே அரசியல், சமூக, பொருளாதார, கலாசார உறவுகள் பற்றிய தங்கள் கணிப்பு என்ன?

இரு நாடுகளுக்கிடையேயும் உள்ள உறவுகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே தொடங்கப் பெற்றவை. புராதன இந்தியாவில், 'சுவர்ண த்வீபம்' (தங்கத் தீவு) என்ற பெயரால் இந்தோனேசியா அழைக்கப்பட்டு வந்தது. 1600 ஆம் ஆண்டுகளில் இந்தோனேசியா முக்கியமாகப் பல வண்ணப் பட்டுத் துணிகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்தது. அண்மைக்கால வரலாற்றிலும் இரு நாடுகளுக்கிடையே இடம் பெற்றுள்ள நெருக்கமான உறவை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் ஏராளம். பண்டித நேரு, டாக்டர் சுகர்ணோ ஆகியோரின் நெருங்கிய நட்பு, அணிசேராக் கொள்கையை வற்புறுத்திய முதல் தலைவர்கள் என அவர்கள் இருவரும் பெற்றுள்ள பெருமை, பஞ்சசீலக் கொள்கையை வகுத்த பாண்டுங் மாநாடு என இவ்வாறு நிறையச் சொல்லிக் கொண்டே போகலாம்.

○ இப்போதைய தொழில் தொடர்புகள் எவ்வாறு உள்ளன? வருங்காலத்தில் இவை பெருக என்ன என்ன வாய்ப்புகள் உள்ளன?

பாரம்பரியமான வரலாற்றுத் தொடர்புகள், அரசியல் ரீதியான நெருக்கம், பூகோ[illegible] ரீதியில் அண்மையில் அமை[illegible] திருப்பது போன்ற ப[illegible] சாதகமான அம்சங்கள் இரு[illegible] தாலும் வர்த்தக உறவுக[illegible] சொல்லும்படியாக இல்லை[illegible] மிகப் பெரிய அளவி[illegible] வர்த்தகம் இடம்பெற நிறை[illegible] வாய்ப்புகள் உள்ளன.

○ அவற்றைப் பற்றிச் சற்[illegible] விவரமாகக் கூற முடியுமா?

இரு நாடுகளுக்கிடையே[illegible] தொழில் - பொருளாதார உற[illegible] கள் நெருக்கமடையப் ப[illegible] முயற்சிகள் மேற்கொள்ள[illegible] பட்டு வருகின்றன. 1987 இ[illegible] ஒரு கூட்டு வர்த்தகக் கு[illegible] நிறுவப்பட்டது. பாமாயி[illegible] ரப்பர், துணிமணிகள், நெசவு[illegible] தொழில் சம்பந்தப்பட்ட இய[illegible] ரங்கள், என்ஜினியரிங் - ர[illegible]



திருமதி பதம்ஸி, தமிழ்நாடு முதல் அமைச்சர் டாக்டர் செல்வி ஜெயலலிதா, டாக்டர் இட்டா பாகுஸ் மந்த்ரா, (இந்தோனேசிய தூதர்) திருமதி மந்த்ரா. திரு எம்.ஏ. பதம்ஸி (இந்தோனேசிய கௌரவ கான்ஸல்)

யனம் - மருந்துப் பொருட்கள் ஆகியவற்றைக் கவனிப்பதற்காகச் செயற்குழுக்களை இந்தக் கூட்டு வர்த்தகக் குழு நிறுவியது.

1988 இல் இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டது.

இரு நாடுகளுக்கிடையேயும் வர்த்தகம் பெருகத் தொடங்கியுள்ளது. 1990 இல் 60 மில்லியன் டாலர் மதிப்புக்கு இந்தியா இறக்குமதி செய்துள்ளது. 1500 மில்லியன் டாலர் மதிப்புக்கு இந்தோனேசியாவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

மத்திய அமைச்சர் திரு. ப.சிதம்பரம் இந்தோனேசியாவுக்கு அண்மையில் சென்று அந்நாட்டு அமைச்சர் திரு. அரிஃபின் எம். சிரேகருடன் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து பொருளாதார உறவுகள் மேலும் விரிவடைய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. அரிசி, கோதுமை, சர்க்கரை, பருத்தி, சிமெண்ட் ஆகியவற்றின் ஏற்றுமதி அதிகரிக்கவும் இந்தோனேசியாவிலிருந்து பாமாயில், செம்பு ஆகியவற்றை அதிக அளவில் இறக்குமதி செய்யவும் சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுள்ளன. தவிர, இரு நாடுகளும் கூட்டு நிறுவனங்களை அமைக்கவும் தங்கள் திறனையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

○ கலாசாரப் பரிவர்த்தனை சம்பந்தமாக ஒப்பந்தம் ஏதேனும் ஏற்படவுள்ளதா?

அமைச்சர் திரு.ப.சிதம்பரம் அந்நாட்டுக்குச் சென்றபோது பல துறைகள் சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. அதற்கு முன்னர் இந்தோனேசியாவிலிருந்து ஒரு தூதுக்குழு இந்தியாவுக்கு வந்திருந்தபோது செய்திப் பரிவர்த்தனைக்கும் வர்த்தகப் பெருக்கத்தை ஊக்குவிக்கவும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது.

○ இந்தோனேசியா நமது நாட்டில் விசேஷமாகச் செலுத்தக்கூடிய அக்கறைகள் எவை?

இந்தோனேசியாவில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு வளம் மிகுதி. இந்தியாவில் எரிசக்தி வளம் குறைவு. அதே நேரத்தில் இயந்திரத் தொழில் நுட்பத்திறனில் இந்தியா மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்தோனேசியாவில் இயற்கை ரப்பர் வளம் மிகுதி. இந்தியாவில் இப்போது ரப்பர் தேவை அதிகம். ஆனால் ரப்பர் தொழில் நுட்பத்தில் சிறப்பான திறனைப் பெற்றுள்ளது. ஆகவே பரஸ்பர ஆற்றல் பரிமாற்றத்துக்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன.

பல்வேறு இயந்திர சாதன உற்பத்தி, மின் உற்பத்தி சாதனங்கள், மோட்டார் வாகன உள் உறுப்புகள், எண்ணெய் சுத்திகரிப்புக் கருவிகள் போன்ற பல துறைகளில் இந்தியா தன் தொழில்நுட்பத் திறனை இந்தோனேசியாவுக்கு வழங்க முடியும்.

சிவில் கட்டுமானம், சாலை நிறுவுதல், மின் உற்பத்தி மற்றும் விநியோகம், இரயில்வே, நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் நீர் நிர்வாகம் ஆகிய துறைகளில் இந்திய நிறுவனங்கள் இந்தோனேசியாவில் பங்கேற்க முடியும்.

ரேடார், எலெக்ட்ரானிக் கட்டுப்பாடு மற்றும் சோதனைக் கருவி, மெடிகல் ரேடியாலஜி, டிரான்ஸ்மிஷன் கேபிள்கள், தேர்ந்தெடுத்த வீட்டு உபயோகப் பொருள்கள் உற்பத்தி போன்ற பல துறைகளில் கூட்டு முயற்சியாக ஈடுபடவும் வாய்ப்புகள் உள்ளன.

○ சுற்றுலா, கலாசார மற்றும் பரஸ்பர உறவுகள் பற்றி...?

இரு நாடுகளுமே தொன்மையான கலாசாரங்களைப் பெற்றவை. வரலாற்றுச் சிறப்பு மிக்க சுற்றுலாத் தலங்களைப் பெற்றவை. இரு நாடுகளுமே நீண்ட நெடுங்காலம் தொடர்புகள் கொண்டவை. சுற்றுலா மற்றும் கலாசாரத் துறைகளில் பரஸ்பர உறவுகளை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

பேட்டி : வனிதா.

காவியப் போட்டி

இந்தியன் வங்கி மற்றும் ஸ்ரீராம் டிரஸ்ட் - அமுதசுரபி வெளியீட்டாளர்கள் இணைந்து நடத்திய காவியப் போட்டிக்கு வந்த காவியங்களில், கீழ்க்கண்ட காவியங்கள் பரிசுக்குரியவை என்று நடுவர்குழு ஒருமனதாக முடிவுசெய்கிறது. மேலும், இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசுகளை இணைத்து இரண்டு காவியங்களுக்கு, தனித்தனியே இரண்டாம் பரிசு ரூ 2500/- வழங்கலாமெனவும் இக்குழு தீர்மானிக்கிறது.

முதல் பரிசு ரூ 5000/-

காவியத்தின் பெயர்	இயற்றியவர் பெயரும் முகவரியும்
'ஜகத்குரு காவியம்'	புலவர் வே. பிரபாகரன், எம்.ஏ., பி.எட்., R.56/1, கோட்டூர் புரம், சென்னை, 600035.

இரண்டாம் பரிசு ரூ 2500/-

1) 'மின்மினி'

கவிஞர் நா. மீனவன்
(நா. மீனாட்சி சுந்தரம், எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.,)
24 B, இராமசாமி செட்டியார் வீதி,
பனந்தோப்பு, காரைக்குடி, 623001

2) இளைய பாரதத்தினாய், வா. வா. வா.

கவிஞர் சோழவள ஜெயராம்,
ஓலப்பாளையம் P.O.,
(Via) காங்கயம். 638701

நா. பி. வரதராசன்
26/4/92

[signature]
26/4/92

[signature]
26.4.92

ஞாபகம்



'கர்மயோகி'

படித்ததை மறக்காமல் நினைவு வைத்துள்ளவர்கள், ஒருமுறை கேட்டதை அப்படியே கிரகித்துக் கொள்பவர்கள், 10 வருஷத்திற்கு முன் நம் வீட்டிற்கு வந்தவருக்குச் செய்துபோட்ட சமையல், 25 வருஷத்திற்கு முன் கையெழுத்திட்ட ஃபைலில் உள்ள செய்தி, 3ஆம் வகுப்பில் படித்த நண்பர்களுடைய பெயர்கள் ஆகியவற்றை நினைவு வைத்துக் கொள்பவருண்டு. இதற்கு எதிராக இரண்டு வருஷத்திற்கு முன் எதிர் வீட்டிலிருந்தவர், நேற்று படித்த பாடம், மூன்று நாள் முன் தானிட்ட வேலை, பரிட்சை எழுதிக் கொண்டிருக்கும்பொழுது தன் ரிஜிஸ்டர் நம்பர் ஆகியவற்றை மறந்து நிற்பவர்களும் உண்டு. நினைவுக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. அதனால் நினைவையே அறிவு என்று கருதுபவர்களும் உண்டு.

நினைவு வாழ்வில் முன்னேறப் பயன்படும். நினைவு குறைந்தால் சரிவரத்தொழில் செய்ய முடியாது. பலரும் நம்மை ஏமாற்றி விடுவார்கள். படித்த பாடம் நினைவில் நிற்பதில்லை. செய்த வேலை மறந்து வருகிறது என்பவர்கள், தங்கள் ஞாபகமறதியை ஒரு தண்டனையாகவே ஏற்றுக் கொள்கிறார்கள். அதற்கு அறிவு பூர்வமான வழியுண்டு. அதனால் பெரும்பாலும் இதுவரை பட்ட சிரமங்களை நீக்கலாம். அன்னை முறையுண்டு. அதன் மூலம் ஞாபகமறதியே போய்விடும். அன்னை முறைகளைப் பூரணமாக ஏற்றுக் கொண்டால் மறதி போய் நினைவாற்றலில் சிறந்தவராகவும் ஆகலாம்.

ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்து ரூம் சாவியை எடுத்து வரவில்லை என்று காண்பவர், பரிட்சைக்குப் போய் பேனாவில் இங்க் இல்லை என்று நினைவு வருவது, கிரயப்பத்திரம் எங்கு வைத்தோம் என்று தெரியாமல் தேடுபவர், யாரிடம் கத்தரிக்கோலை இரவல் கொடுத்தோம் என்று மறந்துவிட்டவர் வாழ்க்கை ஒருவகையில் நரகமாகிவிடும். பல நஷ்டங்கள் ஏற்படும். இவருக்கு ஒரு வழியுண்டு. மறதி என்பது இருந்தாலும் ஒரு புதிய பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நல்லது. பெரிய கம்பெனிகளில் உள்ள பழக்கம் இது. இதற்கு Check List பட்டியல் எனப் பெயர். ஹாஸ்டலுக்குத் திரும்பு முன், பரிட்சைக்குப் போகுமுன், ஆபீஸுக்குப் போகுமுன், எந்த வேலையையும் செய்யுமுன் என்னென்ன செய்ய வேண்டும் என்று ஒரு பட்டியலைப் போட்டுக் கொண்டால் நாம் மறக்கக் கூடியதைப் பட்டியல் நினைவு படுத்தும். பட்டியலை எழுதும்பொழுது ஒவ்வொன்றாய் நினைவு படுத்தி எழுதினால், விட்டுப் போனதை மற்றவர்களும் சொல்லிவிடுவார்கள். ஞாபகமறதியைப் பட்டியல் சரி செய்யும்.

சாதாரணமாக ஏராளமான புத்தகம் உள்ள வீட்டில் ஒரு புத்தகம் வேண்டும் என்றபொழுது அது கிடைக்காது. யாரிடம் கொடுத்தோம் என்பதே மறந்துவிடும். வாங்கியவருக்கும் மறந்துவிடும். இதற்காகப் புத்தகம் இரவல் கொடுத்தபொழுது ஒரு டைரியில் குறித்து வைக்கும் பழக்கத்தை ஏற்படுத்திவிட்டால், மறதியால் பாதிப்பிருக்காது. கிரயப் பத்திரம், நகை, பணம் போன்ற முக்கியமான விஷயங்களைப் பத்திரமாக ஓரிடத்தில் வைத்துவிடுவோம். கொஞ்சநாள் கழித்து வேண்டும்பொழுது, வைத்தஇடம் நினைவிருக்காது. வீடு முழுவதும் தேட வேண்டும். பல சமயம் கிடைக்கும். சில சமயத்தில் வேண்டும்போது கிடைக்காது. பிறகு கிடைக்கும். இதைத் தடுக்க ஒரு வழியுண்டு. ஒரு நல்ல நோட்டு எடுத்து அதை முக்கியமான இடத்தில் வைக்க வேண்டும். முக்கியமான பொருள்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களை அதில் குறித்து வைக்கும் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் மறக்கக் கூடியதை ரிஜிஸ்டர் மறக்காது. தேட வேண்டிய அவசியம் இருக்காது. அடிக்கடி எல்லாப் பொருள்களையும் தேடும் பழக்கமுள்ள வீட்டில் ஒரு சிறு டைரியில் அவற்றைப் பற்றிய குறிப்புகளை எழுதும் பழக்கம் வந்தால், தேடும் அவசியம் போய்விடும்.

ஒரு விஷயத்துடன் மற்றதைச் சேர்த்துப் பார்த்தால் மறதி குறையும். எந்தத் தேதி அண்ணன் டில்லிக்குப் போனான் என்பது மறந்துவிடும் என்றால், அதை என் பரிட்சை யுடன் சேர்த்து விட்டால் மறக்காது. என் பரிட்சைக்கு முதல் நாள் ஊருக்குப் போனான் என்று புரிந்து கொண்டால் தேதி மறக்காது. அதேபோல் ஒரு விஷயத்தை மற்றதுடன் தெளிவு படுத்தினால் பல விஷயங்களை எளிதில் நினைவுபடுத்த முடியும்.

பாடத்தைப் புரியாமல் மனப்பாடம் செய் தால் மறந்துவிடும். புரிந்து மனப்பாடம் செய் தால் மறக்காது. எளிமையாக நினைவிருக்கும். மறதி என்பது பொல்லாதது. இந்த உப சாந்தியான முறைகளுக்கெல்லாம் அது அசை யாது. மறதியை விட்டொழிக்க டைரி எழுதி னால், டைரி வைத்த இடம் மறந்துவிடும். மறதி பொல்லாதது. என்றாலும் இந்த முறைகள் வலுவானவை. இவற்றால் பல விஷயங்களில் மறதியை வெல்ல முடியும், எல்லா விஷயங் களிலும் வெல்ல முடியாது. நமக்கு மறதியுள்ள இடங்களில் பெரும்பாலானவற்றிற்கு இது போன்று மாற்று செய்ய முடியும்.

எந்த விஷயம் மறந்து போகிறதோ அந்தச் சூழ்நிலையைக் கற்பனையில் படமாக நினைத் துப் பார்த்தால், விட்டுப்போன விஷயம் திடீ ரென நினைவுக்கு வரும் வழியுண்டு. ஹாஸ்டலில் நம்முடன் இருந்தவர் இப்பொழுது மறந்து போனால் ஹாஸ்டல் வாழ்வைப் படமாகக் கற்பனை செய்தால் அவர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி நினைவுக்கு வர வாய்ப்புண்டு. அதன் மூலம் அவர் யார் என்பதும் நினைவுக்கு வரும்.

பூமாதேவிக்கு நினைவுண்டு. அது உள்ள இடத்திற்கு யோக சக்தியால் போக முடியும் என்கிறார் அன்னை. அந்த இடத்தைத் தொட்ட வர்க்குப்பூமியின் பழைய சரித்திரமும், எதிர் காலமும் தெரிய முடியும்.

அனுபவம் எவ்வளவு பெரியதாக இருந் தாலும் அதற்கு நினைவு கிடையாது. அதனுள் உள்ள சைத்திய புருஷனுக்கே நினைவுண்டு. பூர்வ ஜென்ம ஞானம், இது போலும் வருவ துண்டு. எவ்வளவு அனுபவம் ஏற்பட்டாலும் மனத்தாலோ, உணர்வாலோ, உடலாலோ அதை நினைவில் வைத்திருக்க முடியாது. சைத்திய புருஷன் அங்கு செயல்பட்டால் மட்டுமே நமக்கு பிற்காலத்தில் அது நினைவிருக்கும். மேடைப் பிரசங்கங்கள் நிலையாக இருக்காது. வெளி யிடப்பட்ட புத்தகங்கள் பிற்காலத்தில் நிலைக் கும். அனுபவம் பிரசங்கம் போன்றது. சைத் திய புருஷன் புத்தகம் போன்றது.

ஞாபகம் திறனற்றிருப்பதால் மறந்து விடு கிறோம். பிடிக்காத விஷயங்களும் நினைவில் இருப்பதில்லை. அதனால் ஒரு விஷயம் நினை வில் இருக்க வேண்டுமானால், பிடிக்கவில்லை என்ற மனநிலையை மாற்றிக்கொண்டால், மறதி குறையும்.

ஆபீஸுக்குப் போகும்போது ஃபைலை வைத்துவிட்டுப் போகிறவர், முக்கியமான வற்றை மறந்து விட்டுப் போகிறவர்கள், புறப்பட்ட பின் ஒரு நிமிஷம் கழித்து மீண்டும் தன் மேஜைக்கு வரும் பழக்கத்தை மேற் கொண்டால், எவையெல்லாம் மறந்து விட்டோம் என்பதை மேஜை நினைவுபடுத்தும். அதனால் மறந்தவற்றை மீண்டும் எடுத்துக் கொண்டு போகலாம்.

மறதி அதிகமாக உள்ளவர்களுக்குப் பல விஷயங்கள் நினைவிருக்கும். அவர்கள் முக் கியத்துவத்தைப் பாராட்டுபவை நினைவி ருக்கும். அத்துடன் ஒரு விஷயம் நடக்கும் பொழுது அதைக் கவனித்து அதனால்தான் எப்படிப்பாதிக்கப்படுகிறேன் என்று யோசனை செய்தவை நினைவை விட்டு அகலாது. எனவே மறதியை அழித்து, நினைவை அதிகரிக்க வேண்டுவோர் செய்யக் கூடியவை பல.

— நினைவுக்காக Check List பட்டியல் தயாரிப்பது.

— மறந்துவிடும் சிறிய விஷயங்களை டைரி போன்றவற்றில் குறித்துவைப்பது.

— பெரிய விஷயங்களுக்கு ஒரு ரிஜிஸ்டர் தயார் செய்து அதில் எழுதுவது.

— வெளியே போகுமுன் மீண்டும் திரும்பி வந்து நினைவு கூர்வது.

— விஷயங்கள் நடக்கும்பொழுது அவற்றை மற்ற முக்கியமானவற்றுடன் இணைத்துப் பார்ப்பது.

— விஷயங்களைக் கவனித்து அவை எப்படித் தன் வாழ்வைத் தொடுகின்றன என்று யோசனை செய்வது.

— விஷயங்கள் நடந்த நேரத்தையும், இடத் தையும் மீண்டும் கற்பனையில் கொண்டு வருவது.

அன்னை பக்தர்களுக்கு மேற்சொன்ன முறை கள் அபரிமிதமான பலனைக் கொடுக்கும். மேலும், அன்னையிடம் "நினைவு வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தால் மறதி போய் விடும். அதையே தொடர்ந்து செய்தால் அபரி மிதமான ஞாபகம் ஏற்படும். ஞாபகத்திற்குப் பேர் போனவராக அவர் மாறிவருவார். மறதி யால் சிரமப்படும் சமயம் எல்லாம் அன்னையை நினைந்தால், மறதி மடிந்து போகும். ஃ

நாட்டில் உதயமாகும் பல தொழில்களுக்கு மதருஸ் ரி:.பைனரீஸ் ஒரு தாயாக இருந்து வளர்க்கிறது



தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களை அளிப்பதுடன் உற்பத்திக்கு உதவும் வண்ணமும் விளங்குகிறது எம்.ஆர்.எல்.

பொறுப்புள்ள நல்ல குடிமகன் என்ற வகையில், வெவ்வேறு இடங்களில் பல்வேறு தொழில்களை நிறுவும் இந்த நிறுவனம், இன்று ஆண்டு ஒன்றுக்கு 1,500 கோடி ரூபாய்க்கும் அதிகமான வருவாயை ஈட்டிக் கொண்டிருக்கிறது.

இன்று எம்.ஆர்.எல். மூலம் மணலி மற்றும் சுற்றுப்புற பகுதிகள் மாபெரும் தொழில் வளர்ச்சி கண்டிருப்பதைக் காணலாம்.

எம்.ஆர்.எல். அன்றாட வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் இடம் பெற்றுள்ளது.

உரத் தொழிலில் எம்.ஆர்.எல்.

உரங்களை தயாரிப்பதற்கு முக்கிய பொருளான நாஃப்தாவை அருகில் உள்ள மிகப் பெரிய உரத்தொழிற்சாலைக்கு வழங்குகிறது எம்.ஆர்.எல்.

டிடெர்ஜெண்ட் தொழிலில் எம்.ஆர்.எல்.

சிந்தடிக் டிடெர்ஜெண்ட் தொழிலில் மிக அதிக அளவில் உபயோகப் படுத்தப்படும் ரசாயனப் பொருள் லீனியர் ஆல்கைல் பென்ஸீன் ஆகும். இதைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருளான கெரசினை வழங்குகிறது எம்.ஆர்.எல்.

பாலியூரித்தேன் ஃபோம் தொழிலில் எம்.ஆர்.எல்.

17,000 டன் உற்பத்தித் திறன் கொண்ட எம்.ஆர்.எல்-லின் புரோப்லின் தயாரிக்கும் பிரிவு, பாலியால் உற்பத்தி செய்யும் பல தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளை அளிப்பதால், யூரித்தேன் ஃபோம் மற்றும் மெத்தைகள் தயாரிக்க உதவும்.

சால்வெண்ட் தொழிலில் எம்.ஆர்.எல்.

மணலியில் உள்ள தொழிற்சாலைகள் எம்.ஆர்.எல். வழங்கும் பியூட்டின்-2 ஐக் கொண்டு மீதைல் ஈதைல் கீட்டோன் என்ற சால்வெண்ட் தயாரிக்கும். இது பெயிண்ட், மெழுகு மற்றும் சுத்திகரிப்பு ஆலைகளுக்குப் பயன் படுவதுடன் பல ரசாயனப் பொருள்கள் தயாரிக்கவும் ஏதுவாகிறது.

விசேஷ ரசாயனப் பொருள்கள் தொழிலில் எம்.ஆர்.எல்.

எம்.ஆர்.எல்-லின் ஐசோ-பியூட்டிலின்களைக் கொண்டு பாலி-பியூட்டீன்கள் தயாரிக்கப் படும். இது ஜெல்லி நிரப்பிய கேபிள்கள், மற்றும் விவசாயத் திற்கான ரசாயனப்பொருள்கள் மற்றும் லூப் அடிட்டிவ் களுக்குப் பயன்படும்.

அரொமேட்டிக் தொழிலில் எம்.ஆர்.எல்.

கூட்டுத்துறையில் எம்.ஆர்.எல். விரைவில் துவங்க இருக்கும் பிரம்மாண்டமான அரொமேட்டிக்ஸ் தொழிற்சாலை, P.T.A., ஆர்த்தோ-சைலின், பென்ஸீன் ஆகியவற்றைத் தயாரிக்கும். இவற்றைக் கொண்டு பாலியஸ்டர் துணிகள் முதல் பிளாஸ்டிக் பாட்டில்கள் வரை அன்றாடம் உபயோகிக்கும் பல்வேறு பொருள்கள் தயாரிக்கப் படுகின்றன.

லூப் அடிட்டிவ் தொழிலில் எம்.ஆர்.எல்.

எம்.ஆர்.எல். அமெரிக்காவின் ஷெவ்ரான் நிறுவனத்துடன் இணைந்து 15,000 டன் உயர்தர லூப் அடிட்டிவ்களைத் தயாரிக்க இருக்கிறது. இவை மசக்கெண்ணெயின் தரத்தை உயர்த்தும்.

பாரம்பரிய தொழிலில் எம்.ஆர்.எல்.

காவிரிப் படுகையில் ரூ.124 கோடி மூலதனத்தில் புதிய ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்க இருக்கிறது. இதனால் இப்பகுதியில் தொழில் வளர்ச்சியும், வேலை வாய்ப்பும் பெருகும்.

இன்று, எம்.ஆர்.எல். என்றால் எண்ணெய் மட்டுமல்ல...அதற்கு மேலும்!

MRL

மதராஸ் ரிஃபைனரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் :
480 அண்ணா சாலை
நந்தனம், சென்னை 600 035.

R K SWAMY/MRL/7749

உழைப்பவனும் பண்டிகையும்

அமரர் சின்னி கிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி

ரூ. 500/- மூன்றாம் பரிசுப் பெற்ற சிறுகதை



இப்போதெல்லாம் சைக்கிள் ஓட்டுவது மிகக் கஷ்டமாக இருக்கிறது! முக்கி... முக்கி... மிதித்தாலும் நகர மறுத்து சண்டித்தனம் செய்வதுபோல்... பெடல் போடுவது அவ்வளவு கஷ்டமாகிப் போய்விட்டது. அப்பா காலத்து வண்டி. தினம் தினம் ஆயில் விட்டுக் கொண்டு தான் இருக்கிறான். இருந்தும் பிரயோஜனமில்லை. சைக்கிளைக் கடையில் விட்டு ஓவர் ஆயிலிங் பண்ணப் பணம் இல்லை.

தினம் எழுந்து வாழ்க்கையை நொந்துகொண்டு, சங்கடத்துடன் வேலைக்குப் புறப்படுவதே நிலையாகிவிட்டது. ஏன்தான் இந்த வேலையைத் தேர்ந்தெடுத்தோம்- பழகித் தொலைத்தோம்... என்று புலம்புவதும் அவன் வாழ்க்கையாகி விட்டது. வாரத்தில் இரண்டு நாள் 'நோ ஒர்க்' வந்து விடுகிறது. எத்தனை கம்பெனிகள் மாறியாகிவிட்டது! எங்கும் நிரந்தரமாய் நிலைத்து ஒரு வருடம் கூட இருந்ததில்லை. அவன் தொழில் பழகி டர்னராகி ஏழெட்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் ஒரு வருடம் கூட அவன் தீபாவளி போனஸ் வாங்கியதில்லை. ஓரளவுக்கு நல்ல கம்பெனியாகப் போனால் 'நைட் ஷிப்ட்' வரச் சொல்கிறார்கள். நைட் ஷிப்ட் அவன் உடம்புக்கு ஒத்துக் கொள்வதில்லை. முகமெல்லாம் கொப்புளங்கள் வந்துவிடும். வாரம் ஒரு முறை என்று மாற்றிக் கேட்டால் பழைய ஆள் ஒத்துக்கொள்ள மாட்டான்.

தொடர்ந்து 'நைட் ஷிப்ட்' செய்ய முடியாமல்... மறுபடி மறுபடி கம்பெனி மாற வேண்டியதாகி விடும்.

மோட்டார் - பம்புசெட் தயாரிக்கும் இந்த ஒர்க் ஷாப்புக்கு முத்து வந்து மூன்று மாதங்கள் தான் முடிந்திருக்கின்றன. இரண்டு லேத், ஒரு ட்ரில்லிங் மெஷின் கொண்ட சின்ன கம்பெனிதான். குறைந்த பட்சம் வாரம் ஒரு நாளாவது 'நோ ஒர்க்' வந்துவிடும்.

வாரம் நூற்றுத் தொண்ணூற்றெட்டு ரூபாயை வைத்துக் கொண்டு மனைவி, இரண்டு குழந்தைகள், அம்மா... என்று குடும்பம் தாட்டுவதற்குள்... போதும் போதும் என்றாகி விடும். புறம்போக்கில் கட்டியுள்ள வீடு என்பதால் வாடகைப் பிரச்னையில்லை. ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஓவர்டைம் வேலை வரும். அதனால் தப்பித்துக்கொண்டு வந்தான்.

சமீபகாலமாய் வேலை மிகக் குறைந்து விட்டது.

இன்னிக்காவது பணம் கிடைக்குமா? முதலில் வேலையிருக்குமா என்று தெரியவில்லை. தீபாவளிக்கு இன்னும் மூணு நாள்தான் இருக்கு. குழந்தைகளுக்கு இன்னும் துணி எடுக்கவில்லை. துணியெடுக்க என்று சீட்டுப் போட்டுச் சேர்த்து வச்சபணம் ஐந்நூறு திடீரென்று ஏற்பட்ட மருத்துவச் செலவுக்கும், சொந்தத்தில் ஒரு சீர் செலவுக்கும் போய்விட்டது. தவிர்க்க முடியாத செலவுகள் அவை. எவ்வளவு பிரச்னைகள்!

அவனுக்கு சைக்கிளைத் தள்ளிக்கொண்டு போகலாம் என்று பட்டது. பின் சக்கரத்தில் காற்று வேறு குறைவாக இருந்தது. காலை புறப்படும் போது, "அப்பா, சாயங்காலம் துணியெடுத்து வருவீங்களா?" என்று குழந்தைகள் கேட்டது காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. நேற்று வேலைக்குப் போய் திரும்பி வந்துவிட்டான். ரப் காஸ்டிங் வரவில்லை. இதோ.... வந்துவிடும்... வந்து விடும்... என்று மத்தியானம் வரை காத்திருந்து வெறுத்துப் போய், சோர்வும் தொற்றிக்கொள்ளச் சலிப்புடன் வீடு வந்து சேர்ந்தான். யாரிடமும் எதுவும் பேசவில்லை. அவன் நிலையறிந்து, கீதா எதுவும் பேச மாட்டாள்.

ஐந்நூறு ரூபாய் கேட்டிருக்கிறான். முதலாளி ஐந்நூறு தரவே மாட்டார். ஏற்கனவே ஐம்பது ரூபாய் பழைய அட்வான்ஸில் பாக்கியிருக்கு. அதையும் வேறு பிடித்துக் கொள்வார். எல்லாம் போக முந்நூறு கிடைக்கலாம். ஓரளவுக்கு நல்ல துணியாகக் குழந்தைகளுக்கு மட்டுமாவது ரெடிமேடில் எடுக்க நூற்று ஐம்பது ஆகிவிடும். மீதியிருக்கும் பணத்தில் பட்டாசு மற்றும் எல்லாச் செலவுகளையும் அடக்க வேண்டும். முடியுமா?



ஃபிர்தௌஸ் ராஜகுமாரன்

இன்று பணம் கிடைத்து விட்டால், நாளை லீவு போடலாம் என்று முடிவு செய்து கொண்டான்.

வேப்ப மரத்திற்கும், கம்பெனி மதில் சுவருக்கும் இடையில் சைக்கிளை நிறுத்திவிட்டு, சாப்பாட்டுக் கூடையைத் தூக்கிக்கொண்டு, கம்பெனிக்குள் வந்தான் முத்து. அப்பாடா! காஸ்டிங் வந்துவிட்டது. பணம் கிடைத்துவிடும். சந்தோஷமாக இருந்தது.

மோகனைக் காணோமே! மோகன் இன்னொரு லேத்தில் வேலை செய்யும் டர்னர். இவன் அடிக்கடி இப்படித்தான். வாரத்திற்கு இரண்டு நாள் லீவு போட்டுக் கொள்வான். நேற்றைக்கு 'நோ ஒர்க்' விட்டதால்... இன்றும் அவன் வரவில்லை. எப்படியும் இன்னிக்கு ஓவர் டைம் இருக்கும். ஒன்பது மணியாகிவிடும். வீடு போக 9.30. கடைவீதி போக முடியாது. தினம் தினம் ரவியும், ரம்யாவும், "அய்! அப்பா வந்தாச்சு..."

"அப்பா! எனக்கு கோடு கோடாபோட்ட டிரஸ்தானே..?"

"எனக்குப் பச்சைக் கலர் சுடிதாரு... இல்லப்பா..." என்று எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாந்து போகிறார்கள். அவர்களின் நம்பிக்கை வீண் போகக் கூடாது. அவர்கள் சங்கடப்படக் கூடாது.

"என்ன ராஜா இன்னிக்காவது பணம் தருவாரா?" பிட்டர் ராஜாவிடம் முத்து கேட்டான்.

"அவர் குடுக்கும்போதுதான் நம்ப முடியும். நம்ம தல விதி! ம்.." ராஜா விரக்தியும், சலிப்பு மாகச் சொன்னான்.

லேத்தைத் துடைத்து, ஆயில் விட்டு மோட்டார் பாடி ஒன்றை எடுத்து மாட்டி செண்டர் பிடித்துக் கடைய ஆரம்பித்தான் முத்து.

முதலாளியின் வரவையே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். கெஞ்சிக் கூத்தாடி முந்நூறு ரூபாயை வாங்கி விடவேண்டும். அம்மா வுக்கும், மனைவிக்கும் ஜாக் கெட்டாவது எடுத்துக் கொடுக்க வேண்டும்.

மத்தியானம்தான் முதலாளி வந்தார்.

"என்னப்பா.. மள.. மளன்னு வேலையாகட்டும். பத்து செட்டு ரொம்ப அவசரம். நாளைக்கு ஓர் அஞ்சு செட்டு ரெடி பண்ணிரலாமல்ல?" என்று முத்துவிடம் கேட்டார்.

"நாளைக்கா..?" என்று கேட்டு விட்டு யோசித்தான் முத்து.

"என்னப்பா... யோசிக்கறே? முடிச்சே ஆகணும். மோக னைக் கவர் போடச் சொல்லு. மீதி அஞ்சு செட்டை தீபாவளி முடிஞ்சு குடுக்கலாம்... என்ன?" என்றவர், எதிர்ப்புற லேத்தைப் பார்த்துவிட்டுக் கேட்டார். "என்ன லேத் சுத்தமாயிருக்கு! மோகன் வரலையா?"

"வரலைங்க..."

"போச்சு. வாரத்துக்கு எத் தனை நாளுக்கு லீவு போடு வான் அவன்? அப்ப நீ பாடியை முடிச்சுட்டுக் கவர் போடு. நான் போய் ஒய்ண் டரைக் கூட்டிட்டு வர்றேன். ராஜா..! போயிராத இன்னிக்கு. அஞ்சு செட்டு நாளைக்கு சாயங் காலத்துக்குள்ள குடுக்கணும்.."

ராஜா தலையாட்டினான்.

முதலாளி வெளியே வர - முத்து லேத்தை நிறுத்தி, வேஸ்ட் எடுத்துக் கையைத் துடைத்துக் கொண்டே மெது வாக வெளியே வந்து எட்டிப் பார்த்தான். பணம் பத்தி இப் பவே சொல்லி விடலாம். இல்லாவிட்டால் சாயங்காலம் மறந்துவிடுவார். முத்து தயக்க மாய் நின்று யோசிப்பதற்குள் ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்து கிளம்பிப் போனார் முதலாளி.

சாயங்காலம் வரை முத லாளி வரவேயில்லை. நேரம் செல்லச் செல்லக் குழப்பமும், பதட்டமும், எதிர்பார்ப்பும், பணம் பற்றிய பயமும் அவனை ஆட்கொள்ள, கவனம் சிதறியது. சரியாக வேலைகூட ஆக வில்லை. சே! என்ன பொழப்பு இது? தொட்டது புடிச்சதுக் கெல்லாம் எப்பவும் யாரை யாவது எதிர்பார்த்து எதிர் பார்த்து... அதிகமாய் அஞ்சு பைசா செலவு பண்ணக்கூட முடியாத நிலை. யாரை நொந்து கொள்வது? தலைவிதி என்று தப்பித்துக் கொள்வதைத் தவிர வேறு வழி அவனுக்குப் புலப்படவில்லை.

ராஜாவும் பணம் பற்றிப் புலம்ப ஆரம்பித்தான்.

அவனுக்கோ பசி வேறு வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. முதலாளி இருந்தால் ஓவர்டைம் செய்வதற்கு டிபன் வாங்கிக் கொடுப்பார். இப்போது அது வும் இல்லை.

ஏழு மணி சுமாருக்கு முத லாளி வந்தார். கூடவே ஒய்ண்ட ரையும் கூட்டி வந்துவிட்டார். வந்ததும், "இன்னிக்கு நைட் முழுக்க வேலை செய்துர லாம்ப்பா..?" என்று முத்துவைப் பார்த்துக் கேட்க அவன் யோசித்தான்.

நைட் செய்துவிட்டு நாளைக்கு லீவு போட்டுக்கலாம். கடைவீதி போக வசதியாக இருக்கும். முதலில் அட்வான்ஸ் பணம் பற்றிக் கேட்டுவிடலாம். "அட்வான்ஸ் ஐந்நூறு ரூபா.." மெதுவாய் இழுத்தான்.

"அட்வான்ஸ்தானே! ஞாபக மிருக்கு. வாங்கிக்கலாம், இன் னிக்கு நைட் செய்யலாமில்லே?" தன் காரியத்திலேயே குறியாய் இருந்தார் அவர்.

அப்பாடா! அட்வான்ஸுக்கு ஒத்துக் கொண்டுவிட்டார். இது போதும், சந்தோஷமாயிருந்தது. இந்த வாரம் இரண்டு நாள் 'நோ ஒர்க்கில்' போய்விட்டது. இன்று நைட் ஷிப்ட் செய்தால் அந்த ரெண்டு நாளுக்குச் சரியாகி விடும். கூலி இருநூறு வந்து விடும். அட்வான்ஸ் ஒரு முந் நூறு. ஐந்நூறு ஆகிவிடும். மனைவிக்குக் குறைந்த விலை யில் ஒரு புடைவை எடுத்து விடலாம். ஸ்வீட் கூட வாங்கி விடலாம். தீபாவளியை ஜமாய்த்து விடலாம். சந்தோஷம் பொங்க, "சரிங்க.." என்றான்.

முதலாளி எல்லோருக்கும் டிபன் வாங்கிக் கொடுத்தார். இரவுச் சாப்பாட்டுக்குப் பணம் கொடுத்தார்.

நைட் முழுக்க வேலை செய்தும் முடியவில்லை. மறு நாள் மத்தியானம் வரை ரோட்டர் கடையும் வேலை, ரீ ஒர்க் வேலை இழுத்துவிட்டது. ஐந்து செட்டு மோட்டார்களை மதியம் மூன்று மணிக்கு ஃபினி ஷிங் பண்ணி முடித்தார்கள்.

"அவசரமா ஒரு பக்கம் போயிட்டு வர்றேன்..." என்று இரண்டு மணிக்கே கிளம்பிப் போன முதலாளிக்காகக் காத் திருக்க ஆரம்பித்தார்கள். நான்கு மணி வரை முதலாளி வரவில்லை. தவிப்பும், வேதனையுமாக அந்தத் தொழி லாளிகள் காத்துக் கொண் டிருக்க -

முதலாளி ஐந்து மணிக்கு வந்தார்.

நோட்டை எடுத்துக்கொண்டு ஆற அமர, ஒவ்வொருவரும்

எத்தனை நாள் வேலை செய்திருக்கிறார்கள்... அட்வான்ஸ் பாக்கி எவ்வளவு இருக்கு... என்றெல்லாம் கணக்குப் போட ஆரம்பித்தார்.

முத்துவுக்குக் கூலி இருநூறும், அவன் எதிர்பார்த்த அட்வான்ஸ் பணம் முந்நூறில் ஐம்பது குறைவாய் இருநூற்றைம்பதும் அதிலும் பழைய பாக்கி ஐம்பதையும் பிடித்துக் கொண்டு இருநூறும்தான் கொடுத்தார். அவன் ஒரு ஐம்பது ரூபாய்க்கு எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும் முதலாளி மசியவில்லை.

நாநூறில் என்ன செய்வது? எப்படியெல்லாம் சிக்கனம் செய்வது ?என்றெல்லாம் மனம் நொந்தவாறு வீட்டுக்கு வந்தான் முத்து. தூக்கம் வேறு சுழற்றியது. முதலில் கொஞ்சம் தூங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டவன், வேண்டாம், முதலில் கடைவீதி சென்று குழந்தைகளுக்குத் துணி எடுத்துக் கொடுக்கலாம் என்று வீட்டினுள் நுழைய, குழந்தைகளின் கும்மாளம். இதென்ன! இவ்வளவு சத்தம்? உள்ளே நுழைந்தவனுக்கு அதிர்ச்சி! அவன் தங்கை குடும்பத்துடன் ஊரிலிருந்து வந்திருந்தாள்.

உள்ளுக்குள் நொறுங்கிப் போனான் முத்து. நாநூறு ரூபாயில் தீபாவளியைச் சந்தோஷமாய் ஓட்டி விடலாம் என்று கணக்குப் போட்டிருந்தான். ஆனால் நிலைமை தலைகீழாக மாறிவிட்டதே! இதை அவன் எதிர்பார்க்கவேயில்லை. பேரிடியைத் தாங்கிக் கொண்ட அவன் உதட்டில் புன்னகையையும், முகத்தில் சந்தோஷ முகமூடியையும் மாட்டிக்கொண்டு, "வாம்மா... எப்ப வந்தே..?" என்று அன்பாய் தன் தங்கையை விசாரிக்க ஆரம்பித்தான்.

"அய்!... அப்பா வந்தாச்சு.." என்று சந்தோஷக் கும்மாளமிட்டன அவன் குழந்தைகள். ஃ

வெளியே இருக்கிறது வெளிச்சம்

— எம்.இ. பிரபாகர பாபு

● *இளைஞனே!*
அகத்துக்குள் ஆழ்ந்த இரவோ?
முகத்தில் மொத்தம் தெரிகிறதே!

● *நம்பிக்கையொளியை விரட்டி*
இதயத்தை மூடிக்கொண்டாயே!
விரைந்தே அந்த வைரதீபத்துக்கு
ஆரத்தி எடு.

● *கண்ணாடியும் பிரதிபலிக்காத காரிருளை*
உன் கண்கள் பிரதிபலிக்கின்றனவே!
வெம்பி முகம் பார்த்தால்
பிம்பம்தான் சிரித்திடுமா?

● *இனியேனும் இதயவீட்டின்*
இறுகிய வாயிலைத் திறந்து வை.
பாதைகள் வெளிச்சமாகும்
'போதி'கள் பரிச்சயமாகும்!

● *சொல்லும், செயலும் சேராவிடில்*
இதயம்தானே இருளும்?
நம்பிக்கை விளக்கேற்றி
நற்சிந்தனைக்கு வித்தூன்றிடு!

● *பிறகு வாய்ப்புப் புள்ளிகளை*
உழைப்புக் கோடுகளில் சிறைசெய்து
கொண்டாட்டக் கோலமிடலாம்!

● *நம்பிக்கையை விடாமல் பற்று.*
உன் இதயத்தில் வராது "மின்வெட்டு."

★ *21.12.91* அன்று அமுதசுரபி - கவிதை உறவு இணைந்து வழங்கிய கவிதை இரவில் முதல்பரிசு பெற்ற கவிதை.

கத்தரித்து ஒட்டியது

நாடோடி

அபிரகாம் லிங்கன், வக்கீல் வேலை பார்த்த சமயம் ஒரு நாள் இரவு ஒரு விடுதியில் தங்க நேர்ந்தது. இவரைப் போலவே அநேக வக்கீல்கள் அந்த விடுதியில் தங்கியிருந்தார்கள். மிகக் குளிராக இருந்ததால், எல்லா வக்கீல்களும் கணப்பு அடுப்பைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள்.

அவர்களில் ஒருவர், லிங்கன் வாயைப் பிடுங்குவதற்காக, "மிகவும் குளிர்" என்றார்.

"ஆம், நரகத்தைவிடக் குளிர்" என்றார் லிங்கன்.

"அப்படியானால் நீங்கள் நரகத்துக்குச் சென்றிருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்".

"சென்றிருக்கிறேன். ஆனால் வேடிக்கை என்னவென்றால், அங்கு இங்கு உள்ளதைப் போலவே கணப்பு அடுப்பைச் சுற்றி வக்கீல்கள்தான் உட்கார்ந்திருந்தார்கள்!" என்று சொன்னார் லிங்கன்.

*

விண்வெளியில் ஒரு நட்சத்திரத்துக்கும் இன்னொரு நட்சத்திரத்துக்கும் இடையே எத்தனை இடைவெளி இருக்கிறதோ அதே ரீதியில் நம் உடலில் உள்ள ஓர் அணுவுக்கும், இன்னொரு அணுவுக்கும் இடையே இருக்கிறது. அதாவது ஒரு நட்சத்திரத்துக்கும் இன்னொரு நட்சத்திரத்துக்கும் இடையே உள்ள இடைவெளி ஒரு நட்சத்திரத்தைப் போன்று ஆயிரம் கோடி பங்கு என்றால், அதே மாதிரிதான் நம் உடலில் உள்ள ஓர் அணுவுக்கும், இன்னொரு அணுவுக்கும் இடையே இருக்கிறது. பல கோடிக்கணக்கான அணுக்களால் ஆன நம் உடலில் இருந்து இந்த இடைவெளியை நீக்கிவிட்டால் நாம் ஒரு தூசி ஆகிவிடுவோம்.

தன் பெயரை உடையவர்களைப் பற்றிப்பத்திரிகைகளில் ஏதாவது தவறான செய்தி வந்தால் உடனே "அது நானல்ல" என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்யும் வழக்கம் அமெரிக்காவில் அதிகம். உதாரணமாகக் கீழ்க் கண்டது போன்ற விளம்பரங்களை அமெரிக்கப் பத்திரிகைகளில் அடிக்கடி பார்க்கலாம்.

"இன்று மாலை மார்கோ சிறையில் தூக்கிலிடப்பட்ட ஜான் ஹார்ன் நானல்ல".

ஜான்ஹார்ன், தொப்பி வியாபாரி, 23, சர்ச்தெரு.

★



டாக்டர் பேரன் என்கிற ஹங்கேரி நாட்டு சர்ஜன், வைத்தியத்திலும் கெட்டிக்காரர்! பேச்சிலும் கெட்டிக்காரர்.

ஒரு சமயம், ஒரு பெரிய பணக்காரர் அவரிடம் ரண சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக வந்தார். "எத்தனை கொடுக்க வேண்டும்?" என்று கேட்டதற்கு, டாக்டர் "ஆயிரம் பவுன்" என்றார்.


"வெகு அதிகமாகப் படுகிறதே!" என்று பணக்காரர் சொன்னதற்கு, டாக்டர் பேரன், "பக்கத்தில் ஒரு வைத்தியர் இருக்கிறார். அவருக்கு நூறு பவுன் கொடுத்தால் போதும். அதைக்கூட நீங்கள் கொடுக்க வேண்டாம், உங்கள் சந்ததியினர் கொடுப்பார்கள்" என்றார்.

*

வெள்ளைத் துணி உடுத்துகிறவர்கள், மற்றவர் கண்களுக்கு உருவத்தில் பெரியவர்களாகப் படுவார்கள் என்றும், கறுப்புத் துணி உடுத்துகிறவர்கள் சிறியவர்களாகப் படுவார்கள் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணம் என்னவென்றால், வெள்ளை நிறத்துக்கே ஒரு சுறுசுறுப்புத் தன்மை இருக்கிதென்றும், அது கண்ணில் படும்பொழுது கண்ணில் தெரியும் உருவம் விஸ்தரிக்கப் படுகிறது என்றும், கறுப்புக்கு ஓர் அசைவற்ற தன்மை இருக்கிறதென்றும், கண்ணில் பதியும் கறுப்பு உருவம் சற்றுச் சுருங்குகிறதென்றும் கூறுகிறார்கள்.

ஆகவே ஸ்தூலமான ஸ்திரீகள், கறுப்பு அல்லது வேறு வர்ண ஆடைகள் அணிந்தால் தான் சற்று மெல்லியவர்களாகத் தோன்றுவார்கள் என்றும், அவர்கள் வெள்ளை ஆடை அணியக் கூடாதென்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

"மொழிபெயர்ப்பு நூல்கள் நிறைய வரவேண்டும்!"



வல்லிக்கண்ணன்

எழுத்துச் செல்வர் திரு ...ல்லிக்கண்ணன் அவர்கள் ...க்கும் மேற்பட்ட நூல்கள் ...ழுதியுள்ளார்.

கடந்த 45 ஆண்டுகளாக ...வர் அரும்பாடுபட்டு 2000 ...ால்கள் சேர்த்து வைத்திருந் ...ார். காலப்போக்கில் அந்த ...ால்களின் பெரும்பகுதியைக் ...றையான்கள் தின்றுவிட்டன.

"வ.வே.சு. ஐயர், வ.ரா. ...ாரதியார், புதுமைப்பித்தன், ...கே.சி. ஆகியோர் எழுதிய ...ரிய நூல்கள் இவற்றுள் அடங் ...ம். அந்த நூல்கள் எல்லாம் ...ப்போது கிடைக்காது" என்று ...ருத்தத்துடன் கூறும் இவர், ...த்தகங்களை எழுதலாம்; வாங்கலாம். ஆனால் அவற்றைப் பாதுகாப்பதுதான் மிகுந்த சிரமமாக இருக்கிறது!" என்கிறார்.

இப்போது இவர் புத்தக அலமாரியை அலங்கரித்துள்ளவை 'பார்வை நூல்கள்' மட்டுமே.

"நண்பர்கள் அவ்வப்போது கருத்துரைக்காகத் தரும் நூல்களே நிறையச் சேர்ந்து விடுகின்றன. அவற்றையெல்லாம் வைக்கப் போதிய இடமில்லாததால் நூலகங்களுக்கு அவற்றைக் கொடுத்து விடுகிறேன்" என்று கூறும் இவர், 'நல்ல நூல்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்கின்ற பழக்கம் நம்மிடையே வளர வேண்டும்' என்கிறார்.

"இக்காலப் பேராசிரியர்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கிறது. அதில் ஒரு பகுதியைப் புத்தகங்களை வாங்குவதற்கு ஒதுக்கலாம். அதாவது வாங்கக் கூடிய வசதியுள்ளவாகள் புத்தகங்களை வாங்கினால்தான், தமிழ்ப் புத்தகங்கள் பெருமளவில் விற்பனையாகும்.

"பள்ளிகளில் நூலகங்கள் இருக்கின்றன. அவை வெறும் காட்சிப் பொருள்களாக இல்லாமல், நல்லவிதமாக அவற்றைப் பயன்படுத்த வேண்டும். மாணவர்களிடையே படிக்கும் பழக்கம் வளர ஆசிரியர்கள் உறுதுணையாக இருத்தல் வேண்டும்" என்று கருத்துத் தெரிவிக்கிறார் திரு வல்லிக்கண்ணன்.

திரு வல்லிக்கண்ணன் அவர்களின் அந்தச் சிறிய அறையைப் பார்க்கிறோம். அறையைச் சுற்றிப் புத்தகங்களும், பருவ இதழ்களும் தென்படுகின்றன. அதுவே பூஜை அறையாகவும் காட்சியளிக்கிறது. நூல்கள் இருக்குமிடம் அறிவாலயங்கள் அல்லவா?

"நாவல், சிறுகதை போன்ற நூல்களையே அதிகம் விரும்பிப் படிக்கிறார்கள். சிந்தனை, அறிவியல், வரலாறு போன்ற நூல்களைப் படிக்கின்ற பழக்கம் அதிகம் வளரவேண்டும்" என்று தம் ஆசையை வெளிப்படுத்தும் இவர், புத்தகங்கள் விற்பனையாக என்ன செய்ய வேண்டும் என்று ஒரு யோசனையையும் கூறுகிறார்.

"இக்கால இளைஞர்களின் கவனம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது என்பதை நாமறிவோம். அவர்களின் கவனத்தைத் திருப்பப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும்.

"திரைப்படம், தொலைக் காட்சி, விளையாட்டு என்று முழுக்க முழுக்க அதிலேயே மூழ்கி விடாமல், நல்ல நல்ல புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வமும் அவர்களுக்கு வரவேண்டும்; வளர வேண்டும்.

'பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்'

என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க மொழிபெயர்ப்பு நூல்கள் நிறைய வெளிவருதல் வேண்டும். பொதுவாக இம் மாதிரியான நூல்களைத் தமிழகம் வரவேற்பதில்லை. இது ஒரு பெரிய குறைபாடு" என்கிறார் திரு வல்லிக்கண்ணன்.

பேட்டி :பி.வி.கிரி.

“புத்தகங்களைப் பாதுகாக்க வேப்பிலையைப் பரப்புங்கள்!”



மீ.ப. சோமு

திரு மீ.ப. சோமு நாற்பது ஆண்டுகளாகத் திருச்சியிலும், சென்னையிலும் அகில இந்திய வானொலியில் பல முக்கிய மான பதவிகள் வகித்து வந்த வர். கல்கி கிருஷ்ணமூர்த்திக் குப் பிறகு, சிறிது காலம் 'கல்கி' வார இதழின் ஆசிரியராகப் பணியாற்றியவர். தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். சாகித்திய அகாதமி விருது பெற்ற இவர், 'இசைப் பேரறிஞர்' என்ற பட்டமும் பெற்றுள்ளார். இவர் கூறு கிறார் :

“என்னுடைய வீட்டு நூல கத்தில் 10,000 நூல்கள் இருந் தன. இதில், பெரும்பாலான நாவல்களை மட்டும் நண்பர் களுக்கும், நூலகங்களுக்கும், மகளிர் அமைப்புகளுக்கும் கொடுத்து விட்டேன். கலைக் களஞ்சியங்கள், பல்கலைக் கழக அக்ராதிகள் போன்ற பார்வை நூல்கள் - Reference Books மட்டும் வைத்துள்ளேன். அந்த வகையில் இப்போது 4000 நூல்கள் இருக்கின்றன.

“என்னிடமுள்ள நூல்களில் பெரும்பாலானவை ஆங்கில மும், தமிழ் நூல்களுமே ஆகும். சம்ஸ்கிருதம், இந்தி நூல்கள் ஓரளவு உள்ளன.

“ஆங்கில நூல்களுள் இலக் கியத் தரம் வாய்ந்த நாவல்கள், தத்துவ விஞ்ஞான நூல்கள் உள்ளன. மொழி நூல்களும், மனத் தத்துவ நூல்களும், மொழி இயல் ஆய்வு நூல்களும், நாடகங்கள், சிறுகதைகள் குறிப்பாக மாப்பசான் கதைகள் 10 தொகுதிகளும் உள்ளன. இதேபோல, பெர்னார்ட் ஷா மற்றும் எச்.ஜி. வெல்ஸ் ஆகி யோரின் படைப்புகள் முழு வதும் உள்ளன. இவை தவிர, யோகதத்துவ நூல்கள், டால்ஸ் டாய் படைப்புகள் முழுவதும் என் நூலகத்தில் உள்ளன” என்கிறார் திரு சோமு.

தமிழைப் பொறுத்தவரை சங்க இலக்கிய நூல்கள் அனைத்தும் இவருடைய நூல கத்தில் இருப்பது தனிச் சிறப்பு. ஒலிபரப்புத் துறையில் இவர் இருந்ததால், ஒலிபரப் பக் கலை தொடர்பான நூல் களையும் இவர் வைத்திருக் கிறார்.

இவரது நூலகத்தில் தமிழ், ஆங்கிலம், இந்தி, சம்ஸ்கிருதம் ஆகிய நூல்கள் தனித்தனியே பிரிக்கப்பட்டு வைக்கப்பட் டுள்ளன. 1935ஆம் ஆண்டி லிருந்து கல்கி, ஆனந்தவிகடன் போன்ற தீபாவளி மலர்கள் எல்லாம் ஒரு தனித் தட்டில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இசை, சிற்பம், நுண் கலைகள் தொடர்பான நூல் களும் நிறைய உள்ளன. கிடைத் தற்கரிய நூல்கள் பலவும் இ நூலகத்திலே இடம் பி துள்ளன.

நூல்கள் மட்டுமா? அ ஓலைச்சுவடிகளும் கூட இ நூலகத்தில் இருப்பதைப் பா கும்போது வியப்பாக இருந் அத்துடன் 'ஜோதிஷ பிரக்ஞ தீபிகை' போன்ற இன்று தில் கிடைக்காத அரிய நூல் பலவும் உள்ளன. சோதிட சாஸ்திரம் போன்ற செய் நூல்களும் கூட இருக்கின் ஆபிரகாம் பண்டித 'கருணாமிர்த சாகரம்' (இரு தொகுதிகள் இவரி உள்ளன. இவை இப்பே கிடைக்காத நூல்களாகும்.

இதையெல்லாம் பார்க் போது, இது வீட்டு நூலகமா காட்சியளிக்கவில்லை. தனி நூல் நிலையமாக காட்சியளிக்கிறது.

மிக முக்கியமான களை, மூதறிஞர் ராஜ அவர்கள் தம் படுக்கை அ யிலேயே வைத்திருப்பார அதைப்போல இவ பார்வை நூல்களை, அதா அடிக்கடி பார்க்க வேண்டி ஒப்பு நோக்க வேண்டிய களைத் தம் படுக்கை அறை வைத்திருக்கிறார்.

நூல்களைச் சேர் விடலாம். ஆனால், அவற் பாதுகாப்பதென்பதோ மிக சிரமமான காரியம். களைச் செல்லரிக்கலாம். பான் பூச்சி தின்னலாம். இ றின் பிடியிலிருந்து நூல்கள பாதுகாக்க என்ன செய்யலா

திரு மீ.ப. சோமு அவர் ஒரு புதிய முறையைக் கைய கிறார்.

“நூல்களுக்கிடையே பிலையைப் பரப்பினால் பூச் தொல்லை இருக்காது. இ

வில்லை. வேறு பெண்களுடன் அவனுக்கிருந்த தொடர்புகளைப் பற்றியும் அரசல் புரசலாய் இவள் காதுகளுக்கு வந்த செய்திகள் இவள் கண்களைக் கண்ணீரால் நிறைத்தன.

இவளின் அன்பு, அரவணைப்பு, நேசம், நெருக்கம் எல்லாம் சதாசிவத்திற்கு இவள் உடனிருக்கும்போது மட்டுமே நினைவில் நின்றன. இவள் பள்ளிக்குப் போன பின்பு அவன் சுதந்திர புருஷனாய் உலா வந்தான்.

மூன்றரை ஏக்கரா குறைந்து கொண்டே வந்து ஒன்றரை ஏக்கரா ஆயிற்று. மூன்று குழந்தைகள் என ஆனபின்பும் கணவன் விடலையாய் ஊர் சுற்றியதில் விசாலம் விசாரப்பட்டாள்.

ஒருநாள் அந்த எரிமலை வெடித்துச் சிதறிற்று.

இவளின் கொந்தளிப்பிற்கும் கோபத்திற்கும் அந்நேரம் மௌனம் சாதித்திருந்த சதாசிவம் மறுநாள் காலையில் போனவன் போனவன்தான். தேடாத இடமில்லை. வேண்டாத தெய்வமில்லை. இருக்காத விரதமில்லை. ஜாதகம், ஜோசியம் என வேறு அலைந்து காசையும் காலத்தையும் விரயம் செய்தாள் விசாலம்.

ஊஹும்... போனவன், இவள் கண்ணீரை மதித்து ஒரு கடுதாசிகூட போட்டவன் அல்லன். அவன் உயிரின் உயிர் இந்துமதியாய் தூளியில் அழுதபோது விசாலமும் சேர்ந்து அழுதாள். பிறக்கப்போவது ஆணாய் இருக்க ஒவ்வொரு தெய்வத்தையும் பிரார்த்தித்திருந்தாள். எல்லா தெய்வங்களும் அவளைக் கைவிட்டு வேடிக்கை பார்த்தன. ஒன்றுக்கு இரண்டாய் பெண்கள் அவள் தோளுக்குச் சுமை ஆனார்கள்.

இவள் மூன்றாவது முறையாய் தாயாகி நிற்கையில்தான் அந்தச் செய்தி வந்தது. யாரோ ஒரு பெண்ணுடன் சதாசிவம் எங்கோ வாழ்க்கை நடத்துவதாய்!

கண்ணீரும் கவலையும்தான் இவள் கணவன் என்றாகிப் போனபின், விசாலம் ஆணுக்கு நிகராக உழைத்தாள். பள்ளிக்கூட உத்தியோகமும், வயல்வெளியும் இவளை வியர்வை சிந்தவைத்தன.

பிள்ளைகளைப் படிக்க வைத்து மகனை என்ஜினீயராக்கி பிலாய் அனுப்பி, சாருமதியைப் புக்ககம் அனுப்பி... இப்போது இந்துமதிகூடப் பக்கத்து டவுனில் பாங்க் உத்யோகம் பார்க்கிறாள். இவர்கள் உயர்வில் நிலம் கைமாறிப்போயிற்று.

தன்னந் தனியாய் மூன்று பிள்ளைகளை ஆளாக்க இவள் பட்ட துன்பங்கள்.

உம்... எல்லாமே அவனின் இன்றைய முக தரிசனத்தில் கரைந்துவிடும். இவளுக்குச் செய்த கொடுமைகள், துரோகங்கள் எல்லாம் அவர் பெரிய மகான் என்கிறதில் மறைந்துவிடும். இந்த இருபத்தைந்து வருடங்கள் பிரிவை அவரின் முக தரிசனம் மறைத்துவிடும்.

அவரைப் பார்த்துக் காலில் விழுந்து, "என்னைத் தெரிகிறதா...? நான்தான் உங்க விசாலம். என்னைத் தனியாகத் தவிக்கவிட்டுப் போனீரே..." எனச் சொல்லி அழுதால் இவள் மனப் பாரம் ஓடிப்போகும்.

ஊருக்குப் பெரிய மகானைத் தனித்துச் சொந்தம்கொண்டாடலாமா? அது அபசாரமில்லையா?

"அம்மா... அம்மா... என்னது இது? கதவைத் திறந்து போட்டு, கண்ணைத் தொறந்துண்டு தூங்கறே! டிபன் காபி ஏதுமில்லியா?"

உள்ளுக்குள் பொங்கியவற்றை, வந்து தோள் பிடித்து உலுக்கிய இந்துமதியிடம் கொட்டி விடுகிறாள்.

"சரிதான். அவா சொன்னதை நம்பிட்டியா? சாரு எழுதினாளேன்னு நானும்தான் போய்ப் பார்த்தேன். அவர் தாடி வளர்த்துண்டு காவி கட்டிண்டு... அவர் ஒண்ணும் நம்ம அப்பா இல்லேம்மா..."

"அவரை நீ எப்படி பார்த்தே? அவர் போன கையோடு பிறந்தவதானே நீ".

"அதான் போட்டோவில் இருக்காரே. சரி... சரி... இந்தாம்மா காபி குடி".

மகள் தயாரித்துக் கொடுத்த காபியைப் பருகாமல் வேறுபுறம் வைக்கிறாள் விசாலம்.

"ம... இந்து... இன்னிக்குப் போய் அவரைப் பார்த்துட்டு வந்துரலாம்டி..."

"..ப்ச்சு... பாங்க்ல அக்கவுண்ட்ஸ் செக்கிங் வேலை நெட்டி முறியறது. ரொம்ப டயர்டுன்னு வந்தா சமையலை வேற என் தலையில கட்டிட்ட. இப்ப என்னம்மா நீ!"

"இந்து.... வரலியா நீ? அப்ப நானே போய்க்கறேன்".

"உனக்குத்தான் உடம்பு நன்னாயில்லன்னு தனியா எங்கேயும் அனுப்பப் படாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காரே! எங்காறும் மயக்கம் போட்டு விழுந்துருவே. பிறகு அண்ணன் பெரிசா எனக்கு லெட்டர் எழுதிடுவான். நானும் வரேன். சித்த இரு. வேறே புடவை கட்டிண்டு வரேன்".

உள்ளே போகிறாள் இந்துமதி. விசாலத்திற்கு மூச்சு விடுவதே சுமையாக இருக்கிறது.

அந்தக் கோயில் மண்டபத்தில், வண்ண விளக்குகள் மரங்களில் புதிதாய் மலர்ந்திருக்கின்றன.

ஒளிவெள்ளத்தில் மக்கள் கூட்டம். நெரிசலை முந்திக்கொண்டு இந்துமதியின் கையை இழுத்தபடி முன்னால் ஊர்ந்து போகிறாள் விசாலம்.

என்றோ எப்போதோ இவர்களைப் பற்றித் துளியும் சிந்தித்துப் பாராமல் தன்னலம் மட்டுமே கருதி ஓடிப்போன தந்தையைப் பற்றி நினைத்துப் பார்க்கக்கூட அவளுக்கு விருப்பமில்லை. அம்மாவும் அவரைப் போல் இவர்களை விட்டுப் போயிருந்தால்...

தூரத்து மேடையில் சுவாமிகள் காவி உடையில் கண்மூடி தியானத்தில் உட்கார்ந்திருப்பவரைப் போல உட்கார்ந்திருக்கிறார். அவரைச் சுற்றிக் காவியுடை யுவதிகள். அவரின் இரண்டு புறங்களிலும் இரண்டு காவியுடை யுவதிகள் மயில் பீலியில் காற்றுக்குக் கட்டியம் கூறுகின்றனர். தரிசித்துப் போகும் பக்தர்களுக்கு திராட்சைப் பழங்கள், புஷ்பம் எனக் கொடுக்கும் இளம் சாமியார் யுவதிகள். நல்ல நிறமும் அழகும் யௌவனமும் கொண்ட இளம் வசந்தத் தென்றல்களாய் அந்தக் காவியுடைக்குப் புதிய சோபை கொடுக்கின்றனர்.

விசாலம் கூட்டத்தின் முன்னால் வந்து பிரம்மானந்த சுவாமிகளைத் தன் விழிகளுக்குள் அடக்கப் பார்க்கிறாள். அந்த நரைத்த மீசை, தாடி, காவியுடை, இருபத்தைந்து வருடங்கள் எல்லாம் அவளைச் சந்தேகிக்க வைக்கின்றன. பரப்பரப்புடன் அவர் வலது கரத்தைப் பார்க்கிறாள்.



பத்மாசனத்தில் அமர்ந்திருக்கும் சுவாமியின் வலக்கரம் தொடையில் குவிந்திருக்கிறது. வலது ஆள்காட்டி விரல் மழுங்கி மடங்கியிருக்கிறது. உணர்வு மின்னல்கள் விசாலத்தின் தேகத்தைத் தீண்டுகின்றன.

யாருக்கும் தெரியாமல் முப்பது நாள்கள் கொடுத்த மோகத்தில் இவளுக்கு உதவுவதாய்ச் சொல்லி அரிவாள்மனையில் முருங்கைக்காய் நறுக்குகையில் விரலையும் சேர்த்து நறுக்கி இரத்தம் கொட்டக்கொட்ட...

கடவுளே...

சுவாமிகளின் பக்கவாட்டு அறையில் இளம் காவியுடை யுவதிகள் சுவாமியின் அங்கிகளை மடித்தபடி சிரித்துப் பேசுவது இவளுக்குத் தெரிகிறது. ஆண் துறவிகள் மக்கள் கூட்டத்தைச் சமன் படுத்துவதில் சுறுசுறுப்பாய் இருக்கின்றனர். அவர்கள் கூட்டம் முற்றும் துறந்து வாழ்வியலை வெறுத்த இடமாய் அவளுக்குத் தெரியவில்லை.

"அம்மா... இது நம்ம அப்பா தானான்னு சொல்லும்மா. என்னம்மா, பேசாம நிக்கிற?"

இந்துவின் குரல் விசாலத்தின் செவிகளில் விழுந்து இதயத்தைப் பிசைகிறது. அங்கு பெண் துறவிகள் சிரிப்பதும் பேசுவதும்... ஏதோ திரைப்படக் கனவுக் காட்சிகளாய்....

விசாலத்தின் முதுகெலும்பில் குளிர் ஆரம்பித்துத் தேகத்தில் வியாபிக்கிறது. விசாலம் கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு, சுவாசிக்க சிரமப்படுபவள் போல வெளியே வருகிறாள். ஒன்றும் புரியாமல் தாயைப் பின் தொடர்கிறாள் இந்துமதி.

மண்டபத்திற்கு வெளியே வந்ததும் வியர்க்கும் முகத்தைச் சேலைத் தலைப்பால் துடைக்கிறாள் விசாலம். இதயம் போடும் இரைச்சல் வெளியே கேட்டுவிடுமோ?

"அம்மா... அம்மா.. என்னம்மா என்னை விட்டுட்டு வந்துட்டே?... அவர் நம்ம அப்பா இல்லையா? அவரை நான் நன்னாப் பார்த்துட்டு வந்துடறேம்மா..."

"இல்லடி இந்து! உங்க தோப்பனார் எப்பவும் பொம்மனாட்டி பின்னாடி அலைய மாட்டார். என்னைத் தவிர யாரையும் நிமிர்ந்துகூடப் பார்க்க மாட்டார். இப்படியா சுத்தி சுத்திப் பொம்மனாட்டி நின்னுண்டு... சவரட்சனை செய்துண்டு..."

குனிந்து கொள்ளும் விசாலத்தின் கண்கள் கண்ணீரில் மிதக்கின்றன. குரல் நடுக்கத்தில் மகள் புரிந்து கொள்வாளோ என்கிற பயம்.

"ஏம்மா, என்ன செய்யறது? உடம்பு ஜில்லுன்னு போய் நடுங்குது?"

"உம்... என்னவோ தலை சுத்தறது. மூச்சடைக்கிறது".

ஆட்டோ அழைத்து தாயுடன் ஏறிக் கொள்கிறாள் இந்துமதி.

பிள்ளைகளைப் பொறுத்தவரை அவரின் எந்தப் பலவீனங்களும் தெரியக் கூடாது. அது அப்படியே இவளுள் புதைந்து போகட்டும். தந்தை அவர்களை விட்டு ஓடியிருக்கலாம். அவருக்கு எந்தக் களங்கமும் பிள்ளைகளின் பேச்சில் வருவதை விசாலம் விரும்பவில்லை.


சுவாமியைத் தரிசிக்கத் துடித்த அம்மா, எதற்காக இப்படித் தரிசிக்க விடாமல் திரும்புகிறாள் என இந்துவிற்குப் புரியவில்லை.

விசாலத்தைப் பொறுத்தவரை சதாசிவம் இவள் முகம் மட்டுமே நிமிர்ந்து பார்க்கிற ஆண் மகன். இதுதான் அவளுக்கு வேண்டும்.

இப்போது விசாலத்தால் நிம்மதியாய் சுவாசிக்க முடிகிறது. ❧



சார், 'நெருப்பு' வேணுமா?







ஹாட் ஜோக்ஸ்



சங்கப் பலகை

கவிதை

அமுத மலர்கள்

(ஆசிரியர் - எம்.இ.பிரபாகர பாபு. வெளியீடு - திவ்யபாரதி பதிப்பகம், 3, சோலைத் தெரு, அயன்புரம், சென்னை - 600 023. பக்கங்கள் - 80. விலை - ரூ. 12.00).

நிமிர்ந்து நில், முதுமை வரை, முயற்சியை முடிசூடு, இந்தியம், சம்மட்டியடி, வன்முறை, பட்டு போன்ற பல தலைப்புகளில் கவிதைகள் அமுத மலர்களாய் மணம் வீசுகின்றன. 'மனசாட்சி' எனும் கவிதையில் அமுத மலர்களுக்கு இதோ ஒரு முழு சாட்சி -

'நெஞ்சுக் குள்ளேயே இருந்து
கொஞ்சம் கொஞ்சமாய்க்
கொல்லும் விஷஊசி!
சிலரின் அபரிமித
இரத்த அழுத்தத்தின்
மொத்த காரணி!
தன்னை ஏற்பவர்க்கோ
தரமான சர்வரோக நிவாரணி!'

ஞாபகப் பூக்கள்

(ஆசிரியர் - துறவி. வெளியீடு - கௌதமன் பதிப்பகம், 14 நந்தனார் தெரு, விவேகானந்தர் நகர், சென்னை - 51. பக்கங்கள் - 112. விலை - ரூ. 14.00).

காலம் கெட்டுத்தான் போனது என்பதை -

'விளக்குகளை
இப்போது யாருமே
விரும்புவதே இல்லை
தவறுகள் செய்ய
இருட்டேநல்ல
திரையாய் இருப்பதால்!'

- என்கிறார் புதுக்கவிதைப் பல்லக்கில் புதுமைக் கவிதைக் குதிரைகளைப் பூட்டிப் புதுப் பாதையில் பயணிக்கும் துறவி.

அச்சமைப்பும் அட்டை அமைப்பும் அருமையாய் அமைந்து, ஞாபகப் பூக்களாய் மணம் வீசி ஆனந்த ஊற்றாய் மன ஆழங்களில் சுரக்கின்றன.

ஞாபகமறதியாய்க்கூட முகர மறக்கக்கூடிய கவிதைப் பூக்கள் அல்ல இவை!

அனுபல்லவி

(ஆசிரியர் - அனந்தசயனம். பக்கங்கள் - 64. விலை - ரூ. 15.00).

'தாரணி போற்றும் ராஜீவ்
தாமரை முகத்தைக் காணத்
தீர்ந்திடும் எங்கள் சோகம்
திரும்பவும் ராஜீவ் வேண்டும்!'

என்று விரும்பும் ஆசிரியர்.

'குருதி ஒன்று இறுதி ஒன்று
மறைய வேண்டும் பிரிவினை.
மரண வாசல் நிற்கும் போது
மனித சாதி சரிசமம்!
சாதி கேட்டுக் கூறு போட்டு
மேகம் மழையைப் பொழிந்ததா?
வேதம் சொல்லும் உண்மை
எல்லாம்
'தேவன் ஒருவன்' அல்லவா!'

என்று சாதி சமயச் சண்டை வேண்டாமென்று குரலெழுப்புகிறார். அனுபல்லவி ஒரு மரபுக் கவிதைத் தொகுதியைப் படித்த திருப்தியைத் தரவல்லது!

— நீலவன்.

மரியன்னைப் பதிகம்

(ஆசிரியர் - ரமணன். வெளியீடு - ஆதாரம், காந்தித் தெரு, எக்ஸ்டென்சன், சித்லபாக்கம், சென்னை - 600 064. பக்கங்கள் - 15. விலை - ரூ. 3.00).

'தமிழுக்கு அமுதென்று பேர்' எனும் திருவாக்கை மெய்ப்பித்துள்ள கவி மலர்கள், மந்திரச் சொற்கள், மணம் லயிக்கும் சந்தம், மரியன்னையின் திருவடிகளில் மனோரஞ்சிதமாகக் கமழ வைக்கும் வந்தனைப் பாட்டுகள் - 'கவிதை'யின் ஜீவனைக் காட்டும் சிறிய விளக்கத்துடன்.

—குன்றக்குடி

நாவல்

வேள்வி

(ஆசிரியர் - மாரி அறவாழி. வெளியீடு - அறவாழி பதிப்பகம், மனை எண். 10, பாண்டியன் நகர், தாம்பரம், சென்னை - 600 045. பக்கங்கள் - 272. விலை - ரூ. 25.00)

இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற சுப்பையா மனைவியின் உடல்நலம் கருதி மகள் புனிதாவுடன் சொந்தக் கிராமமான கோவில்மேட்டில் குடியேறுகிறார். அவருக்கு உறவினர்களான ஊராட்சி மன்றத் தலைவர் நல்லக்கண்ணுவும், நாட்டாண்மை பெரியசாமியும், கிராம அதிகாரி குருவய்யாவும் ஊரை ஏய்த்துப் பிழைக்கின்றனர். இதை அன்பழகன் எனும் இளைஞனோடு சேர்ந்து எதிர்க்கிறார் சுப்பையா. அன்பழகனுக்கும் புனிதாவுக்கும் காதல் மலருகிறது. இது பிடிக்காத குருவய்யாவின் மகன் டாக்டர் ஞானசேகரன் அன்பழகனைச் சுட்டுக் கொல்கிறான். பழி சுப்பையா மீது விழுகிறது.

உண்மை, சேரலாதன் என்ற வழக்கறிஞர் மூலம் தெளிவாகிறது. சுப்பையா விடுதலை பெறுகிறார். இறுதியில் சேரலாதனும் புனிதாவும் இணைகின்றனர். இது விறுவிறுப்பு நிறைந்த ஒரு சமூக நாவல்!

— நீலவன்

ஆராய்ச்சி

விவேகானந்தர் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்

(பதிப்பாசிரியர் - லேனா தமிழ்வாணன். வெளியீடு - மணிமேகலைப் பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017. பக்கங்கள் - 91. விலை - ரூ. 9.50).

உருக்கமும், உள்ளார்ந்த நெகிழ்ச்சியும், அறிவுக் கூர்மையும், ஆன்மிகச் செறிவும், பக்தி நெறியும், பணிவுணர்வும், தேசப் பற்றும், தெய்வக் குணங்களும் சுவாமி விவேகானந்தரிடம் ஒளிரிய இருபத்தேழு நிகழ்ச்சிகளின் தொகுப்பு நூல். எளிமையான நடையில் அமைந்திருப்பதால் சிறுவர் முதலாக எல்லாரும் படித்துச் சுவைக்கலாம்; பயனும் பெறலாம்.

முகலாயப் பேரரசின் மைய அமைப்பு

(ஆசிரியர் - இபின்ஹஸன். தமிழாக்கம் - பா. மாணிக்கவேலு. வெளியீடு - இந்தியன் கவுன்சில் ஆப் ஹிஸ்டாரிகல் ரிசர்ச், நியூ டில்லி & நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட். பக்கங்கள் - 490. விலை - ரூ. 75.00).

உஸ்மானியா பல்கலைக் கழகப் பேராசிரியர் இபின்ஹஸன் டாக்டர் பட்டம் பெறுவதற்காக எழுதப் பெற்ற அரிய நூல். இந்தியாவில் அரசோச்சிய முகலாயப் பேரரசின் அரசாங்கம் பற்றிய முழுமையான செய்திகளை, ஆசிரியரின் இடைவறாத உழைப்பும், வரலாற்றுத் திறமும் பக்கந்தோறும் பறைசாற்றி நிற்கின்றன. மாமன்னர் அக்பர் ஆட்சியின் தொடக்க ஆண்டான 1560 தொடங்கி, ஷாஜஹான் ஆட்சியின் இறுதி ஆண்டான 1657 முடிய முகலாயப் பேரரசின் மைய அமைப்புப் பற்றி விவாதப் பொருளாக்கி, விரிவாக விளக்கும் ஆசிரியரின் ஆய்வும், சரித்திர உணர்வும் பிரமிக்க வைக்கின்றன. மூன்று பாகங்களாக வகுத்துக் கொண்டு, வட இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியின் முந்நூறு ஆண்டுகளில், புகழார்ந்த மாமன்னர் அக்பரின் ஆட்சித் திறத்தை அற்புதமாக விளக்கியிருக்கிறார் ஆசிரியர். முகலாய வரலாற்றை முறையாகத் தமிழில் அறிய நினைப்போர்க்கு அரிய புதையல்! மூல நூலின் முனை முரியாத மொழி பெயர்ப்பு. பா. மாணிக்கவேலு பாராட்டிற்கு உரியவராகிறார்.

சிங்காரவேலு, தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட்

(ஆசிரியர்கள் - கே.முருகேசன், சி.எஸ். சுப்பிரமணியம். வெளியீடு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 41.பி., சிட்கோ எஸ்டேட், சென்னை - 600 098. பக்கங்கள் - 463. விலை - ரூ. 60.00).

செயற்கரியர் சிங்காரவேலுவின் முழுமையான வரலாற்றை (ஏறத்தாழ) அறியச் செய்கின்ற இந் நூலில், இருபதாம் நூற்றாண்டின் இருபதுகளிலும், முப்பதுகளிலும் நிகழ்ந்த தமிழ் நாட்டின் நிகழ்வுகளைப் பல்வேறு பத்திரிகைகளிலிருந்து திரட்டி வெளியிட்டிருப்பது படிப்போர்க்கு மிகுந்த பயன் அளிப்பதாய் ஒளிருகிறது. ஆசிரியர்கள் கே.முருகேசன், சி.எஸ்.சுப்பிரமணியம் ஆகிய பெருமக்கள் இது போன்றதோர் ஆங்கில நூலை 1975லேயே படைத்து வெளியிட்டுள்ளனர். சென்னைக் கடற்கரைக் குப்பம் ஒன்றில் மீனவ இனத்திலே தோன்றிய சிங்காரவேலு, படித்துப் பட்டம் பெற்று, வழக்கறிஞராகி சமூக நலப்பணியில் ஆர்வம் காட்டி, இந்திய தேசியக் காங்கிரசில் பங்கு பெற்று, சுயமரியாதை இயக்கத்தில் விருப்பம் கொண்டு, தொழிலாளர் இயக்கங்களின் முன்னோடியாகி, மார்க்சியத் தத்துவங்களில் தம்மைக் கரைத்துக் கொண்டு, கம்யூனிச இயக்கத்தின் விடிவெள்ளியாக விளங்கியதை ஆசிரியர்கள் படிப்படியாகச் சித்திரித்து உள்ளனர். தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கைச் சரிதம்போல் தோன்றிடினும், இந் நூல் ஓர் அரிய வரலாற்றுப் பேழையாகத் திகழ்கிறது.

ஆன்மிகம்

ஸ்ரீகணபதி ஸஹஸ்ரநாமம்

(ஆசிரியர் - ஜி.நாராயணன். வெளியீடு - ஸ்ரீ குஹாநந்த மண்டலி, 125, கல்லூரிச் சாலை, நங்கை நல்லூர், சென்னை - 600114. பக்கங்கள் - 216. விலை - ரூ. 20.00).

முழு முதற் பொருளை ஆயிரம் திருநாமங்கள் கூறி, போற்றிசைத்து, அர்ச்சித்து வழிபடுவது மரபு. 'ஸ்ரீ கணபதி ஸகஸ்ரநாமம்' - "கணேச்வர" எனத் தொடங்கி ஆயிரமாவது திருநாமமாக "அனந்தானந்த ஸௌக்யத" என நிறைவு பெறுகின்றது. இவை ஒவ்வொன்றுக்கும் 'கத்யோதம்' எனும் வடமொழி உரையைத் தழுவித் தமிழில் 'புஷ்கரம்' எனும் தலைப்பில் தமிழாக்கமும், விளக்கமும் வழங்கியுள்ளார் ஆசிரியர் ஜி. நாராயணன். உரையும், விளக்கமும் எளிமையாகவும், மெய்ப் பொருள் உண்மையைத் தெளிவாக உணருமாறும் அமைக்கப் பெற்றுள்ளன. இடையூறின்றி எல்லாக் காரியங்களும் வெற்றியும், பெற்றியும் அடைந்திட, இந்த ஆயிரம் திருநாமங்களை ஒருமுறை ஓதினாலே போதுமென்பது தொன்மையான நம்பிக்கை. மூலக் கிரந்தத்தின் வரிவடிவம் நூலின் பின்னே சேர்க்கப் பெற்றுள்ளது.

— 'குன்றக்குடி'



பூவே... சொல்

செடியின் குழந்தாய் பூவே - பாவைதலை
சிம்மா சனத்தின் கோவே
மகிழ்ச்சி பூணும் நீயே - அதை
மங்கைக் கும்தரு வாயே.

பூத்த இலட்சியம் இருக்கு - பூவே
பூசைக்கு செலல் உனக்கு
பூமகள் ஏங்குறாள் நிம்மதிக்கு - இதை
பூமானுக்கு எடுத்து விளக்கு.

— அருஞ்சுவையன்

பலமற்ற சமுதாயம் மிளிர்வதில்லை!

இலக்கியச் சித்தர் தங்கவயல் லோகிதாசனார்



இருள் பாய்ச்சும் இரவின்றிப் பகலுமில்லை!
இகத்தனிலே இன்னலின்றி இன்ப மில்லை!
பொருள் காய்ச்சும் மண்ணின்றித் தங்கமில்லை!
பொதுவாழ்வில் இகழின்றிப் புகழுமில்லை!
ஒருநோக்கில் உள்ளார்க்கு ஊன மில்லை!
உணர்ச்சிக்கு மிகையான சக்தி யில்லை!
திருநோக்கில் ஜெயமன்றித் தோல்வி யில்லை!
திகட்டாத செந்தமிழுக் கிணையே இல்லை!

அரங்காத்து! அரசோச்சும் வேந்தரில்லை!
அழியாத கொடையீயும் மாந்தரில்லை!
புறங்காட்டி நிற்போர்க்கு உறுதியில்லை!
புரட்சிக்குக் கிடைக்காத வெற்றியில்லை!
உறங்காது உழைப்போர்க்கு உணவு இல்லை!
உடையில்லை; ஓய்வில்லை; உரிமை யில்லை!
இரங்காதக் கல் நெஞ்சச் செல் வருக்கு
ஏழ்மையிலை, பசியுமிலை, உழைப்பு மில்லை!

மணமற்ற மலரினெழில் ரசிப்பதில்லை!
மனமற்ற உபச்சாரம் ருசிப்பதில்லை!
பணமற்ற புவிவாழ்வு ஒளிர்வதில்லை!
பலமற்ற சமுதாயம் மிளிர்வதில்லை!
குணமற்றப் பெருநட்பும் உயர்வதில்லை!
கொள்கைக்கு உயிர்வாழ்வோன் அயர்வதில்லை!
இனப்பற்று இல்லார்க்கு எதுவு மில்லை!
இதுவன்றிப் பொதுஞானம் எதுவுமில்லை!

ஒரு தொலைபேசியின் துயரக் கண்ணீர்

— காசி வில்லவன்



என்னைத் தான் தெரிகிறதா திரும்பிப் பார்ப்பீர் – மனக்
கண்ணைத்தான் திறந்து செவி கூர்ந்து கேட்பீர்!

என்னையா உமக்கு நான் தீங்கு செய்தேன் – தெரு
மண்ணை ஏன் என்மீது வீசச் செய்தீர்?

வாய்திறந்து பலபேர்கள் பேசுதற்கே – நானும்
வாய்மூடித் தெருவோரம் நின்றிருப்பேன்!

பேய் மழையோ பெருங்காற்றோ எந்த நாளும் – எந்தன்
பெரும்பணியை ஆற்றுதற்கே காத்திருப்பேன்!

கடல்தாண்டி மலைதாண்டிக் காடும் தாண்டி – நானும்
கால்கடுக்க ஓடிப்பின் நொடியில் மீள்வேன்!

உடல்தாண்டி உளம்தாண்டி உணர்வும்தாண்டி – இரு
உள்ளங்கள் இணைந்திடவே விரைந்து செல்வேன்!

பேரில்லா மனிதரெலாம் என்னைப் பெற்று – பெரும்
பெருமையோடு நாகரிகம் பெற்ற போதும்

ஊர்விட்டு ஊர்சென்று சேதிசொல்லும் – என்றன்
உழைப்பினிலே குற்றமெனக் கண்டீர் ஐயா?

ஆர்ப்பாட்டம் போராட்டம் என்று வந்தால் – என்னை
அறுக்கின்றீர்; உடைக்கின்றீர்; நசுக்குகின்றீர்!

ஊர்ப்பாட்டுக் கென்றேதான் ஓடும் என்னை – முற்றும்
உருக்குலைத்துத் தீயிட்டுப் பொசுக்கு கின்றீர்!

தன் நாவைத் தானேதான் அறுத்துக்கொண்டு – பேசும்
தன் மொழிக்குச் சவக்குழிதான் தோண்டல் உண்டோ?

உம்மைத்தான் பணிவோடு வேண்டுகின்றேன் – என்
உள்மனத்துக் கூக்குரலை கேட்பீர் ஐயா!

உம்மோடு எல்லாமும் ஒழிவதென்றால் – புவியில்
உள்ள பொருள் அத்தனையும் உடைப்பீர் இன்றே!

உமக்குப் பின் சந்ததியின் சிந்தை கொண்டால் – நானும்
உயிர் வாழ்ந்து பணிபுரிய விடுவீர் ஐயா!

யாக தரிசனம்

புவனேச்வரிதாசன்

சென்னை மேற்கு மாம்பலத்தில் வெங்கட்ராமன் தனது குடும்பத்தோடு வசித்து வருகிறார். தனியார் நிறுவனமொன்றில் இன்ஜினியர். உழைப்பிற்கேற்ற ஊதியம். பக்தியும் பண்பும் ஒருங்கே அமைந்து பாங்கான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார். இவரது மனைவி கீதா. இவரும் தனியார் நிறுவனத்தில் பணிபுரிபவர். காலையில் வெங்கட்ராமனும் கீதாவும் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் பாராயணம் செய்யாமல் வெளியே செல்ல மாட்டார்கள். அதே போல ஸ்ரீசுப்ரமண்ய புஜங்கத்தையும் படிக்காமல் அலுவலைத் தொடங்க மாட்டார்கள். ஒவ்வொரு சனிக்கிழமையும் இருவரும் விரதம் இருப்பார்கள்.

முப்பத்திரண்டு வயதான கீதாவுக்குத் திடீரென தலை சுற்றலும் மயக்கமும் வந்தது. எதனால் என்று விளங்கவில்லை. மருத்துவ சோதனையில் எல்லாம் நார்மலாய் இருந்தது. தலைப்பகுதியில் ஸ்கேன் எடுக்கப்பட்டது. அதிலும் ஒன்றும் இல்லை.

எப்போது மயக்கம் வரும், தலைச்சுற்றல் அதிகமாகும் என்று தெரியாது. சுறுசுறுப்பாய் இருந்த கீதாவுக்கு ஆறுமாத காலமாய் இப்படியொரு உபாதை படுத்தி எடுத்தது. மனைவியின் இந்நிலை கண்டு பயந்துவிட்டார் வெங்கட்ராமன். ஒவ்வொரு நாளும் குழப்பத்தோடு அலுவலுக்குச் செல்வார்.

கீதாவுக்கு உதவி செய்யப் பெரியவர்கள் இல்லை. பக்கத்தில் துணையிருக்க, உதவி செய்ய யாருமில்லை. சிறு குழந்தைகள். இப்போதுதான் குடும்பம் முளைவிட்டிருக்கிறது. கீதா வேலைக்குச் சென்று ஐந்து மாதம் ஆகிறது. குடும்பத்தில் சமையல் செய்வது, குழந்தைகளைப் பராமரிப்பது போன்ற அன்றாடக் காரியங்கள் நடக்க வேண்டும். வெங்கட்ராமன் எத்தனை நாள்தான் லீவு எடுக்க முடியும்? தவித்துப் போய்விட்டார்.

கீதாவுக்குச் சிகிச்சை நிறையவே அளிக்கப்பட்டது. மாற்று மருந்துகள், ஊசி என நிறைய ஏற்றப்பட்டது. உடம்பில் மாற்றத்திற்குப் பதில் ஏமாற்றம் தான்.

வெங்கட்ராமனுக்குப் பரமஹம்ஸ புவனேஸ்வரி ஸ்வாமிகளின் நினைவு வந்தது. அம்பத்தூர் பரத்வாஜ ஆச்ரமத்தில் பௌர்ணமி தினத்தில் ஸ்ரீஸ்வாமிகள் நடத்திய பூஜையையும், அங்கே ஸ்ரீபுவனேஸ்வரி நிகழ்த்திய திருவிளையாடல்களையும் கண்ட நினைவு தட்டியது. வருகிற தைப்பூசத்தில் காலையில் எப்படியும் கீதாவை ஆச்ரமத்திற்கு அழைத்துச் செல்வதெனத் தீர்மானித்து, ரெட்ஹில்ஸ் ரோடு வழியாய் கங்கை நகரிலுள்ள ஆச்ரமத்திற்குக் காரில் கீதாவைக் காலையில் அழைத்து வந்து ஸ்ரீ ஸ்வாமிகளின் திருவடிகளில் விழுந்து, கீதாவின் நிலையை விளக்கினார்.

“வெங்கட்ராமா! இன்று மூலிகைகளால் ம்ருத்யுஞ்ஜய ஹோமம் நடக்கிறது. ஹோமத்திற்கு நெய் மட்டும் உன்னைச் சேர்ந்தது. உன் மனைவி கீதாவை யாகசாலையில் உட்கார வை. நோய் தீர்ப்பாள் புவனேஸ்வரி. ஹோம பஸ்பத்தைத் தினமும் கீதாவுக்குக் காலையில் தேனில் குழைத்துக் கொடு. குணம் பெற்று, சரியாவாள்”.

‘ஓம் த்ரயம்பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டி வர்த்தனம், உர்வாருகமிவ பந்தனான் ம்ருத்யோர் முக்ஷிய மாம்ருதாத்’. இந்த மந்திரத்தை ஸ்வாமிகள் கூறி மூலிகைகளை அக்னிக்கு ஆகுதியாய் அளித்தார். வெங்கட்ராமன் கண்ணை இறுக மூடிக்கொண்டு, அக்னி குண்டத்தில் புவனேஸ்வரியைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். ஹோமம் முடித்து, சங்கு தீர்த்தத்தை மும்முறை கீதாவின் சிரஸிலும் முகத்திலும் தெளித்தார் ஸ்ரீஸ்வாமிகள்.

வெங்கட்ராமன் பௌர்ணமி தின அபிஷேகத்தையும் அர்ச்சனையையும் முடித்து, கீதாவை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று, ஸ்வாமிகள் திருவாக்குப்படி தினமும் பஸ்பத்தைக் காலையில் தேனில் குழைத்துக் கொடுத்து வந்தார்.

பதினைந்து நாட்கள் சென்றன. சிரத்தையும், நம்பிக்கையும் வெங்கட்ராமனுக்குத் தீவிரமாய் இருந்ததால் புவனேஸ்வரியைத் தியானம் செய்து கொண்டு கீதாவுக்குப் பஸ்பத்தைக் கொடுத்து வந்தார். கொஞ்சம் கொஞ்சமாக கீதாவின் முகத்தில் தெளிவைக் கண்டார் வெங்கட்ராமன். கீதாவின் வழக்கத்தில் மாற்றமும் தோன்றியது. சுறுசுறுப்பாய் அன்றாட வீட்டு வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தார் கீதா.

பழைய தொல்லைகள் அறவே மறைந்து அலுவலகமும் செல்லத் தொடங்கிவிட்டார். ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. பிரச்சனை திரும்பவே இல்லை. வெங்கட்ராமன் மனத்தில் ஸ்வாமிகள் திருவடி தரிசனம் எப்போதும் நிழலோடிக்கொண்டிருக்கிறது. ••

மரம்



நீலவன்

போட்டிக்கு வந்த கதை: 2

பத்து நாட்களாக அமாவாசைக் கிழவனுக்கு மிகவும் முடியாமலிருக்கிறது.

பாதாதிகேசம் சுருக்கங்கள் விழுந்து தொளதொளத்து, வலுவிழந்தும் பொலிவிழந்தும் போன கிழவனுடைய உடல் குச்சியாகிவிட்டது.

பேத்தி வழிப் பேத்தி பேபி, சுமைதாங்கியையொட்டி ஏராளமான பெரிய பெரிய கிளைகளை அகலப் பரப்பி அந்தத் தேசிய நெடுஞ்சாலையைச் சதா குளிர்ச்சியில் குளிக்க வைக்கும் பிரம்மாண்டமான வேப்ப மரத்தடிக்குப் போய், ஈச்சம்பாயில் படுத்திருக்கும் கிழவனுக்கு நீராகாரம் கொடுக்கிறாள். அது இறங்குவது ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது.

பேபியிடம் வாயைக் குதப்பிக் குதப்பிப் பேசுகிறான் கிழவன். அவளுக்குப் புரிகிறது. அந்தச் சிற்றூருக்கும் புரிகிறது.

எண்பத்தைந்தை எப்போதோ தாண்டிவிட்டான் அமாவாசைக் கிழவன். அந்த ஊரில் சிலர் தொண்ணூறு நெருங்கிவிட்டது என்றுகூடச் சொன்னார்கள்.

அந்தப் பூதாகாரமான வேப்பமரம் கிழவனுக்கு நான்கு வயது நடக்கும்போது அவனுடைய 'நைனா' வைத்தது. அதையொட்டி இருக்கும் சுமைதாங்கியும்!

மழை பெய்யும் நாட்களில் மட்டுமே அமாவாசைக் கிழவன் வேப்பமரத்துக்குப் பக்கத்திலேயே இருக்கும் மஞ்சம்புல் குடிசையில் கிடப்பான்.

மற்ற நாட்களில் வேப்பமரத்தடியில் அல்லது தாழ இருக்கின்ற சுமைதாங்கிக் கருங்கல்லின் மீது வெறுமனே நரை இமைகளுக்குள் இடுங்கிய கண்களைத் திறந்து மரக்கிளைகளைப் பார்த்துக் கொண்டு படுத்திருப்பான். பழையதுகளில் சஞ்சரிப்பான். தூங்கிக் கொண்டிருப்பான்.

கிழவனின் பிராயத்துக்காரன் அந்தச் சிற்றூரில் ஒருவனுமில்லை. சுற்றுவட்டாரத்து ஏழெட்டுச் சிற்றூர்களில்கூட யாருமில்லை. அதனால் கிழவன் அவர்களைப் பொறுத்தவரை ஒரு சரித்திரம்!

பதினைந்து நாட்களுக்கு முன்புவரைகூட வழிப்போக்கர்களைக் கூப்பிட்டு, "ஒனக்கு எந்த ஊரு? எவங்க வூடு? ஒங்க ஊர்ல அவன் எப்படிக் கீறான், இவன் எப்படிக் கீறான்? அந்த தொரபதி ஆத்தாக்கோவுலு இன்னும் சிதிலமாகலியே?" என்று துளைத்திருக்கிறான் பொக்கை வாயைக் குதப்பிக்கொண்டே.


கிழமாயிற்றே என்று கேட்பவர்கள் தலையசைத்து, 'ஊம்' கொட்டினால் போதும், மேலும் தொடங்கிவிடுவான் அமாவாசை.

"இந்த வேப்பமரம் என் நைனா வெச்சிது. அப்போ எனக்குப் பெராயம் நாலு. இப்போ இந்த மரத்துக்கு எண்பது நடக்குது. சொமதாங்கியும் அப்போ வெச்சிது. அதுவும் என் நைனா வெச்சிது தான்...

"இந்த மரத்தடி தான் எனக்கு வூடு, வாச, படுத்துக்கிறதுகூட இங்கெதான். எனக்கு வெதர்ணெ தெரியாத பெராயத்திலியே ஆத்தா செத்துப் பூட்டா. ஒரே புள்ளெயான என்னெ வேப்பமரத்தடியிலே, சொமதாங்கி மேல போட்டு வளத்தாரு என் நைனா... சின்ன வயசிலே இந்த மரத்துல கட்டிய தூளியிலே எப்படி ஆடியிருக்கிறேன்... அப்புறம் கோங்குக் கயித்திலே ஊஞ்சல் கட்டிப் பாட்டுப் பாடியிருக்கிறேன். உச்சாங்கெளை வரிக்கும் ஏறிப்போய் புடிக்கிற ஆட்டம் ஆடியிருக்கிறேன். என் கூட அப்படி ஆடனவங்கள்ளாம் போய்ச்சேந்துட்டாங்க...ம்ம்..."

இன்றைய மனிதர்கள் அவனைப் பொறுத்தவரை அன்றைய மனிதர்களாகவே படுகிறார்கள். அதனால்தான் தனக்கே உரிய கபடமற்ற பாசப் பரிவோடு அவர்களோடு தன் பழமைகளைப் பரிமாற விரும்புகிறான், பரிமாறுகிறான்.

அந்தச் சிற்றூருக்கு மேற்குத் திசையில் திப்புமேட்டை அணைத்துக் கொண்டு பருவத் திற்கொரு தரம் பாய்ந்தோடும் சிற்றாற்றில் தன்னோடு குளித்த, மீன் பிடித்த, ஆற் றோரப் புதர்களில் கிளிக் குஞ்சுகளை விரட்டிய பக்கத்து ஊர்க்கார முனிசாமியும்,



கந்தசாமியும் இன்றைக்கோ நாளைக்கோ என்று இழுத்துக் கொண்டிருக்கிறார்களென்று பேபி மூலம் அறிந்தான் கிழவன்.

பதினேழு நாட்களுக்கு முன்பு கைத்தடியூன்றி மெல்ல நடந்து, இடையிடையே குந்தி, மூச்சிறைக்கப் போய் அவர்கள் இருவரையும் பார்த்து நலம் விசாரித்து, மிகப் பழைய நிகழ்ச்சிகளை அசையிட்டு விட்டு மறுநாள்தான் தன் குடி சைக்குத் திரும்பினான் அவன்.

முனிசாமியும், கந்தசாமியும் அமாவாசையைவிடப் பத்து வயது சிறியவர்கள். அப்படி யிருந்தும் அவர்களால் படுத்த படுக்கையை விட்டு நகர முடிய வில்லை. அதனாலேயே அமா வாசைக் கிழவன் அவர்களைத் தேடிப் போனான். இரத்தமும் தசையுமாய் கலந்துவிட்ட அந்தப் பாசமே அப்போ தைக்குக் கிழவனுக்கு ஒரு பிரதான பாலமாக இருந்தது.

அவர்களிடமிருந்து திரும் பிய மறுநாள் படுத்துவிட்டான் அவன்.

பேபிக்குப் புரியவில்லை.

நடமாடிய கிழவன் இப்படி ஒரேயடியாகப் படுத்துவிடு வான் என்று அவள் எதிர் பார்க்கவில்லை.

மரணிக்காத நினைவு களைப் பகிர்ந்து கொண்டே முனிசாமியும், கந்தசாமியும் மரணிக்கத் தயாராகி விட் டார்களே என்ற ஒரு துக்கம் கிழவனின் ஆழ் மனத்துள் தைத்து, அவர்களுக்காவது அந்திமத்தில் ஆறுதல் சொல்ல நான் இருந்தேன், அந்தப் பிராயத்துக்காரர் எனக்கு யாருமே இருக்கப் போவ தில்லையே என்ற தனிமை மேலீடு, கிழவனை இப்படி திடுதிப்பென்று படுக்கையில் கிடத்திவிட்டதோ என்று நினைத்துக் கொண்டாள்.

பத்து நாட்களாய் வேப்ப மரத்தடியிலிருந்து அசைய வில்லை அமாவாசை.

ஊரார் பகலிலும் இரவிலும் அவனிடம் நெருங்கிப் போய் உட்கார்ந்தனர்.

தலைமாட்டில் பேபியை உட்கார வைத்து அவளுடைய கொழுவிய கைகளை வருடி னான் கிழவன். ரப்பர் வளை யல்களை மேலுக்கும் கீழுக்கு மாய்த் தள்ளினான்.

"பே...பி...பேபி...பே...பி..."

"என்ன, கெழவா... என்ன வோணும்?" அமாவாசையின் முகத்தைத் தடவினாள் பேபி. அவன்தான் தன்னைக் 'கெழவா' என்று எப்போதும் விளிக்கச் சொல்லி அவ ளுக்குப் பயற்சி கொடுத்தவன்.

"பேபி ஒனக்குக் கண் ணாலம் பண்ணாமலியே இந்தக்

கெழவன கண்ணெ மூடிடு வேன் போல கீது..." சன்னமான குரலில் நாத்தழுதழுக்க நரை இமைகளுக்குள் ஒடுங்கிய கண்களில் நீர் கசியக் குறிப் பிட்டான்.



"கெழவா என் கண்ணாலத் துக்கு இப்ப இன்னா அர்ஜண்ட்? நீ உசுருக்குசுரா விரும்புற இந்த வேப்பமரம் ஒன்னைக் கண்மூட செஞ்சி டாது. இந்த மரம் மாதிரியே ஒன் ஒடம்பும் வைரம் பாஞ்சது. அதாலசும்மாபெனாத்தாதெ...

அமாவாசைக் கிழவனும், அவன் அதிகமாய் நேசிக்கும் வேப்பமரமும் சுமைதாங்கியும் தான் பேபிக்குத் தாய், தந்தை, உடன் பிறப்பு எல்லாம்!

போன சித்திரையில் ஒரு சம்பந்தம் குதிரவிருந்தது.

மாப்பிள்ளையின் தகப்பன் அந்தத் துண்டு நிலத்தைப் பேபியின்மீது எழுதினால்தான் என்று ஒற்றைக் காலில் நின் றான்.

காரணம் தோராயமாய்ப் பேபிசொன்னதுதான்!

கேட்டதும் கொதித்துக் குதித்தான் அமாவாசை.

மாப்பிள்ளையின் தகப்பன் தலையை நோக்கி வீச்சு அரி வாளை வெறித்தனத்துடன் நீட்டினான்.

தப்பித்தோம் பிழைத்தோ மென்று ஓடிப்போனார்கள் மாப்பிள்ளை வீட்டார்.

மாப்பிள்ளையின் தகப்பன் ஒரு விறகுத் தொட்டிக்குச் சொந்தக்காரன்.

துண்டு நிலத்தில் அடங்கும் வைரம் பாய்ந்த வேப்பமரத்தை வெட்டிப் பலகைகள் அறு
தால் கொள்ளையாய்ச்
பாதிக்கலாமென்று திட்டம
டிருந்தானாம் அவன்.

"என் உசிரைக் கேளுங்க
குடுக்குறேன். அதைவிட நா
ஒசத்தியா நெனக்கிறெ வே
மரத்துக்கா குறி வெக்கிறீங்
படுபாவிகளா... நீங்க பாய
பூடுவீங்கடா... ஒங்க பரம்ப
பூண்டத்துப் பூடும்டா...!" ச
முனகிக் கொண்டே வே
மரத்தைச் சுற்றி வந்து
அதைத் தன் கைகளா
தடவியும், முத்திட்டும் தன்
வெளிப்படுத்தினான் கிழவன்

அப்போது கிழவனுக்கு
மரத்துக்குமுள்ள உறவி

தம் தீர்க்கமாய்த் தெளிவா
று பேபிக்கு.

சிலிர்த்தாள் அவள்.

தொடர்ந்து தன்னைக் கேட்க
ருகின்றவர்களின் குறி முழு
வேப்பமரத்தின் மீதுதான்
பதைத் தெளிவாக்கிக்
ாண்ட பேபி, தன் தாயை,
தையை, உடன் பிறப்பையே
ாவது கிழவனையே தூக்கி
ம் கயிறு, தனக்கு வாய்க்க
த அந்த மஞ்சள் கயிறு
று தெரிந்து கொண்டாள்.

அதனால் அப்பேர்க்கொத்த
ன்களை உதாசீனப்படுத்தி
ள்.

வேப்பமரத்தைச் சூறையிட
ைக்கும் மரமாகிப்போன
ந்த மனிதர்களின் பாறை
ஞ்சங்களைப் பறித்தாள்.

அமாவாசைக் கிழவன் இப்
ாதெல்லாம் பழையபடி
ப்பமரத்தடியில் இருந்து,
ப்பிடு தூரத்திலுள்ள அடுக்
பாறை எல்லையிலுள்ள
ல்லையம்மன் கோயிலுக்குத்
யூன்றி நடக்கத் தொடங்கி
ட்டான்.

'எமனை ஏமாத்திப் பூட்
ன்'.

"அந்தக் காலத்துக் கட்டை.
லை வைரம். அந்த வேப்ப
ம் இருக்கும் வெரிக்கும்
ந்தக் கெழவன் இருப்பான்...'

"இந்தப் பயுத்தப் பயம்
ருக்கிறது நம்ம ஊருக்குப்
ருமை!"

இவ்வாறெல்லாம் அந்த
ரார் பேசிக் கொண்டனர்.

பேபி பொங்கிப் போனாள்.

ஒரு நாள் மையிருளைக்
த்த மயக்கப் பொழுதில்
வன் மரத்தடியில் மூட்டை
ச் சுருண்டிருந்தான். கூதல்
று வீசத் தொடங்கியிருந்த
ல.

பேபி மஞ்சம்புல் குடிசை யில் அடுப்பூதிக் கொண்டிருந் தாள்.

திடுதிப்பென்று எட்டு, பத்து சைக்கிள்களில் இளைஞர்கள் வந்து இறங்கினர்.

"மச்சி.. இது சரியான இடம். இந்த நேஷனல் ஹைவேஸில் இந்த மரம் பிரம்மாண்டமானது. இதை வெட்டி ரோடை அடைப் போம்.

"போக்குவரத்து ஒட்டு மொத்தமாக ஸ்தம்பித்துப் போகச் செய்ய பெரிய கிளை களை வெட்டிப் போட்டால் போதும்..."

"மேலே ஏறி வெட்டுவதை விட அடிமரத்தை அறுப்பது சுலபம்".

"விஸ்வம் நீ வேண்டுமா னால் பார். இந்த மரத்தைச் சாய்த்துப் போக்குவரத்தைத் தடை செய்தால் அரசாங்கம் ஆடிப் போய்விடும். படித்துப் பட்டங்கள் பெற்று வேலை யின்றி வேதனைப்படும் நம்மைப் போன்ற இளைஞர் களின் இன்னுமுள்ள குறை களைத் தீர்க்காதிருக்கின்ற அரசாங்கம் உடனே பணியும். கொள்கைக்காக, லட்சியத்திற் காக நாம் நடத்தும் சாலை மறியல் வெற்றி பெறும்..."

வெற்றிப் பெருமிதம் அவர் களுடைய முகங்களில் அந்த மையிருளிலும் பளிரிட்டது.

அவர்களுடைய உரையாடல் களைக் கேட்டுக் கொண்டிருந்த அமாவாசைக்கு அப்போதே அவர்களைத் துவம்சம் செய்ய வேண்டும்போல் மயிர்க் கால் களில் ஆத்திரம் ஜனித்தது.

அடக்கிக் கொண்டு அனைத் தையும் கேட்டுக் கொண்டிருந் தான்.

'படவாப் பசங்களா... ஒங்க கொள்கை நெறைவேறலன்னா போராடிக்கினே இருங்கடா. ஒரு நாளு அது நெறைவேறும். இந்த மரம் இன்னாடா பண் ணுச்சி ஒங்களை? மரத்தை வெட்டிட்டா, ரோடை அடைச் சிட்டா, போறதை வர்றதைத் தடுத்துட்டா ஒங்க லட்சியம் நெறைவேறிடுமாடா? இன் னாடா நீங்க படிச்சிங்க? என்று தனக்குத் தானே பேசிக் கொண்டு குளிரில் சுருண்டிருக் கும் கிழவனருகில், மண் சிப் பியில் சோற்றையும் கோங்குக் கீரைத் துவையலையும் கொண்டு வந்து வைத்தாள் பேபி.

"ரொம்ப குளுரு இல்லே கெழவா?"

"ரொம்ப தாஸ்தியாத்தான் கீதுமா" நடுங்கிக் கொண்டே மெல்ல எழுந்தான்.

"சாப்டு கெழவா..."

"நான் சாப்ட்டுக்கிறேன். நீ போ. சாப்ட்டு படுத்தக்கோ..."

"இங்கெதான் குளிருதே. குடிசிக்குள்ள வாயேன்... இப்ப தானே ஒடம்புக்கு முடியாமப் படுத்துத் தேறிக்கிறே... வாவா... உள்ளே வா கெழவா... இந்தா தடி..." தடியை எடுத் தாள் பேபி.

"ம்ஹூம்... நான் சாப்ட்டு இங்கியே படுத்துக்கிறேன். நீ போ போ...".

'ஒனக்கு மூணு கொம் பாச்சே... சரிசரி சாப்டு..." சொல்லிக் கொண்டே மஞ்சம் புல் குடிசைக்குள் நுழைந்தாள் பேபி. எதிரே இருக்கும் தீனி மீது அமாவாசையின் கவனம் பதியவேயில்லை.

நைனா வரதராஜி நாயக ரையும், வேப்பமரத்தையும், சுமைதாங்கியையும் சுற்றிச் சுற்றி வட்டமடித்தது அவன் மனம்.

உயிரைப் பணயம் வைத்தா வது மரத்தைக் காப்பது என்று மின்னல் போல் ஒரு கீற்று அவனுள் தோன்றியதும், அடுத்த கணம் கோங்குக் கீரையைச் சோற்றில் நன்றாய்ப் பிசைந்து வேகமாய் விழுங்க ஆரம்பித்தான்.

மறுநாள் நடுநிசி.

நேற்று வந்தவர்கள் வந்தார்கள்.

கண்களைப் பறிக்கும் பாட்டரிகள் மரத்தடியைத் துழாவின.

"டே மச்சி... மரத்தடியைப் பார். ஏதோ ஒரு மூட்டை மாதிரி..."

"மச்சி, மச்சி முனகல் சப்தம் கேட்கிறது..."

"மனித ஜீவியோ?"

"நான் அப்புறப்படுத்துகிறேன். நீங்கள் வாளெடுத்து உங்கள் வேலையைத் தொடங்குங்கள்..."

"ஏய்... யார் அது?"

ஒருவன் காலால் தள்ளினான்.

"யார்ரா அது?" அமாவாசையின் பொக்கை வாய் திறந்தது.

அதற்குள் விஸ்வம் கிழவனைத் தூக்கி நிற்க வைத்தான்.

ஒருவன் கிழவனின் தடுமாற்றத்தைத் தவிர்க்கத் தடியை எடுத்துக் கையில் கொடுத்தான்.

"ஏய்... கிழவா அப்படி எங்காவது போய்ப் படு..."

"ஏம்பா... என்னை ஏம்பா தூர போவச் சொல்றீங்க?"

"இந்த மரத்தை வெட்டி ரோட்டை அடைக்கப் போகிறோம்".

"ஒரு மரம்ன்றது லேசா. அது பெரிசாக எத்தினி வருசமாவது தம்பி..."

"கிழவா உன்னிடம் விவாதிக்க நாங்கள் வரவில்லை. ம்... தள்ளிப் போ... மச்சி... ம்... தொடங்கு".

"டே....!"

திடீரென்று ஆக்ரோஷமாய்க் கிழவன் குரலெடுத்துக் கூவினான். தடியைத் தலைக்குமேல் தூக்கினான்.

எப்படி அவனுக்கு அந்த வீரம் விளைந்தது?

இளைஞர்கள் ஸ்தம்பித்தனர்..

"டே பசங்களா. இந்த மரம் ஒங்களை மாதிரி நாலு மடங்கு பெரிசு. இதோட மய்மை ஒங்களுக்குத் தெரியாது. இப்பேர்க்கொத்த மரத்தெ வெட்ட வந்த ஒங்களால இதே மாதிரி இன்னொரு மரத்தை உண்டாக்கிக் காட்ட முடியுமாடா? வெட்டாதீங்கடா... வேணும்னா என்னெ வெட்டி ரோடுல போடுங்கடா..."

"கிழவா... எங்களுக்கு எங்கள் கொள்கை, லட்சியம்தான் முக்கியம். அவை வெற்றி பெற இந்த மரத்தைத்தான் பலி கொடுக்கப் போகிறோம். விலகு. ம். விலகு".

ஒருவன் அமாவாசையைப் பிடித்துக் கீழே தள்ளினான்.

அமாவாசையின தலை சுமைதாங்கிக் கல்லின் விளிம்பில் தடாரென்று மோதியது.

"பேபி..."

அந்தப் பிராந்தியத்தையே விழுங்கியது அந்தக் குரல்.

கல் விளிம்பு சிவந்தது.

அமாவாசையின் தலையிலிருந்து குபுகுபுவென்று இரத்தம்.பேபி வாரிச் சுருட்டிக் கொண்டு மரத்தடிக்கு வந்தாள்.

இரத்த வெள்ளத்தைப் பார்த்து 'குய்யோ முறையோ' என்று கத்தினாள்.

"இப்பேர்க்கொத்த மரத்தெ வெட்ட வந்த ஒங்களால இதே மாதிரி இன்னொரு மரத்தை உண்டாக்கிக் காட்ட முடியுமாடா... வேணும்னா என்னெ வெட்டி ரோடுலபோடுங்கடா..." பிதற்றினான் கிழவன்.

"மச்சி, கிழவனைத் தூக்குங்கடா..."

ஒருவன் தன் சட்டையைக் கிழித்துக் கிழவன் தலையில் இறுக்கிக் கட்டினான்.

'இந்த எட்டு பத்துப் பேர் எங்கிருந்து வந்தார்கள்? கிழவன் தலையில் ஏன் இரத்தம் கொட்டுகிறது?'

பேபிக்கோ, அங்கு வந்து கூடிய சிலருக்கோ ஒன்றும் புரியவில்லை.

விஸ்வம் கிழவனைத் தூக்கித் தோள்மீது போட்டவாறு பச்சையப்பனின் சைக்கிளின் பின்னால் உட்கார்ந்தான்.

மற்றவர்களும் வேகமாய்ப் பெடல் செய்ய ஆரம்பித்தனர்.

"மரத்தை வெட்டாதிங்க... வேணும்னா என்னெ வெட்டி ரோட்ல போடுங்கடா..." கிழவனின் முனகல் எல்லாருக்கும் கேட்டது.

"இந்த வேப்பமரமும், இந்தக் கிழவனும் நம் மர மண்டைகளில் மகத்தான கருத்தை இன்ஜெக்ட் செய்ததை மறக்கவே முடியாது..."

"நம்மைப் பொறுத்தவரை தொண்டுக் கிழம் செய்த தொண்டுடா மச்சி இது!"

அந்தத் தேசிய நெடுஞ்சாலையில் தெளிந்த அந்த இளைஞர்கள் காற்றாய்ப் பறந்தார்கள்!

அமிர்தபஞ்சகம்

சொக்கு சுப்பிரமணியன்

☆ நமையெலலாம் ஆளுகின்ற வேத வித்து!
நற்றவத்தார் போற்றுகிற ஆதி சக்தி!
இமையவனின் நெஞ்சகத்தில் வளர்ந்த சொத்து!
இவ்வுலகைக் காக்கின்ற மாதா சக்தி!
சுமையெல்லாம் ஏற்கின்ற கடலின் முத்து!
சொந்தமுடன் அரவணைக்கும் அமுத சக்தி!
உமையவளே! அமிர்தானந் தமயித் தாயே!
உள்ளத்தில் கோயில்கொளும் அம்மா போற்றி!

☆ மங்கையர்க்கு நீ திலகம்; அம்மா எங்கள்
மனத்தகத்தில் வாழ்கின்ற அன்புத் தெய்வம்!
செங்கமலத் திருமடந்தை உனக்குச் சேடி;
சீர்தவழும் கலைமடந்தை உனக்குத் தோழி!
சங்கடங்கள் போக்கிடுவாய் மாதா காளி!
சந்ததமுன் திருவடிகள் தொழுது நிற்போம்!
மங்கலங்கள் தருபவளே! இதய வீட்டில்
மகிழ்வாக நடனமிடும் அம்மா போற்றி!

☆ சிவனடியே சிந்திக்கச் செய்து செய்து
சீர்வளரச் செய்கின்ற எங்கள் தாயே!
பவவினைகள் போக்கிடுவாய்; பாரில் நாங்கள்
பாங்காக வாழ்ந்திடவே அருள்வாய் நீயே!
உவமையிலாப் பேரழகே! ஓங்கா ரத்தின்
உயர்வான மெய்ஞ்ஞானம் தருவாய் நீயே!
தவமுனிவர் பணிந்தேத்தும் அமுதே! உன்றன்
தாள்பணிவோர் நலம் காக்கும் அம்மா போற்றி!

☆ வானாகி மண்ணாகி ஒளியே ஆகி
வளியாகி நீராகி நிற்கும் சக்தி!
தேனாகி அமுதாகி எங்கட் கெல்லாம்
திகட்டாத ஆனந்தம் நல்கும் தாயே!
ஊனாகி உயிராகி எம்மைக் காக்கும்
உலகத்து நாயகியே! முத்து மாரி!
கானாகிக் கிடக்கின்ற உலகம் தன்னில்
கவலைகளைப் போக்குகிற அம்மா போற்றி!

☆ யந்திரங்கள் இல்லாமல் பார்வை கொண்டே
அண்டிவரும் துயரெல்லாம் பறக்கச் செய்வாய்!
மந்திரங்கள் எல்லாமே உன்னால் இன்று
மகத்துவங்கள் பெறுவதையே காணு கின்றோம்!
தந்திரங்கள் செய்வோருன் தெய்வீ கத்தால்
தன்னிலையை மறந்திடுவார்! ஓடிப் போவார்!
சந்திரனின் தண்மையெலாம் ஒன்றாய்க் கொண்ட
சங்கரியே! சாமுண்டீ! அம்மா போற்றி!

ஓம் நமசிவாய!



கவிதைப் பூங்கா

கிராமப் பறவைகள்

யோகினி

கிழக்கில் விரியும்
மண் சாலை.
கீற்று உதிரும்
பள்ளிக் கூடம்.

விளக்கு எரியா
மின் கம்பம்.
வீதிக்கு இரண்டு
வெற்றுத் திண்ணை.

வெற்றுத் திண்ணையில்
சூதாட்டம்,
விலக்கு இருந்தும்
மது வாசம்.

ஆட்டம் காணும் நாட்டுப்
பொருளாதாரம்,
அடிப்படை இங்குதான்
ஆரம்பம்.

ஆழமில்லாச் சிறு
குளங்கள்,
அடுத்த வருடம்
வயலாய் மாறும்.

எனது கிராமம்
இருளில் மூழ்கிட,
நகரத் தூண்டிலில்
நானொரு மீன்.

வேலைச் சிறகு கொண்ட
கிராமப் பறவைகள் -
என்னைப் போல
இன்னும் பல பேர்!

வருடம் ஒருநாள்
கிராமம் போவோம்,
வறுமை பார்த்து
விமரிசனம் செய்வோம்.

விடுமுறை முடிந்ததும்
நகரம் புகலிடம்
அதன்-கவர்ச்சிப் புயலில்
ஊர்க்கனவு சிதிலம்.

மனிதரை மறக்கலாம்!
மண்ணைக் கூடவா?
மலையில் ஏறிய மனிதா!
மடுவில் இருப்பதும்
உன் இனம்தான்.

உன் சுயநலக் கோட்டைத்
தாண்டி விடு!
ஊர் முதுமை அடையுமுன்
செப்பனிடு!

சிறந்த பூக்களும் சிரித்திருக்கும்

வேம்பை முருகையா

உனக்குள் இருக்கும்
இன்னொன்றை கண்டுபிடித்தால்
விடைமட்டுமல்ல
வெற்றியும் கிடைக்கும்.

இதயத்தில்
நம்பிக்கை இருந்தால்போதும்
இந்தபூமிகூட நமக்கு
இருளை விலக்கி
துணையாய் வரும்.

புதிய எண்ணங்களின் சிறகு
விரிந்த வானத்திலும்
விலாசம் எழுதிவரும்.

நானும் நீயும்
ஒரே குரலில் கையுயர்த்தினால்
இமயமும் குமரியும்
இன்றல்ல; நாளையும் ஒன்று.

ஒளிந்திருக்கும் திறமை
நடைமுறையானால்
உன்னோடு
உதிரிப்பூக்களல்ல
சிறந்த பூக்களும் சிரித்திருக்கும்.

விழாக்கோலம்

பால. நடராஜன்

சித்திரைத் திங்கள் முதல்நாளில்
சிறப்பாம் வருடப் பிறப்பாகும்
வைகாசித் திங்கள் விசாகத்தில்
வைரவேல் முருகன் கொண்டாட்டம்
ஆனித் திங்கள் புத்தூரில்
ஆண்டாள் திருவிழா ஆரம்பம்
ஆடித் திங்கள் பதினெட்டில்
ஆடிப் பெருக்குத் திருநாளாம்
ஆவணித் திங்கள் சதுர்த்தியிலே
ஆனை முகனின் கொண்டாட்டம்
புரட்டாசித் திங்கள் ஒன்பதுநாள்
புகழ்மிகு நவராத் திரிநாளாம்



ஐப்பசித் திங்கள் தீபஒளி
அழகாய் எங்கும் கொண்டாட்டம்
கார்த்திகைத் திங்கள் முருகனுக்கு
கார்த்திகைத் தீபத் திருநாளாம்
மார்கழித் திங்கள் முழுவதுமே
மங்கையர் நோன்புத் திருநாளாம்
தைத் திங்கள் முதல்நாளில்
தைப் பொங்கல் திருநாளாம்
மாசித் திங்கள் ஒருநாளில்
மகாசிவ ராத்திரித் திருநாளாம்
பங்குனித் திங்கள் உத்திரத்தில்
பைந்தமிழ் முருகன் திருநாளாம்.

திரைமறைவில்...

தைரியசாலியாய்
திறமைமிக்கவனாய்
அநியாயம் நடக்கும் இடங்களில் எல்லாம்
தட்டிக் கேட்பவனாய்
வலிமை மிகுந்தவனாய்
தெரியும் உருவங்களை எல்லாம்
பார்த்து
ஒவ்வொரு நொடியும்
உஷ்ணமாகி
படம் முடிந்ததும்
வெளியில் வந்து
வாழ்க்கையிருட்டின் கருப்புக் கவ்வியபோது
நிஜத்தில் நனைந்து
நடைமுறையில் கலந்து
மறுபடியும்
பழையபடி
மேலே மோதவந்த
தடியனைக் கண்டு விலகி
அடுத்த நாள்
தேவைகள்
மூளையின் மூலையில் மின்னலிட
நான் நானாக
மாறினேன்.

வெ. இறையன்பு



விலக்க மனம் உண்டா? வேகம் உமக்குண்டா?

கால நிலைமை – நிதம்
மாறி வருகுது
சோலை வனமெலாம் – சுடும்
பாலை ஆகுது.

பொங்கு கடலொடு – தினம்
நஞ்சு கலக்குது
அங்கு வாழ்கின்ற – உயிர்
தஞ்சம் நாடுது.

குற்றக் கழிவுகள் – காற்றில்
மெத்தச் சேர்வதால்
சற்றே திரிந்து – காற்றின்
வெப்பம் உயருது.

வானக் கூரையில் – ஓர்
ஓட்டை விழுந்ததன்வழி
ஊன மாக்கிவிடும் – புற
ஊதா வருகுது.

அணுவின் கதிரியக்கம் – மிக
அதிக மாகுது.
கணுவில் அரும்புகிற – கருப்
பூவைக் கெடுக்குது.

காலம் மாறி – இப்போ
மாரி பொழியுது.
ஞாலம் கெடுக்கவல்ல – கரிய
அமிலமும் வருகுது.

ஆக மொத்தத்திலே – புவி
அழிவைத் தேடுதே.
வேகம் உமக்குண்டா? – நஞ்சை
விலக்க மனமுண்டா?


சு. திருநாவுக்கரசு


கண்ணாமூச்சி

சிவராஜ்

செலவுகள்... செலவுகள்...
வரவுகளைத் துச்சமாக்கி
வளர்ந்து காட்டும் செலவுகள்.
வரவுகள்... வரவுகள்...
செலவுகளின் பின்னோடிச்
சுருங்கிக் களைக்கும் வரவுகள்.
பனிப்பாறை நுனிப்பக்கம் போல
பார்வைக்குச் சிறுத்து அடிப்
பரப்பிலே பெருத்தன
இந்தச் செலவுகள்.
பலூன் வண்ணக் கனவுகள்
பட்டுத் தெறிக்கும் குமிழ்கள்
இந்த வரவுகள்.


செலவுகள்... செலவுகள்...
கோடைமழை வேகங்கள்
குரங்கின் கை மாலைகள்.
வரவுகள்... வரவுகள்...
தொட்டாற் சுருங்கிகள்...
தொலைவானின்
துளிக்கோட்டு நிலாப்பிறைத்
துண்டங்கள்





பழிக்குப் பழி

லட்சுமி விசுவநாதன்



(இரானியக் கதையைத் தழுவியது)

ஒரு தோட்ட முதலாளி, தன்னிடம் மிகுந்த விசுவாசத்துடன் வேலை செய்யும் தொழிலாளி ஒருவனுக்கு ஒரு நாள் ஒரு வறுத்த கோழியும், பழச்சாறு ஒரு பாட்டிலும் அன்பளிப்பாகக் கொடுத்தார்.

தொழிலாளி அக்கோழியையும், பழச்சாறு பாட்டிலையும் தன் வீட்டிற்குக் கொடுத்தனுப்ப நினைத்து, அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஒரு சிறுவனிடம் கொடுத்தனுப்ப நினைத்தார்.

தான் என்ன கொடுத்தனுப்புகிறோம் என்று அச்சிறுவனுக்குத் தெரியக்கூடாது என்று நினைத்து கோழியை ஒரு துணியில் நன்றாகச் சுற்றினார். பிறகு சிறுவனிடம், "இத்துணிக்குள் ஒரு உயிருள்ள பறவை உள்ளது. துணியைத் திறந்தால் பறவை பறந்துவிடும். ஆதலால் மிக கவனமாகக் கொண்டுபோ. தவிர இப்பாட்டிலில் உள்ளது விஷம். இதை மோந்து பார்த்தாலே நீ செத்து விடுவாய். ஆதலால் மிக ஜாக்கிரதையாக வீட்டில் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு சீக்கிரம் வா" என்று சொல்லி அனுப்பினார்.

சிறுவனுக்குத் தொழிலாளியின் வஞ்சகப் புத்தி தெரியும். ஆதலால் சிறிது தூரம் ,சென்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்து துணிச் சுருளிலிருந்த கோழியைத் தின்று பாட்டிலில் உள்ள பழச்சாறையும் குடித்து முடித்துவிட்டுப் படுத்துத் தூங்கினான்.

தொழிலாளியும் தன் வேலையைச் சீக்கிரம் முடித்துக் கொண்டு, பழச்சாறு, வறுத்த கோழியின் சுவை நாக்கில் தண்ணீர் ஊற வீட்டிற்கு விரைந்து சென்றான்.

அப்பொழுதுதான் தொழிலாளியின் மனைவி சோறாக்கிக்கொண்டிருந்தாள். வறுத்த கோழியும், பழச்சாறுமே போதும். அதைக் கொண்டுவா" என்றான். மனைவிக்கு ஒன்றுமே புரியாமல் விழித்தாள். "ஏது வறுத்த கோழி? பழச்சாறு ஏது" என்று கேட்டாள்?

தான் சிறுவனிடம் அனுப்பியதைச் சொன்னதும், சிறுவன் வரவேயில்லை என்றாள். தொழிலாளிக்குச் சிறுவனின் சதி புரிந்தது. உடனே சிறுவனைத் தேடிக் கொண்டு போனான். ஒரு மர நிழலில் சிறுவன் தூங்குவதைக் கண்டு, கோபத்துடன் அவனை அடித்தும், உதைத்தும் எழுப்பினான்.

எசமானனைக் கண்ட சிறுவன், "தான் வரும் பொழுது பெருங்காற்று வீசி துணி திறந்து கொண்டுவிட்டது. அதனால் பறவையும் பறந்து போய்விட்டது. என்ன செய்வது என்று புரியவில்லை. நீங்கள் எப்படியும் என்னை அடித்துக் கொல்வீர்கள் என்று தெரியும். ஆதலால் இந்தப்பாட்டிலிலுள்ள விஷம் பூராக்குடித்துவிட்டு, என் சாவை எதிர்பார்த்துப் படுத்துக் கொண்டிருந்தேன்" என்றான்.

தன்னைப் பழி வாங்கிய சிறுவனை என்ன செய்வது என்று புரியாமல், மிகுந்த ஏமாற்றத்துடன் வீட்டிற்குச் சென்றான்.

கணவன் வறுத்த கோழி, பழச்சாறுடன் வருவான் என்று ஆவலுடன் எதிர்பார்த்து நின்றிருந்த மனைவியிடம் தன்னைப் பழி வாங்கிய சிறுவனைத் திட்டிக்கொண்டே மனைவி போட்ட சோற்றைத் தின்றான். ●

வேடிக்கை கணக்கு


ராமனுக்கு மாம்பழங்களில் ஆசை. தோட்டத்துக்குப் போனான். மரத்தில் சில பழங்கள் இருந்தன. உச்சியில் இருந்தன. அங்கிருந்த கிருஷ்ணனிடம் பழங்களைப் பறித்துத் தர வேண்டினான்.

கிருஷ்ணன் ஒப்புக்கொண்டான், ஒரு நிபந்தனையுடன். பறித்த தனக்கு 2 பங்கு. பறிக்கச் சொன்ன ராமனுக்கு 1 பங்கு. ராமன் ஒப்புக்கொண்டான். பழங்கள் பறிக்கப் பட்டன. கிருஷ்ணன் 2 பங்கை எடுத்துக் கொண்டு ராமனுக்கு ஒரு பங்கு கொடுத்தான்.

இரண்டு நிமிடம் யோசித்தான் கிருஷ்ணன். இரண்டு பேருக்குமே சம பங்காக இருக்கட்டும் என்று சொல்லிக் கொண்டே ராமனிடம் தன் பங்கிலிருந்து ஒரு பழத்தைக் கொடுத்தான்.

இப்போது இருவரிடமும் சம அளவில் பழங்கள் இருந்தன என்றால் பறிக்கப்பட்ட பழங்கள் எத்தனை? —ரா. அழகர் சாமி.





விடை

பறிக்கப்பட்ட பழங்கள் - 6
கிருஷ்ணனுக்கு 2 பங்கு - 4
ராமனுக்கு 1 பங்கு - 2
கிருஷ்ணன் ராமனுக்கு ஒரு பழம் கொடுத்து விடுவதால் இருவரிடமும் சமமாக மூன்று பழங்கள் உள்ளன.



நீங்கள் கவிஞராக விரும்புகிறீர்களா?

இங்கே சில இடங்களில் கோடுகள் இடப் பெற்றுள்ளன அல்லவா? இந்தக் கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தையைப் போட்டு நிரப்புங்கள். சரியான வார்த்தைகளைப் போட்டு நிறைவு செய்து விட்டால் வருங்காலத்தில் நீங்கள் சிறந்த கவிஞராவதற்குரிய திறன் உங்களுக்குள் இப்போது மறைந்திருப்பதாக நம்பலாம்.

—கவிஞர் ரா. பொன்ராசன்.



ஆவிகுளிர மனம் குளிர
அமுதப் பாடல் பலதந்த
தேவி பாட்டா கவிமணியை
தினமும்நினைத்தால்..........

குழந்தைக் குலமும் பயன்கொள்ள
கொள்ளை இன்பப் பாடல்களை
மழலைத் தமிழில் தந்தவரை
மனதில்நித்தால்..........

பாட்டுக் கரசன் பாரதியை
பழகு தமிழில் பாட்டாக்கி
நாட்டுக் களித்த நல்லவரை
நாளும்நினைத்தால்..........

மலரும் மாலையும் தந்தவரை
மனித குலத்தின் மாமணியை
உளத்துள் வைத்து வழிபட்டால்
உலகம்நந்தம்..........


கடலை பார்த்தான்
குட்டி பார்த்தான்
குட்டிப் பார்த்தான்
கடலைப் பார்த்தான்
பாப்பா பாட்டுப் பாடினாள்
ஓடி விளையாடு பாப்பா...
பாப்பாப் பாட்டு பாடினாள்
ப்ப்
ப்ப்
ப்ப்
ப்ப்...
தொகுப்பு : மு.பாலசுப்பிரமணி
ஜி.கே.கண்ணன்.
படம் : ஜெயராஜ்
தாய் பால்கொடுத்தாள்
தாய்ப்பால் கொடுத்தாள்

தமிழக முதல்வர்கள்



திரு. ஏ. சுப்பராயலு ரெட்டியார் 1920 - 21
திரு. பனகல் ராஜா 1923 - 26
திரு. டாக்டர் பி. சுப்பராயன் 1926 - 30
திரு. பி. முனுசாமி நாயுடு 1930 - 32
திரு. பொப்பிலி ராஜா 1932 - 36
திரு. பி.டி.ராஜன் 1936
திரு. பொப்பிலி ராஜா 1936 - 37
திரு. வெங்கட ரெட்டி நாயுடு 1937
திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் 1937 - 39
திரு. டி. பிரகாசம் 1946 - 47
திரு. ஓ.பி.ராமசாமி ரெட்டியார் 1947 - 49
திரு. பி.எஸ். குமாரசாமி ராஜா 1949 - 52
திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் 1952 - 54
திரு. கே. காமராஜர் 1954 - 63
திரு. எம். பக்தவத்சலம் 1963 - 67
திரு. சி.என். அண்ணாத்துரை 1967 - 69
திரு. மு. கருணாநிதி 1969 - 76
திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் 1977 - 80
திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் 1980 - 87
திருமதி. ஜானகி. எம்.ஜி.ஆர். 1988
திரு. மு. கருணாநிதி 1989 - 30-1-91
செல்வி ஜெயலலிதா 24-6-91 -



மூளைக்கு வேலை

அந்தாதி தெரியுமா அந்தாதி?

அந்தம் என்றால் முடிவு

ஆதி என்றால் தொடக்கம்

முடிவையே தொடக்கமாகக் கொண்டு ஆரம்பிப்பது அந்தாதி.

சடகோபர் அந்தாதியும், அபிராமி அந்தாதியும் புகழ் பெற்ற அந்தாதி நூல்கள். கவிதைகளிலும், செய்யுள்களிலும் அந்தாதி உருவாக்குவது பின்னால் நடக்கட்டும். இப்போ வார்த்தைகளில் அந்தாதி உருவாக்கிப் பார்ப்போமா?



பாப்பா - பாட்டி
மாமா - மாமி
காக்கா - காடை
குரங்கு - குள்ளநரி

இதைப்போல முடிவெழுத்தையே முதலெழுத்தாகக் கொண்டு உங்களால் எத்தனை வார்த்தைகள் உருவாக்க முடியும்? முயன்று பாருங்கள். முயற்சி திருவினையாக்கும்.

தகவல் பலகை

1. இந்தியாவிலேயே மிக உயரமான டி.வி. கோபுரம் டில்லியில் அமைந்துள்ளது.

2. இந்தியாவில் 150 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வரும் ஆங்கில நாளிதழ் - டைம்ஸ் ஆப் இண்டியா.

3. உலகிலேயே மிகப்பெரிய பொம்மை அருங்காட்சியகம் புதுடில்லியில் உள்ளது. சங்கர்ஸ் இன்டர்நேஷனல் டால்ஸ் மியூசியம் என்னும் பெயரில் 1965 இல் இது ஆரம்பிக்கப்பட்டது. 86 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட பொம்மைகள் உள்ளன.

4. பூவரசம் பூவைத் தேசியச் சின்னமாக வைத்துள்ள நாடுகள் (அ) ஹங்கேரி, (ஆ) ருமேனியா.

5. பிரிட்டன் நாட்டில் இப்போது பல்லி வளர்ப்பதைச் சிலர் ஹாபியாகக் கொண்டுள்ளார்கள்.

6. உலக அளவில் டாக்டர்கள் அதிகம் உள்ள நாடு ரஷ்யா.

போட்டோ நிபுணரின் பார்வையில் தென் ஆப்பிரிக்கா

ஒரு புகைப்படக் கலைஞன் என்கின்ற முறையில் நான் ஒரு பாக்கியவான். கேமராவைக் கையில் ஏந்திக்கொண்டு வடக்கே காஷ்மீரம் முதல் தெற்கே கன்யாகுமரி வரையிலும் கிழக்கே நாகாலாந்து முதல் மேற்கே பம்பாய் வரையிலும் பல ஊர்களுக்குச் சென்று போட்டோக்கள் எடுக்கும் பாக்கியம் எனக்குப் பல முறை கிடைத்து இருக்கிறது. நமது பாரத தேசத்தில் மட்டும் அல்லாமல் தூரக்கிழக்கு நாடுகளாகிய ஹாங்காங், பிலிப்பைன்ஸ், பேங்காக், மலேசியா, சிங்கப்பூர் எனப்பல வெளிநாடுகளுக்குச் சென்று என் கேமரா வழியே அந்தந்த நாடுகளின் அழகையும் ரசித்து, மக்களின் அழகையும் ரசித்து அந்த இனிய காட்சிகளை வண்ணப் படங்களாகப் பதிவு செய்யும் பெரும் பாக்கியமும் எனக்குக் கிடைத்து இருக்கிறது.

நீண்ட நாட்களாக, அதாவது இருபது வருடங்களுக்கும் மேலாகத் தென் ஆப்ரிக்கா சென்று வரவேண்டும் என்று எனக்குள் தணியாத ஆவல். அங்கே எனக்கு ஓர் உறவினர் குடும்பமும் நிறைய நண்பர்களும் இருக்கிறார்கள். அவர்களில் யாராவது வருடந்தோறும் சென்னைக்கு வரும்போது அந்த நாட்டின் சிறப்பையும், அங்கு அவர்கள் வாழும் சிறப்பான வாழ்க்கையையும் பலமுறை விவரித்துக் கூற அவற்றைக் கேட்கக் கேட்க வாழ்க்கையில் ஒருமுறையாவது அந்த நாட்டுக்குப் போய்வரவேண்டும் என்கிற ஆவல் மனத்தில் அதிகரித்துக் கொண்டே இருந்தது. ஆனால் அந்த எண்ணம் நிறைவேற முடியாத அளவுக்குத் தென் ஆப்ரிக்காவில் நிலவி வந்த நிற வேறுபாடு காரணமாக இந்தியர்கள் தென் ஆப்ரிக்கா செல்ல அரசாங்கம் அனுமதி தருவது இல்லை என்கின்ற தடை இருந்தது. அங்கிருந்த ஷான் என்ற எனது உற வினரும் (அவர் பெயர் ஷண் முகம். அந்த ஊரில் அவரை ஷான் என்று அழைக்கிறார்கள் மற்றைய குடும்ப நண்பர்களும் அடிக்கடி கடிதம் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் தாங்கள் டிக்கெட் அனுப்புவ தாகவும் ஒரு முறை தங்கள் நாட்டிற்கு வந்து போகும்படியும் அழைத்துக் கொண்டே இருந் தார்கள். நானும் ஆவலோடு அந்த இனிய நாளை எதிர் நோக்கிக் கொண்டே இருந் தேன். என் விருப்பம் நிறை வேறும் வகையில் சமீபத்தில் தென் ஆப்ரிக்க அரசாங்கம் நிற பேதக் கட்டுப்பாட்டை நீக்கிச் சட்டப் பிரகடனம் செய்ததும் அதைத் தொடர்ந்து இந்தி யர்கள் தென் ஆப்ரிக்கா செல்ல தடை இல்லை என நமது பிரதமர் அறிவித்தார். அதைத்

டர்பன் விமான நிலையத்தில் 'ஷான்' குடும்பத்தினர் வரவேற்கிறார்கள்.



ாடர்ந்து என் உறவினர் ஷான் ண்முகம்) டிக்கெட், விசா தலியவற்றை எடுத்து னுப்பிவிட்டார்.

பம்பாய் வழியாகத் தென் ப்ரிக்கா புறப்பட்டேன். சுமார் றரை மணி நேரம் விமானப் ணம்.

ஆப்ரிக்கா நேரம் பகல் 12.30 ணிக்கு சாம்பியா நாட்டைச் ர்ந்த 'லுசாகா' விமான லையத்தில் விமானம் இறங் யது. ஜோஹனஸ்பர்க் ாகும் விமானம் புறப்பட ன்னும் இரண்டு மணி நேரம் ரும் என்று கூறிவிட்டார்கள். போர்ட்டிக்கில் மேலே கீழே ன்று இரண்டு பகுதிகள். ரண்டு பகுதியிலும் உள்ள ிவறைகளில் முகம் அலம் கூடத் தண்ணீர் இல்லை. ருகே இருந்த காவல் தொழி ளியிடம், "தண்ணீர் இல் லையே" என்று கேட்டதற்கு, மாம் தண்ணீர் இல்லைதான். தற்கு நான் என்ன செய்ய?"



டர்பனில் தொழிலதிபர் எஸ்.பி. ரெட்டியுடன்...


என்று பதில் கூறிவிட்டுப் போய் கொண்டே இருந்தான். ஆப்ரிக்கா முழுவதும் இப்படித் தான் இருக்குமோ? என்ற பய உணர்வே மனத்தைக் கவ்விக் கொண்டது. விமான நிலை யத்தில் இரண்டு மணி நேரத் தைச் செலவிடுவது சிரமமாக இருந்தது.

பின்பு லுசாகாவை விட்டுப் புறப்பட்ட விமானம் இரண்டு மணி நேரப் பயணத்திற்குப் பிறகு ஜோஹனஸ்பர்க்கை அடைந்ததும் நிலைமையே தலைகீழாக மாறிவிட்டது. ஏதோ ஒரு மேற்கத்திய நாட் டிற்குள் நுழைவதுபோல் விமான நிலையமே மிக நவீன மாகக் களைகட்டி இருந்தது. எங்கு பார்த்தாலும் வெள்ளை யர்கள் விமான நிலைய அலு வலக வேலையில் ஈடுபட்டு இருக்கும் காட்சியே கண்ணுக்கு நேர்த்தியாக இருந்தது. அரை மணி நேரத்தில் 'கஸ்டம்ஸ்' 'இமிகிரேஷன்' போன்ற வேலை கள் முடிந்துவிட்டன.

ஜோஹனஸ்பர்க் விமான நிலையத்திற்கு வந்து சேர்ந் ததுமே அங்குள்ள பொதுத் தொலைபேசியில் ஓர் எண்ணை டயல் செய்து To-Pay என்று கூறி டர்பனுக்கு அருகில் உள்ள பீட்டர் மாரிட்ஸ்பர்க் என்கின்ற ஊரில் உள்ள அவரது வீட்டிற்குத் தொடர்புகொண்டு நான் ஜோஹனஸ்பர்க் வந்தடைந்த விவரத்தைத் தனக்குத் தெரிவிக்குமாறு



காந்தி, லக்கேஜுடன் க்கியெறியப்பட்ட பீட்டர்ஸ் மாரிட்ஸ் பர்க் ஸ்டேஷன்.



எனக்கு எழுதி இருந்த கடிதத்தில் ஷான் எழுதி இருந்தார். ஆனால் ஜோஹன்ஸ்பர்க் விமான நிலையத்தில் உள்ள அந்தப் பொதுத் தொலைபேசியில் எத்தனை தடவை 'டயல்' செய்தும் To-Payக்கான அந்த நம்பர் கிடைக்கவே இல்லை. உடனே அங்கே டிக்கெட் கவுண்டரில் பணி புரிந்து கொண்டிருந்த ஓர் ஆங்கிலேயப் பெண் அதிகாரியிடம் நான் பல முறை முயன்றும் அந்தக் குறிப்பிட்ட எண் டெலிபோனில் எனக்குக் கிடைக்கவில்லை என்று கூறினேன். ஒரு வினாடிகூடத் தாமதியாமல் கவுண்டரை விட்டு வெளியே வந்து அந்தத் தொலைபேசியை அணுகி தானும் அந்த எண்ணை டயல் செய்து பார்த்து கிடைக்காமல் போகவே என்னைத் தன் அலுவலக அறைக்குள் அழைத்துச் சென்று அங்கிருந்த பிரத்யேக போன் ஒன்றின் டயலைச் செய்து லைன் கிடைத்ததும் என்னைப் பேசச் சொல்லி என்னிடம் ரிசீவரைக் கொடுத்தார். அந்தப் பெண்மணியின் பெருந்

நெடுஞ்சாலையில் வண்டி பழுது பட்டாலோ அல்லது விபத்து ஏற்பட்டாலோ அம்புக் குறியிட்ட இடத்திலமைந்த டெலிபோனில் தகவல் கூறினால் அடுத்த ஐந்து நிமிடத்தில் போலீஸ் உதவிக்கு வந்துசேரும்.





'சீல்' தீவில் (SEAL ISLAND) சீல் விலங்குகளைக் கண்டு படம் எடுத்தேன்.

தன்மையான செய்கை மனத்தை நெகிழ வைத்தது. இந்த நாட்டிலா நிற வேறுபாடு கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார்கள் என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அடுத்த விமானத்தைப் பிடித்து டர்பனை அடைந்த போது மணி மாலை ஐந்தரை. ஷான் தன் மனைவி, மருமகள் ஷர்மிளா ஆகியவர்களுடன் விமான நிலையத்தில் காத்திருந்தார். இந்தத் தென் ஆப்ரிக்கா மண்ணை மிதிக்க வேண்டும் என்று கடந்த இருபது வருடங்களாக நான் காத்திருந்தேன். தடைகள் நீக்கப்பட்ட பிறகு தென் இந்தியாவிலிருந்து புறப்பட்டு வந்திருக்கும் முதல் தமிழன் நானாகத்தான் இருப்பேன்.

விமான நிலையத்தில் ஷானைக் கண்டதும் உணர்ச்சி வசப்பட்டுப் போனேன். அவர் என்னைக் கட்டி அணைத்துக் கொண்டார். என்னை வர வழைத்ததில் என்னை?...

அவருக்கு மகிழ்ச்சி அதிகம். டர்பனில் இருந்து அவர் தங்கி இருக்கும் பீட்டர் மாரிட்ஸ்பர்க் எண்பது கிலோ மீட்டர் தூரம். விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரது படகுக்காரில் என்னை ஏற்றிக் கொண்டார். சரியாக முக்கால் மணி நேரத்தில் எண்பது கிலோ மீட்டரைக் கடந்து அவர் வீட்டை அடைந்துவிட்டோம்.

என்னுடைய வருகையை முன்னிட்டு ஷானின் மற்றைய உறவினர்களும் வீட்டில் குழுமி இருந்தார்கள். எல்லோருடனும் சேர்ந்து சிறப்பான இரவு உணவைச் சாப்பிட்டது சுவையான அனுபவமாக இருந்தது. ஷான் வீட்டில் நான் தங்குவதற்காகத் தனி அறையை ஏற்பாடு செய்து இருந்தார்கள். நல்ல வேளை ஷான் குடும்பத்தினர் ஒரு சிக்கலில் இருந்து தப்பினார்கள். அல்லது அவர்களோடு சேர்ந்து ஒரே ரூமில் நானும் தூங்குவதாக இருந்திருந்தால் என் 'குறட்டை' சத்தத்தால் வாழ்க்கையே வெறுத்துப் போயிருப்பார்கள்!

டர்பன், டோங்காட், மந்தெனி, பினிக்ஸ், மிட்மாடேம், ஆல்பர்ட் நீர்வீழ்ச்சி என்று பல இடங்களுக்குத் தனது காரில் என்னை அழைத்துச் சென்று காண்பித்தார். எல்லா இடத்திலும் நம் தமிழ் மக்கள் வளமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது மனதிற்குள் சந்தோஷமாக இருக்கிறது. பொதுவாக 'கார்' வைத்திருக்காத குடும்பத்தையே அந்நாட்டில் பார்க்க முடியாது. சில வீடுகளில் மூன்று, நான்கு கார்கள் இருக்கின்றன. எல்லாருமே இறக்குமதி செய்யப்பட்ட பென்ஸ், டயோட்டா, ஹோண்டா போன்ற

ஜெர்மானிய, ஜப்பானியக் கார்களைத்தான் உபயோகிக் கிறார்கள். ஒவ்வொரு வீட் டிலும் வீட்டு வேலைகளைச் செய்யவென்று ஆப்ரிக்கப் பெண் ஒருத்தியை வீட்டிலேயே தங்க வைத்துச் சம்பளம் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது மூன்று பெட்ரூம்கள் பாத்ரூம் இணைப் புடன் இருக்கிறது. பாத்ரூமில் கீஸர், வாஷ் டப், ஷவர் என்று ஐந்து நட்சத்திர ஒட்டலில் இருப் பது போல எல்லா வசதிகளை யும் வைத்து இருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு 'கெஸ்ட்' ரூம் என்று ஒதுக்கி இருக்கிறார்கள். எல்லாவற் றிற்கும் மேலாக வீட்டை அவர்கள் சுத்தமாக வைத்துக் கொள்ளும் பாங்கே மனதை மிகவும் கவர்கிறது.

ஜனவரி முதல் தேதியன்று பெரிய தொழிலதிபரும் எனது நெடுநாள் நண்பருமான கணேஷ் ரெட்டி என்னை டர்பன் கடற் கரையில் வார்னர் பீச் என்கிற இடத்திற்கு அழைத்துச் சென் றார். நிறவேறுபாடு கொள்கை அமலில் இருந்த நாள் வரை இந்த 'வார்னர் பீச்சில்' வெள்ளையர்களுக்குத் தனி இடம், இந்தியர்களுக்குத் தனி இடம், ஆப்ரிக்க இன (கறுப்பு நிற) மக்களுக்குத் தனி இடம் என்று ஒதுக்கப்பட்டு அந்தந்த குறிப்பிட்ட இடத்தில் அந்தந்த குறிப்பிட்ட இனத்தவர்கள் மட்டுமே போகலாம் என்ற சட்டம் தீவிரமாக அமலில் இருந்தது என கணேஷ் ரெட்டி கூறினார்.

சமீபத்தில் இந்த நிற வேறு பாட்டைத் தென்ஆப்ரிக்க அர சாங்கம் நீக்கிவிட்டது. எனவே இந்த 'வார்னர் பீச்சில்' வெள்ளையர்கள், இந்தியர்கள், கறுப்பர்கள் என்று எல்லோரை யும் ஒட்டுமொத்தமாக ஒரே இடத்தில் பார்க்க முடிந்தது. மேலும் இத்தனை வருடங்கள் மிகுந்த கட்டுப்பாட்டில் இருந்த தென்ஆப்ரிக்க இனமக்கள் எல்லாரும் எந்த இடத்திற்கும் போகலாம் என அறிவிக்கப் பட்டதால் கடந்தநாள் இரவு புதுவருடப் பிறப்பின்போது எண்ணற்ற மக்கள் கடற்கரை யில் கூடிக் களித்துக் கும்மாள மிட்டதில் மிகுந்த நெரிசல் காரணமாக (இங்கே மகா மகத்தில் ஏற்பட்டதுபோல) சுமார் 21 பேர் மரணமடைந்து விட்டார்கள் என்று இன்று தினசரியில் பிரசுரமாகி இருந் ததையும் கூறினார். இந்த நாடு செல்வம் கொழிக்கும் நாடாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. மேற்கத்திய நாட்டைப்போல் எல்லா இடங்களையும் மிகவும் தூய்மையாக வைத்திருக் கிறார்கள். எல்லோருக்கும் வேலை வாய்ப்பு செய்து தரப் பட்டுள்ளது. வேலை செய்ய முடியாதவர்களுக்கு ஊதிய மும், முதியோர்களுக்கு வயோ திக ஊதியமும், விதவை களுக்குத் தனியாக ஊதியமும் அவர்கள் குழந்தைகள் படிக்க இலவசக் கல்வித் திட்டமும் நடைமுறையில் உள்ளது. வெள்ளையர்களுக்கு அடுத்த படியாகச் சிறப்பான வாழ்க் கையை நம் இந்தியர்கள்தான் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்.

இங்கே இந்தியர்கள் மிகவும் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். சொந்தங்களை விட்டுக் கொடுக் காமல், இந்தியப் பழக்க வழக் கங்களையும் மீறாமல் ஒரு கட்டுக் கோப்பான வாழ்க் கையை வாழ்கிறார்கள். உடை உடுத்தவது எல்லாம் மேற் கத்திய பாணியில் இருந்தாலும் இந்தியக் கலாசார மரபுகளை இன்னமும் அங்கே கடைப் பிடித்து வருகிறார்கள்.

பொதுவாக எல்லாரும் ஆங் கிலத்தில்தான் பேசுகிறார்கள் என்பதால் எனக்கு இங்கே மொழி பிரச்னையே ஏற்பட வில்லை. நான் போயிருந்த ஜனவரி மாதம் அங்கே கோடை காலமாம். நம் ஊரில் டிசம்பர், ஜனவரியில் எப்படி இரவில் மிதமான குளிரும், பகலில் சூரிய உஷ்ணமும் இருக்குமோ, அது மாதிரியான ஒரு சீதோஷ்ண நிலை.

இந்தியர்கள் வணங்கு வதற்கு முருகன் கோயில், சிவன் கோயில், காளி கோயில் என்று பிரசித்தி பெற்ற கோயில்கள் இருக்கின்றன. 'தைப் பூசத்தன்று' வருடந் தோறும் ஒவ்வொரு தமிழர் குடும்பத்திலும் ஒருவர் காவடி எடுக்கத் தவறுவதே கிடை யாது. திங்கட்கிழமைதோறும் சிறியவர்கள் முதல் பெரிய வர்கள் வரை முருகனுக்காகப் புலால் உண்ணாமல் உபவாசம் இருக்கிறார்கள்.

140 வருடங்களுக்கு முன்பா கரும்புப் பயிர் செய்யவென்று கப்பலேறிச் சென்று அங்கே நிரந்தரமாகத் தங்கிவிட்ட பல தமிழர்கள் பல விதத்தில் உழைத்து முன்னேறி ஐந்தாறு தலைமுறைகளைக் கடந்து இன்று மிகவும் சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்து கொண் டிருக்கிறார்கள்.

சகோதரர் ஷான் என்னைத் தென் ஆப்ரிக்காவின் தெ கோடி பகுதியில் உள்ள 'கே டவுன்' என்கின்ற இடத்திற் விமானத்தில் அழைத்துச் செ றார். விமான நிலையத்திற் அருகே எண்ணற்ற அளவி

புத்தம் புதிய கார்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். எல்லாம் வாடகைக் கார்களாம். ஷான் தனது அடையாள அட்டையைக் காண்பித்துக் கேட்டதும் காரை அவர் கையிலேயே ஒப்படைத்து விட்டார்கள். தேவையான அளவுக்கு நாமே காரை ஓட்டி உபயோகித்துவிட்டுத் திரும்பிச் செல்லும்போது விமான நிலையத்திற்கு வந்து ஒப்படைக்கும்போது எவ்வளவு கிலோ மீட்டர் ஓட்டி உபயோகப் படுத்தி இருக்கிறோம் என்பதற்கு ஏற்ப கட்டணம் வசூலித்து விடுவார்கள் என்று ஷான் கூறினார். வாடகைக்கு எடுத்த அந்தப் புத்தம் புதிய காரில் மூன்று நாட்கள் முழுவதுமாகப் பயணம் செய்து கேப் டவுன் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களில் ஆயிரம் கிலோ மீட்டர் வரை பயணம் செய்து எல்லா இடங்களையும் எனக்குக் காண்பித்தார். கேப் டவுன் நகரம் உண்மையிலேயே பூமியின்மீது அமைந்துள்ள ஒரு சொர்க்கம் என்றுதான் கூற வேண்டும். இந்தியாவுக்கு ஒரு காஷ்மீரம் போலத் தென் ஆப்ரிக்காவுக்கு ஒரு கேப் டவுன் என்று கூறுவேன். பெரிய பெரிய மலைகளும் அவற்றைச் சூழ்ந்து நீல நிறக் கடலின் அமைப்பும் கண்ணுக்கு இனிய காட்சிகள். இயற்கையின் அழகை எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அரபிக்கடலும் அட்லாண்டிக் கடலும் ஒன்றாக இணையும் 'கேப் பாயின்ட்' மற்றும் 'கேப் அகலஸ்' என்கின்ற அற்புதமான இடங்களைப் பார்த்து ஆனந்தித்த அளவில் பெரும் பாக்கியம் பெற்றவன் நான். கடலில் படகுப் பயணம் செய்து 'சீல்' விலங்குகள் வசிக்கும் தீவுக்குச் சென்று எண்ணிலடங்கா 'சீல்'களைக் கண்டு களித்த பேறும் எனக்கு உண்டு. கேப் டவுனில் ஆப்ரிக்க இன மக்கள் வெகு குறைவாகவே காணப்படுகிறார்கள். முழுக்க வெள்ளையர்களும் கலப்பு இன மக்களுமே இங்கே வாழ்கிறார்கள். 'டூரிஸ்ட்களும்' அதிக அளவில் நிறைந்து காணப்படுகிறார்கள். 'கேபிள் காரி'ல் பயணம் செய்து கேபிள் மவுண்டன் மீது சென்று மலை உச்சியிலிருந்து கடல்களால் சூழப்பட்ட கேப் டவுன் நகரின் அழகுமிக்க காட்சியைப் பார்க்கும் அனுபவமே அலாதியானது. மலை உச்சியிலிருந்து பார்க்கும்போது நெல்சன் மண்டேலாவை 21 வருடம் சிறை வைத்திருந்த தீவும் கண்ணுக்கு நன்றாகத் தெரிகிறது.

தென் ஆப்ரிக்காவிலிருந்து நான் புறப்படுவதற்கு முன்னால் சகோதரர் ஷான் என்னைப் 'பீட்டர் மாரிட்ஸ்பர்க்' ரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். இந்த ரயிலடியில்தான் மகாத்மா காந்தி முதல் வகுப்பு டிக்கெட்டுடன் ரயில் பயணம் செய்ய முயன்ற போது 'இது வெள்ளையர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட கம்பார்ட்மெண்ட். நீ எப்படி இதில் பயணம் செய்யலாம்?' என்று கேட்டு அவரை கம்பார்ட்மெண்டை விட்டே வெளியே தள்ளினார்கள் என்று விவரித்தார். என்ன காரணத்தினாலோ தெரியவில்லை இந்த ரயில் நிலையத்திற்குள் நுழைந்த போதே நம் மூதாதையர் ஒருவருக்குச் சொந்தமான இடம் ஒன்றில் புதிதாகப் போகும் போது ஏற்படும் ஓர் உணர்ச்சி மயமான மனநிலைக்கு நான் ஆளானேன். அடுத்த வருடம் (1993) ஆகஸ்ட் மாதத்துடன் காந்திஜி தூக்கி எறியப்பட்ட நிகழ்ச்சி நடந்து சரியாக நூறு வருடங்கள் ஆகின்றன என்றும் அதைச் சிறப்பிக்கும் வகையில் இந்த ரயிலடிக்கு முன்னால் காந்தியடிகளின் பெரிய சிலை ஒன்றை நிறுவ இங்குள்ள இந்தியர்கள் ஏற்பாடுகள் செய்து வருவதாகவும் ஷான் கூறினார். கடவுளே! எனக்கு இது எவ்வளவு பெரிய வாய்ப்பு! இந்தச் சரித்திர முக்கியம் வாய்ந்த இடத்தில் என் காலடி பட நான் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஷானின் கைகளைப் பலமாகப் பற்றிக்கொண்டு, "இந்த ஒரு காரணத்திற்காக மட்டுமே எனது ஆயிரமாயிரம் நன்றியை மனமாறத்தெரிவித்துக் கொள்கிறேன்" என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினேன்.

நீண்ட தூரம் பயணம் செய்வது பல புத்தகங்களைப் படிப்பதற்கான அறிவைப் புகட்டும் என்று கூறுவார்கள். இந்த தென் ஆப்ரிக்கா பயணத்தில் பல அனுபவங்களை நிச்சயமாக நான் பெற்றுக் கொண்டேன். உலகத்தின் ஒரு பகுதியில் உள்ள ஆப்ரிக்க மக்களின் கலாசாரத்தைக் கண்களால் காணும் சிறப்புப் பெற்றேன் நான். தென் ஆப்ரிக்காவிலிருந்து புறப்படும்போது பலரிடமிருந்து நான் பிரியா விடை பெறவேண்டியதாயிற்று. குறிப்பாகச் சகோதரர் ஷானிடம் இந்த அரிய வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த காரணத்திற்காக ஆனந்தக் கண்ணீர் மூலம் இதய உணர்ச்சிகளைத் தெரிவித்து விட்டு மொரிஷியஸ், பம்பாய் வழியாகச் சென்னை வந்து சேர்ந்தேன்.

தமிழில் தவறுகளை அறிவோம்

முத்துக்கண்ணப்பர்

தமிழ் மொழி பழைமையான மொழி. அது தோன்றிய காலம் யாது? யார் அறிவார்? அது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தோன்றியது என்று கூறி அமைதி கொள்ளலாம். அப்படியிருந்தும் ஏனைய பல மொழிகள் போல மாசுபடாமல், உரிய இலக்கணமும், மரபும் சிதையாமல் கன்னித் தன்மையோடு இருந்து வருவதுதான் தமிழ் மொழிக்குள்ள தனிச் சிறப்பு. இலக்கணமும், மரபும் சிதையாமல் என்றால் இலக்கணமும், மரபும் மாறவே கூடாதா? என்று சிலர் வினவலாம். உயிர்த் துடிப்போடு என்றும் நின்று நிலவும் மொழிகளின் இலக்கணமும், மரபும் ஓரளவு மாறக் கூடும்; மாறுவதுதான் இயல்பு. ஆனால் அத்தகைய மாற்றம் வலிந்து புகுத்தப்படக் கூடாது. மாற்றங்கள் இயல்பாகவே, தாமாகவே ஏற்பட்டு விடும். அந்த நிலையில் அறிஞர்களும், வல்லுநர்களும் அவ்வக்காலக் கட்டங்களுக்கும், சூழ்நிலைகளுக்கும், நடைமுறைகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப விதிகளையும், முறைகளையும் வகுத்து விடுவர்; வரம்பு கட்டி விடுவர்; அதுதான் இலக்கணம்.

சுருங்கக் கூறினால், மாற்றங்கள் மொழியின் மூல உருவத்தைச் சிதைப்பனவாகவோ, தோற்றப் பொலிவை வேறுபடுத்துவனவாகவோ இல்லாமல், மூலத் தோற்றத்துக்கு மேலும் பொலிவும், ஒளியும், தெளிவும் தரும் அணிகலன்களாக விளங்குமாயின் அவை இன்றியமையாது வேண்டற்பாலனவே.

தமிழ் மொழி இன்று மிக வேகமாக வளர்ந்து வருகிறது. எழுத்தாளர்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. இது மகிழ்ச்சிதரக் கூடிய செய்திதான். ஆனால் எழுத்தாளர் தொகை பெருகுவதோடு பிழைகளும் அளவு கடந்து பெருகிக் கொண்டே வருகின்றனவே! அதுதானே வேதனை!

பலர், பத்திரிகை உலகில் தாம் சிறந்த எழுத்தாளர்களாக விளங்க வேண்டும் என்று துடிக்கிறார்கள். அவர்கள் இயல்பாகப் பெற்றுள்ள படைப்பாற்றலாலோ, பல கதைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் நிரம்பப் படிப்பதாலோ நாளடைவில் நல்ல எழுத்தாற்றல் பெற்று விடுகிறார்கள். அப்படியொரு முத்திரைப்பதிவு பெற்றுவிட்ட பின்னராவது அம் மொழியிலுள்ள நடைமுறை இலக்கணத்தை, மரபுகளை, முறைகளை நன்கு அறிந்து கொள்கிறார்களா என்றால், அதுதான் அறவே இல்லை. அத்தகையோர் எழுத்துகள் குறைமாதக் குழந்தைகள் போல் விரைவில் அழிந்து போகும்; ஐயமே இல்லை. இந்த உண்மையை எழுத்துலக வரலாறு இனிது காட்டும்.

தமிழில் பல்வேறு பிழைகள் காணப்படுகின்றன. வாக்கிய அமைப்புப் பிழைகள், சந்திப் பிழைகள், எழுத்துப் பிழைகள், உச்சரிப்புப் பிழைகள், மொழி பெயர்ப்புப் பிழைகள் இப்படிப் பலப் பல. அவற்றில் முக்கியமானவற்றை இனி அறிந்து கொள்வோம்.

இப்பிழைகளுள் முக்கியமானவை சந்திப் பிழைகளும், உச்சரிப்புப் பிழைகளுமேயாம்.

முதலில் சந்திப் பிழைகளைக் கவனிப்போம். சந்தி என்றால் ஒரு சொல்லும் இன்னொரு சொல்லும், அல்லது வாக்கியத் தொடர்கள் ஒன்றோடொன்றும் சந்திப்பது - இணைவது. இதைப் புணர்ச்சி என்று இலக்கணம் கூறும். இந்தப் புணர்ச்சி விதிகளை முதலில் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்.

இரண்டு சொற்கள் இருந்தால் முதலில் உள்ள சொல்லுக்கு நிலைமொழி என்று பெயர். அடுத்து வருவது வருமொழி. இந்த நிலைமொழியும் வருமொழியும் சேர்கின்றபோது இடையில் சில மாற்றங்கள் உண்டாகும். சில எழுத்துகள் மறையும். புதிதாகச் சில எழுத்துகள் தோன்றும். சில எழுத்துகள் மாறும். சில எழுத்துகள் இரட்டிக்கும். இரு சொற்களுக்கும் இடையில் எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியேயும் இருக்கும். அவ்வாறு இரு சொற்களுக்கும் இடையில் வேறு எழுத்தோ,

சொல்லோ, அசையோ இல்லையானால், அந்தத் தொடருக்குத் 'தொகா நிலைத் தொடர்' என்று பெயர். இரு சொற்களுக்கிடையில் மாற்றங்கள் மறைவாக இருக்குமானால் அதற்குத் 'தொகை நிலைத் தொடர்' என்று பெயர். 'தொகை' என்றால் தொக்கி நிற்பது என்பது பொருள்.

எடுத்துக்காட்டு :

---

1. பொன்னன் வந்தான் – இவ் வாக்கியத்தில் தனித்தனியான இரண்டு சொற்கள் உள்ளன. இவற்றின் இடையில் எந்த ஓர் எழுத்தோ, சொல்லோ, அசையோ மறைவாகவும் இல்லை, வெளிப்படையாகவும் இல்லை. அதனால் இது தொகா நிலைத் தொடர்.

2. பால் குடித்தான் – இதிலும் இரண்டு சொற்கள் உள்ளன. இதனை விரித்துப் படித்தால் பாலைக் குடித்தான் என்று வருமல்லவா? எனவே 'ஐ' என்னும் ஓர் எழுத்து மறைந்திருக்கிறது. அதாவது தொக்கியுள்ளது. அதனால் இது தொகை நிலைத் தொடர் என வழங்கப்பெறும். இவற்றைப் பின்னால் இன்னும் தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இரண்டு சொற்கள் சேரும்போது, சில தொடர்களின் இடையில் க்,ச்,த்,ப் என்னும் எழுத்துகளில் ஏதாவது உரிய ஒன்று மிகும். இதற்கு வலி 'மிகுதல் என்று பெயர். வலி மிகுமிடங்களில் முக்கியமான சிலவற்றைக் காணலாம்.

1. அ,இ,எ

(எ-டு) அ + கல் – அக்கல்; இ + சட்டம் – இச்சட்டம்; எ + திசை – எத்திசை.

2. அந்த, இந்த, எந்த – அந்த + பெண் – அந்தப் பெண், இந்த + செடி – இந்தச் செடி, எந்த + கண் – எந்தக் கண்.

3. அங்கு, இங்கு, எங்கு – அங்கு + காண் – அங்குக் காண், இங்கு + செல் – இங்குச் செல், எங்கு + பார்த்தாய் – எங்குப் பார்த்தாய்.

4. ஆங்கு, ஈங்கு, யாங்கு – ஆங்கு + போ – ஆங்குப் போ, ஈங்கு + காண் – ஈங்குக் காண், யாங்கு + சென்றாய் – யாங்குச் சென்றாய்.

5. அப்படி, இப்படி, எப்படி – அப்படி + பார் – அப்படிப் பார், இப்படி + திரும்பு – இப்படித் திரும்பு, எப்படி + செய்தாய் – எப்படிச் செய்தாய்.

இங்குக் கவனிக்க வேண்டியது ஒன்றுள்ளது. செய்யும்படி, வரும்படி, எழுதும்படி, பார்க்கும் படி – என வரும் இடங்களில் மிகக் கூடாது.

மேலே காணும் அப்படி, இப்படி, எப்படி – என்னும் சொற்களுக்குப் பின் மட்டுமே மிகும்.

6. ஆண்டு, ஈண்டு, யாண்டு – ஆண்டு + செல் – ஆண்டுச் செல், ஈண்டு + காண்க – ஈண்டுக் காண்க, யாண்டு + தேடினாய் – யாண்டுத் தேடினாய்.

7. அவ் வகை, இவ் வகை, எவ் வகை – அவ் வகை + செயல் – அவ் வகைச் செயல், இவ் வகை + பாடம் – இவ் வகைப் பாடம், எவ் வகை + தவறு – எவ் வகைத் தவறு.

8. அன்றி, இன்றி – அவனன்றி + பிறர் – அவனன்றிப் பிறர், அதுவன்றி + சில – அதுவன்றிச் சில.

9. இனி, தனி – இனி + காணலாம் – இனிக் காணலாம், தனி + குடித்தனம் – தனிக் குடித்தனம்.

10. மற்ற, மற்றை – மற்ற + பையன்கள் – மற்றப் பையன்கள், மற்றை + கண் – மற்றைக் கண்.

11. அரை, பாதி – அரை + கவளம் – அரைக் கவளம், பாதி + பக்கம் – பாதிப் பக்கம்.

12. நடு, பொது, புது, முழு, திரு – நடுத் தெரு, பொதுக் கூட்டம், புதுக் கடை, முழுத் தாள், திருக் குளம்.

13. முன்னர், பின்னர் – முன்னர் + கண்டது – முன்னர்க் கண்டது, பின்னர் + பார்ப்போம் – பின்னர்ப் பார்ப்போம்.

ஃ

மூச்சுவிடும் வேர்கள்

தங்கசிவராசன்

ரூ500/- மூன்றாம் பரிசு பெற்ற சிறுகதை

"ராஜா... ஜிப்மர் வந்திட்டுது!" அப்பா குரல் கொடுத்தார்.

பயணக் களைப்பால் டாக்சியில் லேசாகக் கண்ணயர்ந்து வந்த நான் சிலிர்த்து விழிக்கிறேன். சன்னல் வழியாகக் கண்களை ஓடவிடுகிறேன். பதினைந்து வருடங்களுக்குப் பிறகு என் சொந்த ஊருக்குள் நுழைகிறேனா...? காற்று "வாடா... மகனே... வா! சவுக்கியமா?" வாஞ்சையோடு குசலம் விசாரிப்பது போல உடலை உரிமையோடு தழுவியது. விழிகள் அகல விரிகின்றன. காணும் ஒவ்வொன்றையும் காதலோடு நோக்கின.

டாக்சி "ராஜா டாக்கீசை" நெருங்கியது. "பப்பா... வண்டியை நிறுத்தச் சொல்லுங்க! நான் காலாற நடந்து வர்றேன்!" கெஞ்சினேன். அப்பாவின் கண்களில் சந்தேகமும் அச்சமும் சந்தித்துக் கொண்டன.

"ராஜா... ஊரு ரொம்ப மாறிட்டுது! ஒனக்கு அடையாளம் தெரியாது! ஒங்கம்மா உயிரைக் கையிலே வைச்சிக்கிட்டுக் காத்துக் கிடக்கும்! நான் மட்டும் போனா... என்னவோ ஏதோன்னு துடிச்சிப் போயிடும்!"

"பப்பா... சில்வுபிளே!" பதினைந்து வருட பிரான்சு வாசம், பிரெஞ்சு மொழியில் என்னைக் கெஞ்ச வைத்தது.

"டிரைவர் வண்டியை நிறுத்து!" அப்பா சொன்னதும் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினேன்.

"ராஜா... பத்திரம்! நேரா... வீடு வந்து சேரு! பிரெண்ட் வீட்டுக்கு அப்புறம் போவலாம்... என்ன? சீக்கிரமா வந்திடு!"

என்னைத் தனியாக விட்டுப் போக அவருக்கு மனமில்லை. டாக்சியின் பின் கண்ணாடி வழியாக என்னையே பார்த்துக் கொண்டே போனார்.

தன்னந்தனியே விடப்பட்ட என்னுள் பழைய குறுகுறுப்பு! நீண்டு ஓடிய 'நேரு வீதி'யை பார்க்கிறேன். கடை வீதியில் ஒரு கம்பீர அழகு! நம்ப முடியாத மாற்றம் என்னையே நினைவு ஊட்டுவதாக உணர்ந்தேன்.

'எங்கே போவது?' 'சிவாவைப் பார்க்கலாமா? டேவிட் வீட்டுக்கு எப்படிப் போவது? சந்துரு இப்போது எப்படி இருப்பான்?' ஆயிரம் நினைவுகள் முகிழ்த்து வரத் திகைத்து நின்றேன்.

மின்னலாய் ஒரு யோசனை! எதிர் நினைவு வருமுன் கால்களை ஓடவிட்டேன்! 'இப்படித்தானே போகணும்? இந்தப் பக்கம்தானே திரும்பணும்?'

அக்கட்டடத்தைப் பார்க்கப் பார்க்க என்னுள் பாசம், முன்பில்லாத பக்தி பொங்கி வழிந்தன. கண்ணீரும் போட்டி போட்டு அக்கட்டடத்தைப் பார்த்தது. 'பெயர்ப்பலகை' காணவில்லை. உள்ளிருந்து வந்தவரை அணுகினேன்.

"மிசே... சார்! இங்கே... இருந்த... 'எக்கோல்'... சாரி... ஸ்கூல்... இன்னும் இங்கேதானே இருக்கு?" கேட்டேன்.

என் உச்சரிப்பில், உடையில் நெளிந்த அந்நிய வாடையை உணர்ந்தவர், சிரித்து, "ஓ... நீங்க... பிரான்சிலேர்ந்து வர்றீங்களா? இங்கே இருந்த 'எ... கோல்' மிசியோன் தெருவுக்கு மாறிடுச்சி!" என்றார்.

"ஓ... மெர்சி... மிசே!" நன்றி கூறினேன்.

என் கண்கள் அக்கட்டடத்தையே வெறித்தன. தாயின் மடியை முட்டி முட்டிப் பால் சுரக்க வைக்கும் கன்றுக்குட்டி போல என் நெஞ்சு பழைய நினைவுகளை என்னுள் சுரக்க வைத்தது.

'கலைமகள் அரசுப்பள்... என்ற கட்டடத்துக்கு உள்ளே நுழைந்தாலோ, வெளியி... இருந்து பார்த்தாலோ, ப... ளிக்கே உரிய எந்த அம்ச... தையும் காண முடியா... உண்மையில் அது ஒரு பெரி... வீடு! வாசலைத் தாண்டி... உள்ளே போனால் அகன்... கூடம்! அந்தக் கூடத்திலே... நான்கு வகுப்புகள் இருந்த... வகுப்புகள் என்றால் தன்... தனி அறைகள் அல்ல. திறந்தவெளி வகுப்புகள் போ... மூடுதிரையே கிடையா... மேற்கு மூலையில் தெற்... வடக்குப் பகுதியில் இரண்... வகுப்புகள்! இரண்டு வகு...

அமரர் சின்னி கிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி

களையும் ஒரு மூங்கில் தட்டி பாகப்பிரிவினை செய்திருந்தது. அதேபோலக்கிழக்கு மூலையில் மற்ற இரண்டு வகுப்புகள்!

மேற்கு மூலையில் IX-B என்ற அட்டை தொங்கிய வகுப்பு. கடைசிப்பெஞ்சில் நான்,சந்துரு, டேவிட், சிவா, மதியான 'ஷிப்ட்' டின் இரண்டாவது பாடவேளை! வெளிச்சமோ, காற்று வசதியோ இல்லாத புழுக்க வாடையின் நடுவே அறிவியல் ஆசிரியர் 'மகரந்தச் சேர்க்கை' சொல்லிக் கொண்டிருந்தார். ஒரே நேரத்தில் நான்கு வகுப்புகளில் இருந்தும் எல்லாக் குரல்களும் காதில் விழுந்தன. பின் வகுப்பில் தமிழ் ஆசிரியர் 'தாரை புலம்பலை' நடித்துக் கொண்டிருந்தார். எதிர் மூலையில் இருந்து 'கூட்டு வட்டி பார்முலா' பறந்து வந்தது. இன்னொரு வகுப்பில் சரித்திர ஆசிரியர் 'இந்தியாவின் முதல் சுதந்திரப் போர்' நடத்திக் கொண்டிருந்தார்.

"ராஜா... சத்தியமா... ஏதாவது புரியுது... ஒனக்கு?" மெல்லிய குரலில் கிசுகிசுத்தான் டேவிட்.

"இல்லே..." ,முறுவலோடு தலையசைத்தேன், அவன் பக்கம் திரும்பாமல்.

"பாவம்! வாத்யாரு ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் சொல்லித் தர்றாரு! கவனிக்க முடியல்லே..." மீண்டும் காதைக் கடித்தான். அவன் சொல்வது உண்மை! சாம்பமூர்த்தி சார் தன்னை மறந்த நிலையில் சொல்லிக் கொண்டிருந்தார். மற்ற வகுப்புச் சத்தம் அவரையும் பாதித்தது... அவற்றை மீறித் தன் குரல் ஒலிக்க, உரக்கக் கத்திச் சொன்னார். மற்றவர்களின் குரலை அமுங்க வைக்கும் மமதை அதில் தெரியவில்லை! பிள்ளைகளுக்குக் கேட்க வேண்டுமே என்ற பதைப்பு அதில் தொனித்தது.

"ராஜா...! எனக்குத் தலையைச் சுத்துதுடா!" முதன் முறையாக சிவா குரல் கொடுத்தான்.

"கொஞ்சம் பொறு! பீரியட் முடிய அஞ்சு நிமிஷந்தான்! அம்பேல் ஆயிடுவோம்!" டேவிட் என் முதுகுக்குப் பின் அவனிடம் சொன்னான்.

"என்னது? இன்னைக்கும் 'கட்' அடிக்கிறதா?" நான் தலையாட்டினேன்.

"சும்மா இருடா!" டேவிட் காலை மிதித்தான். "வாத்யாரு பார்க்கறாரு!"

கடைசி நிமிடங்களைக் கவனமாகப் பாடத்தில் ஊன்றினோம்!

மணியடித்தது. ஆசிரியர்கள் மாறத்தொடங்கினர்.

"வாங்கடா... ஒடிடலாம்..!" டேவிட் பிடித்து இழுத்தான்.

"ஆமாண்டா... சில்'லுன்னு வெளிக்காத்தை அனுபவிக்கணும்! இல்லே... என் மண்டையே வெடிச்சிடும்...!" சிவா தலையைப் பிடித்தான்.

"சந்துரு! என்ன... யோசிக்கறே?"

"நான் ரெடி! ராஜாதான் பிகு பண்றான்!"

"சீக்கிரம் வாங்கடா! வாத்யாருங்களுக்கு டீ வந்திருக்கு! வரக் கொஞ்சம் டைம் எடுக்கும்...ஒடிடுவோம்...வாங்கடா!"

என் விருப்பம் இல்லாமல் வெளியே வந்தேன்.

"ஏண்டா... ராஜா! ஒனக்கு இஷ்டமில்லேன்னா... போயிடு! பறி கொடுத்தவன் போல்ஸ் கொடுக்காதே..." கண்டிப்பான குரலில் பேசினான் டேவிட்.

'போகலாமா?' மனதுக்குள் ஒரு சபலம்! போனால் இவர்கள் நட்பு பறிபோய் விடுமே! டேவிட்டும், சந்துருவும் சைக்கிள் எடுக்க, நானும் சிவாவும் தொற்றிக் கொண்டோம்.

"அதெல்லாம் இல்லே! யார்.. யாரோ பாத்திட்டு, எங்க அப்பாகிட்டே நான் ஊர் சுத்தறதா... சொல்லியிருக்காங்க!"

"எங்கேடா...போனோம்?"

"அட... ஒரு புழுக்கம் தாங்கல்லேன்னுதானே வெளியே வந்தோம். நேரே பீச்சுக்குப் போங்கடா"

கடற்கரையை அடைந்தோம். காந்தி சிலைக்குக் கீழே மணலில் காலார நடந்தோம். மெல்ல எட்டிப் பார்த்து வெளியே வந்து குறுநடை பயிலும் நண்டுகளைத் துரத்தினோம். பாய்ந்து வரும் அலைகளில் நின்றோம். சலித்த பின் மணலில் சாய்ந்தோம்.

"ராசா... ஸ்கூலுக்குத் தானே?" அப்பா சந்தேகத்துடன் முறைத்தார்.

"ஆமாம்!" பதவிசாய்த் தலையாட்டினேன்.


"நேத்து சாம்பமூர்த்தி வாத்யாரைப் பார்த்தேன்! ஒன் போக்கே சரியில்லைன்னாரு. ஒரு பீரியட் இருந்தா... ஒரு பீரியட் காணாமப் போயிடறியாமே? ஒங்க இங்கிலீஷ் டீச்சர் ஒன்னப் பார்த்தே ரொம்ப நாளாவுதாமே?"

"அதெல்லாம் இல்லேப்பா!"

"பொய் சொல்லாதே! நீயும் ஒன் குருப்பும் செய்யற 'டிரிக்சை' சொன்னாரு! யூனிபார்ம் போட்டுக்கணு வராதவங்களை ஒங்க எச்.எம். அனுப்பிடுவாராம்! அதுக்காவே ஒன் குருப் யூனிபார்ம் இல்லாமப் போறீங்களாம்! வீட்டுக்குப் போடான்னு துரத்தினா... சந்தோஷமா வெளியே போயிட வேண்டியது! தெருவைப் பொறுக்கிட்டு ஒழுங்கான பிள்ளையா வீட்டுக்கு நேரத்துக்கு வந்திடறது... இல்லையா?"

நம்ப முடியாமல் அம்மா என்னைப் பார்த்தாள்.

"உண்மையாவா ராஜா? ஒரே பிள்ளைடா நீ! மத்த ரெண்டும் பொண்ணாயிட்டுது! ஒன்மேலே உயிரை வைச்சிருக்கேன்! ஊர் சுத்திக் கெட்டுப் போகா



தேப்பா". அம்மா நெருங்கி வந்து கெஞ்சினாள். மனது என்னவோ பண்ணியது .

"வர்றேம்பா... வர்றேம்மா" கிளம்பினேன்.

"டேய்... பள்ளிக்கூடம் போறேன்!" நான் சொல்ல,

"என்னது இன்னைக்கு என் பர்த்டே! நேரா சேலம் ஓட்டல் போறோம்! பெரிய பார்ட்டி கொண்டாடணும்... மறந்து போச்சா?" டேவிட் ஆத்திரப் பட்டான். அப்பாவின் மிரட் டலைச் சொன்னேன்.

"இன்னைக்கு மட்டும் 'கட்' அடிச்சிடுவோம்! நாளையிலே இருந்து கொஞ்ச நாள் நல்ல பிள்ளையா... நடப்போம்! என்ன?" சிவா என் தோளைத் தட்டினான். மற்றவர்களும் ஆமோதித்தனர்.

சேலம் ஓட்டல் தனியறையில்-

சர்வரிடம் நாலு என்று கைகாட்டி டேவிட் சொல்ல, என் வயிற்றில் பந்து சுருண்டது. நான்கு கண்ணாடித் தம்ளர்கள் வந்தபோது -

"சாரி... என்னாலே முடி யாது!" என்று எழுந்தேன்.

"ராஜா! நாங்கள்ளாம் குடிகாரன் இல்லே! ஒரு நல்ல சந்தர்ப்பம்! அவ்வளவுதான். உட்காருடா... ப்ளீஸ்!" டேவிட் சொன்னான், கோபம், கெஞ்சல் அவன் குரலில் கலந்து ஒலித்தன.

"நோ... நோ! நேத்து சிகரெட் நீட்டினீங்க. இன்னிக்கு இதுவா?" ஆவேசமாய் எழுந்த வனைச் சிவா அழுத்தி உட்கார வைத்தான்.

'கடவுளே!' என் கைகால்கள் நடுங்கின. அப்பாவின் உறு மலும், அம்மாவின் கண்ணீரும் என்னை என்னவோ செய்தன.

"தட்ஸ் குட்!" துள்ளிய டேவிட், கண்ணாடி டம்ளர்களில் ஊற்றினான். "சியர்ஸ்!" என் உதடும், கையும் அனிச்சையாய் இயங்கின. 'மடக், மடக்'கென ஒரே வேகத்தில் குடித்தேன். அடுத்து என்ன நடந்தது... எனக்கே தெரியாது! 'திகுதிகு' வென உள்ளே இறங்கி

என்னுள் ஏதோ ஒரு விளைவை உண்டாக்கியது.

"குடித்தவன் ஏன் தள்ளாடு கிறான்? சிறு மூளை பாதிப்ப தால்" வகுப்பில் சாம்பமூர்த்தி சார் சொன்னது காதில் உரக்கக் கேட்டது.

"கண்ணா... நீ என்னோட ஒரே புள்ளை! ஒன்மேலே உயிரையே வைச்சிருக்கேன்!" அம்மா கெஞ்சினாள்.

"டேய் படுவா!" அப்பா 'பெல்ட்டை' உருவினார்.

சிவா ஏதோ என்னிடம் சொல்லிச் சிரிக்கிறான். நானும் சிரிக்கிறேன். டேவிட் "தேங்க் யூ... ராஜா... தேங்க் யூ!" எனத் தோளைத் தட்டுகிறான்.

ஓட்டலை விட்டு வெளியே வருகிறோம். கால் தரையில் வைக்க வைக்க, வழுக்கி ஓடுவது போல தவிப்பு!

"டேய் சைக்கிள்லே ஏறுங் கடா!" யாரோ சொல்ல, ஏறி உட்காருகிறேன். 'சிவ்'வெனப் பறப்பது போல உணர்வு, திடீரென... எங்கேயோ சாய் வது போல

நினைவு திரும்பியபோது, அம்மா புலம்பிக் கொண்டிருந் தாள், அப்பா தலையில் அடித்துக் கொண்டார்.

"ஏண்டா... ராஸ்கல்.. குடிச் சிட்டு ஈஸ்வரன் கோயில் வாசல்லே விழுந்தா கிடக் கிறே...?"

கண் விழிக்கவே பயமாக வும், அவமானமாகவும் இருந் தது.

மறுநாளே பள்ளியில் இருந்து நிறுத்தப்பட்டேன். அப்பா பிரான்சில் இருக்கும் அக்காவுக்கு அடிக்கடி போன் செய்தார். என்னை ஏதோ சில பாரங்களில் கையெழுத்திட வைத்தார். ஒரு மாதம்கூட முடியவில்லை. என்னைப் பிரான்சுக்கு அனுப்பி விட்டுத் தான் ஓய்ந்தார்.

அன்று ஓடியவன்தான்... இல்லை ஓட்டப்பட்டவன்தான்! அப்பாவே வரச்சொல்லி எழுதி யும் வராத நான், அம்மாவின் உடல் நிலை பாதித்ததால் வந்திருக்கிறேன். இனி திரும்பப் போகப் போவ தில்லை!

மறுநாள் வெளியே கிளம்பி னேன். அப்பாவும், அம்மாவும் என்னைச் சூழ்ந்து கொண்டனர்.

"அப்பா... சத்தியமா நான் குடிக்கிறது இல்லே! இன் னொரு தடவை நான் குறட் டிலே விழமாட்டேன்! என் பிரெண்ட்சைப் பார்த்துட்டு வர்றேன்!" அப்பா வாயடைத்துப் போனார்.

"சைக்கிள்லே... போவாதே! ரிக்ஷாவிலே போ! காத்தவ ராயனைக் கூப்பிடறேன்!" அம்மா ஓடினாள்.

வண்டி பறந்தது... தெருக் களை அளந்தேன். ஜன நெருக்கம் மூச்சுத் திணற வைத்தது. சிவா வீட்டை அடைந்தேன். அந்த வீட்டைப் பார்த்ததும் பவழமல்லி வாச மாய்ப் பழைய நினைவுகள்! அதோ... அந்தத் திண்ணையில் அடிக்காத கொட்டமா?

சாயம் போன புடைவையில் கண்களை இடுக்கியபடி பார்த்தாள் ஒரு அம்மா. 'சிவாவின் அம்மாவா அது?' மனது சுருண்டு அழுதது.

"யாரது?" என்ற குரல் கேட்டு சிவா ஓடிவந்தான், என்னைத் தழுவிக் கொண்டான். 'செண்ட்டா...' என மோப்பம் பிடித்தான். உள்ளே அழைத்துச் சென்றான். வீடே இருளோடிக் கிடந்தது.

"எப்படி இருக்கே? என்ன செய்யறே?" என் இயல்பான கேள்வி அவனைக் குலுங்க வைத்தது.

"அம்மாவுக்கு என் பேரே மறந்து போச்சு! ஒதவாக் கரைன்னுதான் கூப்பிடறாங்க" விம்மினான். "நீ போன பின் னாலே கொஞ்ச நாள் பள்ளிக் கூடம் போனேன்! என் னென்னமோ கத்துக்க டிரை பண்ணேன்! எதுவும் பிடி படலலே".

"ஓ" என் மனதின் மூலையில் ஒரு குரல் 'இப்படித்தான் நீயும் புலம்பியிருக்க வேண்டியவன்!' என்றது.

"நம்ம... டேவிட்... சந்துரு எல்லாம் நல்லா இருக் காங்களா?"

சிவா என்னை வெறித்துப் பார்த்தான். உதட்டைக் கடித் தான். கண்களைக் கண்ணீர் ஆக்கிரமித்தது. அதிர்ந்தேன் நான்.

"வந்து... வந்து... டேவிட் இப்ப...இல்லே!"

"என்ன?"

"பர்த்டே பார்ட்டியோட அவன் நிக்கலே! அதிலேயே மிதந்தான். ஒருநாள் சாக்கடை ஓரமாய்க் கிடந்தான்!"

"கடவுளே! சந்துரு?" என் நாக்கு பின்னியது.

"இருக்கான்! இருக்கான்... ஆனா...ஜெயில்லே!"

"ஓ... பள்ளிக்கூடத்திலே 'சைக்கிள் காயல்' திருடு வான்லே..."

"சைக்கிள்ளயே திருடத் தொடங்கிட்டான்!"

"ஏன்... சிவா... இவ்வளவு நடந்திருக்கு? லெட்டர் போடக் கூடாதா?" கோபப்பட்டேன்.

"ஓங்கப்பாதான்... தம்பி! இப்பதான் என் புள்ளை உருப்பட்டு வர்றான். லெட்டர் போட்டு அவனைக் கெடுக் காதேன்னு கெஞ்சினாரு!"

"ஓ! சந்துருவைப் பாக்க முடியுமா?"

"ம்" தலையாட்டினான்.

"நாளை அவனைப் பார்க்கி றோம்... வர்றேன்!" கிளம்பிய நான் ஒரு கைப் பையில் சில வெளிநாட்டுப் பொருட்களை யும், சில நூறு ரூபாய் நோட்டு களையும் திணித்தேன். சிவா குறுகினான்.

"ப்ளீஸ்!" என்றதும் அடங்கிப் போனான்.

அடுத்த நாள் சிறைச்சாலை யில் சந்துருவுக்காக நானும், சிவாவும் காத்திருந்தோம்.

யார் தன்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள்? வியப்பை விழிகளில் சுமந்து வந்த சந்துரு எங்களைப் பார்த்ததும் உற்சாக ஊற்றானான். ஒரு சில மணித் துளிகள் உயிர்ப்பு இழந்தன. கடற்கரையில், செங்கிலியன் தோட்டத்தில், சேலம் ஓட்டலில் என்று நாங்கள் கலந்த சூழல் கள் நினைவைத் தீண்டின.

"டேவிட்தான்...ராஜா...எப்ப வருவான்? அட்ரஸ் தெரிஞ்சா எனக்கு ராயல் சல்யூட் எடுத் தாரச் சொல்லுன்னு துளைப் பான்... பாவி! அதுக்குள்ளாறப் போயிட்டான்! அது சரி! நீ ஏன் இந்தப் பக்கமே தலை காட்டலே!

பத்து வருஷத்துக்கும் மேலே இருக்குமா?" சந்துரு என் பக்கத்தில் உட்கார்ந்தான்.

அவனையே பார்த்த என்னை... "என்னடா...?" ஆர்வமாய்க் கேட்டான்.

"வந்து... ஸ்கூலுக்கு யூனிபார்ம் போடச் சொன்னாலே ஒனக்குப் பிடிக்காதே! இந்த யூனிபார்மை எப்படிப் போட்டுக்கறே?" நான் விம்மினேன். சிவாவும் அதிர்ந்தான். கண்ணீரை வழித்தெறிந்து என்னைத் தழுவிக் கொண்டான்.

"எதையெல்லாம் வெறுத்தேனோ... அதுவே இப்ப எனக்குப் பிடிக்குது!" நிறுத்தினான்.

"என்ன சொல்றே?" சிவாவும் என்னோடு கேட்டான்.

"நான் பி.ஏ. பட்டதாரி! பி.எட். பண்றேன்!"

"வெரி குட்!" கை குலுக்கினேன்.

"ராஜா... அந்தக் காலத்திலே பள்ளிக்கூடம் படிப்புன்னாலே ஏதோ வெறுப்பு வந்துதே... அது...ஏன்?"

"புழுக்கமும், சத்தான சூழலும் காரணமா இருக்குமா?"

"கரெக்ட்! இப்பப் புரியுது! படிக்கிறது எவ்வளவு சுகமான அனுபவம்னு!"

"அப்ப... இன்னைய பள்ளிக்கூடங்களை விடச் சிறைச்சாலைகள் 'பெட்டர்'னு .சொல்றீயா?"

"நோ... நோ... அப்படி இல்லே! அதே புழுக்கத்திலே படிச்ச நம்ப சீனிவாசன் எம்.எஸ்., பெரிய டாக்டர்! நம்ப புருஷோத்தமன் ஐ.ஏ.எஸ். பண்ணிட்டானாம்! நாம்பதான் உருப்படாமப் போயிட்டோம்! சாரி! ஒன்னைச் சொல்லலே!"

"சரி, எப்ப நீ விடுதலை ஆவே?"

"இன்னும் ஆறு மாசத்திலே".

"வந்தவுடனே என்னை பாரு! ஒனக்கு என்னே கொஞ்சம் வேலை இருக்கு!"

"என்னது?"

"ஆமாம்! நாம்ப மறு ஒண்ணு சேர்றோம்! கட்டாய சீரழிய இல்லே!" உறுதியா தலையாட்டிய என்னை சி வும், சந்துருவும் வியப்பே பார்த்தனர்.

"ராஜா... ஒரு விஷயம்! ந சாம்பமூர்த்தி சாருக்குப் பா வாயு வந்திட்டதாம்!"


"என்ன?"

"இங்கே வந்த டாக்டர் வாசன்தான் சொன்னான்".

"சிவா... ஒனக்கு அவர் தெரியுமா?"

"தெரியும்! நாளைக் போகலாம்!" சிவா சொ சந்துருவிடம் விடை பெற்றோ

"வாங்க... யாரு... நீங் குழறியபடி சாம்பமூர் எங்களை வரவேற்றார்.



ஆறடி உயரத்துக்குச் சிவந்த மேனியில், 'பளிச்'சென்ற உடையில் கம்பீரமான குரலோடு நாங்கள் பார்த்த அறிவியல் ஆசிரியரா இது? வயதும், நோயும் அவரது வனப்பைப் பறிமுதல் செய்திருந்தன. சிவந்த மினுமினுப்பு கறுப் போடிக் கிடந்தது. வலது கை துவண்டிருந்தது.

"நாங்க... ஒங்களோட மாணவர்கள்... ராஜா... சிவா!" அறிமுகம் செய்து கொண் டோம். அவரால் கண்டு கொள்ள முடியவில்லை. நல்ல வேளை! அவரைப் பார்க்க வந்த இங்கிலீஷ் டீச்சர் அம்ச வல்லி எங்களை அவருக்கு இனங்காட்டினார்.

"ஓ... யூனிபார்ம் போடாம ஓடுவாங்களே... சரியான செட் டாச்சே!" சாம்பமூர்த்தி சிரித் தார். அவர் உடல்நலனை விசா ரித்தோம். பிரான்சு வாழ்க்கை யைப் பற்றிக் கேட்டார்.

"சார்... ஒங்ககிட்டே ஒண்ணு கேட்க வந்தோம்!" நான் அவரையே பார்த்தேன்.

"என்னப்பா?"

"சார்... டீச்சர் சொன்னாங் களே... நாங்க எப்படி... ஓடுவோன்னு? நல்லாப் படிச் சிட்டு இருந்த நீங்க ஏண்டா... இப்படி ஆயிட்டீங்கன்னு வருத் தப்படுவீங்களே! அதுக்குப் பாதி எங்களோட விளை யாட்டுப் புத்தி! இன்னொரு காரணமும் இருந்ததே... அது... அது தெரியுமா ஒங்களுக்கு?" இழுத்தேன்.

"அது என்ன காரணம்?" சாம்பமூர்த்தி விளங்காமல் விழித்தார். அம்சவல்லியும் தலையசைத்தார்.

"வந்து... பள்ளிக்கூடச் சூழலே... அது! ஆமாம்! அந்தப் புழுக்க வாடையும், இரைச்ச லான வகுப்புமே காரணம்! சார் சத்தியமா சொல்லுங்க. அது உண்மையிலேயே பள்ளிக் கூடமா? சார்... நீங்க அன்னைக்குச் சொல்லிக் கொடுத்தது... இன்னும் நினை விருக்கு. சதுப்பு நிலக் காடு களிலே... சில மரங்கள் இருக் கும்! அவற்றோட வேர்கள் பூமிக்கடியிலே தேவையான காற்று கிடைக்காம பூமிக்கு மேலே வந்து மூச்சு விடும்னு! சாதாரணமா பூமிக்கு அடியிலே புதைந்து கிடக்கிற வேர்கள்... வெளியே வர்ற மாதிரி... சரி யான சூழல் எங்களுக்குக் கிடைக்காததாலே... வெளியே ஓடினோம்! பள்ளிக்கூடத்தைக் 'கட்' அடிச்ச சந்துரு... இன்னைக்குச் சிறையிலே பி.ஏ., முடிச்சிருக்கான்..."

"ஈஸ் இட்?"

"நீ சொல்றது சரி... ராஜா! நான் இப்ப பிரைமரி ஸ்கூல் ஹெச்.எம்மா இருக்கேன். அதுவும் ஒரு ஷிப்ட் ஸ்கூல்! சின்னப் புள்ளைங்க ஒரு மணிக்கு மேல வர்றணும்! ஒண்ணாங் கிளாஸ் எங்கே இருக்கு தெரியுமா? மதிய உணவு அடுக்களையிலே! அந்த அடுப்பு அப்பதான் அணைஞ்சு இருக்கும்! கரியும், உணவுத் துண்டங்களும் தரை யெங்கும் இருக்கும். அதிலே தான் புள்ளைங்க உட்காரணும்! பாதி நாள் நிறையப் புள்ளங்க... பள்ளிக்கூடம் வரவே அழும்! ஒருத்தர் தன் பிள்ளைக்கு டி.சி.யே வாங்கிட்டுப் போயிட் டார். தூக்கத்திலே அலறி அழுததாம். அவரோட புள்ளை!" அம்சவல்லி பெரு மூச்செறிந்தார்.

"அடக் கடவுளே!" நான் அலறினேன்.


"அதனாலேதான் சொல் றேன்... சார்! இந்த நாட்டிலே படிப்பைப் பாதியிலே பிள்ளைங்க விடறது வறுமை யால மட்டுமல்ல... பள்ளிச் சூழலும் ஒரு காரணம்! படிப்பு எவ்வளவு சுகமான அனுபவம்! அந்த இனிய சூழலை நாம்ப எங்கே கொடுக்கிறோம்? அத னாலே பாதிக்கறது மாண வர்கள் மட்டுமல்ல... உங்களை மாதிரி ஆசிரியர்களோட உடல் நிலையுந்தான்! ஒங்களுக்கு இந்த நோய் வரவே பள்ளிக்கூட 'டென்ஷன்'தான்னு நினைக்கி றேன். எங்களுக்காக... நீங்க கழுத்து நரம்பு புடைக்க... கத்தி... ஒங்களைத் துன் புறுத்திக்கிறது... என் நினை விலே பசுமையாக இருக்கு! அதனாலே..."

"அதனாலே..."

"நாம்ப... ஒரு பள்ளிக்கூடம் கட்டுவோம்! இலவசமான கல்வி கொடுப்போம். அதிலே குழந்தைகளுக்குத் தேவையான சூழலை உருவாக்கிக் கொடுப் போம்! காற்றோட்டமான விசாலமான அறைகளைக் கட்டுவோம். பள்ளிக்கூடத்தை விட்டு ஓடாம, பள்ளிக்கூடத் துக்குக் குழந்தைகளே ஓடிவர சூழ்நிலையை உண்டாக்கு வோம்! நான் இந்த ஊருக்கு வரும் போதே நான் சம்பா தித்த பணம்... ஒரு நல்ல துக்குப் பயன்படுத்தணும்னு முடிவோட வந்தேன். சந்துரு, சிவா போல நானும் இங் கிருந்தா திசை மாறிப் போயி ருப்பேனோ... தெரியாது! டீச்சர் சொல்றதைப் பார்த்தா... இன் னும் அந்த நிலை மாறல லேன்னு தெரியுது! எனவே நீங்கதான் முன்னிருந்து அந்தப் பள்ளிக்கூடம் உருவாக உத வணும்.."

"செய்யலாம்! ஒன்னோட விசால மனதைப் பாராட்டறேன்! நெறைய செலவாகும்... எடம் வேணும்" சாம்பமூர்த்தி முக வாயைச் சொறிந்தார்.

அரைமணி நேரம் செலவிடத் தயாரா?



ஆம்... உங்களது முன்னேற்றத்திற்காக, தினசரி அரைமணி நேரம் செலவிடத் தயாராக இருக்கிறீர்களா? அப்படியானால் மேற்கொண்டு படியுங்கள்!...

★ வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உடையவரா நீங்கள்?

★ ஆங்கில மொழியில் போதிய புலமையின்மை உங்களது முன்னேற்றத் திற்கு ஒரு தடையாக இருக்கிறதா?

★ பல வழிகளில் முயன்றும், பல் புத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் ஆற்றல் பெற முடிய வில்லையே என்று வருத்தப்படுகிறீர் களா?

★ கவலையை விடுங்கள்... நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை அடைய உங்களது ஓய்வு நேரத்தில் தின்சரி அரைமணி நேரம் ஒதுக்கினால் போதும்!

ஆம். இந்த அரைமணி நேரத்தில் நீங்கள் தினசரி மேற்கொள்ள வேண்டிய பயிற்சியினை மிகவும் எளிய முறையில் சொல்லித் தந்து, நீங்கள் தயக்கமின்றி ஆங்கிலத்தில் உரையாட தபால் மூலம் மிகச் சிறந்த முறையில் பயிற்சி அளிக் கிறோம்.

எனவே, ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வேண்டும், இலக்கணப் பிழை ஏற்பட்டுவிடுமோ என்ற பயமின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் இப்பயிற்சியின் மூலம் நிச்சயம் நிறைவேறும்.

என்ன? பயிற்சிக்காக தினசரி அரை மணி நேரம் செலவிடத் தீர்மானித்து விட்டீர்களா?

அப்படியானால், உங்களது முன் னேற்றத்தின் முதல் முயற்சியாக ஒரு ஐந்து நிமிடம் செலவு செய்து ஒரு போஸ்ட் கார்டில் "நான் ஆங்கிலம் கற்க விரும்புகிறேன்" என்று எழுதி,

---

விவேகானந்தா கல்வி நிலையம்,
9, நடேசன் தெரு, தி.நகர்,
சென்னை 600 017.

என்ற முகவரிக்கு இன்றே அனுப்புங் கள் பயிற்சி பற்றிய விவரங்களை உங்களுக்கு உடனே அனுப்பி வைக் கிறோம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

NAGA


மூக்குக் கண்ணாடியைக் கண்ணில் மாட்டும் பொழுது கிழக்கு முகமாக நின்று கொள்வது நல்லது. புதியதாகக் கண்ணாடியை மாட்டிக் கொள்பவர்கள், சனிக்கிழமை – சனி நட்சத்திரங்களான பூசம் – அனுஷம், உத்திரட்டாதி ஆகிய நாட்களிலும், சந்திர அஷ்டமான அந்த இரண்டேகால் நாட்களிலும் புதுக்கண்ணாடி அணிவதைத் தவிர்க்கவும்.

ஞாயிற்றுக்கிழமை, புதன் கிழமை புதுக் கண்ணாடி அணிவதற்கு உகந்த நாளாகும்.

கழற்றிய கண்ணாடியை மேஜையின் மீதோ – கீழே வைக்கும்போதோ எந்தவிதக் காரணம் கொண்டும் தெற்குப்புறமாகப் பார்க்கும்படி வைக்கவே கூடாது. ஏனெனில் இதன் காரணமாகப் பல்வேறு கெடுதலான சம்பவங்களை அந்த கண்ணாடிக்குரியவர் சந்திக்க வேண்டியிருக்கும்.

அதே கண்ணாடியைக் கழற்றி 'கிழக்கு முகமாக' வைத்துப் பாருங்கள். பின் எடுத்து மாட்டிக் கொள்ளும் பொழுது உங்கள் மனத்திற்கு இனிமையான செய்திகள் வருகிறதா இல்லையா என்று பாருங்கள்.

இப்படிச் செய்துப் பாருங்கள்



கண்ணாடி போட்டுக் கொள்பவர்கள் மேஷம், சிம்மம், கன்னி, மிதுனம் இந்த நான்கு இலக்கினம் அல்லது இராசியைச் சேர்ந்தவராக இருந்தால் ஞாயிறு, புதன், செவ்வாய் ஆகிய நாட்களில் நல்ல செய்தியைப் பெறுவார்கள்.

மற்ற லக்ன, இராசிக்காரர்கள் ரிஷபம், கடகம், துலாம், விருச்சிகம், தனுசு ஆகியவர்கள் கொஞ்சம் 'சிவப்பு – பழுப்பு' கலந்த கண்ணாடி பிரேம்களை அணிவது எல்லாவிதத் தடங்கல்களில் இருந்தும் விடுதலை பெற்று வாழ்க்கையை நிம்மதியாக இருக்க வைக்கும். 'தங்க பிரேம்' போட்டுக் கொண்டவர்களுக்கும் எந்தவிதத் தடங்கலும் வாழ்வில் இருக்காது.

இதைத் தவிர மகரம், கும்பம், மீன இராசியோ – லக்னத்திற்கு உடையவர்கள் கருப்பு பிரேம் போட்டுக் கொள்ளலாம். பணத்தட்டுப்பாடு நீங்கும். புதிய முயற்சிகளுக்கு ஆதரவு தெரியும். முன்பின் தெரியாத நண்பர்களால் ஆதாயமும், பெயரும், புகழும் கிடைக்கும்.

மூக்குக் கண்ணாடியைக் கிழக்குப் பக்கமாக வைத்தால் தைரியமும், வெற்றியும், மனச் சந்தோஷமும், செல்வாக்கும் பெருகும். மேற்குப் பக்கமாக வைத்தால் நீண்டநாள் ஆசை நிறைவேறும். காரியங்கள் மந்தமாக இருக்கும். கொடுக்கல் வாங்கலில் சிரமம் இருக்காது. சுபகாரியம் ஒன்று தாமதமாக வெற்றியைத் தரும். வடக்குப் பக்கமாக வைத்துக் கொண்டே இருந்தால் கடிதங்கள் மூலம் நன்மையை எதிர்பார்க்க முடியாது. திருமண வாழ்க்கையில் குழப்பங்கள் ஏற்படும். குழந்தை குட்டிகளால் நிறைய பணச் செலவு ஏற்படும்.

எனவே மூக்குக் கண்ணாடி அணிபவர்கள் கூடியமட்டும் கிழக்குப் பக்கமாகவே வைத்து விட்டுச் செல்வது நல்லது. அதுமாத்திரமல்ல – கண்ணாடியின் அடியிலுள்ள பிரேம் விட்டுச் செல்வது நல்லது. அதுமாத்திரமல்ல – கண்ணாடியின் அடியிலுள்ள பிரேம் தரையிலோ – மேஜையிலோ படும்படி வைக்க வேண்டும். கண்ணாடியைக் குப்புறக் கவிழ்த்து வைப்பதும் துன்பத்திற்கும் அறிகுறியாகும். ஃ

—தி.கி.இராமசாமி

"எவ்வளவு ஆனாலும் சரி! நான் அனுப்பின பணத்திலே பெரிய தோப்பு வாங்கி வைச்சிருக்காரு எங்கப்பா! அந்த இடத்தைப் பயன்படுத்துவோம்! என் சேமிப்பு சில லட்சங்களாக இருக்கு! நீங்க தான் நடத்திக் கொடுக்கணும்!"

"ராஜா... கல்வியோட முக்கியத்துவம்... இந்த நாட்டிலே கல்வியாளர்களுக்கே புரியல்லே... பாடத் திட்டத்தை மாத்துவாங்க! பள்ளிக்கூட நேரத்தையும் மாத்துவாங்க! யாருமே பள்ளிச் சூழலை மாத்தல்லியேன்னு வருத்தப்படுவேன்! அதனாலே பாதிக்கப்பட்ட நீ முன்வந்திருக்கிறது ரொம்ப அருமை! உன்னோட முயற்சிக்கு என்னோட ஆசியும், உதவியும் எப்போதும் உண்டு!' அம்சவல்லிபடபடத்தார் .

"தேங்க் யூ! தேங்க் யூ மேடம். சார்! அடிக்கல் நாட்ட ஒரு நல்ல நாள் பாருங்க..." வேண்டினேன்.


"அந்தக் காலண்டரை எடுப்பா!"

சிவா துள்ளி எடுத்தான்.

வளைந்து துவண்ட கையில் காலண்டரைப் பற்றிப் புரட்டினார் சாம்பமூர்த்தி.

வளைந்திருக்கும் கல்வியை நிமிர்த்த அவர் எடுக்கும் முதல் முயற்சியாய் அது எனக்குப் பட்டது!

நாளை நமதே



"எதிர் காலம் நம் கையில்"

டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியன்

உலகம் உய்ய வந்த மகான்களுள் தலையாயவர் இந்தத் தலைமுறையில் ஸ்ரீ அரவிந்த மாமுனிவர், புதுவையின் யோகி. அந்த யோகி கூறியது என்றும் எவருக்கும் எப்போதும் பொருந்தும். "உன் உயர்வு உன் கையிலே" என்கிறார் ஸ்ரீ அரவிந்த மகான். 'எவரிடமிருந்தும் நீ கற்றுக் கொள்ளலாம். உனக்குத் தெரியாதது அவருக்குத் தெரிந்திருக்கும். ஆண்டவன் படைப்பில் எல்லாவற்றிற்கும் ஒரு காரணம் உண்டு' என்கிறார் இந்த ஒப்பற்ற யோகி.

அவரைப்பற்றி ஒரு கட்டுரையில் பேராசிரியர் எம்.பி. பண்டிட் அவர்கள் கூறுகிறார்கள். "ஒருமுறை மாடி வராந்தாவில் ஸ்ரீ அரவிந்த யோகி மிகுந்த யோசனையுடன் அமர்ந்துள்ளார். ஏதோ சிந்தனைச் சிக்கல் போல் தோன்றியது. மிகுந்த கவலையுடன் கூடிய சிந்தனைச்சிக்கலை அறுத்து முன்னேறத் துடிப்பு இருந்தது. அப்போது குள்ளசாமி என்னும் புதுவை அன்பர், பாரதியின் நண்பர், அரவிந்த மகானிடம் வரக்கூடியவர், திடீரென்று மாடியேறி அரவிந்தர் முன்நின்று, மகானின் முன்னால் வைக்கப்பட்டிருந்த டீ கோப்பையைத் தலைகீழாகக் கவிழ்த்து டீயைக் கொட்டிவிட்டு மறுபடியும் நேராக நிமிர்த்திவைத்து விட்டு ஓடிப்போனார்.

உடனே கவலைகளால் சூழப்பட்ட யோகி மனம் மலர்ந்தார். மகிழ்ச்சி பொங்கியது. ஆம். அவரது சிந்தனைச் சிக்கலுக்கு விடை கண்டு விட்டார். "ஆம், கோப்பையில் உள்ள பழையவற்றை ஒழித்தாலன்றி அதை எப்படிப்புதியதால் நிரப்ப முடியும் - இது தான் நான் காண விரும்பிய வழி. இவ்வழி பிறந்துவிட்டது" என்றார்.

இதைத்தான் இன்று கல்வியாளர் உலகெங்கிலும் கூறுகின்றனர். "You have to unlearn before you have to Learn" என்கிறார்கள் உள நூல் பெரியார்கள், வல்லுநர்கள்.

நாம், நம் பெண் குழந்தைகட்குச் சொல்லி வைக்கிறோம் குழந்தைப் பருவத்திலிருந்தே, "நீ நளாயினி போல் இருக்க வேண்டும். கணவன் சொல்லைத் தட்டவே கூடாது" என்று. நளாயினியின் புருஷன் அவனது மனைவியிடம் தன்னை விலைமகள் வீட்டுக்குக் கொண்டு போகச் சொன்னபோதும், கற்புக்கரசியான நளாயினி அவனை அங்கு தூக்கிச் சென்றாள்.

இந்த உதாரணத்தையா நாம் நம் பெண்டிர் முன் வைப்பது? வையத்தை வளர்ப்பது தாய்க்குலம், அந்தத் தாய்க்குலம் வீரமுள்ள, மானமுள்ள மங்கையாக வளர வேண்டாமா? கோழைகளாக மகளிரை வளர்த்தால் நாட்டில் வீரர்கள் எப்படிப் பிறப்பார்கள்?

நான் அண்மையில் திருச்சியில் உள்ள புகழ்மிகு காவிரி மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழாவுக்குச் சென்றேன். அக்கல்லூரி முதல்வர் பேராசிரியை சகுந்தலா அவர்களே ஒரு புதுமைப்பெண்.

அப்போது சொன்னேன், "நமக்கு நளாயினிகள் இன்று தேவையில்லை. கணவன் தவறான இடத்துக்குக் கூட்டிப்போகச் சொன்னால் பக்கத்தில் உள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு அவனைக் கூட்டிப் போங்கள்" என்று.

மாணவியருக்கு ஒரே மகிழ்ச்சி. கல்லூரி முதல்வி ஒப்பற்ற பேராசிரியை செல்வி சகுந்தலா அம்மையாருக்கும் மகிழ்ச்சி.

அவர்கள், "நீங்கள் பயமற்ற பெண்களாகத் தாய்க்குலம் வளர வழிகாட்டுகிறீர்கள்" எனப் பாராட்டினார்கள். தாய்க்குலம், தாய்க்குலம் என்று அவர்கள் ஓட்டை மட்டும் கேட்டால் போதுமா? ஆம், நமது ஜனத்தொகையில் பாதி உள்ள (பாதிக்குமேல்கூட உள்ள) தாய்க்குலத்தை அடிமைகளாக வளர்த்த காலம் மலையேறி விட்டது. அவர்கள் வாழ்க்கையில் ஆணின் துணை. ஆண் பெண்ணின் துணை. இருவரும் சேர்ந்து ஓட்டுவதே வாழ்க்கைப் படகு.

இன்று போல் பெண்களை மட்டந்தட்டி, அடிமட்டத்தில் வைத்திருப்பது நம் நாடு தலை

தூக்கி உலகின் முன்னணியில் நிற்க முடியாமல் இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம்.

பெண்கள் என்றால் அவர்கள் "குரோஷியா" ஊசிவைத்துக் கொண்டு சட்டைபின்னுவதுதான் அவர்கள் படிப்பு என்பது பாட்டி காலப் படிப்பு. இன்று நமது பொறியியல் கல்லூரி களில் பாதிக்கு மேல் பெண்கள்.

இவர்கள் பாரதியின் வாக்கில் சரி நிகர் சமானமாக ஆண்களுடன் நடைபோட வேண்டும்.

இதற்கு வேண்டியது ஒன்றே ஒன்றுதான். நம் எதிர்காலம் நம் கையில் என்ற நம்பிக்கை ஒன்றேபோதும்.

ஒருமுறை நான் தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநராக இருந்தபோது பல பள்ளிகளில், கணிதம், உயிரியல் எடுத்து "ஒற்றை இலக்கம்" (SINGLE DIGIT) வாங்கிய மாணவ மணிகளைச் சந்தித்து ஓர்ஆய்வு நடத்தினேன்.

நான் சுமார் ஆயிரம் மாணவரைச் சந்தித்து என் கேள்விகளுக்கு விடைகள் வாங்கினேன்.

"தம்பி! நீ கணக்கில் நூற்றுக்கு எட்டு தான் எடுத்திருக்கிறாய் ஏன் கணக்குப் பாடத்தை எடுத்தாய்?

"தங்கச்சி,நீ உயிரியலில் நூற்றுக்கு ஆறுதான் எடுத்திருக்கிறாய்?ஏன் உயிரியலை எடுத்தாய்?"

இப்படியாக சுமார் ஆயிரம் மாணவ மாணவியரைக் கேட்டபோது இவர்கள் யாவரும் தோல்வியினால் முகம் தொங்கி, வதங்கிப் போனவர், இவர் யாவரும் ஒரே பதிலையே தந்தனர்.

"ஐயா, எங்கள், அப்பா, அம்மா, அத்தை, பாட்டி இன்ஜினியர் ஆக வேண்டும். நீ கணக்கு எடுத்துக் கொள் என்றனர். நீ டாக்டர் ஆக வேண்டும் குடும்பத்தில் ஒரு டாக்டராவது வேண்டாமா? நீ உயிரியல் எடு என்றார்கள் பெரியவரின் விருப்பப்படியே எடுத்தோம்" என்றனர் இவர்.

நான் கேட்கிறேன், "நல்லவேளை உன்பாட்டி உன்னை டென்சிங் மாதிரி இமயமலை ஏறச் சொல்லவில்லையே" என்று. - அழுதுகொண்டே சிரிக்கின்றார்கள் இந்த மாணவ மாணவியர். இவர்கள் நல்லவர்கள். அவரவர் விருப்பப்படி விட்டிருந்தால், இவர்கள் குமுதமாக, ரோஜா மலராக மலர்ந்திருப்பார்கள். ஆனால், ஆலமர மாக, தென்னை மரமாக வளரவேண்டியவரை, 21ஆம் நூற்றாண்டுக்கு நம்பிக்கையுடன் நடக்க வேண்டிய மாணவரினத்தை நம்பிக்கை யற்றிருப்பவராக நாம் மாற்றிக் கொண்டிருக் கிறோம்.

நில உலகத்திலிருந்து நிலா உலகத்துக்கு மற்றைய நாடுகள் சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில் நாம் பச்சைகுத்திக் கொண்டு பத்தாம் நூற்றாண்டை நோக்கிச் செல்கிறோம். வீதிதோறும் இரண்டொரு பள்ளி என்றான் பாரதி, ஆனால் வீதிதோறும் நாம் பார்ப்பது சினிமா கலாசாரத்தை வளர்க்கும் வீடியோ கடைகளையே.

சாதி மத பேதமே கூடாது என்று நம் குடியரசுத் திட்டமே திட்டவட்டமாகச் சட்ட வடிவில் கூறும்போது சாதிச்சங்கங்கள் பெருகி வருவது கண்கூடு. சினிமாப் படங்களில்கூட சாதிப் பெயர்கள் தலைதூக்கி வருவதைச் சுட்டிக்காட்டியுள்ள ஒரு பத்திரிகையாளர் இம்மாதிரிப் பெயர்களை அரசு தடுக்க வேண் டும் என்கிறார். "ஐயர் தி கிரேட்", "சின்னக் கவுண்டர்", "பெரிய கவுண்டர் பொண்ணு" இப்படி சாதிப்பெயர்கள் தந்தை பெரியார் பிறந்த நாட்டிலா என்று பழைய சுயமரியாதை வாதி ஒருவர் கேட்பது என் காதில் விழுகிறது.

இதற்கெல்லாம் என்ன காரணம்? தேர்வுக் குப் போகுமுன்னரே நாம் நம்பிக்கை இன்றிச் செல்கிறோம், ஏன்?

நீதிமேதை பொருளாதார வல்லுநர் நானி பல்கிவாலா அவர்கள் கூறுவார்கள்: "எதிலும் நமக்கு நம்பிக்கையில்லை, பரவாயில்லை. நம் மீதாவது நமக்கு நம்பிக்கை இருக்கிறதா? அதுவும் இல்லை. ஆனால், "எதிர்காலம் நம் கையில்" என்ற உண்மையை நம் இந்தியனை உணரச் செய்துவிட்டால் போதும். தூங்கிய புலி முழித்துக் கொண்டுவிடும். பின் அதன் பாய்ச் சலை யாரும் தடுக்க முடியாது:

இந்தியாவின் இன்றைய நிலை என்ன? தனி மனித வருமானத்தை கடந்த 42 ஆண்டுகால குடியரசு அனுபவத்தில், இருமடங்காக்கக்கூட நம்மால் முடியவில்லை. நம்மைப்போலவே அநேகமாகச் சமகாலத்தில் சுதந்திரம் பெற்ற ஹாங்காங், தென் கொரிய நாடுகள் தனிநபர் வருமானத்தை 40 ஆண்டுகளில் 30 மடங்கும், 15 மடங்கும் பெருக்கியுள்ளன.

ஹாங்காங்கை எடுத்துக் கொண்டால் சென்னை நகரத்தின் ஜனத்தொகை மட்டுமே கொண்டது. நமது சென்னை மாநகரத்தில் குப்பைமேடுகளைக் காண்கிறோம். சாணி



மலைகளும் உண்டு. நிரம்பி வழிவது நம் சாக்கடைகள்தான். கொசுவின் தொல்லை நம் மதிப்புக்குரிய மாண்புமிகு வீராங்கனை புரட்சித் தலைவியையும் விட்டு வைக்கவில்லை என்று செய்தித்தாள்கள் பெட்டிச் செய்திகள் போடுகின்றன. எங்கு பார்த்தாலும் சுவரொட்டிகள் சுத்தமான சுவரே இல்லை.

ஆனால், நமது ஜனத் தொகையையே கொண்ட ஹாங்காங் 42 ஆண்டு சுதந்திரத் திற்குப் பின்னர் தனிநபர் வருமானத்தை 30 மடங்கு அதிகரித்துள்ளது. இது ஓர் உலக சாதனை!

ஏன் இது நம்மால் முடியவில்லை? காரணம், நம் எதிர்காலம் யாருடைய கையிலோ இருக் கிறது என நாம் நினைக்கிறோம். நிச்சயமாக நம் கையில் இல்லை என நம்புகிறோம்.

நாம் கணக்கை விருப்பப் பாடமாக எடுப் பதில்கூட நமது விருப்பம் ஒன்றும் இல்லை. வேறு யாரோ விரும்புகிறார்கள், என நாம் உயிரியல் எடுக்கிறோம், - டாக்டர் ஆக வேண் டும் என அப்பா நினைப்பதனால். ஆனால் என்ன ஆகிறது? நம்மால் டாக்டராக முடிய வில்லை, கம்பவுண்டராகவாவது ஆவோமா? அதுவும் இல்லை, நூற்றுக்கு எட்டு மார்க் எடுத்து பேஷன்ட் (நோயாளி) ஆக மாறி விடுகிறோம்.

என் எதிர்காலத்தை நானே நிர்ணயித்துக் கொள்வேன் என்று நினைத்திருந்தால் இந்நிலை வருமா? சிந்தியுங்கள், சிந்திக்கும் சக்தி இருந்தால் அது செத்துப் பல நாளாகிவிட்டது என எண்ணுகிறேன்.

உலக மக்கள் தொகையில் 15 சதவிகிதம் பாரதமக்கள். ஆனால் உலக வருமான அள விலோ இந்தியாவின் பங்கு 1.5 சதவிகிதமே.

நமது நிர்வாகத்தைப் பற்றி வேடிக்கையாக பேரறிஞர் பல்கிவாலா கூறுகிறார்: " நம் நாட்டில் வேகமாக ஓடுவது நதிகள்தான். உண்மை வேதாந்திகள் நம் அதிகாரிகள்தான். இந்தப் பிறவியில் சாதிக்க முடியாதவற்றை அடுத்த பிறவியில் சாதிக்கலாமே" என் கிறார்கள் இவ்வதிகாரிகள். நமக்கு வம்பு ஏன் என விசுவாமித்திரர் பெற்ற குழந்தைகளாகக் கோப்புகளை இவர்கள் ஏற்கமாட்டார்கள். அவற்றைப் பிறரிடம் தள்ளிவிடுவதில் இவ ருக்கு இணை கிடையாது. திட்டங்களைப் பிறப்பிப்பார்கள். ஆனால், அவற்றை வளர்க்க மறுக்கும் பெரியவர்களைக் கொண்டதே நம் நிர்வாகத்துறை. இவர்களில் பலர் பாரத விருதுகள் ஆண்டாண்டு பெறுவார்கள் இந்தப் போக்கை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

காலத்தின் நேரத்தின் அவசரத்தையும் அவசியத்தையும் உணராத நம் நாட்டின் சிறிய (சென்னை போன்ற) ஹாங்காங்கில் நடக்கும் சர்வதேச வர்த்தகம், மாபெரும் பாரதத்தைப் போல் மூன்று மடங்கு கொண்டது. சினிமா சங்கதிகளையே தெரிந்து வைத்துள்ள தமிழனுக்கு இவையும் தெரியவேண்டும். ஹாங்காங்கின் பரப்பளவு இந்தியாவின் பரப்பளவில் ஒரு சதவிகிதமே. மக்கள் தொகையை ஒப்பிட்டால் 0.7 சதவிகிதமே. ஆனால் வளர்ச்சியோ மிக மிகப்பெரியது.

நாம் குடியரசானபோது சர்வதேச வர்த்தக அளவில் நாம் 16ஆவது இடத்தில் இருந்தோம் (1947). இன்று (1992) 43ஆவது இடத்தில் இருக்கிறோம். அன்று உலக வர்த்தக அளவில் நமக்கு 2.2 சதவிகிதம் இருந்தது. இன்று 0.44 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

"மக்கள் தொகைப் பெருக்கம் ஒன்றைத் தவிர வேறு சாதனையை நம்மால் செய்யமுடியவில்லை" என்கிறார் மேதை பல்கிவாலா. நம் நாட்டின் பிற்போக்கு பற்றி, வெளி நாட்டு நிருபர் ஒருவர் வேடிக்கையாகக் கூறுகிறார் "கல்" என்னும் ஹிந்திச் சொல் நேற்று நடந்ததையும் குறிக்கும் இன்று நடப்பதையும் சுட்டும். இது இருபொருள் கொண்டது. எனவே, நாம் காலம் கடந்தவர், காலத்தின் அருமை தெரியாதவர் என்று எள்ளி நகைக்கிறார் இவர். நேற்று அல்லது இன்று என்றால் எது முன்னேறும் என்கிறார்?

இவர் மேல் கோபம் கொண்டு என்ன பலன்? இன்னும் 60 சதவிகிதப் பள்ளிகளில் (பெண்கள் பள்ளி உள்பட) இந்தியாவில் கழிப்பிடங்கள் இல்லை என்ற உண்மையை மற்றவர் சொன்னால் நாம் கோபப்பட்டு என்ன பயன்? UNESCOவும் UNOவுமா நம் எதிர்காலத்தைச் சமைக்கும்? இவையா நம் பள்ளிகளில் கழிப்பிடங்களை அமைக்கும்? என்று நாம் நம் எதிர்காலம் நம் கையில் என்று உணருகிறோமோ, அன்று இந்தியா வேகமாக நடைபோடும். சீக்கிரத்தில் ஓட ஆரம்பிக்கும். நமக்கு ஒரு பி.டி., உஷா போதாது. அத்துணை இந்தியரும் இந்தத் தங்கமகள் போல் பறக்கவேண்டும். இதற்கு என்ன வழி? என்ன மருந்து? ஒரே ஒரு வழிதான். ஒரே ஒரு மாமருந்துதான்.

நம் எதிர்காலம் நம் கையில் என்ற நம்பிக்கை ஒன்றுதான் நம்மை உயர்த்தும். நம் எதிர்காலம் நம் மாமனார் கையில் என்று நினைத்து அவர் வாங்கிக் கொடுக்காத "ஸ்கூட்டருக்காக" மனைவியை எரித்தால், இந்த நெருப்புச் சுடரில் நம் வாழ்க்கை பிரகாசமாகிவிடுமா?

நாம் வாங்கினால் ஸ்கூட்டரில் போவோம், இல்லாவிட்டால் நல்ல நடை இருக்கவே இருக்கிறது. பல்லவன் இருக்கிறான் என்ற எண்ணம் வந்துவிட்டால், எதிர்காலம் நம் கையில் என்ற மந்திரம் நம் வாழ்க்கையின் அஸ்திவாரமாகிவிடும். பின்னர் கவலைகள் ஏது?

எங்கள் பேராசிரியர் அறிஞர் அ. சீனிவாச இராகவன் சொல்லுவார். இவர் அரிய ஆசிரியர், உண்மையிலேயே பேராசிரியர், பெருக்கு ஆசிரியரல்ல.

நம் மாணவர் பற்றிப்பேராசிரியர் அ.சீ.ரா அவர்கள் வேடிக்கை செய்வது வழக்கம். "தங்கள் மனைவியைக் கூடத் தேர்ந்தெடுக்க மறுக்கும் முதுகெலும்பற்ற என் இனிய மாணவர்களே" என்று ஒருமுறை இவர் ஒரு மாணவர் கூட்டத்தில் பேச ஆரம்பித்தார்.

இது எவ்வளவு உண்மை! இப்படி ஓர் அவல நிலை பாரதத்துக்கு வந்ததற்குக் காரணம் என்ன?

அரவிந்த மகான் கூறியபடி "நம் எதிர்காலம் நம் கையில்" என நாம் உணராதது. இரண்டாவது, எவரிடமிருந்தும் நாம் அறிவைப் பெற்றுக் கொள்ளாதது. ராபர்ட் புரூஸுக்கு வழி காட்டியது ஒரு சிலந்தி. சிலந்திதானே என்று சும்மா இருந்துவிடவில்லை புரூஸ். விஞ்ஞான மேதை சர். ஐசக் நியூட்டனுக்கு வழிகாட்டியது ஓர் ஆப்பிள் பழம். மகான் அரவிந்தர் ஓர் இமயமலை. குள்ள சாமியோ ஒரு பரங்கிமலை. இமயமலை பரங்கிமலையிடம் ஒரு வழியைக் காண்கிறது.

எனவே, எதிர்காலமா என் கவலை? அதை நானல்லவா சமைத்துக் கொள்ளவேண்டும். அறிவா? என்னைச் சுற்றிச் சுற்றிப் பரந்து கிடக்கிறது அது. நானல்லவா எடுத்துக் கொள்ள வேண்டும் என எண்ணிப் பார். அப்படி நீ செய்தால் வள்ளுவன் கூறியபடி விதி உன் முன் கைகட்டி நிற்கும்.

"பிளாட்பாரத்தில் நான் இருக்கிறேன். எனக்கு வேண்டிய இரயிலில் நான்தான் ஏற வேண்டும். பிறர் ஏற்றுவாரா என்னை?" என்றார் அமெரிக்க வள்ளல் கார்னெகி. குடிசையிலிருந்து மாளிகைக்குப் போந்த அமெரிக்க வள்ளல் கார்னெகியின் பாதை நம் பாதையாக இருக்கட்டும். "என் எதிர்காலம் என் கையில்" என்பதே அப்பாட்டு.

செவ்	புத சுக்	சூரி	கேது
	இம்மாத கிரகநிலை		
சனி			குரு
ராகு			

உங்கள் ராசி பலன்

பாலஜோசியர்
வித்வான் வே. லட்சுமணன்

14-5-92 முதல் 14-6-1992 வரை

கிரக மாறுதல்

20-5-1992 முதல் ரிஷப - சுக்கிரன் 23-5-1992 முதல் ரிஷப - புதன் 28-5-1992 முதல் சனி - வக்கிர ஆரம்பம் 6-6-1992 முதல் மேஷ - செவ்வாய் 6-6-1992 முதல் மிதுன - புதன் 14-6-1992 முதல் மிதுன - சுக்கிரன்.

14-5-1992 கிரக பாதசாரம்

சூரியன் - கிருத்திகை 2 சந்திரன் - சித்திரை 2 செவ்வாய் - உத்திரட்டாதி 3 புதன் - அசுவினி 4 குரு - மகம் 4 சுக்கிரன் - பரணி 3 சனி - அவிட்டம் 1 ராகு - மூலம் 3 கேது - திருவாதிரை 1

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் முடிய)

ஜன்ம ராசியில் உள்ள புதனும், சுக்கிரனும், 5இல் உள்ள குருவின் பார்வை பெற்று உலவுவதால் உங்கள் அறிவாற்றலும், தோற்றப்பொலிவும், செயல்திறமையும் பிரகாசிக்கும். பொருளாதார நிலை உயர்வடையும். எதிர்பாராத திடீர்ப் பொருள் வரவுக்கும் இடமுண்டு. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் தொடர்புடையவர்கள் அதிகம் ஆதாயம் கிடைக்கப் பெறுவார்கள். மக்கள் நலம் மகிழ்ச்சி தரும். மக்களால் அனுகூலத்திற்கும் இடமுண்டு. கணவன், மனைவியரிடையே களிப் புறவு கூடும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடை போடுவார்கள். கணிதம், விஞ்ஞானம், எழுத்து, வியாபாரம், இரசாயனம், மருத்துவம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை கிடைக்கப் பெறுவார்கள்.

கடுமையாக உழைத்துப் பாடுபடுபவர்களுக்கு இரட்டிப்பு ஆதாயம் கிடைத்துவரும். ராசிநாதன் விரயத்திலிருப்பதால் அவ்வப்போது சிறுசிறு இடையூறுகள் தலை காட்டும் என்றாலும் அவற்றைச் சமாளித்துவிடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் நலனில் அக்கறை தேவைப்படும். வீண்வழக்கு, வியாஜ்ஜியங்களில் ஈடுபடலாகாது. இயந்திரப்பணியாளர்கள், இஞ்சினீயர்கள், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் முன்னேற்றம் தடைப்படும். ஜூன் 6 ஆம் தேதி முதல் செவ்வாய் உங்கள் ஜன்ம ராசிக்கு இடம் மாறுவதால் சோதனைகளிலிருந்து மீண்டு வெளி வருவீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப காரியங்கள் நிகழ வாய்ப்புக் கூடிவரும். கேளிக்கை, உல்லாசங்களில் பங்கேற்கவும் செய்வீர்கள். அதனால் மனமகிழ்ச்சி கூடும். மே 14,15,19,21,23,27,28,29 ஜூன் 1,2,3,4,9,10,11 தேதிகள் விசேடமானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. ரிஷப, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : (கிருத்திகை 2ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2ஆம் பாதம் முடிய)

லாபஸ்தானத்தில் உள்ள செவ்வாய் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துவார். எதிர்ப்புக்களைக் கடந்து வாழ்க்கைப் பாதையில் வெற்றி நடை போடுவீர்கள். இயந்திரப் பணிகள் லாபம் தரும். செந்நிறப்பொருட்களால் வருவாய்க்கு இடம் உண்டு. கணவன், மனைவியரிடையே சீரான நிலைமை இருந்துவரும். உடன்பிறந்தவர்களால் ஓரிரு நன்மைகளை எதிர்பார்க்கலாம். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துக்களால் ஓரளவு ஆதாயம் கிடைத்துவரும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள்

சுபிட்சமான சூழ்நிலையைக் காண்பார்கள். 20ஆம் தேதி முதல் உடல் ஆரோக்கியம் சீர்பெறும். ஓரிரு எண்ணங்கள் ஈடேறவும் வழிபிறக்கும். கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் புதிய ஒப்பந்தங்கள் கைவரப் பெறுவார்கள். நூதன பொருட்சேர்க்கை நிகழும். 23ஆம் தேதியிலிருந்து வியாபாரிகளுக்கும், கணிதத்துறையாளர்களுக்கும் மந்தநிலை அகலும்.

மாணவர்கள் தங்கள் தகுதிக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர் களும் வரவேற்பு கூடப் பெறுவார்கள். குடும்பத்தில் சிறுசிறு பிரச்னைகள் அவ்வப்போது தலை தூக்கும். பக்குவத்தோடும், பொறுமையோடும் சமா ளிப்பது நல்லது. பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது அவசிய மாகும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. விஷ ஜந்துக்களால் ஆபத்துக்கு இடமுண்டு; எச்ச ரிக்கை. ஜூன் 6ஆம் தேதி முதல் எதிர்பாராத ஓரிரு செலவுகளைச் சந்திக்க வேண்டிவரும். பயணத் தின் போதும், இயந்திரங்களில் பணியாற்றும் போதும் பாதுகாப்பு அவசியமாகும். வீண் சண்டை, சச்சரவுகளில் பிரவேசிக்கலாகாது. கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. உடன்பிறந்தவர்களால் ஓரிரு உபத்திரவத்திற்கு ஆளாக நேரும். ரியல் எஸ் டேட் இனங்களில் அதிகம் நன்மையை எதிர்பார்க்க இயலாது. தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர் களும் பொறுப்புணர்ந்து காரியமாற்றுவது நல்லது. மே 14,15,16,18,23,27,28 ஜூன் 1,3,4,9,10,11,12,13 தேதி கள் சிறப்பானவை. தென்கிழக்குத் திசை அனுகூல மானது. மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6 ஆம் எண் அதிர்ஷ்டமானது.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3ஆம் பாதம் முடிய)

புதன், சுக்கிரன், செவ்வாய் ஆகியோரது பலம் காரணமாக உங்கள் அறிவாற்றலும், செயல் திறமையும் பிரகாசிக்கும். எடுத்த காரியத்தை இனிது நிறைவேற்றுவீர்கள். நூதன முயற்சிகள் கூடிவரும். வியாபாரம் அபிவிருத்தி அடையும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடை போடுவார்கள். மாணவர்களுக்கு மந்தநிலை அக லும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச் சொத்துகளின் சேர்க்கையோ, அல்லது அவற்றால் ஆதாயமோ பெற வாய்ப்புண்டு. சட்டம், காவல், இராணுவம், மின்சாரம், நெருப்பு போன்ற துறை களைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். இயந்திரப் பணிகள் ஆக்கம் தரும். மக்களால் அனு கூலத்திற்கு இடம் உண்டு. பொருளாதார நிலை ஏற்றம் பெறும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் வரவேற்பு கூடப் பெறு வார்கள். கணிதம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பாதையைக் காண்பார்கள்.

அரசு விவகாரங்களில் எதிர்பார்த்த பயனைப் பெறத் தடையிருந்து வரும். அரசியல்வாதிகள், பொதுநலப் பணியாளர்கள் ஆகியோர் புதிய கொள்கைகளை வெளியிட இந்த நேரம் சிறப்புடைய தாகாது. ஜன்ம ராசியில் கேதுவும், 8இல் சனியும், விரயத்தில் சூரியனும் சஞ்சரிப்பதால் உடல் ஆரோக்கியம் ஒரு நாள்போல் மறுநாளிராது. அலைச்சலும், உழைப்பும் கூடவே செய்யும். மனத்தில் அவ்வப்போது சிறுசிறு குழப்பங்கள் குடி கொள்ளும். பெரியவர்களை அணுகி, அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி நடப்பது நல்லது. குடும்பநலனில் அக்கறை செலுத்தினால் அமைதி காணமுடியும். 23ஆம் தேதியிலிருந்து ஜூன் 5ஆம் தேதி வரை வியாபாரிகள், மாணவர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் தங்கள் பொறுப்புகளைச் சரிவர ஆற்றி வருவது அவசியமாகும். அதன்பிறகு வெளிச்சம் தெரியவரும். தொழிலாளர்கள், உத்தியோகஸ் தர்கள் ஆகியோர் சிறுசிறு சங்கடங்களைச் சந்திக்க நேரும். தெய்வப்பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது நல்லது. மே 14,15,16,18,19,27,28,29 ஜூன் 2,3,4,5,9,10,11,12,13 தேதிகள் சிறப்பானவை. மீன, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். தென்புலம் நலம் தரும். 6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம் : (புனர்பூசம் 4ஆம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)

குரு 2இலும், சூரியன் 11இலும் சஞ்சரிப்பதன் காரணமாக உங்கள் குடும்பநிலையிலும், பொருளா தாரநிலையிலும் அபிவிருத்தி உண்டாகும். வாக்கு வன்மை காரணமாக மற்றையோரின் பாராட்டுக் களைப் பெறுவீர்கள். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் ஆதாயம் கொண்டுவரும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களுக்கும் இடமுண்டு. பயணத்தால் ஓர் எண்ணம் ஈடேறப் பெறுவீர்கள். நூதன நண்பர்களது சேர்க்கை நலம் உண்டாக்கும். பெரியவர்களும், தனவந்தர்களும் உதவ முன்வருவார்கள். பிறரால் உங்களுக்கும், உங்களால் மற்றையோருக்கும் நலங்கள் உண் டாகும். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பாதையைக் காண்பார்கள். அலுவலகங்களில் பணி புரிகிறவர்கள் பதவி உயர்வு, ஊதிய உயர்வு, இடமாற்றம் ஆகியவை கிடைக்கப் பெறுவார்கள்.

நிர்வாகத்துறையினருக்கு மதிப்பு உயரும். அர சியல்வாதிகளும், அரசுப்பணியாளர்களும், ஆசிரியர் களும், பேராசிரியர்களும், மதபோதகர்களும்

மேடைப்பிரசங்கிகளும் தங்கள் செல்வாக்கு உயரப் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் 20ஆம் தேதி முதல் செழிப்புப் பெறுவார்கள். ஜுன் 6ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் பெறுவதால் செய்தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். வேலையில்லாதவர்கள் தகுந்ததொரு வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். ஏற்கனவே வேலையில் உள்ளவர்களுக்கு நிலை உயரும். இயந்திரப் பணிகள் ஆக்கம் தரும். ரியல் எஸ்டேட் இனங்களால் அனுகூலமேற்படும். கணவன், மனைவியரிடையே இருந்துவந்த சலனங்கள் விலகும். திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். மே 14,15,16,18,19,21,23,27, 28,29 ஜுன் 1,2,4,5,9,10,11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்மேற்குத் திசைகள் நலம் தரும். சிம்ம, தனுசு, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,4,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் சூரியன் தசம கேந்திரத்தில் பலம் பெற்று உலவுவதால் உங்கள் ஆற்றல் பிரகாசிக்கும். எடுத்த காரியங்களை இனிது நிறைவேற்றி வருவீர்கள். அரசாங்கத் தொடர்பு ஆக்கம் தரும். அரசியல்வாதிகளும், அரசுப்பணியாளர்களும் செழிப்பான பாதையைக் காண்பார்கள். புதிய பொறுப்புக்கள் வந்துசேரும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். 6இல் உள்ள சனி சமூகநலப் பணிகளில் ஈடுபாட்டை உண்டுபண்ணுவார். அதன் மூலம் புகழ் பெறவும் முடியும். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் உழைப்பு வீண் போகாது. வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பம் உண்டாகும். சுக்கிர பலம் காரணமாகக் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். நல்ல தகவல் கிடைக்கப் பெறமுடியும். போட்டிப் பந்தயங்களில் அளவோடு வெற்றி காண வாய்ப்புண்டு. 8இல் செவ்வாய் இருப்பதால் எதிலும் எச்சரிக்கையுடனும், நிதானத்துடனும் ஈடுபடுவது அவசியமாகும். பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணியாற்றும்போதும் பாதுகாப்புத் தேவை. 20ஆம் தேதி முதல் வாழ்க்கைத் துணைவரின் நலனில் அக்கறை செலுத்திவருவது நல்லது. 23ஆம் தேதி முதல் வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கணிதத்துறையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் மந்தநிலை விலகப் பெறுவார்கள். குடும்பத்திலும் நற்காரியங்கள் நிகழ அடிகோலப்படும். ஜுன் 6ஆம் தேதி முதல் ரியல் எஸ்டேட் இனங்களால் அனுகூலம் உண்டாகும். புதிய பொருட்களின் சேர்க்கைக்கும் இடமுண்டு. பெற்றோர் நலம் சீர்பெறும். பெற்றோரால் ஓரிரு நன்மைகளையும் பெறமுடியும். குறிப்பாகத் தந்தை யார்ஜிதச் சொத்துக்களைப் பெற வாய்ப்புண்டாகும். 5இல் ராகு இருந்தாலும் குரு பார்வையால் மோசமான நிலை என்று ஏதும் உண்டாகிவிடாது. ஜுன் மாதத்தில் பொருளாதாரநிலையில் எதிர்பாராத ஒரு வளர்ச்சி உண்டாகும். ரேடியோ, வீடியோ, டி.வி., போன்ற நவீன விஞ்ஞானத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சம் காண்பார்கள். அலைச்சல் சற்று அதிகரிக்கவே செய்யும். மே 14,15,16,18, 19,21,23,29 ஜுன் 1,2,3,5,9,10,11,12,13 தேதிகள் சிறப்பானவை. கீழ்த்திசை அனுகூலமானது. மேஷ, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கன்னி : (உத்திரம் 2ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் முடிய)

புத, சுக்கிர பலம் காரணமாகச் சங்கடங்களைச் சமாளிக்கும் சக்தியைப் பெறுவீர்கள். குடும்பநலம் சீராக இருந்துவரும். பொருள் வரவு திருப்திதரும் என்றாலும் எதிர்பாராத திடீர்ச்செலவுகளும் ஏற்படும். சிக்கனத்தைக் கையாள்வது அவசியம். பேச்சுத்திறன் கூடியிருக்கும். கணிதம், விஞ்ஞானம், எழுத்து, வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி பெறுவார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். அலைச்சல் சற்றுக் கூடவே செய்யும். உடல் நலனில் அக்கறை செலுத்திவருவது நல்லது. ரியல் எஸ்டேட் இனங்களில் தற்சமயம் ஈடுபட வேண்டாம். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அதிகம் நன்மையை எதிர்பார்க்க இயலாது. பெற்றோரால் ஓரிரு சங்கடங்களைச் சந்திக்க வேண்டிவரும்.

28ஆம் தேதி முதல் சனி வக்கிரநிலை பெறுவதால் மக்களால் ஓரிரு தொல்லைகள் ஏற்படும். மனஅமைதிக் குறைபாடு ஏற்படவும் காரணம் உண்டு. குரு, சனிப் பிரீதியான காரியங்களில் ஈடுபட்டு வருவதன் மூலம் மனஅமைதி பெற வாய்ப்புண்டாகும். செவ்வாய் பலம் குறைந்திருப்பதால் பொறியியல் துறையாளர்கள் விழிப்புடன் காரியமாற்றுவது அவசியமாகும். வெளிநாட்டுத் தொடர்பால் அதிகம் நன்மைகளை எதிர்பார்க்க வேண்டாம். பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணியாற்றும்போதும் பாதுகாப்பு அவசியம். ஜுன் 6ஆம் தேதி முதல் உங்கள் ராசிநாதன் பலம் பெறுவதால் உங்கள் சுயபலம் மேலோங்கும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் வரவேற்பு கூடப் பெறுவார்கள். ஓரிரு எண்ணங்கள் ஈடேறவும் வழி பிறக்கும். எதிர்ப்புக்கள் என்பவை குறைவடையும். உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் நற்பலன்கள் கூடுவதற்கு இடமுண்டு. மே 14,15,16,18,19,21,23,27,28

ஜூன் 1,2,3,4,5,9,10,11,12,13 தேதிகள் சிறப்பானவை. ரிஷப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். வடக்கும், தென்கிழக்கும் அனுகூலமான திசைகளாகும். 5,6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

துலாம் : (சித்திரை 3ஆம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் முடிய)

4இல் சனியும், 8இல் சூரியனும் சஞ்சரிப்பதால் உங்கள் தேக ஆரோக்கியம் சீராக இராது. அலைச்சலும், உழைப்பும் கூடும். எடுத்த காரியத்தை நிறைவேற்றத் தடைகளும், குறுக்கீடுகளும் இருந்து வரும். தாய், தந்தையர் நலனில் அக்கறை தேவை. அரசாங்கத்தாரால் தொல்லைகளுக்கு ஆட்பட நேரும். மக்களால் ஓரிரு பிரச்னைகள் உருவாகும். கணவன், மனைவியரிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றும். குரு, செவ்வாய் ஆகியோருடைய பலம் காரணமாக மோசமான நிலை என்று ஏதும் உண்டாகிவிடாமல் காக்கப்படுவீர்கள். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமாகவும், மற்றையோரிடம் அன்புடன் பழகுவதன் மூலமாகவும் சங்கடங்களுக்கு ஆட்படாமல் தப்ப இயலும். நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் தங்கள் பொறுப்புகளைச் சரிவர ஆற்றிவருவது அவசியமாகும்.

அலுவலகங்களில் பணியாற்றுபவர்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உருவாகும். இயந்திரப் பணியாளர்களும், இஞ்சினீயர்களும் வெளிச்சம் காண்பார்கள். ரியல் எஸ்டேட் இனங்களால் ஓரளவு ஆதாயம் கிடைத்துவரும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சாதனை படைப்பார்கள். 20ஆம் தேதி முதல் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் மந்தநிலை அகலும். குடும்பத்திலும் குழப்பங்கள் விலகி, நல்ல சூழ்நிலை உதயமாகும். 23ஆம் தேதி முதல் கணிதம், விஞ்ஞானம், வியாபாரம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அபிவிருத்தி காண்பார்கள். தெய்வ பலம் காரணமாக ஓரிரு எண்ணங்கள் ஈடேறப் பெறுவீர்கள். நல்லவர்களின் தொடர்பால் நலம் உண்டாகும். எதிர்ப்புக்கள் என்பவை கட்டுக்குள் அடங்கியிருக்கும். மே 14,15,16,18,19,21,23,27,28,29 ஜூன் 3,4,5,9,10,11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத் திசை அனுகூலமானது. தனுசு, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,4,9 எண்கள் நலம் தரும்.

விருச்சிகம் : (விசாகம் 4ஆம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

கோசாரப்படி சனி ஒருவரே அனுகூலமான நிலையில் சஞ்சரிக்கிறார். புதபலமும் ஓரளவு இருக்கிறது. இதனால் உங்கள் பராக்கிரமம் ஓங்கும். எதிர்ப்புக்களைச் சமாளிக்கிற சக்தி பிறக்கும். தொழிலாளர்களும், விவசாயிகளும், பொதுநலப் பணியாளர்களும் சீரான வளர்ச்சியைப் பெற்று வருவார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை உதயமாகும். கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். கறுப்பு நிறப் பொருட்கள் லாபம் தரும். இரும்பு சம்பந்தப்பட்ட இனங்களால் பொருள் வருவாய்க்கு இடம் உண்டு. 2இல் உள்ள ராகுவும், 8இல் உள்ள கேதுவும் அவ்வப்போது சிறுசிறு இடையூறுகளை உண்டுபண்ணுவார்கள். குடும்பத்தில் குழப்பங்கள் தலைதூக்கும். பிற மொழி, மதக்காரர்களால் ஏமாற்றப்பட நேரலாம். எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை.

மக்களால் ஓரிரு சங்கடங்கள் உண்டாகும் என்றாலும் அதனைச் சமாளித்து விடுவீர்கள். கணவன், மனைவியரிடையே கருத்து மாறுபாடுகள் தோன்றும். கூட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவமாகப் பழகி வருவது நல்லது. பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது அவசியம். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும். உத்தியோகஸ்தர்கள் விரும்பத்தகாத இடமாற்றமோ, நிலைமாற்றமோ காண நேரும். 28ஆம் தேதி முதல் சனி வக்கிரநிலை பெறுவதால் ஓரிரு சங்கடங்கள் உருவாகும். ஜூன் 6ஆம் தேதி முதல் ராசிநாதன் செவ்வாய் பலம் பெறுவதால் பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சம் காண்பார்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்குத் தென்படும். கடன் உபத்திரவம் குறையும். எடுத்த காரியம் நிறைவேறவும் சந்தர்ப்பமுண்டு. மே 16,18,19,21,23,27,28,29 ஜூன் 1,4,5,9,10,11,12,13 தேதிகள் சிறப்பானவை. மேற்கும், வடக்கும் அனுகூலமான திசைகள் ஆகும். மகர, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம் முடிய)

குரு, சூரியன், சுக்கிரன் ஆகியோர் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதால் உங்கள் அறிவாற்றலும், தோற்றப்பொலிவும், நிர்வாகத்திறமையும் பளிச்சிடும். முக்கியஸ்தர்களது தொடர்பால் அனுகூலம் பெறுவீர்கள். பண நடமாட்டம் கூடும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் ஆதாயம் கொண்டுவரும். பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உருவாகும். கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். தெய்வப்

பணிகளில் ஈடுபாடு கூடும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச் சொத்துக்களால் ஆதாயத்திற்கு இடம் உண்டு. வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். தருமப்பணிகளில் ஈடுபட்டு மதிப்பு உயரப் பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். அரசியல்வாதிகளும், அரசுப் பணியாளர்களும் செழிப்பான பாதையைக் காண்பார்கள்.

உற்றார், உறவினர்கள், நண்பர்களால் உங்களுக்கும், உங்களால் அவர்களுக்கும் நலன்கள் உண்டாகும். அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் நீண்ட நாளைய எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். மேலதிகாரிகளின் பாராட்டுக்களுக்கும் உரியவர்களாக முடியும். ரேடியோ, வீடியோ, டி.வி., போன்ற நவீன விஞ்ஞானத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்புண்டாகும். மருத்துவர்கள் பாராட்டப்படுவார்கள். இரசாயனம், நிர்வாகம், அரசாங்கம் ஆகிய இனங்களில் தொடர்புள்ளவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். 2இல் சனியும், 5இல் செவ்வாயும், 7இல் கேதுவும் சஞ்சரிப்பதால் பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. எக்காரியத்திலும் பதற்றத்திற்கு இடம் தராமல் பொறுமையோடும், பக்குவத்தோடும் ஈடுபடுவது நல்லது. 20ஆம் தேதி முதல் கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் அடக்கத்துடன் இருப்பது அவசியம். 23ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு வெளிச்சம் தெரியவரும். ஜூன் 6ஆம் தேதி முதல் ஓரிரு அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடி வரும். எண்ணங்களில் மலர்ச்சி உண்டாகும். மே 14,15,16, 19,21,23,27,28,29 ஜூன் 1,2,8,9,10,11,12 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத் திசை அனுகூலமானது. 1, 3 எண்கள் அதிர்ஷ்டமானவை. மேஷ, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள்.

மகரம் : (உத்திராடம் 2ஆம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் முடிய)

ஜன்மச் சனி, அஷ்டம குரு என்றாலும் செவ்வாய், புதன், சுக்கிரன் ஆகியோரது பலம் காரணமாக உங்கள் எண்ணங்களில் ஒன்றிரண்டு இப்போது ஈடேறும். துணிவோடும், தன்னம்பிக்கையோடும் செயற்கரிய காரியங்களில் ஈடுபட்டு வெற்றி வாய்ப்பைப் பெறுவீர்கள். நண்பர்கள், உற்றார், உறவினர்கள் ஆகியோரது சேர்க்கை மனத்திற்கு மகிழ்ச்சியூட்டும். பொறியியல் சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு ஏற்படும். புதிய ஆடை, அணி

மணிகள், அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றின் சேர்க்கை நிகழும். ரியல் எஸ்டேட் இனங்களால் ஆதாயத்திற்கு இடம் உண்டு. குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். ஏற்கனவே திருமணம் ஆனவர்களுக்கு இல்லற வாழ்வு திருப்திகரமாக அமையும். பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உருவாகும்.

செய்தொழிலில் மாமூலான வளர்ச்சிக்கு யாதொரு குறுக்கீடும் இராது. நூதன முயற்சிகளில் தற்சமயம் ஈடுபடவேண்டாம். மக்கள் நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். உடன்பிறந்தவர்களால் ஓரிரு பிரச்னைகளுக்கு உள்ளாக நேரலாம். வெளிநாட்டுத் தொடர்பு அளவோடு நலம் தரும். உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் முன்னேற்றம் காண அரும்பாடு பட வேண்டிவரும். 28ஆம் தேதி முதல் ராசிநாதன் வக்கிரநிலை பெறுவதால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். சிறுசிறு இடையூறுகள் அவ்வப்போது ஏற்படவும் கூடும். ஜூன் 6ஆம் தேதி முதல் எதிலும் பக்குவத்துடனும், பொறுமையுடனும் ஈடுபடுவது அவசியமாகும். அலட்சியப்போக்கு என்பது அடியோடு கூடாது. எழுத்தாளர்களும், வியாபாரிகளும், பத்திரிகையாளர்களும் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். நல்லவர்களின் நேசத்தை வலுப்படுத்திக் கொள்வதன் மூலமாகவும், தெய்வப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதன் மூலமாகவும் சங்கடங்களிலிருந்து விடுபடமுடியும். மே 14,15,16,18,23,27,28,29 ஜூன் 1,2,3,4,9,10,11,12,13 தேதிகள் அனுகூலமானவை. தென்கிழக்கும், வடக்கும் அனுகூலமான திசைகளாகும். மேஷ, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கும்பம் :(அவிட்டம் 3ஆம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் விரயத்திலும், செவ்வாய் 2இலும் இருந்தாலும்கூட உங்கள் ஜன்ம ராசியை வியாழன் நோக்குவதால் தேக ஆரோக்கியம், கௌரவம், அந்தஸ்து, புகழ், வாழ்க்கை வசதிகள் யாவும் சீராகவே இருந்துவரும். முக்கியஸ்தர்களின் தொடர்பால் அனுகூலம் பெறுவீர்கள். கூட்டுத் தொழில் அபிவிருத்தி அடையும். கணவன், மனைவியரிடையே சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டாலும் அவை விலகவும் கூடும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். நல்ல தகவல் ஒன்று வந்துசேரும். பயணத்தால் அனுகூலத்திற்கு இடமுண்டு என்றாலும் பாதுகாப்புடன் மேற்கொள்வது நல்லது.

பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்காமல் இருந்தால் குடும்பத்திலும், வெளிவட்டாரத்திலும் உங்கள் செல்வாக்கைக் காப்பாற்றிக் கொள்ளலாம். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக விளங்குவார்கள். நிலபுலங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்துவரும். 20ஆம் தேதி முதல் கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். நூதனப் பொருட்சேர்க்கை நிகழும். மாணவர்கள் மந்த நிலை விலகப் பெறுவார்கள். 23ஆம் தேதியிலிருந்து வியாபாரிகளுக்குச் செழிப்பான சூழ்நிலை உருவாகும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் லாபம் தரும். நிறுவன, நிர்வாகத்துறையினருக்கு உற்சாகம் கூடும். பெண்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உதயமாகும். ஜூன் 6 ஆம் தேதி முதல் மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். எடுத்த காரியத்தை இனிது நிறைவேற்றுவீர்கள். இயந்திரப் பணிகள் ஆக்கம் தரும். ஓரிரு எண்ணங்கள் ஈடேறும். மே 14,15,16,18,19,21,27,28,29 ஜூன் 1,2,3,4,5,11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. ரிஷப, சிம்ம, தனுசு ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,4,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் :(பூரட்டாதி 4ஆம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய)

நல்லதும், நல்லவை அல்லாததுமாகப் பலன்கள் ஏற்படும் கால கட்டமிது. ஜன்மத்தில் செவ்வாயும், 6இல் குருவும் உலவுவதால் உடல் நலம் சாதாரணமாகவே காணப்படும். எக்காரியத்திலும் நிதானத்துடனும், பொறுமையுடனும் ஈடுபடுவது நல்லது. அலட்சியப்போக்கு என்பது அடியோடு கூடாது. பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணியாற்றும்போதும் பாதுகாப்புத் தேவை. அலுவலகங்களில் பணியாற்றுபவர்களுக்கு விசேடமான வளர்ச்சி இராது என்றாலும் மாமூலான நிலைமை பாதிக்கப்படாது. வியாபாரிகள் அளவோடு வளர்ச்சி பெறுவார்கள். குடும்பநலம் சீராகவே இருந்து வரும். கலைத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு உன்னதமான நேரமிது. தொழிலாளர்கள், விவசாயிகள், அரசுப்பணியாளர்கள், அச்சகத்தில் பணியாற்றுபவர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான சூழ்நிலை உருவாகும். அரசாங்கத்தாரால் எதிர்பார்த்திருந்த ஓரிரு காரியங்கள் ஈடேறும்.

கறுப்பு நிறப்பொருட்கள் ஆதாயம் கொண்டு வரும். வெளிநாட்டுத் தொடர்பால் ஓரளவு அனுகூலம் உண்டாகும். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். பெண்களுக்கு உற்சாகம் கூடும். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அனுகூலத்திற்கு இடமுண்டு. ஏற்றுமதி, இறக்குமதி இனங்கள் ஆக்கம் தரும். போக்குவரத்துச் சாதனங்கள், தோல் பொருட்கள் ஆகியவை ஆதாயம் கொண்டுவரும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் வரவேற்பு கூடப் பெறுவார்கள். 20ஆம் தேதிக்குப் பிறகு நல்ல தகவல் வந்துசேரும். 23ஆம் தேதி முதல் ஜூன் 5ஆம் தேதி வரை கணிதம், விஞ்ஞானம், வியாபாரம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. 6ஆம் தேதி முதல் சங்கடங்கள் அகன்று நல்ல சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழ வாய்ப்புண்டு. மாணவர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். மே 18,19,21,23,27,28,29 ஜூன் 1,2,3,4,5,9,10,13 தேதிகள் அனுகூலமானவை. கிழக்கு, மேற்குத்திசைகள் அனுகூலமானவை. 1,4,6,8 எண்கள் அதிர்ஷ்டமானவை. மேஷ, தனுசு, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள்.

ஃ

6

"தலைவர் நேதாஜிக்கு ஜே... நேதாஜிக்கு ஜே... இந்திய தேசியப் படை வெல்க... வாழ்க..., வாழ்க... தலைவர் நேதாஜிக்கு ஜே..."

தறிக்குழியில் கட்டை மிதித்து குஞ்சத்தை இழுத்துக் கொண்டிருந்த ராஜப்பா ஜன்னலின் வழியாக வெளியே பார்வையைத் திருப்பினார். வாலிபர்களின் கூட்டம் கையில் கொடிகளைப் பிடித்துக் கொண்டு தோள்களில் பசுமைகளைச் சுமந்துக் கொண்டு மிகவும் ஆக்ரோஷமான குரலில் கோஷங்களை எழுப்பிக் கொண்டு சாரி சாரியாக அணிவகுப்பு குலையாமல் சென்று கொண்டிருந்தது.

கூட்டத்தின் முதல் மனிதரின் கையில் நேதாஜியின் உருவம் பதித்த கொடி பறந்து கொண்டிருக்க கூட்டத்துக்குத் தலைவன் போல தன் தம்பி போய்க் கொண்டிருப்பதை நன்றாகவே அவரால் பார்த்துக் கொண்டிருக்க முடிந்தது. தட்டுமுட்டுச் சாமான்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்த ராஜம் புறக்கடைப் பக்கத்தில் இருந்து வெளியே வந்து முந்தியில் கையைத் துடைத்தபடி வெளியே பார்க்கவும், சமையல் வேலை செய்து கொண்டிருந்த சாந்தியும் அவசர அவசரமாய் வெளியே வந்து பார்த்துவிட்டு, பொங்கி வந்த அழுகையை அடக்கமுடியாமல் அக்காவின் பக்கம் வந்து விம்மி விம்மி அழவும் சரியாய் இருந்தது. சாந்தியின் தலையைக் கோதிவிட்டு விட்டு மௌனமாய் ராஜப்பா இருந்த பக்கம் பார்வையைச் செலுத்தும்போது,

ராஜப்பா வாசலுக்கு வெளியே வந்து நின்று கூட்டத்தைப் பார்த்தார்.

வீதியின் இரண்டு பக்கத்திலும் ஆண்களும் பெண்களுமாய் ஜனங்கள் வேடிக்கை பார்க்கத் திரண்டு நின்றிருந்தனர்.

ஜனங்களில் சிலர் ராஜப்பா நின்றிருந்த வீட்டைப் பார்த்து ஏதோ கசமுசா என்று பேசுவது போலிருந்தது.

ராஜப்பா அவர்களைச் சற்று உன்னிப்பாகவே பார்த்தபோது ஊர்வலம் கடந்து சென்றதும் அவர்கள் ஏனோ தானோ என்று பேசிய வார்த்தைகளில் சில காதில் முட்டி மோதி மறைந்தன.

பெண்கள் கூடச் சிலர் தங்கள் அனுதாபங்களைச் சொல்லாமல் சொல்லியது போலிருந்தது, தன் தம்பியின் மனைவி சாந்தியைப் பற்றி. மனம் இருப்புக் கொள்ளாமல் தறிக்குழியில் இறங்கி மறுபடியும் தறிக் குஞ்சத்தை இழுத்தார். வெளியில் பேசியவர்களின் வார்த்தைகள் நாடாநாழி மோதும் சத்தத்தைச் சிதற அடித்தன.

காதில் விழுந்த வார்த்தைகளில் பலவற்றில் உண்மைகள் இருந்தாலும் அவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியத்தில் தான் இப்போது இல்லை என்று மட்டும் உணர்ந்து கொண்டார். இங்கு நடைபெறும் எதுவும் புதிதாய் திடீரென்று தோன்றி மனதைக் கதிகலங்கச் செய்யவில்லை என்பதால், மனசு ஆறுதலாக இருந்தது.



நால் மனிதர்கள்

சுஜாதா ஃபிலிம்ஸ் லிட்., நிறுவனமும், அமுதசுரபி வெளியீட்டாளர்கள் ஸ்ரீராம் டிரஸ்டும் இணைந்து நடத்திய போட்டியில் ரூ. 5,000 பரிசு பெற்ற நாவல்

பாப்ரியா

தம்பி களகின் பிடிவாதம் இப்போதா
நற்றா... பார்ப்பது. விளைந்த பின் அதை
ளைக்க முயல்வது எவ்வளவு ஆபத்து என்பது
தரிந்த விஷயம்தான் அவருக்கு. சேலைக்குப்
பாட்ட சாயத்தை மாத்தி அதுக்கு மேலே புதுச்
ாயத்தை நனைத்தால் 'மெருகு' வராது என்பது
தரியும் அவருக்கு.

தன்னுடைய தம்பியின் முடிவு தற்போதைக்கு
வனின் மனைவியைப் பொறுத்த விஷயம்
ன்று நினைக்கும்போதுதான் மனம் வருத்தப்
ட்டது.

"சாந்தி, எதுக்கும் கவலைப்படாதே, நாங்க
ல்லாம் இருக்கோம்லே.கொஞ்சநாள் பொறுத்
க்கம்மா. உன்னோட புருஷன் இருக்கான்
ல்லே, கொஞ்சம் பிடிவாதக்காரன்ம்மா.
வனோட வயசுலே எல்லாமே போறது
த்தியா. எல்லோருக்கும் பிரச்னைங்கதா
ருக்கு. இருந்தாலும் - உன்னோட நிலைமை
காஞ்சம் சங்கடமானதுதான். இல்லேன்னு
சால்லலே..."

"பாவா... எப்படிங்க அவரை விட்டிட்டு
ருக்க முடியும், எப்ப வர்றாரோ இனிமே...
ப்போ பாக்கப் போறேனோ... அக்கா.."

விம்மியழுத சாந்தியின் சங்கடத்தை அவ
ல் புரிந்துகொள்ள முடிந்தது. ராஜம் சாந்
யை அரவணைத்து அடுக்களைப் பக்கம்
ப்பிட்டுப் போனாள். பொழுது புதிதாக
ஷம் போட ஆரம்பிக்க, சிறுமலைக் காற்று
ன்று நின்று சொடக்குப் போட்டது.

7

எப்போதும் இல்லாத கூட்டம் ஆலமரத்துப்
ள்ளையார் மடத்தில் நிரம்பி வழிந்து
ாண்டிருந்தது.

வழக்கம்போல் கூடும் அமாவாசை பஞ்சா
த்துக் கூட்டம் என்றாலும், எப்போதும் போல்
ல்லாமல் இந்தமுறை இவ்வளவு கூட்டம் ஏன்
ர்ந்திருக்கிறது என்பதை நான்கு ஐந்து
ர்களுடன் மடத்தைப் பார்த்து வந்து கொண்
ருந்த ராஜப்பா வுக்கும் அவரது நெருங்கிய
நகிதர்கள் சிலருக்கு மட்டும்தான் தெரியும்.

அதுவுமில்லாமல் -

ஊரில் நடக்கின்ற சில முக்கியப் பிரச்னை
ளையும் அதைப் பற்றிய முடிவுகளையும்
ய்வதற்காக. இந்த முறை ஊர் ஜனங்கள் எந்தப் பகுதியில் இருந்தாலும், வெளியூர் எங்கும் போகாமல் பஞ்சாயத்துக் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்கள் பிராதுகளையும் ஆலோசனைகளையும் தரலாம் என்று 'தண்டோரா' போட்டிருந்ததால் ஜனங்கள் பலரும் ஒருவரையொருவர் சந்திக்கும்போது 'ஏதோ ஒரு முக்கியத்துவம்' இருப்பதாக இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று அபிப்பிராயம் பேசிக் கொள்ளப்பட்டதுமே,

மடத்தில் கூட்டம் கூடியதற்கும் காரணம்.

இதுவரை ஏதோ அபிப்பிராயங்களில் வித்தியாசமாய் போனவர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் அமைதியானார்கள். ராஜப்பா மடத்தில் திண்ணையில் ஏறி உட்கார்ந்து விட்டு சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு எல்லோருக்கும் கை கூப்பி வணக்கம் சொன்னபோது பஞ்சாயத்து சுறுசுறுப்பானது.

"ஊர் ஜனங்களே,பெரியவர்களே... இந்த பஞ்சாயத்துலே இதுவரைக்கும் நான் எத்தனையோ வழக்கைத் தீர்த்து வச்சிருக்கேன். உண்மையான விஷயங்களைச் சாட்சியாகவும் கூடவே உங்க நல்ல மனசுங்களோட ஒத்துழைப்பும் சேர்த்து. இதுக்கு முன்னாலே நான் தீத்துவந்த வம்பு வழக்குகளைப் பத்தியோ அதுக்கு நான் சொன்ன பரிகாரங்களையோ நீங்க யாரும் தப்புன்னு சொல்லலே. இன்னைக்குப் பொறுத்தவரை கொஞ்சம் வித்தியாசமா உங்ககிட்டே.நானே இந்தப்பஞ்சாயத்துலே ஒரு 'பிராது' தரப் போறேன் என் சார்பா. எனக்கு இந்த முறை நீங்களெல்லாம் சேந்து தீத்துத் தரணும்".

ராஜப்பா - அதுவும் பஞ்சாயத்துத் தலைவரே இப்படிப் புதிர்போட்டுப் பேச ஆரம்பித்ததும், கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

"இப்போதைக்கு.இந்தப்பஞ்சாயத்திலே யார் யார் எதை எதைப் பிராது தர்றீங்களோ கொடுங்க. என்னோட பிராது பத்தி இப்போ சொல்றேன். ஒருவேளை என்னோட 'பிராது' விஷயம் கொஞ்சம் நீண்டுட்டுப் போனா,உங்க எல்லாத்தோட சம்மதம் இருந்தா... அவசரமில்லா 'பிராதுங்களை' அடுத்த அமாவாசை கூட்டத்திலே வச்சிக்கலாம்னு நெனைக்கிறேன். என்ன சொல்றீங்க?"

"சரிங்க... தலைவர் சொன்னா சரிதான், முதல்லே நீங்க உங்க விஷயத்தைச் சொன்னா தான் எங்களுக்கெல்லாம் திருப்தியா இருக்கும்.

மத்ததைப் பத்தியெல்லாம் அப்புறமா பேசிக்கலாங்க."

"இப்போ என்ன சொல்லப் போறேன்னு நீங்க நெனைச்சிட்டு இருக்கீங்களோ எனக்குத் தெரியாது. ஆனா ஒண்ணு, நான் சொல்லப் போற ரெண்டு பிராதுலேயும், நானும் நீங்களும் சம்பந்தப்பட்டிருக்கோம். இதை மட்டும் மன சுலே நீங்க வச்சிட்டு எதையும் தீர்மானமா, நியாயமா பேசணும்ங்கறதை மட்டும் முன் கூட்டியே சொல்றேன். விஷயம் எதுவும் சரிவர புரிஞ்சுக்காமே மேலோட்டமாப் பேசினா அது உங்களுக்கும் நல்லது இல்லே எனக்கும் நல்லது இல்லே. சொல்லப் போனா இந்த ஊருக்கு நல்லது இல்லே.

"ஒன்னு என்னோட தம்பியினாலேதான் அவன் வயசு ஒத்த பசங்க எல்லாம் கெட்டுப் போயிட்டாங்கறது, எதனாலே இப்படிப்பேச்சு வருது? அவன் தலைவர் நேதாஜியோட படை யிலே சேரப் போறதாகவும், அதுக்காகவும் இளைஞர் படையைத் திரட்டிட்டு போனதுக் காகவும்தான்.

"ஒட்டு மொத்தமா தனிஆள் மேலே பழி போடறதுங்கறது அநியாயத்துக்கு எப்போதுமே கொஞ்சம் சந்தோஷமான விஷயம்தான்.

"இரண்டாவது,

"உங்களைப் பத்திய பிரச்னையிலு என்னைப் பத்திய பிரச்னையிலும், அதாவது நாம எல்லாருமே.என்னை இதிலே விட்டிருங் ஆனா முதலாளிட்ட நேரடியாகவே 'இடை தரகர்' கமிஷன் இல்லாமலே நான் பண வாங்கினாலும் உங்களுக்காகத்தான் இதை சொல்றேன். நமக்கு எதுக்கு ஊர்வம்பு. இப்படின்னு நெனைச்சிகிட்டுப் போயிறலா நான்.

"ஆனா, ஊர்லே பணக்காரப் பெரியவங்க என்னைவிட சகல சம்பத்துலேயும் செல்வா குள்ளவங்களை எல்லாம் விட்டிட்டு நீங்





என்மீது மதிப்பு வச்சி இந்த ஊரு பஞ்சாயத்துத் தலைவர் பதவியைக் கொடுத்திருக்கீங்க. ஊர் விவகாரங்கறது அடிதடி அதுஇதுன்னு மட்டும் பிராது வந்தா தீத்துக் கொடுக்கறதோடு மட்டு மில்ல; ஊர் ஜனங்களோட முன்னேற்றமான வாழ்க்கைக்கு தனக்குத் தெரிஞ்ச வழியையும் இருக்கற சிக்கலான பிரச்னையைத் தீத்துத் தரவும் தெரியணும்.

"இதுக்கு முன்னாலே, ஊர்ப் பிரச்னை கள்னு வரும் எதையும் பிராது மூலமாகப் பேசித் தீத்து வச்சிருக்கேன். இப்போ சொல்ற விஷயத் தைப் பத்தி நீங்க நெனைச்சிப் பாத்தீங்களா இல்லையாங்கறது எனக்குத் தெரியாது. உங்க கிட்ட சொல்லித்தான் ஆகணும்ங்கற கட்டாயம் மட்டும் எனக்குத் தோணுது. தேசவிடுதலைப் போராட்டம் காரணமாக நம்ப தொழில் முன்னைவிட இப்பவும் முடங்கிப் போயிருக் குன்னு முதலாளிங்க நாசுக்காகச் சொல்லிட்டு வந்தாங்க இல்லே. இது நமக்கும் தெரிஞ்ச விஷயம்தான். இப்போ உற்பத்தியாற சேலைங்க சரியா அழியறது இல்லே. இனிமே இப்படியேப் போனா ஜனங்களுக்கு 'பட்டு' கொடுக்கறதைக் கொஞ்சம் கொஞ்சம்மா நிறுத்திதா ஆகணும். வேறு வழியே இல் லேன்னு வேறே பேசிக்கிறாங்க.

"எல்லாத்தைவிடக் கொடுமை, நமக்கு பொழப்பு நடக்குதேன்னுட்டு, ஒவ்வொரு 'மாஸ் டர் வீவர்ங்ககிட்டேயும்' நாம அடிமைகளா இருக்கறது. இதைப் பத்தி நீங்க நெனச்சிப் பாத்தீங்களோ இல்லையோ, இனிமேலேயாவது இந்த விஷயத்துக்காக நீங்க எல்லாம் ஒண்ணு கூடி ஒரு தீர்மானம் போடணும்.

"நீங்க நெசவு செஞ்சி சேலையா தர்றீங்க ராத்திரி பகலுமா கஷ்டப்பட்டு. இதை நேரா நீங்களா முதலாளிங்ககிட்டே கொண்டு போயி கொடுத்து கூலி வாங்கறீங்களான்னா , இல்லே தானே!

"இன்னா இன்னா ரகம்... மல்லம்மா பார்டர், தாழம்பு கோர்வை, பட்டு மாமி - காவிரி கட்டம் - அஜந்தா பார்டர்னு ஆர்டர் கோடுத்துட்டு, சேலை நெய்யறதுக்குத் தேவையான பட்டு கலர் பட்டு - ஜண்டி ஜரிகைன்னு மாஸ்டர் வீவர்ங் கதா நம்மை ஏமாத்தறவங்க நம்மகிட்டே கொடுத்து முன் பணம் 'கூலி'யாகக் கொஞ்ச மும் கொடுத்துட்டு, குறிப்பிட்ட தேதியைச் சொல்லிச் சேலையை வாங்கிட்டுப் போயிட றாங்க. மீதிக்கூலி பணத்தைக்கூடத்தவணையா கொஞ்சம் கொஞ்சமா தர்றாங்க. ஆனா முத லாளிங்ககிட்டே இவங்க ஒட்டுமொத்தமா பணத்தை வாங்கிட்டு வந்து கமிஷனும் சேலைக்கு இவ்வளவுன்னு எடுத்துட்டு அவங்க ளோட சவுகரியத்துக்குத் தாறாங்களே கூலியை... இதை யாராவது உங்கள்ளே ஒருத் தரு தட்டி கேட்டிருப்பீங்களா இதுவரைக்கும்?"

கூட்டத்தில் முணுமுணுப்பு... எதையோ கேட்கக் கூடாத விஷயம் ஒன்றைக் கேட்டு விட்டது போலக்கூட்டத்தில் ஒருசிலர் காதைப் பொத்திக் கொண்டனர். வேறு சிலருக்கோ வியப்பு. முதலாளிகளின் எதிர்ப்மையும் தங்க ளுக்குப் படியளக்கும் 'மாஸ்டர் வீவர்களையும்' இப்படிப் பஞ்சாயத்துத் தலைவரே வெளிப் படையாகப் பேசியதை அவர்களால் புரிந்து கொள்ள முடியாதது போல, யாரும் எந்தவிதக் கருத்தையும் அவுங்களுக்கருகில் இருந்தவர் களிடம் விவாதித்துக் கொள்ளவில்லை.

ராஜப்பா பேசியதும் அந்த மடத்தில் ஏற்பட்ட அமைதி நிரந்தரமாயிருக்க முடியாது போலிருந்தது.

"என்னோட தம்பி மேலே பழியைப் போடறது இப்போ எனக்குப் பெரிசா தோணலை. தன்னோட கருத்தை மத்தவங்க மதிக்கணும்னு யாரு நெனைச்சாலும் சரி, அவங்களும் அதே மாதிரி மத்தவங்களோட கருத்துகளையும் மதிக் கத் தெரிஞ்சுக்கணும். என்னோட தம்பியை பின்பத்திப்போறவயசுப்பசங்கஎல்லாம் இங்கே இருந்தாதான் கெட்டுக் குட்டிச்சுவரு ஆகிவிடு வானுங்களா?

"நல்லா யோசிச்சுப் பாருங்க.குடிக்கறதுக்குக் கத்துக்கறதும், சீட்டாடுவதற்குக் கத்துக்கற துக்கும், அமாவாசையில்லாமே அதே மாதிரி வேறே நாளு வந்தாக்க திண்டுக்கல்லுக்கும் மதுரைக்கும் போய் ரெண்டாட்டம் மூணு

ஆட்டம்னு சினிமா பார்த்துட்டு வர்றதும்.... ஊதாரித்தனமா சோம்பேறிங்களா சுத்திட்டு...., இதெல்லாம் இந்த ஊர்லே இருக்கறதுனாலே தானே! போவட்டுமே, போய் பொறந்த மண்ணுக்கா போராடிட்டு வரட்டுமே. இங்கே இருந்து குண்டுச் சட்டிக்குள்ளே குதிரை ஓட்டற மாதிரி...., பெரியவங்க நாம செய்யறதே எல்லாத்தையுமே பாத்து பழகி...,கெட்டுப் போவறதுக்கு...., இந்த மாதிரிதா போவட்டுமே.

"இதுக்கு நீங்க இப்படிப் பேசுனீங்கன்னா....,வேணும்னா பாருங்க நமக்கு முன்னாலே, நம்மைப் பெத்தவங்க 'சேத்துவச்ச சொத்து'ன்னு பொல்லாத பொழப்புன்னு இதை வச்சிட்டு நெசஞ்சிட்டு பொழச்சிட்டு இருக்கோமே , இந்த நெசவுத்தொழிலு; நம்மோட சரி, இனிமே வர்ற தலைமுறைங்க எல்லாம் நிச்சயமா யாரும் தறிக்குழியிலே உக்காந்து காலம் போடப்போறது இல்லே. எனக்கு நல்லா மனசுக்குப் படுது. இதுக்குத்தா சொல்றே நம்மோட இந்தப்பொழப்பையும் மீறி சுயசம்பாத்தியம் பண்ற மாதிரி இருக்கணும்னா நம்ப கையிலே நாலுகாசு கண்டிப்பா வேணும். இதுக்கு என்ன செய்யறது அப்படிங்கற கேள்வி மனசுக்குள்ளே கேக்கறப்பதான் படுது.

"நம்ப சம்பாதிக்கற காசு நேரா நமக்
எந்தவிதப் பிடித்தமும் இல்லாமே கெடச்சி
சினா...., நம்மோட செலவுக்குப் போக மீதியி
சிறுவாடு மாதிரி சேத்து வச்சாலே நிச்சய
நம்மையுமறியாமலே கணிசமா சேந்துடும்.

"அதை வச்சித்தான், நம்ப வாரிசுங்களுக்
ஏதாச்சும் மாத்துவழி செய்யணும்" முக்கிய
படிப்பு.

"படிப்பு எதுக்கு...., நாலு சேலை நெசஞ்ச
போதும் கூலி வருது. வயிறு நெறைய சா
பிட்டுட்டு செத்துப் போகலாம்ங்கற குறுகி
புத்தி போகணும் நம்பகிட்டெ, என்ன சொ
நீங்க...?"

"சரிங்க பஞ்சாயத்து தலைவர் சொல்ற இ
விஷயங்க எல்லாம் ஒரு வகையிலே சரியா
மனசுக்குப் படுது."

"ஏங்க... தலைவரே எனக்குக்கொஞ்சம் ச
தேகம். அப்போ நம்பளோட போதும் இ
தொழிலு. இனிமே வரப்போற நம்ப புள்ளை
களுக்கு வேண்டாம்னு சொல்ற மாதிரியில்
இருக்கு.."

"இல்லே, நா அந்த அர்த்தத்திலே சொ
லலே. நம்பளோட இந்தத்தொழிலு நசி

போயிடக்கூடாதேன்னு அக்கரைப்பட்டுத்தான் சொல்றேன். இந்தத்தொழிலிலே இன்னமும் மாறுதல் வரும். சாமானுங்க, மிஷனுங்கன்னு எல்லாமே எல்லாத்தொழிலேயும்மாத்தம் வரும். நிச்சயமா. இதைப் பத்தியெல்லாம் தெரிஞ்சுக்கணும்னா... படிப்பு வேணும். பசங்களை நல்லா படிக்க வச்சா எதிர்காலத்திலே நமக்குத்தான் நல்லது. ஏதோ நம்ம காலந்தா இப்படிப் போயிடுச்சு. நம்ப புள்ளைங்களாச்சும் நல்லா இருக்க வேணாமா..., பசங்களை வெளியூருக்கு அனுப்பிப்படிச்சு ஆளாக்கறதுக்கெல்லாம் வசதி கண்டிப்பா வேணும்தா. இது எல்லாத்துக்கும் பணம்தான் முக்கியம், இல்லே, அதனாலே தா சொல்றேன்.

"இனிமே எக்காரணம் கொண்டும் உங்களையெல்லாம் ஆட்டிப்படைக்கிற இடைத் தரகுங்ககிட்டேயிருந்து விலகிக்குங்க. நீங்களே உங்க முதலாளிங்ககிட்டே போய் பட்டு – பாவுன்னு வாங்கிட்டு நெசவு பண்ணிக் கொடுத்துட்டு வர்ற பணத்தை தேவையானதுக்கு மட்டும் செலவு பண்ணிட்டு மீதம் சேத்து வக்கிறீங்க, ஆமா சொல்றதை நான் சொல்லிட்டேன். இப்போ பேசுவது எல்லாம் நம்ப எல்லாத்தோட பொழப்பையும் பத்தியது.

"உங்கள்ளே யாராச்சும் வேறே 'பிராது' கொடுக்கறதா இருந்தாலும் கொடுங்க பேசலாம், இல்லேன்னா இப்போதைக்குப்பஞ்சாயத்து இன்னிக்கு இத்தோட போதும்... என்ன சொல்றீங்க?"

தன் முகத்தையும் தான் பேசிய வார்த்தைகளையும் மிகவுமே கவனமாக ஜனங்கள் கேட்டுக் கொண்டிருப்பதாய் மனதுக்கு பட்டது ராஜப்பாவிற்கு. சில கணங்கள், நேரம் இருட்டைக் கொண்டுவந்துக் கொண்டிருந்தது. ஜனங்களில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர யாரும் பேசவில்லை. பேசுவதற்கு முயற்சி செய்வதாகவும் படவில்லை. தோளில் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு 'வணக்கம்' சொல்லிவிட்டுப் படியிறங்கினார் ராஜப்பா.

—தொடரும்

கங்காபுரிக் காவலன்

21. கனவு பலித்தது

எங்கோ கீழ்த் திசையில் செங்கோளம் சுழன்றவாறு எட்டிப் பார்த்தது. பொன்னவனின் தங்கக் கரங்கள் நிலமங்கையைத் தட்டி எழுப்ப விரைந்தன.

அந்தக் காட்டுப் பகுதியில் இருளுக்கு உதவியாக அடர்ந்து உயர்ந்து வளர்ந்திருந்த மரங்களினால் மேலும் இருளாட்சியை விலக்கக் கதிரவன் முனைந்து கொண்டிருந்தான்.

இளஞ் சிற்பி மாணிக்கசேகரன், அருகே சலசலத்து ஓடிக்கொண்டிருந்த ஓடையில் குளித்து, திருநீறணிந்து மேடைபோல் அமைந்திருந்த பாறைமீது அமர்ந்து தியானம் செய்ய வந்து விட்டான்.

பிறகு, அவன் பணி தொடங்கிவிடும். சிற்பப் பணிக்கு உதவியாகச் சிறு சிறு பாறைகள் அங்கே கிடந்தன. அவற்றை மிகுந்த பிரயாசையுடன் கொண்டு சேர்த்திருந்தனர்.

மலைக் குழந்தைகள் அவன் பார்வையில் உயிர் பெற்றன. மனக் கண்ணின் மூலம் அவை இதயத்தில் பலவித வடிவங்களாகக் காட்சியளித்தன.

அந்தக் கானகப் பகுதிக்கு அவன் வந்து பல நாள்கள் ஆகிவிட்டன. இளவரசராயிருந்த இராசேந்திரனின் இலட்சியக் கனவைப் பூர்த்தி செய்ய அவன் அங்கே வந்து சேர்ந்தான். சிற்பங்களைப் படைத்து ஒரு கலைக் கூடத்தை உருவாக்க வேண்டும் என்ற இளவரசர் எண்ணத்தை நிறைவேற்ற அவன் பொறுப்பேற்றுக் கொண்டான்.

அடர்ந்த கானகத்தில் முன்பே கலைத் தொண்டாற்றி வரும் மாதரசி அவனுக்கு உற்சாகம் அளித்து வந்தாள். எப்போதாவது அவள் அங்கே வருவாள். அவள் கவனமெல்லாம் நாட்டியக் கலை வளர்ச்சியில் இருந்தது.

பாதச் சலங்கை ஒலியுடன் பேசும் பொற் சித்திரங்களாக இளம் பெண்கள் ஆடும் அதிசயத்தில் அவன் ஆழ்ந்திருக்கிறான். அழகுப் பெண்களை எழில் சிற்பங்களாக்க வேண்டும் என்ற ஆவல் அவன் உள்ளத்தில் மோதிக்கொண்டிருந்தது. சிறிது சிறிதாக அவன் பணி வளர்ந்தது.

மாணிக்கசேகரனுக்கு ஒரே ஓர் உதவியாளன்தான். அவனைப் போன்றே அந்த இளைஞனும் சிற்பக் கலையில் ஆர்வங் கொண்டவன். ஈடுபாடில்லாமல் கலையில் வெற்றியடைய முடியாது என்ற நம்பிக்கை உடையவன். ஆனால் அந்த இளைஞனுடன் சமமாக அமர்ந்து பேசும் ஆர்வம் அவனுக்கு ஏற்படுவதில்லை. நாளின் பெரும் போது மௌனமாகவே கழியும். மனத்தை அலைபாயச் செய்யும் நிகழ்ச்சிகள் பல தோன்றும்.

குமுதவல்லியின் நினைவு ஏற்படாமல் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். இனிய நினைவு ஏற்படாமல் மனத்தை அங்குசம் கொண்டு அடக்கிக் கொள்வது இலேசானது அன்று. ஆனால் அவன் ஏற்றுள்ள பணிக்கு வைராக்கியம், திடமான சிந்தனை தேவைப்பட்டன. உளி பட்டவுடன் பாறையின் சிதறல்கள் சிதறி அழகிய சிற்பம் உருவாக உதவும். இங்கோ, மனச் சஞ்சலம் சிதறும் எண்ணங்கள் அவன் கலை உணர்வைச் சிதைக்கும். அதனால் உயிருக்குயிரான குமுதத்தின் நினைவு எழாமல் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான்.

அன்று அவனால் பழைய நிகழ்ச்சிகளை நினைக்காமல் இருக்க முடியவில்லை. சோழ நாட்டிற்குச் செல்லும் தன் முடிவை அவன் குமுதத்திடம் தெரிவித்ததும், மதுரையைவிட்டுத் தன்னால் வர இயலாது என்று அவள் மறுத்துப் பேசியதும், ஒரு நாள் சொல்லிக் கொள்ளாமல் மதுரையினின்று புறப்பட்டதையும், விராலி மலையில் சித்தரைச் சந்தித்ததையும் நினைவு படுத்திக் கொண்டான். அழகிய மயிலை

விக்கிரமன்

அவன் அணைத்து மகிழ்ந்ததை நினைவு படுத்திக் கொண்டான். சித்தரைச் சந்தித்ததை நினைவு படுத்திக் கொண்ட போது அவன் உடல் சிலிர்த்தது. அவருடன் ஏரியில் நீந்தியதையும், கிராமம் ஒன்றிற்குச் சென்றதையும், இளவரசரிடம் அவர் தன்னை அறிமுகப்படுத்தியதையும், இளவரசர் கட்டளைப்படி இந்தக் காட்டுப் பகுதியில் சிற்பக் கலையை ஆராதிக்கத் தொடங்கியதையும் அவன் நினைவு படுத்திக் கொண்டான்.

மதுரையில் குமுதத்தைத் தனியே விட்டு வந்ததை எண்ணும்போது வருத்தமாக இருந்தது. குமுதம் இப்போது எங்கே இருக்கிறாள்; என்னைத் தேடுகிறாளா; நினைவில் கொண்டிருக்கிறாளா என்றெல்லாம் அவன் சிந்திக்கும்போது அவனுக்கு உற்சாகம் குறைந்தது.

அவன் மனத்தில் இதுவரையில் குமுதத்தின் நினைவு ஏற்படாமல் இருந்ததற்கு வீரமாதேவியும் ஒரு காரணம்.

அந்த வனப்பகுதியில் அவள் வந்து, மாணிக்கசேகரன் சிற்பப் பணி செய்யும் இடத்திற்கு அவள் வந்ததிலிருந்து நிலைமை மாறியது. மாணிக்கசேகரன் குமுதத்தைப் பற்றி நினைப்பதை மறந்தான்.

நாள்தோறும் இளங்காலைப் போதில் வீரமாதேவி அங்கு வருவதும், மாணிக்க சேகரன் சிற்பம் படைக்கும் நேர்த்தியைக் கண்டு வியப்பதும், அவனிடம் சிற்பம் சித்திரக் கலைகளைப் பற்றிப் பேசுவதும் அவனுக்குப் புத்துணர்வை அளித்தன.

அவள் யார், காலையில் மட்டும் வந்து உரையாடிச் செல்கிறாளே, நாள் முழுமையும் அவனுடனேயே இருந்து கலைத் தொடர்பாகப் பேசிக் கொண்டிருந்தால் எவ்வளவு புத்துணர்வாக இருக்கும் என எண்ணினான்.

குமுதத்தையும் - வீரமாதேவியையும் மனத்திற்குள் ஒப்பிட்டு ரசித்து நேரத்தைக் கழிப்பான். அதுபோன்ற நேரங்களில் விழிகளை மூடியவாறு ரசித்து மகிழும்போது, அவனுடைய உதவியாளன் இளஞ் சிற்பி, தன் குரு மாணிக்கசேகரன் தியானத்தில்



ஆழ்ந்திருப்பதாக நினைத்து அவனை நெருங்காமல் வேறு வேலையில் ஈடுபடு வான்.


தன் அகன்ற விழிகளால், மாணிக்க சேகரன் கல்லில் கவிதை வடிப்பதை ரசிப்பாள் வீரமாதேவி.

வீரமாதேவியைப் பற்றி மாணிக்க சேகரன் அறிந்து கொண்ட பிறகு அவளிடம் அவனது மதிப்பு அதிகமாகியது. அவன் மனச் சஞ்சலம் தீர்ந்துவிட்டது. ஓர் இளவரசி தன் கலைப் பணிக்கு உறு துணையாக இருப்பதை உணரும்போது புதிய உற்சாகம் ஏற்பட்டது.

வீரமாதேவியின் வடிவழகை மனக்கண் முன் நிறுத்திக் கொள்வான். விழிகள், இதழ்கள், நாசி, முகம், தோள்கள் என ஒவ்வோர் அங்கமாக மனத்தில் கோட்டுச் சித்திரம் வரைவான்.

பாறையின் மீது அமர்ந்து, தன் மனத்தைப் புதுவிதத் தியானத்தில் லயிக்க விருந்த ஒரு நாள் காலை வீரமாதேவி அங்கு வந்தாள்.

விழிகளை மூடியவாறு அவன் அமர்ந் திருப்பதும், அவன் மனத்தில் எழும் எண்ணங்களுக்கேற்ப அவன் இதழ்களில் மெல்லிய நகை மின்னல் கீற்றுப்போல் தோன்றுவதை வீரமாதேவி சற்று நேரம் நின்று ரசித்துக் கொண்டிருந்தாள்.



பிறந்துச் சில நாள்களே ஆன பச்சிளங் குழந்தை ஆழ்ந்த நித்திரையிலிருக்கும்போது கனவுகண்டு சற்றே இதழ் விரித்துச் சிரிப்பதுபோல் இருந்தது.

தன் அருகே இளவரசி வந்து நிற்ப தறிந்து திடுக்கிட்டு எழுந்தான் மாணிக்க சேகரன்.

"அமைதியான தியான நிலையைக் கலைத்துவிட்டேனா?" -வீரமாதேவி நகைத்த வாறு கேட்டாள்.

"கலைக்கவில்லை. தியானத்தின் பலனே எனக்குக் கிடைத்துவிட்ட மகிழ்ச்சி".

"தியானத்தின் பலனா?" - வீரமாதேவி வியப்புடன் கேட்டாள்.

"ஆமாம் தேவி, இரு நாள்களாகத் தங்களைக் காணவில்லையே என்று வேதனையடைந்தேன். சிற்றுளி உறங்கு கிறது. என் கரங்களில் சோம்பல் புகுந்து விட்டது. உள்ளத்தில் சோர்வு குடிகொண்டு விட்டது. பழைய நினைவுகள் மீண்டும் தலை தூக்கி என்னைச் சோகக் கடலில் ஆழ்த்திவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டு விட்டது. நல்லவேளை தாங்கள் வந்தீர்கள்".

மாணிக்கசேகரனின் பேச்சில் எந்த விதக் கள்ளமும் கபடமுமில்லை என்பதை வீரமாதேவி புரிந்து கொண்டாள். அவன் பேச்சில் வீண் புகழ்ச்சி இல்லை என்பதையும் புரிந்துகொண்ட வீரமாதேவி, மெல்லச் சிரித்தவாறு, "சிற்பியாரே, அடுத்து உங்கள் கைவண்ணத்தில் உயிர் பெற்று எழப்போகும் சிற்பம் எந்தத் தெய்வத்தின் திரு உருவமாக இருக்கும் என்ற அவா என் உள்ளத்தில் இருநாள் களாகத் ததும்பி நிற்கிறது" என்றாள்.

மாணிக்கசேகரன் பரவசத்துடன் வீரமா தேவியை நோக்கி, "தேவி, நான் ஓர் எளிய சிற்பி. இந்த நாட்டுச் சக்ரவர்த்தி இரா சேந்திர சோழரின் அருள் பார்வையால் உருவாக்கப்பட்டவன். நீங்கள் இந்த நாட்டுப் பேரரசி. என்னைப் பெயர் சொல்லி அழைக்கலாம். நீ என்று உரிமையுடன் கூப்பிட்டால் எனக்கேற்படும் பெருமை 'நீங்கள்' என்றழைக்கப்படும்போது ஏற் படுவதில்லை" என்றான்.

வீரமாதேவி ஒருகணம் திகைத்தாள். மாணிக்கசேகரன் என்ன சொல்கிறான்? இளவரசர் இராசேந்திர சோழர் இந்த நாட்டுச் சக்ரவர்த்தியா? நான் இந்த நாட்டுப் பேரரசியா? புகழ்வதற்கும் ஓர் எல்லை வேண்டாமா?

"மாணிக்கசேகரன் என்றே அழைக் கிறேன். நீயும் என்னை அளவுக்கதிகமாகப் புகழ்வதை நிறுத்திவிடு. இந்தக் காட்டுப் பகுதியைக் கலைப்பூமியாக மாற்றும் பணி யில் நாம் இருவரும் ஈடுபடப் போகிறோம். நாம் இருவரும் கலைஞர்கள். கல்லைக் கலைவண்ணமாக்கும் நீ ஒரு பிரம்மா. நான் ஒரு சாதாரணக்குடிமகள். எப்போதுமே நான் சோழநாட்டு எளிய மகள். இரா சேந்திர சோழர் என் நாட்டியப் புலமை யைக் கண்டு என்னைத் தன்னுடையவளாக ஆக்கிக்கொண்டார். அதனால் இளவரசி என்ற சிறப்புப் பெற்றேன். என்னைவிடப் பெருமை பெற்றுள்ள பெரும் குடியில் பிறந்த சிற்றரசர்களின் புதல்விகள் மாளிகையில் இளவரசிகளாக விளங்கு கிறார்கள். அவர்களுக்கு இல்லாத நாட்டியப் புலமை எனும் பெருமை எனக்கு உண்டு. அவர்களுக்குக் கலை ரசனை என்பது எள்ளளவும் இல்லை. இளவரசி என்ற சிறப்பை நான் பெறக்கூடாது என்ப தற்காகச் சதித் திட்டங்களை அவர்கள் தீட்டுகிறார்கள். நாட்டில் உலவும் பொறாமைப் புலிகளுக்கிடையே வாழ்வதை விட, இந்தக் காட்டுக்கே வந்துவிட முடிவு செய்தேன். நான் எதிர்பார்த்ததற்கு மேலாக இங்கே கலை மணம் வீசுகிறது. ஒப்பற்ற சிற்பியைச் சந்தித்ததில் பெருமை அடை கிறேன். ஆனால் அந்தச் சிற்பியோ புகழ் மாலையைச் சூட்டுவதில் கண்ணுங்கருத்து மாக இருக்கிறார். இளவரசியை அரசி என்கிறார். மாபெரும் இராசராச சோழர் சக்ரவர்த்தியாகக் கோலோச்சும்போது என்னைப் பேரரசியாக்கி இளவரசரைச் சக்ரவர்த்தியாக்கிவிட்டீர்களே?"

வீரமாதேவி மெல்லப் பேசினாலும் அதில் ஆழ்ந்த உணர்வு இருப்பதைப் புரிந்து கொண்டான் மாணிக்கசேகரன். உண்மையி லேயே, இளவரசர் இராசேந்திர சோழர் சோழ நாட்டுப் பேரரசராக முடிசூட்டப்பட்ட செய்தி தெரியாது என்பதை அறிந்தான்.

"எங்கள் இனிய இளவரசர், சோழ நாட்டுப் பேரரசராக முடிசூட்டப்பட்ட

கோலாகலமான விழாவிற்கு நான் நேரே சென்று காணக்கூடிய பெரும் பேறு பெற வில்லையே என்ற மனவருத்தம் எனக்கு. அந்த விழாவிற்கு நீங்களும் சென்றி ருப்பீர்கள். சோழப் பேரரசியை மிக அரு கில் சந்திப்பது முன்பிறவிப் புண்ணியம்".

மாணிக்கசேகரன், மகுட விழாவைப் பற்றி விவரிக்க விவரிக்க, வீரமா தேவிக்குப் புரிய முடியா வேதனை இதயத் தில் எழுந்தது. துக்கம் பிறந்தது. துயரம் சூழ்ந்தது. கோபமும் பொங்கியது. விழி களில் கண்ணீர் சேரத் தொடங்கியது. உடலில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

என் இளவரசர் அரசராகிவிட்டாரா? முடிசூட்டு விழாவைக் காண எனக்கு அழைப்பில்லை. அழைப்பா? அதற்கு உரிமை எனக்கு இல்லையா? அது மறுக்கப் பட்டுவிட்டது.

முதுமை அடைந்துவிட்ட மற்ற இளவரசி களின் பொறாமையும் அவர்கள் செய்த சதியுமாகத்தான் இருக்க வேண்டும்.

அவள் அங்கே நிற்கவில்லை. மாணிக்க சேகரனிடம் சொல்லிக் கொள்ளாமல் அங்கிருந்து தன் குடிலுக்கு விரைந்து சென்றாள்.

சில நாள்கள் கழித்து மாணிக்க சேகரன் வீரமாதேவியைத் தேடி வந்து விட்டான்.

வீரமாதேவி தன் மனத்தில் எழுந்த துயரத்தை, வேதனையைப் புலப்படுத்திக் கொள்ளாமல், சிற்பியை முகமலர்ச்சியுடன் வரவேற்றாள்.

வீரமாதேவி சிற்பக்கலையைப் பற்றிய நுணுக்கமான செய்திகளைத் தெரிந்து கொள்ள விரும்பினாள். பல்வேறு விதமான பாறைகளைப் பற்றிக் கேட்டறிந்தாள்.

அந்த வனப்பகுதியில் சிற்ப சௌந் தர்யம் நிறைந்த கோயில் ஒன்றை எழுப்புவது என் இலட்சியம் என்றாள். சோழ சக்ரவர்த்தியாக மகுடமணிந்துள்ள இராசேந்திர சோழரின் இலட்சியமும் அதுவே என்றாள்.

என்னென்ன சிற்பங்களை அங்கே படைக்கலாம் என்று இருவரும் கலந் தாலோசித்தார்கள்.

மறுநாள் வழக்கம்போல் காலையில் வீரமாதேவி மாணிக்க சேகரனைச் சந்தித் தாள்.

"நான் இனி அதிகம் பேசப்போவ தில்லை" என்றாள் வீரமாதேவி.

ஏன் என்பதைப் புருவம் உயர்த்திக் கேட்டான் மாணிக்கசேகரன்.

"பேசுவதால் பணி தடைப்படுகிறது".

"பேசினால் புதிய சிந்தனை உருவா கிறது".

"பணியைத் தொடங்குவதற்கு முன்பு சிந்தனை உருவாகட்டும்".

"அப்படியென்றால் பேசுவதற்கு - கலந் துரையாட ஒரு நேரமும், படைப்புக்காக ஒரு நேரமும் ஒதுக்க வேண்டியதுதான்."

"அப்படியே செய்யலாம்".

வீரமாதேவி இவ்வாறு சொன்னவுடன், "நாளில் பெரும் பகுதியை இங்கேயே கழிக்க வேண்டியிருக்குமே" என்றான் மாணிக்க சேகரன்.

"ஓ! அதனாலென்ன? என் முடிவை மாற்றிக் கொள்கிறேன். சிற்ப சாம்ராஜ் யத்தில் அரசியாக மாறிவிடுகிறேன்".

இது கேட்ட மாணிக்கசேகரன் அதிர்ச்சி யடைந்தான். தேவி, பொருள் உணர்ந்து பேசுகிறார்களா? கலை ஆர்வத்தால் பேசுகி றார்களா? அவனுக்குப் புரியவில்லை. திகைத்தான்.

"மாணிக்கசேகரா! சில நாள்களாக என் மனக் கடலில் பெரும் குமுறல். இன்றுதான் தணிந்தது. தெளிந்தது. நான் பிறவியி லேயே கலை ஆர்வமுடையவள். இளவரசி, அப்[illegible]" என்ற புகழ்ப் பெயர்களில் எனக்கு ஆர்வமில்லை. என் நாட்டியக் கலை உள[illegible] உன்னுடைய சிற்பத் திறமையும் ஒன்று சேர்ந்தால் தஞ்சைப் பெரிய கோயிலைவிடச் சிறந்த கலைக்கூடம் உருவாகிவிடுமன்றோ...?"

வீரமாதேவியின் ஆர்வம் அவள் விழி ஒளியாக வெளிப்பட்டது.

அங்கே கிளிங் கிளிங் என்ற ஓசை எழுந்தது. மரக் கிளைகளில் குயில் அமர்ந்து வியப்புடன் பார்த்தது. எங்கிருந்தோ

முயலும் அணிலும் ஓடோடி வந்து வியப்புடன் நோக்கின.

சிற்பி ஓய்வெடுக்கச் செல்லும் வரையில் வீரமாதேவி அருகேயே இருப்பாள்.

ஓர் அழகிய சிற்பம் வளர்ந்தது.

அன்று...

"தேவி, நேற்றுக் கனவில் என் எதிரே ஒளிமயமான தேவதை தோன்றினாள்" என்று மாணிக்கசேகரன் தொடங்கினான்.

"நாள்தோறும் என்னையே பார்த்துப் பேசிக்கொண்டிருப்பதன் பிரதிபலிப்பாக இருக்கலாம்".

வீரமாதேவி அப்போது நகைத்ததில் நாணமும் கலந்திருந்தது.

"உம், அந்தத் தேவதை என்ன சொன்னாள்?"

"அவர்களைத் தேவதை என்று எளிய சொற்களால் வர்ணிக்கவே கூடாது; சகல கலைகளுக்கும் அதிபதியான கலைத்தேவி, கலைவாணி. ஆகா அந்தப் பேரொளி வடிவத்தை எப்படி வர்ணிப்பேன்?"

"மாணிக்கசேகரா! நீ பெரும் பாக்கிய சாலி. கலைமகளின் அருள் பூரணமாகப் பெற்றுவிட்டாய்".

"தேவி! அந்த வடிவம் உடனே மறைந்துவிட்டதே. என்ன செய்வது என்ற கவலை என்னைச் சூழ்ந்துவிட்டதே. ஆனால் எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. நீங்கள்தான் கலைமகளாக என் எதிரே அமரவேண்டும். நீங்கள்தான் கலைமகளாக மாறவேண்டும். தேவி, நாள்தோறும் நீங்கள் இதற்கென நேரம் ஒதுக்க வேண்டும்".

வீரமாதேவி மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் உடல் மெல்லச் சிலிர்த்தது.

மறுநாளிலிருந்து வீரமாதேவி கலைமகளாக மாறினாள்.

கலைமகள் கல்லிலே உருவாகிக் கொண்டிருந்தாள்.

வீரமாதேவி அதைப் பார்த்து வியப்படைந்து கொண்டிருக்கும்போது அங்கே பரபரப்பு ஏற்பட்டதை அவள் உணரவில்லை. மாணிக்கசேகரனும் கவனிக்கவில்லை.

சக்ரவர்த்தி இராசேந்திர சோழர் அங்கே வந்து நின்றார்.

தொலைவில் பட்டத்து அரசிகளாக உரிமைப் பெற்றவர்களும் வந்து கொண்டிருந்தனர்.

(தொடரும்)

நில்சின் சூப்பர் திரவ நீலம்!



வெண்மையான துணிகளைச் சோப்புப் போட்டுத் துவைத்த பிறகு அவற்றுக்கு மேலும் பளபளப்பு ஏற்ற நீலப் பவுடரை உபயோகிப்பது வழக்கம். இந்தப் பவுடரை, பிறகு திரவ வடிவமாக்கி நீரில் கரையவிட்டு, துவைத்து அலசிய வெள்ளைத் துணிகளை மறுபடி நனைத்து இந்தக் கலவையில் அலசினால் பளபளப்பு ஏறுவதாகக் கருதுகிறோம்.

இந்தப் பவுடர் மற்றும் திரவ வணிகம் இப்பொழுது மிகவும் பிரபலமாகி விட்டது. வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் விளம்பர உத்திகளைக் கையாண்டு, நுகர்வோரை மிரளவைக்கும் வகையில் தற்சமயம் மார்க்கெட்டில் இந்த "லிக்விட் ப்ளு"பிரபலமாகி விட்டது.

ரிக்கட் அன்ட் காலமின் என்ற நிறுவனம்தான் முதல் முதல் இந்த வியாபார நுணுக்கத்தைச் சந்தையில் அறிமுகம் செய்தது. பவுடர் வடிவத்தில்தான் முதலில் தயாரித்தார்கள். இந்தப் பவுடர் தயாரிப்பின் சூட்சுமம் தெரிந்த பிறகு, போட்டியாகப் பலர் தயாரிப்பில் இறங்கியவுடன் விற்பனையாகத் தொடங்கிய பவுடர்களின் தரமும் குறைந்து போய்விட்டது.

கடுமையான போட்டியும் விதவிதமான விளம்பர உத்திகளும் சேர்ந்து நுகர்வோரிடையே குழப்பத்தை ஏற்படுத்தி, தரமான 'ப்ளு'வை அவர்கள் இனம் பிரித்துத் தெரிந்து கொள்வது சிரமமாகி விட்டது.

அகமதாபாத்தில் இருந்து வரும் 'நில்சின் சூப்பர் திரவ நீலம்' தரத்தை மட்டுமே நம்பி நுகர்வோரிடையே பவனி வருகிறது. அல்ட்ராமரைன், டை (Die) ஆகிய இரண்டு ரசாயனக் கூடுகை முறையான விகிதத்தில் கலக்கப்பட்டால்தான் தரமான 'ப்ளு'வைத் தயாரிக்க முடியும். சில திரவ நீலத்தில் துணிகளை நனைத்தால், திட்டுத் திட்டாகத் துணிகளில் நீலம் ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்க்க முடியும். இன்னும் சில திரவ நீலங்கள் தண்ணீரில் கரையாமல் அப்படியே நீரின் அடியில் வண்டலாகப் படிந்து விடும். இதற்கும் மேல் சில 'ப்ளு' திரவங்களை, உற்றுக் கவனித்தால் 'ஊதா' நிறத்தில் இருப்பது தெரியவரும்.

நில்சின் நிறுவனத்தார் தேர்ந்த ரசாயன நிபுணர்களின் துணையுடன் அல்ட்ராமரைன் மற்றும் டை (Die)யைச் சரியான விகிதத்தில் கலந்து திரவ நீலத்தைத் தயாரிக்கிறார்கள். இதில் நில்சின் கம்பெனியார் வாசனைப் பொருள் ஒன்றையும் கூடுதலாகச் சேர்க்கிறார்கள். நீரில் கலக்கும் போதும் கரையும் போதும், நில்சின் சூப்பர் 'ப்ளு'வின் மணம் நாசிக்குச் சுவை சேர்க்கிறது.

நில்சின் சூப்பர் 'ப்ளு'வைச் சென்னையில் குண்டல் ஏஜென்சி மூலம் விநியோகம் செய்கிறார்கள். இதன் கிளை மேலாளராக இருப்பவர் திரு. என்.கே. சீனிவாசன். இந்தத் திரவ மற்றும் பவுடர் ப்ளு வியாபாரத்தில் இருபது ஆண்டுகளாக ஈடுபட்டிருப்பவர். இவர் தனது கம்பெனியின் 'சூப்பர் ப்ளு'வைப் பற்றிச் சிலாகித்துச் சொன்னார். "வாய் வார்த்தையாகச் சொன்னால் எப்படி நம்புவது? வாசகர்கள் நம்ப வேண்டுமல்லவா?" என்று கேட்டபொழுது, மூன்று கண்ணாடிக் குடுவைகளைக் கொண்டு வந்து இவர் கம்பெனியின் நீலத்தையும் மற்ற இரண்டு கம்பெனிகளின் திரவ நீலத்தையும் வாங்கிவரச் செய்து அந்தக் குடுவைகளில் கரையவிட்டுக் காட்டினார். நில்சின் சூப்பர் ப்ளு மட்டும்தான் நீல நிறத்தில் இருந்தது. மற்றவை ஊதா நிறத்தில் முழுவதும் கரையாமல் திட்டுத்திட்டாக இருந்தன. இந்த 'டெமான்ஸ்ட்ரேஷன்' ஓரளவுதான் திருப்தி அளித்தது. சில இல்லத்தரசிகள் துவைக்கும் 'ஹவுஸ் சர்வென்ட்' ஆகியவர்களிடம் நில்சின் சூப்பர் ப்ளு திரவத்தைக் கொடுத்து அவர்களிடமிருந்து அபிப்பிராயம் சேகரிப்பது என முடிவு செய்தோம். இந்த யோசனையைத் திரு சீனிவாசனிடம் தெரிவித்தபோது அவர் சம்மதம் என்றார்.

பளபளப்பூட்டும் வெண்மைக்கு நில்சின் சூப்பர் ப்ளு திரவமே சிறந்தது என்று திரு சீனிவாசன் கூறியதை நாமும் ஒப்புக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். நுகர்வோரின் அனுபவரீதியான அபிப்பிராயத்திற்கு முன் ஆடம்பரமான விளம்பரங்களால் என்ன செய்துவிட முடியும்?

பெட்டிகள்

வங்கி நிர்வாகியின் துணைவி கூறுகிறார்

துணிகளை நன்கு வெளுக்க இதுவரை நான் உபயோகித்த நீலம் மூன்று, நான்கு வகை யிருக்கும். திருப்தி ஏற்பட வில்லை.

இச் சந்தர்ப்பத்தில் நில்சின் நீலம் நன்கு கைகொடுப் பதைக் குறிப்பிடுகிறேன். சிறந்த உபயோகத்தில் நல்ல நிறைவு. ஒருமுறை அலசி எடுத்தால் போதும். நம் திருப்திக்காக மீண்டும் ஒரு முறை அலசி எடுத்துப் பார்த் தால் வெண்மைத் துணிகள் அப்பழுக்கு இல்லாமல் பளிச் சிடுவது என் அனுபவம்.

— உமா குமாரி, மதுரை).

கல்லூரி மாணவர் புகழ்கிறார்

நான் ஹாஸ்டலில் மூன்று, நான்கு சக மாணவர்களுடன் தங்கிப் படிப்பவன். பரிட் சைக்குப் படிக்கும் நேரத்தில் துணிகளை வெளுப்பதற்கு அதிக நேரம் செலவிட முடி யாது. நல்ல நீலம் கிடைப்ப தற்காக நண்பர்களிடையில் பேச்சு நடந்தபோது, ஒரு மாணவன் நில்சின் நீலம் பற்றிச் சொன்னான். வாங்கி உபயோகித்துப் பார்த்ததில் நல்ல பலன். பரபரப்பான பரிட்சை நேரத்தில், துணி துவைக்கச் சிறு அவகாசமே ஒதுக்க முடிந்தபோது, நில்சின் நன்கு கைகொடுத்தது.

— எம். ரவிக்குமார், சேலம்.


தொழில் நிபுணர் பாராட்டு

என் பெயர் ராஜசேகர். நான் ஒரு டி.வி. மெக்கானிக். நான் வெள்ளை வேட்டி கட்டுபவன். என் குழந்தைகள் ஒயிட் யுனிபார்ம் அணியும் பள்ளியில் படிப்பவர்கள். வெள்ளைத் துணிகளை நான்தான் துவைப் பேன். பளபளப்புக்கு .... நீலப்பவுடரைத்தான் உப யோகிப்பேன். நில்சின் திரவ நீலத்தைக் கொடுத்து 'ரிசல்ட்' டைச் சொல்லச் சொன் னார்கள். நில்சின் சூப்பர் திரவ நீலம் போட்டதில் துணி களில் திட்டுத்திட்டாக நீலம் இல்லை. துணிகள் பளபளப் பாக இருக்கின்றன.

— ராஜசேகர், சென்னை.

கை விரல்களைக் காப்போம்

பால.இரமணி



காலைக் கதிரவனுக்கும்
முன்னாலே
எழுந்து உழைக்கும்
என் தோழனே!
நீ
உழைப்பதால்தான்
நிலவுகூட
நிம்மதியாய்க்
கண்விழித்து
நடமாடுகிறது!

உன் உடலில்
இரத்தத்தின் அளவு
குறைவாயிருந்தாலும்
வியர்வை அளவினால்
வியக்க வைக்கிறாய்!

முதுமை உன்னை
முத்தமிட்டாலும்
இளமை உன்
உழைப்புக்குள்
வசித்து வருகிற
ஆச்சரியம்தான்
என்ன...?

உன் உதிரத்தில்
கலந்திருக்கும்
சுறுசுறுப்புதான்
இந்திய நாட்டின்
அருமருந்தென்பேன்!


உன் விரல்களின்
ஓயாத அசைவினால்
உன் வயிற்றின்
பள்ளங்கள்
இன்னமும்
நிரம்பவேயில்லை...

பரவாயில்லை...
நிஜத்தைப்
புரிந்துகொள்ளாத
மானுடர் நடுவில்
இன்னமும் நீ
உழைத்து வருகிறாயே...
அதுதான்
உயர்வு...

அதுதான்
இந்தியாவின்
சுவாசம்!
தோழா...
உன் "கையில்"
இருப்பது
இந்தியா ஆகும்!
எனவே உன்
விரல்களைக் காப்போம்!

பொருளாதாரச் சிறப்பிதழ்

சேமிப்போம் சிறப்புறுவோம்



மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும் பொழுதே பொருளாதாரம் உண்மையான வளர்ச்சிப் பரிமாணத்தை அடைகிறது. அடிப்படைத் தேவைகளின் பூர்த்தி என்பது பொருளாதாரத் தன்னிறைவுக்கு அடித்தளமாகும். கடுமையான உழைப்பும், உற்பத்திப் பெருக்கமும், சிக்கனமும், சேமிப்புமின்றி இத்தகைய பொருளாதாரத் தன்னிறைவை நாம் எட்ட முடியாது.

இரண்டாவது உலகப் போரில் தரைமட்ட நிலைக்கு வந்துவிட்ட ஜப்பான் இன்று பொருளாதாரத்தில் அடைந்திருக்கும் மேம்பாடு பிரம்மாண்டமானது. கடுமையான உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு இம் மேம்பாட்டை அடைந்தார்கள் ஜப்பானியர்கள். இத்தனைக்கும் ஜப்பான் எந்த ஒரு இயற்கை வளமும் இல்லாத சாதாரணப் பிரதேசம். பூகம்பமும் எரிமலை வெடிப்புகளும் சர்வ சாதாரணம். இருந்தும் உன்னத நிலைக்கு உயர்ந்துள்ளார்கள்.

நம்மிடம் என்ன குறை? நம் நாட்டில் என்ன இல்லை? உடல் உழைப்பிற்குப் பஞ்சமா? புத்தி சாலித்தனத்திற்குக் குறைவா...? மனித சக்திக்குத்தான் தட்டுப்பாடா...? காடும், மலையும், நதியும், நீருமாய் எல்லா வளமும் பெற்றிருந்தும் நாம் பொருளாதாரத் தன்னிறைவு பெறவில்லையென்றால் என்ன பொருள்? தவறு எங்கே நிகழ்கிறது?

மனிதனின் தேவைகள் மிகக் குறைவாக இருந்த காலம் ஒன்று உண்டு. ஆனால் மாறி வரும் உலகில் அடிப்படைத் தேவைகள் பெருகிவிட்டன. பொருளாதார ரீதியில் ஒவ்வொரு மனிதனும் முன்னேறியே ஆகவேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். தனி மனித மேம்பாடுதான் ஒரு நாட்டின் மேம்பாடு. தனிமனித பொருளாதார மேம்பாடு அவனுடைய திட்டமிடலில்தான் இருக்கிறது.

தனி மனித மேம்பாட்டிற்குச் சிக்கனமும் சேமிப்புமே அடிப்படை! வருகிற வருவாயைத் திட்டமிட்டுச் செலவழிப்பதிலும் சேமிப்பதிலுமே ஒருவரின் முன்னேற்றம் இருக்கிறது. காலத்திற்கேற்றாற்போல் செலவு விகிதங்களை அனுசரித்துப் போக வேண்டும். சேமிப்பு என்கிறபோது அதையும் திட்டமிட்டு நல்ல முறையில் செய்ய வேண்டும்.

சேமிப்பதற்குப் பல வழிகள் உள்ளன. ஆனால் லாபகரமாகச் சேமிக்கச் சில வழிகளே உள்ளன. நம்பிக்கையான சீட்டுக் கம்பெனிகளில் அவரவர் சக்திக்கேற்ப மாதாந்திர சீட்டுகளில் சேர்ந்து சேமிக்கலாம். அது ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

> ஓர் இந்தியனின் வருமானத்தைவிட ஏறத்தாழ 12 மடங்கு அதிகமாக உள்ளது அமெரிக்கனின் வருமானம்! ஜப்பானியனின் வருமானம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இந்தியர்கள் இந்நிலையை அடைவதென்பது ஒன்றும் இயலாத காரியமல்ல. சரியான பாதையில் திட்டமிட்டு, சரியான பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றினால் உன்னத உயர்வு கிட்டுவது நிச்சயம்.

அதேபோல் ஷேர்கள் என அழைக்கப்படும் பங்குகள் வாங்கி அல்லது விற்று ல மடையலாம். டிபன்சர் எனப்படும் கம்பெனி முத களும் இலாபகரமானவை இவை தவிர அரசுடை வங்கிகளும், அரசின் சேமிப்புத் துறையும், அஞ் கங்களும் பல்வேறு சேமிப்புத் திட்டங்களை ந முறைப்படுத்தியுள்ளன. காப்புத் திட்டங்களில் வதன் மூலம் நம் ஆயுளுக் பாதுகாப்பும், பணத்தி உத்தரவாதமும் கி கின்றன. பல்வேறு க திட்டங்களின் மூலம் அவ தேவைகளுக்குக் கடன் வ யும் பெறலாம். யூனிட் டிர டின் யூனிட்டுகளிலும், சேமிப்புப் பத்திரங்களி பணம் முதலீடு செய்வ மூலம் வரிச்சலுகையும், வ யும், போனசும் கிடைக்கின்ற பணமும் பாதுகாப்பாய் இ கும்.

சேமிப்புகளை நீண்டகா குறுகிய கால என்று இரண் வகை சேமிப்புகளாகப் பிர லாம். சிறுசேமிப்புகள், ரிங் டெபாசிட்டுகள், ஃபண்டுகள் போன்றவற் குறுகியகால சேமிப்புகளா பணம் சேர்க்க ஆரம் லாம். சிறு துளி பெருவெள் என்பதுபோல், கிடைத்த ப தைச் சேமிக்கத் தொட வேண்டும். சேமிப்பு, தொ சேமிப்பாகவும் இருக்க வே டும். சீட்டுத் தொகை

இந்த அளவிற்குத் தங்கம், வெள்ளி, நிலம் ஆகியவற்றின் விலை உயர்ந்ததற்குப் பணவீக்கமும், உற்பத்தித் தேக்கமும், அன்னியச் செலாவணியில் மந்த நிலையுமே காரணமாகும். இதனால்தான் நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் புதிய பொருளாதாரக் கொள்கையைப் புகுத்தி அன்னியச் செலாவணியில் அபிவிருத்தியும், தொழில் உற்பத்தியும் பெருக வழி செய்துள்ளார். சர்வதேசச் சந்தையில் இந்திய ரூபாயின் மதிப்பு உயரும் என்றும், இதனால் பொதுவான பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் என்றும் நம்பப்படுகிறது.

தனிமனிதனின் வருமானமும் சேமிப்பும் அதிகரிக்கும் பொழுதுதான் நாட்டின் பொருளாதாரம் மேம்படும். உலக



நாடுகளில் தனிமனித வருமானத்தை இந்தியனின் சராசரி வருமானத்தோடு ஒப்புநோக்கினால் நாம் சர்வதேசப் பொருளாதார நிலையில் எவ்வளவு பின் தங்கியுள்ளோம் என்பது தெளிவாகும்.

விலை உயர்வின் ஒப்புநோக்கு அட்டவணை

வருட முடிவில்	தங்கத்தின் விலை (ஒரு கிராமுக்கு)	வெள்ளியின் விலை (ஒரு கிலோ கிராமுக்கு)	சராசரி நிலத்தின் விலை (ஒரு சதுர கெஜத்திற்கு)
31.03.1940	ரூ. 3.50	ரூ. 52.00	ரூ. 1.00
31.03.1950	ரூ. 10.00	ரூ. 260.00	ரூ. 2.00
31.03.1960	ரூ. 16.00	ரூ. 180.00	ரூ. 10.00
31.03.1970	ரூ. 19.00	ரூ. 521.00	ரூ. 180.00
31.03.1980	ரூ. 144.00	ரூ. 2410.00	ரூ. 600.00
31.03.1985	ரூ. 230.00	ரூ. 4000.00	ரூ. 800.00
விலை உயர்வின் மடங்கு	63 மடங்கு	77 மடங்கு	800 மடங்கு

பல்வேறு நாடுளின் தனிமனித வருமான ஒப்பு நோக்கு அட்டவணை.

நாடுகள்	மக்கள் வசிக்கும் மொத்தப் பரப்பு (கிலோமீட்டர்) (மில்லியனில்)	மக்கட்தொகை மில்லியனில்	1989இல் தனிமனித வருமானம் (டாலரில்)
அமெரிக்கா	9.4	210	12,974
பிரிட்டன்	0.24	80	6,800
மே. ஜெர்மனி	0.25	85	9,200
ஜப்பான்	0.38	120	8,900
இந்தியா	3.80	800	1,222

ரெகரிங் டெபாஸிட்டோ முதிர்ந்து வரும்போது அவற்றை மீண்டும் டிபன்சர்களில் அல்லது வங்கித் திட்டங்களில் முதலீடு செய்யலாம். ஒரு கணிசமான தொகை கிடைத்த பிறகு நீண்டகால சேமிப்புகளான நிலம், வீடு போன்ற சொத்துகளை வாங்க முயற்சிக்க வேண்டும்.

மண்ணில் போடு, பொன்னில் போடு என்கிற மூத்தோர்களின் அறிவுரை எவ்வளவு சிறந்தது என்பதை அட்டவணையைக் கூர்ந்து கவனித்தால் தெரிய வரும். மண்ணும், பொன்னும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் எத்தனை மடங்கு விலை உயர்ந்துள்ளன என்பதைப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது. தங்கத்தின் விலை 63 மடங்கும், வெள்ளியின் விலை 77 மடங்கும், நிலத்தின் விலை 800 மடங்கும் உயர்ந்துள்ளன! எங்கோ ஒரு மூலையில் எப்போதோ இரண்டு மனை நிலம் வாங்கிப் போட்டவர்களெல்லாம் இன்று லட்சாதிபதிகள்! தெரிந்தோ தெரியாமலோ பிறந்த வீட்டுச் சீதனமாக வெள்ளியும் தங்கமுமாகப் பூட்டிக் கொண்டு போன பெண்களெல்லாம் இன்று பணக்காரிகள்! ஃ

~வனிதா

சிறு தொழில் வளர்ச்சியில் வங்கிகள்



திரு ரெ. கோபாலகிருஷ்ணன்

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் அந்த நாட்டின் தொழில் வளர்ச்சியையே பெரிதும் சார்ந்திருக்கிறது. நமது நாட்டின் தொழில் துறையை எடுத்துக் கொண்டு பார்த்தால் நாம் சுதந்திரம் அடைவதற்கு முன் ஒரு சில விரல்விட்டு எண்ணக்கூடிய அளவு தொழிற்சாலைகளே துவக்கப்பட்டன. அவற்றிலும் வெற்றிகரமாகச் செயல்பட்டவை மிகச் சிலவே. அந்தக் காலகட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவு வளர்ச்சி முதல் இரண்டு உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில்தான் நடந்திருக்கிறது. ஏனெனில் அப்போது தான் பிரிட்டிஷ் அரசு சிறிது செயலிழந்து நின்றது. சுதேசி இயக்கம் சிறிது சிறிதாகப் பரவியது.

அப்போதெல்லாம் பெரிய தொழிற்சாலை என்பது பஞ்சாலைதான். நமது நாட்டில் பஞ்சாலைகள் முதலில் தோன்றியதற்கு ஒரு சுவையான காரணம் உண்டு. இங்கிலாந்து மில்களுக்கு அப்போது பஞ்சு அமெரிக்காவில் இருந்து வந்து கொண்டிருந்தது. அமெரிக்கப் புரட்சியினால் அமெரிக்காவிலிருந்து கிடைத்த பஞ்சு வருவது நின்று விட்டது. எனவே அதை ஈடுகட்ட பருத்தி சாகுபடியின் பரப்பு இந்தியாவில் பிரிட்டிஷ் அரசால் அதிகரிக்கப்பட்டு இங்கிருந்து பஞ்சு இங்கிலாந்து சென்றது. அமெரிக்காவில் புரட்சி ஓய்ந்து அமைதி ஏற்பட்டதும் மறுபடி அமெரிக்கப் பஞ்சு இங்கிலாந்து வரத் துவங்கியது. அதனால் இங்கு நம் நாட்டில் விளைந்த பஞ்சை உபயோகிக்க மில் துவங்க வேண்டிய கட்டாய நிலை தோன்றியது. அப்போதுதான், அதாவது 1870-80இல் பஞ்சாலைகள் வெகுவாக வட இந்தியாவிலும் நமது பகுதியில் மதுரை, கோவை, அம்பாசமுத்திரம் போன்ற இடங்களிலும் துவங்கப்பட்டன. முதலில் ஆங்கிலேயர்கள் கையில் முதலீடு இருந்தாலும் மெதுவாக இந்தியப் பங்கு முதலீடு இந்தத் தொழிற்சாலைகளை நோக்கித் திரும்பியது.

பருத்தியைத் தொடர்ந்து சர்க்கரை, தோல் பதனிடுதல், சிமெண்ட் முதலிய தொழில்கள் துவங்கப்பட்டன. 1952-53இல் இங்கே தமிழகத்தில் 83 பஞ்சு ஆலைகளும், 5 சர்க்கரை ஆலைகளும், 3 சிமெண்ட் ஆலைகளும், 329 தோல் தொழிற்சாலைகளும் மட்டுமே இருந்து வந்திருக்கின்றன.

1950க்கும் இன்றைக்கும் உள்ள கால இடைவெளியில் நாம் பிரமிக்கத் தக்கதொரு வளர்ச்சி அடைந்திருக்கிறோம். உற்பத்தி பெருகி இருக்கிறது; தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது; வளர்ச்சியின் வேகம் அதிகரித்துக் கொண்டே வருகிறது; முன்னைப்போல் சில குறிப்பிட்ட துறைகளில் மட்டுமின்றி பல்வேறு துறைகளிலும் இன்றைக்குத் தொழில் உற்பத்தியில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

ஏழாவது ஐந்தாண்டு திட்ட[...]தில் நாட்டின் தொழில் உ[...]பத்தியின் வளர்ச்சி 8.5 சதவ[...] அளவு இருந்திருக்கிறது. நா[...]டின் வளர்ச்சியில், வளத்தி[...] அக்கறை உள்ள அனை[...]வருக்கும் இது ஒரு மகிழ்ச்[...] ஊட்டும் செய்தியாகு[...] வளர்ந்து வரும் மற்றைய நா[...]களோடு நாம் ஒப்பு நோக்கு[...] போது நமது வளர்ச்சியில் நா[...] நிச்சயம் பெருமை கொள்[...]லாம்.

தொழில் வளர்ச்சி என்ப[...] பெரிய தொழிற்சாலைகளை[...] மட்டுமே ஒட்டி அமை[...]தில்லை. பெரிய தொழி[...] சாலைகள் எல்லாம் தா[...] அவற்றின் தேவைகள் யாவை[...]யும் நிறைவேற்றிக் கொள்[...] இயலாது என்பது கண்கூடா[...] ஒன்று. உதாரணமாக ஒ[...] ஸ்கூட்டர் தொழிற்சாலை[...] எடுத்துக் கொண்டால் அதி[...] உள்ள நூற்றுக் கணக்கா[...] பாகங்களை ஒரே தொழி[...] சாலையில் தயாரித்து ஸ்கூ[...]டரை உருவாக்குவதில் ப[...] சிக்கல்கள் உள்ளன. அதற்கு[...] பதிலாக, முக்கியமான சி[...] பாகங்கள் தவிர மீதி பாக[...]களை அந்த ஸ்கூட்டர் தொழி[...] சாலை சிறு தொழிற்சாலைக[...] கையில் ஒப்படைத்தால் ஒ[...] நேரத்தில் அனைத்துப் பாக[...]களும் பல்வேறு சிறு தொழி[...] சாலைகளில் தயாரா[...] ஸ்கூட்டர் தொழிற்சாலை[...] அடைந்து ஸ்கூட்டர் உற்பத்[...] தடையின்றி நடக்க முடியு[...] ஒவ்வொரு பாகம் தயாரி[...]பாளரும் அவருடைய ப[...] தொடர்ந்து அதிலேயே இருப்[...]தால் அதைத் தயாரிப்பதி[...] தனிக் கவனம் செலுத்தி அத[...] அமைப்பை, தரத்தை உயர்[...]திட முடியும். எனவே தொழி[...] உற்பத்தியில் வளர்ச்சியி[...] இத்தகைய சிறு தொழிற்சாலை[...]களின் பங்கு மகத்தானது.

ரூ 60 லட்சம் வரை முதல்[...] உள்ள தொழிற்சாலைகளும் [...]

லட்சம் வரை முதலீடு உள்ள தொழிற்சாலைகளும் (ANCILLARY ITS) சிறு தொழிற் சாலை ாகக் (SMALL SCALE INDUSTRIES) ருதப்படுகின்றன. இந்த கைத் தொழிற்சாலைகள் பருகிடவும் புதிய படித்த ளைஞர்கள் வேலை வாய்ப் க்கு அரசினை நம்பியிராமல் மே சுயமாகத் தொழில் வங்கி முன்னேறிடவும் ங்கிகள் செய்து வரும் பணி ளப்பரியது. இந்தச் சிறு தாழில்கள் முன்னுரிமைத் றைகளில் ஒன்றாகக் கருதப் டு உதவிகள் அளிக்கப் டு வருகின்றன.

இந்தியன் வங்கியின் மாத்தக் கடன் ரூ 5000 கோடி ல் சிறு தொழில் துறைக்கு ங்கப்பட்டுள்ள கடன்கள் ட்டத்தட்ட ரூபாய் 800 கோடி கும். இதன் மூலம் 51 ஆயிரம் து தொழிற்சாலைகள் பய டைந்துள்ளன. இந்தப் பணி ந பக்கம் தொடர்கிறது. தே நேரத்தில் ஒரு தொழில் வங்கிட படிக்கும், படித்த ளைஞர்களிடத்தில்ஆர்வத்தை ர்த்து அவர்கள் புதிய தாழில்கள் துவக்கிட உதவி க இரு தனிச்சிறப்பு மைப்புகளை இந்தியன் ங்கி நிறுவி சேவை புரிந்து கிறது.

திரு ராஜசேகரன் என்பவர் வயது இளைஞர். பாலி க்னிக்கில் பிளாஸ்டிக் ால்டிங்கில் டிப்ளமோ பற்றவர். அவரது சகோதரர் வயதாகும் திரு ராஜேந் ன். இருவரும் துடிப்புள்ள ளைஞர்கள். பிளாஸ்டிக் ால்டிங் துறையில் நான் ந்து ஆண்டு அனுபவம் ற்ற சகோதரர் அந்தத் ாழிலைத்தம்பியுடன் சேர்ந்து வங்க நினைக்கிறார். அதற் கிய ஊக்கம் இருக்கிறது. டிப்பறிவும் அனுபவ றிவும் நிறைய இருக்கின்றன. னால் அதைச் செயலாக்கி வெற்றி காணத் தேவையான முதலீடு - பணம் இல்லை. சிறி தளவு சொந்த முதலீடு இருந் தாலும் மீதியை வங்கியில் பெற லாம் எனில் குடும்ப நிலை யில் அதுவும் சாத்தியப்பட வில்லை. இத்தகைய இளைஞர் களுக்கு ஒரு வரப்பிரசாத மாகத் துவக்கப்பட்டு இன் றைக்கு மிக வெற்றிகரமாக இயங்கி நாட்டில் 500க்கும் மேற்பட்ட தொழில்களை திரு ராஜ சேகரன் போன்றவர் களால் ஆரம்பிக்கப்பட உதவி உள்ளது இந்தியன் வங்கியின் "புதிய தொழில் முனைவோர் வளர்ச்சி அமைப்பு" (NEW ENTREPRENEUR DEVELOPMENT AGENCY - NEDA). இத் திட்டத்தில் தொழில் துவங்கத் தேவையான 100 சதவீத நிதித் தேவையும் கட னாக வழங்கப்படுகிறது. இது வரை ரூ 25 கோடிக்கும் மேலாக இத்திட்டத்தில் கடன் கள் வழங்கப்பட்டுள்ளன. இத் தகைய இளைஞர்களை ஊக்கு விக்கும் பொருட்டு இப்படி நிதி உதவி பெற்று இயங்கி வரும் தொழிற்சாலைகளில் சிறந்தவைகளுக்குப் பரிசளிக் கும் முறையும் செயலாக்கப் பட்டு வருகிறது.

நிறைய இளைஞர்களுக்குத் தொழில் ஆர்வம் இருக்கும். அதைச் செயலாக்கும் தைரியம் இருக்காது. அத்தகையவர் களுக்கு ஒரு பயிற்சி அளிக்கும் வகையில் வங்கி தொழில் முனைவோர் முகாம்களைப் பல இடங்களில் நடத்தி ஆயிரக் கணக்கானவர் களுக்குப் பயிற்சி அளித்து உள்ளது. எந்த ஒரு முயற்சி யிலும் பெண்களின் பங்கு முழு அளவில் இருந்தால்தான் அது முழு வெற்றியடைய முடி யும். தொழில் முயற்சியிலும் அப்படியே. பாரதி சொல்லிய படி ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் வாழ்ந்திட முடி யும்; தொழில் துவங்கி வெற்றி யடைய முடியும். அங்கொன் றும் இங்கொன்றுமாகப் பெண்கள் தொழில்களைத் துவங்கியபோது இந்தியன் வங்கி புதிய தொழில் முனை யும் பெண்களுக்கு உதவிட ஒரு தனி அமைப்பை (WOMEN ENTREPRENEUR CELL) 1984இல் துவக்கியது. அத்தகைய அமைப்புகள் சென்னை, டில்லி, எர்ணாகுளம், கல்கத்தா முதலிய நகர்களில் செயல் பட்டு வருகிறது. இந்த அமைப்புகளில் பயிற்சி பெற்ற பெண்கள் அதிகாரிகள் பணி புரிகிறார்கள். இவை புதிய தொழில் துவங்கும் பெண்க ளுக்குத் தொழில் துவங்க வழி காட்டுவதுடன் அருகில் உள்ள இந்தியன் வங்கிக் கிளையில் அந்தப் பெண்கள் போதிய நிதி உதவி பெறவும் ஆவன செய்கின்றன. இது வரை 5000க்கும் மேற்பட்ட பெண்கள் இங்கு வந்து ஆலோ சனைகள் பெற்றுள்ளனர். அதில் கிட்டத்தட்ட 1500 பேர் ரூபாய் ஐந்தரை கோடி கடன் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

ஆர்வம் மிக்க பெண்களிடம் புதிய தொழில் துவங்கி வெற்றியடைய தன்னம்பிக்கை ஏற்படுத்தி, வழிமுறைகளைக் கூறும் வண்ணம் பயிற்சி வகுப்புகள், முகாம்கள், பெண்கள் பாலிடெக்னிக்குகள், கல்லூரிகள் முதலிய இடங் களில் நடத்தப் பெறுகின்றன.

இவை சிறு முதலீட்டுடன் உள்ள தொழில்களாய் இருப்ப தால் இவற்றின் தயாரிப்பு களைப் பெரும் செலவு செய்து விற்பனை உத்திகளைக் கையாண்டு விற்பனை செய்ய இயலுவதில்லை. எனவே இந்தியன் வங்கி நகரில் நடை பெறும் பொருட்காட்சிகளில் இந்தத் தயாரிப்புகள் காட் சிக்கு வைக்கப்படவும், விற் பனை பெருகவும், சிறுதொழில் வளரவும் உதவி செய்து வரு கிறது.

ஃ



திரு. பி.வி. சிவன் நாயர்

வித்தியாசமான நிறுவனம்

பொதுவாக நிதி நிறுவனங்கள் எல்லாமே, அனைத்து சமூகத்தினரையும் சேமிக்கத் தூண்டியும், வெகுமதித் திட்டங்கள் மூலம் கவர்ந்தும், 'அதிகபட்ச பலன்' வாயிலாக வரவேற்பு நல்கியும் தங்கள் வர்த்தகத்தைப் பெருக்கிக் கொள்வதுடன், மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து நாட்டின் நிதி வளர்ச்சிக்கே வழிகோலுகின்றன.

நிதி நிலைமைக்கு முக்கியத்துவம் தரும் அதே சமயம் ஆக்கபூர்வமான சமுதாய முன்னேற்றப் பணிகளையும் கருத்தில் கொள்ளும் நிறுவனம் என்ற பெருமையைப் பெறுவது, மெட்ராஸ் மோட்டார் ஃபைனான்ஸ் அன்ட் காரன்டி கம்பெனி லிமிடெட்.

1969இல் அறுபதாயிரம் ரூபாய் முதலுடன் ஒரு கூட்டு வியாபாரமாகத் துவக்கப்பட்டு ஆறே வருடங்களில் ரூபாய் ஆறரை லட்சத்திற்கு மேற்பட்ட மூலதனப் பெருக்கத்துடன், வரையறுக்கப்பட்ட ஒரு பொது நிறுவனமாக மாறி, தற்போது ஐந்துகோடி ரூபாய் மூலதனம் கொண்ட தனிப் பெரும் நிறுவனமாகப் பரிணமித்திருக்கிறது. தன் நிழலில் தன்னையும் சேர்த்து மொத்தம் 15 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட இருபத்தெட்டு இணை நிறுவனங்களுடன் ஓர் ஆல விருட்சமாகவே காட்சியளிக்கிறது இந் நிறுவனம். பங்குகள் வாயிலான இந்த மூலதனம் தவிர, பொதுமக்களின் வைப்புத் தொகை 35 கோடி ரூபாய் வங்கிகள் பிற நிதி நிறுவனங்கள் முதலீடு, செய்துள்ள வகையிலும், கடன் பத்திரங்கள் வகையிலுமாக ஐம்பது கோடி ரூபாய் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அறுபதாயிரம் பங்குதாரர்கள், இருபதாயிரம் பத்திரதாரர்கள், ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட வைப்புதாரர்கள், சுமார் பத்தாயிரம் வாடிக்கையாளர்கள் என்ற அளவில் பொதுமக்களுடன் இந் நிறுவனங்களின் உரிமையும் பரவலாகியுள்ளதையும் அறிக்கைகள் கூறுகின்றன. எளியவர்களுக்கும் ஏற்றபடி சிறுதொகைகளைச் சேமிக்கும் தொடர் வைப்பும், நிலை வைப்புதாரர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதியும், தனித்தன்மை கொண்ட சில திட்டங்கள். இவர்களின் முன்னேற்றத்திற்குக் காரணமான அமோக ஆதரவின் பின்னணி என்ன? தவணைமுறை நிதியுதவி மற்றும் லீஸிங் பிரதான செயல்பாடாக இருந்தபோதும், சமூக நல நோக்குடன் நிறைவேற்றப்பட்டு வரும் பல திட்டங்களே வெற்றிக்கு உறுதுணை.

திரிவேணி அகாடமி : கல்வித் துறையில், வர்த்தகத் துறை ஈடுபடுவது கேள்விப்படாத ஒன்று; அதுவும் தொன்மையான நம் குருகுல முறையின் சிறப்புகளையும், நவீன அணுகு முறையின் நல்ல அம்சங்களையும் ஒருங்கிணைத்து, ஒரு தலைமுறையினரின் ஏற்றமிகு எதிர்காலத்திற்கே அடிப்படை போடக் கூடிய தான ஒரு மாபெரும் கல்வி நிறுவனத்தை, ஒரு நிதி நிறுவனமே உருவாக்கி நடத்துவது என்பது புதுமைமிக்கது. சனாதன தர்ம குருகுலம் லிமிடெட் என்ற இணை நிறுவனத்தினரால் தோற்றுவிக்கப்பட்டு நடத்தப்படும் திரிவேணி அகாடமி (கங்கை, யமுனை, சரஸ்வதி என மூன்று பள்ளிகளைக் கொண்டது) செங்கை அண்ணா மாவட்டம், சிங்கப் பெருமாள் கோயில் அருகே வடக்குப்பட்டு கிராமத்தில் இயற்கையின் எழிலார்ந்த சூழலுடன், எண்ணூறு ஏக்கர் நிலப்பரப்பில், ஒரு நகருக்குரிய வசதிகள் அனைத்துடன், ஐந்தாயிரம் மாணவ - மாணவியருக்கு, கல்வியில் தேர்ச்சி (சி.பி.எஸ்.சி. முறையில் ப்ளஸ் டூ வரை) தருவது மட்டுமின்றி, பாரம்பரியக் கலைகளான யோகாசனம், குதிரையேற்றம், இன்றைய பயிற்சிகளான நீச்சல், ரோலர் ஸ்கேட்டிங் போன்ற பல வகைகளிலும் அவர்களுடைய ஆற்றலை வளர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. மாணவர்களும், மாணவியரும் தனித்தனியே இங்கேயே தங்கிட ஆசிரியரின் மேற்பார்வையில் இயங்கும் வசதிமிக்க விடுதிகளும், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கான குடி

மக்களுக்கு உதவும் நிதி நிறுவனங்கள்



பொது மக்களிடமிருந்து நிதி நிறுவனங்கள் டெபாசிட்டுக்கள் பெற்று, லீசிங் மற்றும் தவணைமுறை நிதியுதவி வர்த்தகம் செய்கின்றன. டெபாசிட் செய்தவர்களுக்கு ரிசர்வ் வங்கி நிர்ணயிக்கும் வட்டித் தொகையை, இந்த நிதி நிறுவனங்கள் கொடுக்கின்றன. சில நிறுவனங்கள் கூடுதல் வட்டியும் கொடுக்க முன் வருகின்றன. டெபாசிட் செய்ய விரும்பும் பொதுமக்கள் நம்பகத்தன்மையுள்ள நிறுவனங்களையே தேர்ந்தெடுப்பார்கள்.

வேகமாக வளர்ந்து வரும் நிதி நிறுவனங்களுள் பி.எல். ஃபைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மெண்ட் என்கிற இந்த நிதி நிறுவனமும் ஒன்று. இதன் சிறந்த நிர்வாகத்திற்கும், உறுதியான வளர்ச்சிக்கும் இந்த நிதி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருக்கும் இருவரைக் குறிப்பிட்டாலே போதும்.

முதலாமவர், இதன் சேர்மன் ஓ.வி. குருவில்லா. வருமான வரி இலாகாவில் ஓர் உயர் பதவி வகித்தவர். மத்திய நேர்முக வரிகள் வாரியத்தில் தலைவராகப் பதவி வகித்தவர். பல வர்த்தக நிறுவனங்களின் டைரக்டர்கள் குழுவில் இருப்பவர்.

← செயல்முறை இயக்குநராக இருக்கும் என்.ஜே. ரத்னாகர், கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக சார்ட்டர்ட் அக்கவுண்ட்டென்டாகத் தொழில் நடத்தியவர். அனுபவம் மிக்கவர். பன்னாட்டுக் கம்பெனிகளில் உயர் பதவி வகித்த அனுபவமும் உண்டு. புஷ் போக் ஆலன் (இந்தியா) லிமிடெட், நிறுவனத்தில் வைஸ் பிரசிடென்ட்டாகவும் பணியாற்றியிருக்கிறார்.

கம்பெனியின் இயக்குநர் குழுவில், இவ்விருவருடன் கூட, திரு. டி. துலிப் சிங், திரு. டி.ஜி. ராஜன், திரு.என்.சி. சரபேஸ்வரன் திரு. கே. ராமன், திரு.எம். நாராயண மூர்த்தி ஆகியவர்களும் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் இத் துறையில் நீண்ட கால அனுபவம் உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1984ஆம் ஆண்டு கம்பெனி பொதுமக்களிடமிருந்து பங்குத்தொகை பெற்றுத் தன் வியாபார எல்லையை விரிவுபடுத்தத் தொடங்கிற்று. இந்த ஆண்டு பிப்ரவரி மாதம், பத்து ரூபாய் விலையில் முப்பது லட்சம் பங்குகள் விநியோகித்தது. எல்லாப் பங்குகளும் உடனடியாக விற்பனையாகிவிட்டன என்பது குறிப்பிட வேண்டிய விஷயம்.

சீராக வளர்ந்து வரும் சில சிறந்த நிதி நிறுவனங்களுள், பி.எல். ஃபைனான்சும் ஒன்று!

— ஜனகன்

யிருப்புகளும் அமைந்துள்ளன. பத்து மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதம் படிப்பில் மட்டுமல்ல, ஓவியம், இசை, நடனம் போன்ற நுண்கலைகளிலும்கூடப் பின்பற்றப்படுகிறது. நூலகம், வாசகசாலை, எல்லா வகை விளையாட்டுக்கள், அரங்கங்கள், தடகளங்கள், திரைப்படம் - தொலைக்காட்சி போன்ற பொழுதுபோக்கு சாதனங்கள், மனமகிழ் அமைப்புகள், விசாலமான உணவுக் கூடங்கள், மருத்துவமனை, பிரார்த்தனைக் கூடம், வெவ்வேறு மதத்தினருக்கான வழிபாட்டுத் தலங்கள், தச்சுப் பணிமனை, சிற்பப் பயிற்சிக் கூடம் - எதிலும் குறைவில்லை.

முதலீடு செய்தவருக்கு லாபம் ஈட்டக் கூடிய வகையில், ஒரு சமூக நலத்திட்டத்தைத் திறம்படச் செயலாற்றும் இந்தத் துணிவுமிக்க முயற்சியில், கல்வி நிபுணர்கள் நிர்வாக இயலார், தொழில் வல்லுநர்கள் போன்றோர் பொறுப்பேற்றுள்ள இயக்குநர் குழு வழி நடத்துகிறது. இங்கே பயிலாத இளம் சமூகத்தினருக்கும், பயனுள்ள கோடை முகாம்கள்கூட உண்டு

ரூரல் டெய்ரி டெவலப்மெண்ட் அண்ட் ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் :

கோழி வளர்ப்பு, பால் பண்ணை, வீட்டு வசதி, சமையல் எண்ணெய் உற்பத்தி, ஏற்றுமதிக்கான கால்நடைத் தீவனத் தயாரிப்பு போன்ற ஊரக வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கென அமைக்கப்பட்ட இந்த இணை நிறுவனம், பாலாற்றங்கரையில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் சவுக்குத் தோப்பை அமைத்து, அந்தச் சவுக்கு மரங்களின் உரிமையைப் பொது மக்களுக்கு விற்று, வளர்ந்த சவுக்கு மர விற்பனையால் கிடைக்கும் நிகர லாபத்தில் அவர்களுக்கும் பங்கு தரும் ஒரு நூதனச் செயலாக்கத்தில் தற்போது முனைந்துள்ளது. இந் நிறுவனங்கள் அனைத்தின் வெற்றிக்கும் முன்னோடி நிறுவனம் MMFGயின் நிர்வாக இயக்குநர் திரு. பி.வி. சிவன் நாயர் அவர்களின் திறமிகு உழைப்பு, உறுதி செய்கிறது.

— சாம்ராட் •

ஸ்நேகதாரா



டாக்டர் பி. மருதப்பிள்ளை

தமிழகத் தொழிலதிபர்களுள் டாக்டர் பி. மருதப்பிள்ளை ஒரு முக்கிய பிரமுகர். அருணா 'குருப்'பின் சேர்மன். இவருடைய 'குருப்' நிறுவனங்களுள் அருணா ஷுகர்ஸ் அன்ட் என்டர்பிரைசஸ் லிமிடெட் ஒரு முன்னோடி நிறுவனம். இதன் துணை நிறுவனம், அருணா ஷுகர்ஸ் பைனான்ஸ் லிமிடெட். இவர்களும் லீசிங், தவணை முறை நிதியுதவி, பில் டிஸ்கவுண்டிங் ஆகிய துறைகளில் வர்த்தகம் செய்கிறார்கள்.

டாக்டர் பி. மருதப் பிள்ளையின் அருணா ஷுகர்ஸ் (சர்க்கரை ஆலை) தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய ஆலையாகும். வெள்ளி விழாக் கண்ட தொழிற்சாலை இது.

அருணா ஷுகர்ஸ் ஃபைனான்ஸ் லிமிடெட், நிதித்துறையில் நிர்வாக நுணுக்கம் தெரிந்த நிபுணர்களின் குழுவினரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. டாக்டர் பி. மருதப்பிள்ளை இதன் சேர்மன். நிர்வாக இயக்குநர் திரு எம். சிவராம்.

இவர்களும் பொதுமக்களிடமிருந்து டெபாசிட்டுக்கள் பெற்றுக் கொண்டு வட்டி வழங்குகிறார்கள். குறைந்த பட்சம் ஐயாயிரம் ரூபாய் டெபாசிட் செய்பவர்களுக்கு ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள வட்டி வழங்குகிறார்கள். எல்லா நிதி நிறுவனங்கள் போன்றே இவர்களுடைய விதிமுறைகள் இருந்தபோதிலும், மற்ற நிதி நிறுவனங்கள் செய்யாத ஓர் அருமையான சமூகப் பணியைச் செய்கிறார்கள். மனிதாபிமானம் மிகுந்த இந்தத் தொண்டு பற்றிச் சில விவரங்கள்:

அருணா ஷுகர்ஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்டிடம் ஸ்நேகதாரா டெபாசிட் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தில் ரூ. 5000/–ம் அதற்கு மேல் ரூ 1000 /– த்தின் மடங்குகளாக டெபாசிட் செய்பவர்களுக்கு, மனிதாபிமானம் மிக்க ஓர் உதவி செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறார்கள். இந்த டெபாசிட்டுதாரர், மன வளர்ச்சியில்லாத ஒரு குழந்தையைச் சிபாரிசு செய்தால் அந்தக் குழந்தையின் ஒரு மாத கால பராமரிப்புச் செலவை இந்த நிறுவனமே ஏற்றுக் கொள்கிறது. இந்த நல்ல காரியத்திற்காக, ஸ்பாஸ்டிக் சொஸைட்டி ஆஃப் இந்தியா என்ற அமைப்புடன் ஓர் ஏற்பாடு செய்து கொண்டுள்ளது.

மன வளர்ச்சி குன்றிய குழந்தையின் புனர்வாழ்வுக்கான அமைப்பான ஸ்பாஸ்டிக் சொஸைட்டி ஆஃப் இந்தியாவின் தலைமையகம் பம்பாயில் இருக்கிறது. சென்னையில், இதன் மையம், தி. நகரில், 6. ராஜாம்பாள் தெரு என்ற இடத்தில் இயங்கி வருகிறது. இங்கு இத்தகைய குழந்தைகளுக்குக் கல்வி, தொழில், மருத்துவ் சேவை போன்ற மனிதாபிமானம் மிக்க தொண்டுகளைச் செய்கிறார்கள்.

ஸ்நேகதாரா திட்டத்தில் சேர்வதால் டெபாசிட்தாரர்கள், தங்களுக்குக் கிடைக்க வேண்டிய வட்டித் தொகையில் ஒரு பைசாவைக் கூட இழக்க வேண்டியதில்லை. டெபாசிட்தாரர்கள் சார்பாக, கம்பெனியே முன்வந்து செய்யும் அரிய பணி இது.

இந்தத் திட்டத்தில் இன்னமும் நிறைய டெபாசிட்தாரர்கள் சேர்ந்து, கம்பெனியின் இந்த அரிய, மனிதாபிமானம் மிக்க தொண்டிற்குத் துணை நிற்க முன் வரவேண்டும். –ஜனகன்

மன வளர்ச்சி குன்றிய குழந்தையின் மறுவாழ்விற்கு உதவ நல்ல திட்டத்தை அறிவித்து அருமையான சமுகப் பணி செய்கிறார்கள். கல்வி, தொழில், மருத்துவ சேவை போன்ற மனிதாபிமானம் மிக்க தொண்டுகளைச் செய்கிறார்கள்.

வளமான வாழ்விற்குச் சில வரித் திட்டங்கள்

காய்க்கின்ற மரத்திற்குத் தான் கல்லடி! ஓடுகிற குதிரைக்குத்தான் சாட்டையடி! சம்பாதிக்கிறவர்களுக்குத்தான் வரிச்சுமை! வரி விதிப்பு விகிதங்களை நினைத்தால் சம்பாதிக்கும் ஆசையே போய்விடும். அந்த அளவிற்கு நம் நாட்டில் வரிகள் விதிக்கப்படுகின்றன.

நூற்றாண்டுகள் பல மாறினாலும் அடிப்படையில் பொருளாதாரமும், பொருளாதாரக் கொள்கைகளும் அப்படியே தான் இருக்கின்றன. மக்களிடமிருந்து அன்று மன்னர் வரி வசூலித்தார். இன்று அரசு வசூலிக்கிறது. வரிவசூல் இல்லையேல் பொருளாதாரமே இல்லை.

வருமானவரி, செல்வவரி, அன்பளிப்பு வரி என்று வரிகளுக்குக் கணக்கே இல்லாமல் போய்விட்டது. இத்தகைய வரிச்சுமைதான் கள்ளக் கடத்தல், பதுக்கல், கறுப்புப் பணப் புழக்கம் போன்ற பல குற்றங்களுக்குக் காரணமாகிறது.

பொருளாதார மேம்பாடும், தொழில் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று ஆதாரமானவை; பின்னிப் பிணைந்தவை.

இருப்பவர்களிடமிருந்து பிடுங்கி இல்லாதவர்களுக்குக் கொடுப்பதென்பது சரியான வாதமல்ல. இல்லாதவர்களையும் இருப்பவர்களாக ஆக்குவதே உண்மையான பொருளாதார வளர்ச்சியாகும்.

இவ்வருடத்திய பட்ஜெட்டில் டாக்டர் மன்மோகன் சிங் பற்பல வரிச்சலுகைகளை அறிவித்துள்ளார். டாக்டர் ராஜா செல்லையா கமிட்டியின் பரிந்துரைகளைத் தாம் ஏற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார் திரு சிங். வரி செலுத்துபவர்களுக்கு உண்மையிலேயே பயன்படும் வகையில் இன்னும் சலுகைகள் அறிவிக்கப்படுமேயானால் பொருளாதாரம் பெருமளவு மேம்படும்.

80 கோடி மக்கட் தொகையைக் கொண்ட நம் நாட்டில் வருமான வரி கட்டுபவர்களின் எண்ணிக்கை எழுபது லட்சத்துக்கும் குறைவே! ஆண்டிற்கு ஏறத்தாழ ஒன்பது சதவீத தொழில் வளர்ச்சியைக் கொண்டுள்ள இவ்வளவு பெரிய நாட்டில் எழுபது லட்சம் மக்கள் மட்டுமே வரி செலுத்துகிறார்கள் என்றால், மற்றவர்களுக்கு வருமானமே இல்லை என்பதல்ல பொருள். அவர்கள் வரி ஏய்ப்புச் செய்கிறார்கள் என்பதே உண்மை!

வருமானவரி பற்றிய புள்ளி விவரங்களைப் பார்த்தால், ஆச்சரியகரமான விவரங்கள் தெரியவரும். பம்பாயில் வீதியோரங்களில் பான்பீடா கடை வைத்திருப்பவர்கள் ஒரு நாளைக்கு இரண்டாயிரம், மூவாயிரம் என்று சம்பாதிக்கிறார்களாம்! அதேபோல தெருவோரத்தில் மசால் தோசை, பானிபூரி, போன்றவை தயாரித்து விற்பவர்களும் ஏராளமாகச் சம்பாதிக்கிறார்களாம். இவர்களுக்கு நிரந்தரக் கடைகள் இல்லாததால் இவர்கள் வருமானங்களுக்கு வரிவிதிப்பு இல்லை. அதேபோல் கிராமப் புறங்களில் பெரிய பண்ணைக்காரர்களும், விவசாயிகளும் வரிச்சலுகை என்ற பெயரில் ஏராளமாக சம்பாதிக்கிறார்கள். இவர்களெல்லாம் அரசு விரிக்கும் வருமான வரி வலையிலிருந்து தப்பி வாழ்கிறார்கள்.

இந்த வருட பட்ஜெட்டில் இதுபோன்ற சில்லறை வியாபாரிகளையும் வருமான வரி வலைக்குள் கொண்டு வருவதற்காக டாக்டர் சிங் ஆண்டுக்கு ஐந்து ஆயிரம் முதல் ஐந்து லட்சம் வரையிலான வர்த்தகக் கொள்முதல் உள்ள வியாபாரிகள் அனைவரும் ரூ 1400 வரியாகக் கட்ட வேண்டும் என்ற விதிமுறையைக் கொண்டு வந்துள்ளார். இதனால் அரசு வருமானம் கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வரி ஏய்ப்புகளுக்கு அரசும் ஒரு காரணமாகிறது. சம்பாதனையின் பெரும் பகுதியை வரியாகக் கேட்கும்போது யாருக்கானாலும் ஏமாற்றவே தோன்றும். இது மனித இயல்பு.

இருப்பவர்களிடமிருந்து இல்லாதவர்களுககுக் கொடுப்பதென்பது சரியான வாதமல்ல. இல்லாதவர்களையும் இருப்பவர்களாக ஆக்குவதே உண்மையான பொருளாதார வளர்ச்சியாகும்.

ஆனால் இப்பொழுதெல்லாம் காலம் மாறிவிட்டது. செல்வந்தர்களும், பெரும் புள்ளிகளும் மிக அழகாகத் திட்டமிட்டு வரிப்பணத்தை முதலீடு செய்கிறார்கள். மாட்டிக் கொள்ளாத வகையில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இந்த முதலீடு நடக்கிறது. இதற்கான வழிமுறைகளைச் சொல்லித்தர பொருளாதார வல்லுநர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் இந்த நிபுணர்களின் ஆலோசனைப்படி பெரும்பாலும் வரிப்பணம் தேசிய வளர்ச்சித் திட்டங்களில்தான் முடக்கப்படுகிறது என்பது ஓர் ஆறுதலான விஷயம். வரியாகச் செலுத்தினால் முழுத் தொகையும் அரசாங்கத்திற்குப் போய்ச் சேருகிறது. எல்.ஐ.சி., யூனிட் டிரஸ்ட், சிறு சேமிப்புத் திட்டம் போன்ற பல்வேறு அரசு நிறுவனத் திட்டங்களில் பணம் முடக்கப்படும்போது வரி விலக்கும் கிடைக்கிறது. சம்பாதிப்பவருக்குப் பெரும் பகுதிப் பணம் சேமிப்பாகவும் மாறுகிறது.

ஆனால் இந்த வருட பட்ஜெட்டில் வருமானவரிச் சட்டம் 80CCயின் கீழ் உள்ள சில சலுகைகளை டாக்டர் மன்மோகன் சிங் நீக்கிவிட்டதால், இதுபோன்ற முதலீடுகளுக்கு அர்த்தமில்லாமல் போய்விட்டது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட இருப்பவர்கள் மத்தியதர வர்க்கத்தினர்தான். இதுநாள் வரையில் அவர்கள் வரி கொடுப்பதற்குப் பதிலாகச் சேமித்து வந்தார்கள். இனி மத்தியதரக் குடும்பங்களிடையே சேமிக்கும் பழக்கமும் குறைந்துவிடும். தேசிய சேமிப்பு நிதிக்குக் கணிசமாகக் கிடைத்து வந்த வைப்பு நிதியும் இனி குறைந்து விடும்.

புது பட்ஜெட்டின்படி வருமானவரி இனி மூன்று நிலைகளில் வசூலிக்கப்படும். 50 ஆயிரம் வரையிலான வருமானத்திற்கு வரி 20 சதவீதமாகவும், ஒரு லட்சம் வரை 30 சதவீதமாகவும், அதற்கு மேல் 40 சதவீதமாகவும் வசூலிக்கப்படும். வரி விகிதம் வெவ்வேறு நிலைகளில் வேறுபடுகிறது. வருமானவரி கணக்கைக் கொடுக்கும்போது குடும்பத்தினர் தனித் தனியாகத் தங்கள் வருமானத்தைப் பிரித்துக் கணக்குக் காட்டுவார்கள். இதனால் தனி நபர் வருமானத்திற்கு மட்டுமே வரி வசூலிக்கப்படும். கூட்டுக் குடும்பமாக இருந்தாலும் வரி விகிதம் வெகுவாகக் குறைந்து, அரசுக்கு நியாயமாகச் சேர வேண்டிய வரித்தொகை சேராது. அதேபோல் வருமானத்தைப் பிரித்துக் காட்டுவதற்காகப் பெரிய கம்பெனிகள் சிறு சிறு சகோதர நிறுவனங்களை நிறுவி, வருமானத்தைப் பகிர்ந்து கணக்கிட்டு, வரிவிதிப்பிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். சம்பாதிக்கவும், சேர்க்கவும், சுதந்திரமாகவும், சுகமாக வாழவும், வழி செய்யும் வகையில் வரிவிதிப்புகள் அமைய வேண்டும்.

வரி கொடுப்பதைச் செல்வந்தர்கள் ஒரு பெருமையாகவும் கடமையாகவும் கருதி நேர்மையாக வரித்தொகையைச் செலுத்துவார்களேயானால் அரசின் வருவாய் பெருகி, அபிவிருத்தித் திட்டங்கள் பயனடையும். ஏழைகள் பயனடைவார்கள். சமுதாயம் சீரடையும். — வனிதா •




சினிமா எக்ஸ்பிரஸ், 'சாலிடெர்' நிறுவனத்துடன் சேர்ந்து 1991 ஆம் வருடத்திற்கான வாசகர்கள் மத்தியில் நடத்திய சிறந்த நடிகர், நடிகைகளின் தேர்வு - பரிசளிப்பு விழாவினை மிகச் சிறப்பாக ஏப்ரல் 22ஆம் தேதி கொண்டாடியது.

இந்த விழாவின் போது 'சாலிடெர்' நிறுவனம் வேறு வேறு துறைகளைச் சார்ந்த சிறந்த சாதனையைப் புரிந்தவர்களுக்கு சிறப்பு விருதாகிய 'சாலிடெர் எக்ஸலன்ஸ்' விருதை வழங்கியது. •

← 12ஆவது 'சினிமா எக்ஸ்பிரஸ்' விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு திரு ஏ.எஸ். ரவி பிரகாஷ் (டைரக்டர் சாலிடெர் (இ) லிமிடெட்) பொன்னாடைப்போர்த்தினார். •

எல்லாருக்கும் ஒரு வீடு



சமுதாயத்தில் நிலவிவரும் பொருளாதாரச் சூழ்நிலையில் அதிகமாகப் பாதிக்கப்பட்டு வருவது கீழ்மட்டத்து, மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள்தாம். 'அடிமட்டத்தில் இருந்து மனித தேவைகளைப் பூர்த்தி செய்யும்' தேசியக் கொள்கைக்கு ஆதரவாக, பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ளவர்களுக்கும், நலிந்த பிரிவினருக்கும் வீடு அமைத்துக் கொடுக்கும் உன்னத லட்சியம் கொண்ட திரு ஆர்.மாரிமுத்து அவர்களின் 'அறிவுக் குழந்தையான' 'இந்தியா ஹவுஸிங் பைனான்ஸ் அண்ட் டெவலப்மெண்ட்ஸ் லிமிடெட்' என்ற மாபெரும் நிறுவனம் வீடில்லாதவர்களுக்குக் கடன் வழங்கி அவர்களுக்கு நிலையான கூரையை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது. இவருக்கு 'வலது கரமாக' உதவி வரும் திரு ஆர்.கைலாசம் இந்த நிறுவனத்தின் பொது மேலாளர்.

வீடு வாங்க உங்களிடம் பொருளுதவி பெற அடிப்படைத் தகுதிகள் என்னென்ன? யாருக்கெல்லாம் உதவியளிக்கிறீர்கள்? விவரமாகக் கூறுங்கள்.

புதிதாகக் கட்டிய வீடுகள், ஃப்ளாட்டுகள் ஆகியவற்றை வாங்க நிதியுதவி அளித்து வருகிறோம். தனி மனிதனுக்கு, கம்பெனிகளுக்கு, கோவாபரேடிவ் சொஸைட்டிகளுக்கு, மற்றும் வீடு கட்டித்தரும் நிறுவனங்களுக்குக்கூட உதவி அளிக்கிறோம். எங்களிடம் கடன் பெறுபவர்கள் வேலையில் இருப்பவர்களாக இருந்தால் அவர்களுடைய சம்பளத்துடன் 30 மடங்குகள் கூட்டி வரும் தொகையைக் கடனாக அளிக்கிறோம்.

எவ்வளவு காலகட்டத்தில் கடன் திருப்பித் தரவேண்டும்?

அதிகபட்சம் 20 வருடங்கள் வரை கடனைத் திருப்பித் தரலாம். கடன் வாங்குபவர், வயது, சம்பளம், ஓய்வுபெறும் தேதியை நிர்ணயித்துத் தகுதியின் அடிப்படையில் வழங்குகிறோம். எங்கள் நிறுவனத்தின் மூலம் வாங்கப்படும் மனையோ, வீடோ அல்லது நிலமோ அதனை எங்களிடம் அடமானம் வைக்க வேண்டும். இதற்குத் தகுந்த இன்ஷ்யூரன்ஸ் எடுத்துக் கொள்ள வேண்டும். ப்ரீமியமும் செலுத்த வேண்டும். இவையனைத்தும் வீடுகள் / நிலம் வாங்குபவர்களின் நலனைக் கருத்தில் கொண்டே செய்யப்படுகின்றன.

இதைத் தவிர வேறு என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்?

எங்களிடம் 'பிக்ஸட்' மற்றும் 'க்யூமுலேடிவ்' டெபாஸிட்ஸ் ஸ்கீம் உள்ளன. எங்களிடம் டெபாசிட் கணக்கு வைப்போருக்கு வீட்டுக் கடன் பெறுவதில் முன்னுரிமை அளித்து வருகிறோம்.

எங்களுடைய மற்றொரு முக்கிய திட்டமான 'தேசிய வீட்டு வசதி வங்கியின்' 'ஹோம் லோன் அக்கவுண்ட்' (H.L.A) கீழ் 5 வருடங்கள் தொடர்ந்து முறையாகச் சேமித்தால் சேமிப்பை விட அதிகபட்சமாக 4 மடங்கு வரை எங்களிடம் வீட்டுக் கடன் பெறலாம்.

வீட்டுக் கடன் உதவியோடு உங்கள் நிறுவனமே வீடும் கட்டித் தருகிறதா?

எங்களுடைய அசோசியேட் நிறுவனமான 'ஸதர்ன் ஹவுஸிங் கார்ப்பரேஷன் லிமிடெட் கம்பெனி' வீடுகளைக் கட்டித் தருகிறது. மிகவும் உதவும் நோக்கத்தோடு இது செயல்பட்டு வருகிறது. இவர்களுடைய திட்டத்தின் கீழ் பல்லாவரம், கோவை, விசாகப்பட்டினம், ஊரப்பாக்கம், கொரட்டூர், கும்பகோணம் போன்ற நகரங்களில் இதுவரை பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டு வந்திருக்கின்றன. "ட்ரான்ஸ் இந்தியா ரிசார்ட்" என்ற மற்றொரு அசோசியேட் நிறுவனமும் உதகையில் ஒரு சிறந்த உல்லாச ஸ்தலமாக உருவாகியுள்ளது. எல்லாவித நவீன வசதிகளும் கொண்ட இந்த ஓய்வு ஸ்தலத்தில் அங்கு சென்று தங்குபவர்கள் மனதை மகிழ்விக்க விசேஷ அக்கறை எடுக்கப்படுகிறது.



ஆர்.மாரிமுத்து



ஆர்.கைலாசம்

உங்கள் நிறுவனத்திற்குக் கிளைகள் உண்டா?

இந்தியாவின் 7 மாநிலங்களில் முழுவதும் 46 கிளைகள் உள்ளன. இன்னும் 3 மாதத்திற்குள் மேலும் 30 கிளைகள் திறக்கும் எண்ணம் உள்ளது. ○

அது ஒரு குபேர உலகம்...

காலை நேரம். நெடிதுயர்ந்த அந்தக் கட்டடத்தின் மூன்றாவது தளத்தின் விசாலமான முன் அறையில் சுறுசுறுப்பாக வியாபாரம் தொடங்குகிறது. கையில் கத்தை கத்தையாகக் காகிதங்களுடன் தரகர்கள், அவர்களின் உதவியாளர்கள் என்று பரபரப்பாகச் சுற்றி வருகிறார்கள். அவர்கள் போடும் கூச்சல் காதைப் பிளக்கிறது. ஆயிரங்களும், லட்சங்களும் சரளமாகப் புரள்கின்றன. அது ஒரு குட்டி குபேர உலகம்போல் காட்சி அளிக்கிறது...

மெட்ராஸ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் என்று அழைக்கப்படுகிற சென்னை பங்கு மார்க்கெட்டில் நாள் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்கல் வாங்கல் லேவாதேவி நடைபெறுவதாகக் கேள்விப்பட்ட போது மிகவும் பிரமிப்பாக இருந்தது.

இந்தியாவில் மொத்தம் 21 இடங்களில் பங்கு மார்க்கெட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. இதில் முதல் முதலாக நிறுவப்பட்டது 1875 இல் பம்பாயில்தான். சென்னை ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் 1937இல் நிறுவப்பட்டது. வெறும் புரோக்கர்களின் அசோசியேஷனாக நிறுவப்பட்ட இந்தப் பங்கு மார்க்கெட்டில் இப்போது 664 கம்பெனிகளுக்கும் மேலாக பதிவு செய்யப்பட்டு 183 தனிநபர் உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இந்த வருட பட்ஜெட் அறிவிப்பிற்குப் பிறகு அநேகமாக எல்லா கம்பெனிகளின் பங்குகளும், பங்கு மார்க்கெட்டில் விண்ணை எட்டும் விலை உயர்வை எய்தி வருகின்றன. விலை ஏற்றத்திற்குக் காரணம் என்ன? இதனால் தனிமனிதர்கள் பாதிக்கப்படுவார்களா? பொருளாதாரம் பாதிக்கப்படுமா?

மெட்ராஸ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் எக்ஸிக்யூடிவ் டைரக்டர் திரு. எஸ். இராமநாதன் விளக்கம் அளிக்கிறார்.

ஷேர்களின் விலை உயர்விற்குப் பல்வேறு காரணங்களைக் கூறலாம்.

பர்மிட், லைசென்ஸ் முறைகள் தளர்த்தப்பட்டிருப்பதாலும், சர்வதேசச் சந்தையில் இந்திய ரூபாயை அறிமுகப்படுத்தி உள்ளதாலும், வருமானவரிச் சலுகைகள் நீக்கப்பட்டிருப்பதாலும், அந்நியச் செலாவணியில் நிதி நிலைமை அபிவிருத்தி அடைந்து வருவதாலும், பங்கு மார்க்கெட் உயர்வடைந்து வருகிறது.

வருமானவரிச் சலுகைகள் நீக்கத்தால் மத்தியதர வகுப்பினர் பாதிக்கப்படுவர் என்பது உண்மையல்ல. வரி செலுத்துபவர்கள் வரி செலுத்தியது போகப் பாக்கி எஞ்சியுள்ள பணத்தை இதுநாள் வரையில் கட்டாயத்தின் பேரில் தேசிய சேமிப்புகளில் முதலீடு செய்து வந்தனர். ஆனால் இப்போது ஷேர்களில் முதலீடு செய்ய முன் வருகிறார்கள். இதனாலும் பங்குகளின் மதிப்பு வெகுவாக உயர்ந்து வருகிறது. இதுநாள் வரை பங்கு மார்கெட் பற்றி மத்தியதர மக்களிடையே நிலவி வந்த பயம் ஓரளவு நீங்கியிருப்பதும் இவ்வளர்ச்சிக்குக் காரணமாகும்.

1980களில் மெட்ராஸ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் நாள் ஒன்றுக்குக் கொடுக்கல் வாங்கல் லேவாதேவி ஐந்து லட்சமாக மட்டுமே இருந்தது. இப்போது மார்ச் இறுதியில் தொடங்கி ஏப்ரல் முதல் வாரத்திற்குள் அதுவே ரூ 40 கோடியை எட்டியிருப்பது மலைப்பிற்குரியதாகும். கீழ்க்கண்ட அட்டவணையில் இந்த விவரம் தெளிவாகத் தெரியும்.

பங்கு மார்க்கெட்டில் அபரிமிதமான வளர்ச்சி என்றால் கம்பெனிகளின் நிதி நிலைமை அபிவிருத்தி அடைகிறது என்பது பொருள். கம்பெனிகளின் அபிவிருத்தி என்பது தொழில் அபிவிருத்தியே! இந்தத் தொழில் அபிவிருத்தியால் வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்து, உற்பத்தியம்

தேதி	வர்த்தகபரிமாற்றங்களின் எண்ணிக்கை	பங்குகளின் எண்ணிக்கை	பங்குகளின் மதிப்பு (ரூபாய்)
29.2.92	2948	807862	178601619.00
02.3.92	7853	1772457	351996881.00
03.3.92	9951	2053325	421200439.00
24.03.92	10698	2459193	495344032.00
25.03.92	10108	2447272	493717814.00
31.03.92	8644	2075674	506437287.00
03.04.92	7207	1507804	301535821.00
06.04.92	8962	1747788	444881732.00

வருமானமும் பெருகி, தனி மனித மற்றும் சமுதாய பொருளாதாரத் தன்னிறைவை வெகு விரைவில் அடையலாம்.

கறுப்புப் பண வளர்ச்சிக்கும், வரி ஏய்ப்பிற்கும் ஷேர் மார்க்கெட் வாய்ப்பளிக்கிறது என்பது சரியான வாதமல்ல. ஷேர்களில் முதலீடு செய்யப்படுகிற பணம் தொழில் வளர்ச்சிக்கே உபயோகப் படுத்தப்படுகிறது என்பதால் கறுப்புப் பணம் பற்றியோ, வரி கொடாமை பற்றியோ விவாதிப்பதில் அர்த்தமே இல்லை. விவசாயம், மற்றும் பல்வேறு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் ஆலைகளைப் போன்று இந்தப் பங்கு மார்க்கெட்டும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் ஓர் அங்கமாகும்.

பிக்சட் டெபாஸிட்டுகளிலும் மற்ற சேமிப்புத் திட்டங்களிலும் முதலீடு செய்யப்படுகிற பணத்தை எடுக்க வேண்டுமென்றால் உரிய காலம் வருகிற வரை காத்திருக்க வேண்டும். அல்லது இடையில் எடுத்தால் வட்டிப் பணம் நஷ்டமாகும். ஆனால் பங்கு மார்க்கெட்டில் போடப்படும் பணத்தை எப்போது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். திரும்ப முதலீடும் செய்யலாம்.


– வனிதா

வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள்

தனி உடைமையாய் இருந்து வந்த நிதியும் செல்வமும் பயன்பெறாமலேயே பழங் காலத்தில் இருந்தன. அவரவரது செல்வச் செழுமையைக் காட்டிக்கொள்ள முடிந்ததே தவிர அந்தச் சேமித்த பொருளால் எந்தப் பயனும் இல்லாது போயிற்று. காலப்போக்கில் பணத்தின் பயன் நில்லாமையால் அதாவது செலாவணியில் தான் - பணப் புழக்கத்தில்தான் உள்ளது என்பதை மனித இனம் கண்டுகொண்டது. அப்போதுதான் பண்டமாற்று முறை மாறி அனைவரும் அகில உலகமும் ஏற்றுக் கொள்ளத் தக்க பணச் செலாவணி முறை தோன்றியது. பணம் உடையவர்கள் இல்லாதவர்களுக்குக் கடன் வழங்கும் முறை அதையடுத்த காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். பணம் இல்லாதவன் உடையவனிடம் சென்று தனக்கு வேண்டிய பொருளைப் பெறவும், அதன் வழி லாபம் ஈட்டவும், கடனைத் திரும்பச் செலுத்தவும் ஆன முறை உலகத்தின் எல்லா நாடுகளிலும் தோன்றிப் பரவியது. இப்படித் தனி மனிதர்கள் தமது பொருளை வழங்கிவந்த முறை மேலும் வளர்ந்து நிறுவனப் பரிமாணம் பெற்றபோதுதான் வங்கித்துறை வளர்ச்சி பெறத் தொடங்கியது.

இது ஒருபுறம் அமைய, பலபேர் சேர்ந்து தமது சின்னஞ்சிறு மூலதனங்களால் ஒரு பெரிய கம்பெனியை உருவாக்கும் மற்றொரு துறையும் வளர்ந்தது. இந்த வகையில் பற்பல நிதி நிறுவனங்கள் தோன்றின. நம் நாட்டிலுள்ள ஏராளமான மனித வளத்திற்கும் தொழில் வளத்திற்கும் ஏற்ற எல்லா நிதித் தேவைகளையும் வங்கித்துறையினால் நிறைவு செய்ய இன்னும் இயலாதிருக்கின்றது. இந்நிலையைப் புரிந்து கொண்டு எண்ணற்ற நிதி நிறுவனங்கள் தனியார் துறையில் தோன்றி இயங்கி வருகின்றன.

வங்கிகள், வங்கி நிறுவனங்கள் என்று வரையறுக்கப் பெறுவதுபோல, தனியார் நிதி நிறுவனங்களும் வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள் (Non Banking Finance Companies) என்று வரையறுக்கப் பெற்றுள்ளன. வங்கிகளின் விதிமுறைகளைப் போலவே இந்த நிதி நிறுவனங்களுக்கும் வரையறுக்கப்பெற்ற விதிமுறைகள் உண்டு. இந்தியன் கம்பெனிச் சட்டம் தலைமை வங்கியாகிய ரிசர்வ் வங்கி,



கே. என். சிற்சபேச[...]

கம்பெனிகளின் பதிவாள[...] கண்ட்ரோலர் கேபிட[...] இன்சூரன்ஸ் செக்யூரிட[...] எக்ஸ்சேன்ஜ் போர்டு ஆ[...] இந்தியா போன்ற பல அ[...] சாங்க நிர்வாகத்தின் சட்ட[...] களின்படிதான் ஒரு நிதி நி[...] வனம் தோன்றவும் இய[...] கவும் முடியும். இந்தத் து[...] யில் உள்ள எளிமையை[...] லாபத் தன்மையையும் கரு[...] எண்ணற்ற தனியார் நிதி நி[...] வனங்கள் கடந்த 16 ஆண்[...] களாக நம் நாட்டில் தோன்[...] யுள்ளன. ஒரு தொழிற்சா[...] தொடங்க வேண்டுமானா[...] நீர், நிலம், கட்டடம், மி[...]

ார வசதி, எந்திரங்கள், பெரிய முதலீடு, மூலப்பொருள், வேலையாட்கள், உற்பத்திப் பொருளின் தரம் - அதனை விற்கும் ஏற்பாடு இப்படி எத்தனை எத்தனையோ தேவைப் படும்போது - இவை எதுவும் இல்லாமல் தொடங்கக்கூடிய நிதி நிறுவனங்கள் எளிதில் தோன்றின. இத்துறையில் அனுபவம் மிக்கவர் நடத்தும் நிறுவனங்கள் மட்டுமே செழித்து வளர்கின்றன. ஏதாவது ஒரு தொழில்துறையில் அன்றி ஓங்கி வளர்ந்த தொழில் நிறுவனத்தைச் சார்ந்து தொடக்கப்பெற்ற நிதி நிறுவனங்கள் முன்னவற்றின் துணையால் பெருவளர்ச்சி பெற்றுள்ளதைக் காணலாம்.

மூலதனம்

நிதி நிறுவனத்திற்கு அடிப்படை மூலதனம் எனப்பெறும் நிதிதான். இதனை அந்தந்த நிறுவாகத்தினர் வேண்டிய அளவு தாம் முதலீடு செய்து எஞ்சியதைப் பொதுப் பங்குகளாக வெளியிடுகின்றன. பங்குகளாக மாற்றத்தக்கவை - மாற்றத்தகாதவை என்ற இரு வகை டிபஞ்சர்களும் வெளியிடப்பட்டு அந்தத் தொகை முன்பகுதியில் கடனாகவும், பின்பகுதியில் மூலதனமாகவும் பயன் தருகின்றன. ஒரு நிதி நிறுவனத்தின் அந்தந்த அதன் மூலதனம் - உபரி ஒதுக்கீடு - பொதுமக்களிடமிருந்து பெறும் வைப்புநிதி இதைப் பொறுத்தே அமைகிறது. இக்கால நிலையில் சாதாரண மூலதனத்தை வைத்துத் தொடங்கப்பெறும் நிதி நிறுவனங்கள் பயனற்றவை. மூன்று கோடி ரூபாய் மூலதனமுள்ள நிறுவனங்களின் பொதுப் பங்குகள்தான் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ஜில் பதிவு செய்யப்பெறும் தகுதியுள்ளவை. அத்தோடு 3 கோடி ரூபாய்க்குக் குறைந்த மூலதனமுள்ள நிறுவனத்தால் உருப்படியாக எந்தத் தொழிலும் செய்ய முடியாது.

வைப்பு நிதி

பொதுமக்களிடம் இருந்து வைப்புநிதி பெறும் சலுகை இந்த நிதி நிறுவனங்களுக்கு வழங்கப் பெற்றுள்ளது. இதற்கான விதிமுறைகள் ரிசர்வ் வங்கியினாலும், கம்பெனிச் சட்டத்தாலும் வரையறுக்கப் பெற்றுள்ளன.

கொடுக்கலாகும் வட்டி விகிதம், பெறலாகும் காலக் கெடு, திரும்பப் பெறும் முறை, வட்டி வழங்கு முறை, தரகர்களுக்கான நிலைகள், வைப்பு நிதிப் படிவம், வைப்புநிதி பெற விளம்பரம் செய்யும் முறை என்ற எல்லா நிலைகளுக்கும் வரையறுக்கப் பெற்ற விதிமுறைகள் உள்ளன. பொதுவாக வைப்புநிதிகளுக்கு வங்கிகள் வழங்கும் வட்டி விகிதத்தைவிட நிதி நிறுவனங்கள் அதிக வட்டி கொடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. தற்போதைய விதிகளின்படி நிதி நிறுவனங்கள் உயர்ந்தபட்ச வட்டியாக 15 சதவிகிதம் வழங்கலாம் என்றும், இதனைக் காலாண்டுக்கு ஒருமுறை வழங்கலாம் என்றும் ரிசர்வ் வங்கி விதித்துள்ளது. ஆனால் பெரும்பாலான நிதி நிறுவனங்கள் 2,3,4,5 ஆண்டு வைப்புநிதிகளுக்கும் இந்த உயர்ந்தபட்ச வட்டி விகிதத்தை அளித்து வருகின்றன.

வங்கிகள் வைப்புநிதி பெறும் காலக்கெடுவிற்கு உச்ச வரம்பு விதிக்கப் பெறவில்லை. 20 முதல் 40 ஆண்டுகால வைப்புநிதிகூட வங்கி பெற வாய்ப்பு உள்ளது. அதேபோல 45 நாட்களுக்கான வைப்பு நிதிகூடப் பெறலாம் என்று விதியுள்ளது.

ஆனால் நிதி நிறுவனங்களைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் 24 மாதங்களுக்கும் அதிகமாகவும் - அதிகபட்சம் 60 மாதங்களுக்கு மிகாமலும் வைப்புநிதி வழங்க வேண்டும். 24 மாதங்களுக்கு முன் தொகையைத் திரும்பப் பெற்றால் வட்டி கொடுக்கக் கூடாது. வைப்புநிதியில் 75 சதவிகிதம் கடன்பெறும் வசதி வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கு 1% அதிக வட்டி வசூலிக்கவும் விதியுள்ளது.

முகவர்கள்

வங்கிகளுக்கு இல்லாத வாய்ப்பு இது. வங்கிகள் முகவர்கள் மூலம் டெபாசிட் பெறும் வசதியோ விதியோ இல்லை. ஆனால் நிதி நிறுவனங்களுக்கு வைப்புநிதி பெறும் தொழிலாலேயே பெரிய வருமானம் ஈட்டும் முகவர்கள் உள்ளனர். இவர்களே பெரிய நகரங்களில் எல்லாம் கிளைகள் வைத்துள்ளனர். பல பத்திரிகைகள் நடத்தி நிதி நிறுவனச் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர்.

விளம்பரம்

இன்னவாறுதான் விளம்பரம் செய்ய வேண்டும் என்ற விதியையும் ரிசர்வ் வங்கி விதித்துள்ளது. ஒவ்வோர் ஆண்டுன் முடிவிலும் நிர்வாகக் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர் கையெழுத்திட்ட விளம்பர நகலை ரிசர்வ் வங்கியில் தாக்கல் செய்தபிறகுதான் அந்தச் செய்திகள் அடங்கிய விளம்பரம் செய்யவேண்டும். நிதிநிறுவனங்கள் என்ற விதியுள்ளது.

கடன்கள்

பொதுவாக வங்கிகள் கொடுக்க இயலாத சின்னஞ் சிறிய கடன்களைத் தவணை முறை - குத்தகை முறை (Hire Purchase - Leasing) என்ற முறைகளில் நிதி நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. குடும்ப வாழ்வின் இனிமைக்குப் பயன்படும் எண்ணற்ற சாதனங்கள், ஸ்கூட்டர்கள், கார்கள் போன்றவை வாங்கவும், பெரிய

பதைத் திரு.ராவ் விவரிக்கிறார்.

'ஸ்டாக் இன்வெஸ்ட்' (Stock invest) என்று தமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு விவேகமான திட்டத்தை லக்ஷ்மி விலாஸ் வங்கியினர் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

பங்குகள் உங்களுக்கு வழங்கப்படும் வரை உங்கள் பணம் வங்கியில் வைத்துள்ள உங்கள் அக்கௌண்டிலேயே இருப்பதோடு, அந்தக் காலகட்டத்துக்கு உரிய வட்டியையும் வங்கியினர் அளிக்கிறார்கள்.

'ஸ்டாக் இன்வெஸ்ட்'ஐக் கட்டணம் ஏதும் செலுத்தாமல் இலவசமாக வாங்கலாம். ஷேர்கள் (பங்குகள்) வழங்கப்பட்ட பிறகுதான் பங்குகள் ஒதுக்கும் கம்பெனியார் வங்கியிலிருந்து உங்கள் முதலீட்டைப் பெறுகிறார்கள். அப்படிப் பங்குகள் வழங்கப்படாவிட்டாலும் வட்டி பெறும் வசதி உண்டு.

பொது மேலாளர் குறிப்பாகக் கூறுகிறார்: "90 நாட்கள் நீங்கள் பெறும் வட்டியின் மூலம், மேலும் பல ஷேர்களை வாங்கக்கூடிய சக்தியைப் பெறுகிறீர்கள். இது முன்பு கிடைக்காத ஓர் அரிய 'போனஸ்' அல்லவா? எனவே காசோலைகள் தேவை இல்லை. 'ஸ்டாக் இன்வெஸ்ட்' திட்டமே போதுமே?"

இந்த 'ஸ்டாக் இன்வெஸ்ட்' திட்டத்தின்படி 500, 1000, 2500 என்ற விகிதங்களில் வங்கியால் டிராப்டுகள் வழங்கப்படும். தேவை ஏற்படின் அதிகமாகவும் வழங்கப்படும். இதற்கு வங்கியில் உங்களுக்கு ஒரு சேமிப்பு அல்லது கரண்ட் அக்கௌண்ட் ஒரு நல்ல தொகையுடன் இருக்க வேண்டும். பங் ஒதுக்கப்படும்போது கம்பெ யாருக்கும் உங்களுக்கு பாலமாக இருந்து வங்கியின பணம் செலுத்தி உத கிறார்கள். அப்படி ஒதுக்க படாத போதும் 'ஸ்டா இன்வெஸ்ட்' திட்டம் வங் யின் மூலம் உங்களுக்கு பயனுள்ள முறையில் தொ டாற்றுகிறது.

கேள்வி : ஷேர்கள் வழங்க படுவதற்கு முன்பே நாம் ஏ பணம் செலுத்த வேண்டும்?

பதில் : பங்குகள் ஒதுக்க பட்ட பிறகே பணம் செலுத் வும்; அதற்கு முன்னர் வே டாம்.

இதற்கு உங்களுக்கு இவ கள் உதவுகிறார்கள் தம 'ஸ்டாக் இன்வெஸ்ட்' திட்டத்தி மூலம்.

—க. பஞ்சாபகேச

வங்கியில் வட்டி விகிதங்கள் விளம்பரம்

26.4.92 செய்தித் தாளில் வெளியிடப்பட்டுள்ளன. குறைந்த கால வைப்பு நிதிக்குக் கூடுத வட்டி விகிதம் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இந்தப் புதிய வட்டி விகிதங்கள் 22.4.9 முதல் நடைமுறைக்கு வருகின்றன. இந்த வட்டி விகிதம் மேலும் மாறலாம் என்று விள பரத்தின் மூலம் அறிகிறோம்.

[இந்த விவரம் 26.4.92 செய்தித்தாள்களில் வந்தவை]

வங்கிகள் பெயர்	46 — 90 நாள் களுக்கு	91 - ஓர் ஆண்டுக் குள்	91 - 180 நாள் களுக்குக் குறைவாக	91 - ஓராண்டு	181 - ஓராண் டுக்குக் குறை வாக	1 ஆண்டுக் கும் அதற்கு மேலாக	சேமிப்புக் கணக்கு
இந்தியன் வங்கி லிட்.,	12.50%	12.50%		12.75		13%	6%
இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி லிட்.,	13		12.75%		12.50	13%	6%
தி லட்சுமி விலாஸ் வங்கி லிட்.,	13%	12.75%				13%	6%
தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி லிட்.,	12.50%	12.75%				13%	
தி ஸவுத் இந்தியா வங்கி லிட்.,	12.50%	12.75%				13%	6%
ஸெண்ட்ரல் பாங் ஆஃப் இந்தியா	12.50%				12.75%	13%	6%
ஓரியண்டல் பாங்க் ஆஃப் இந்தியா லிட்.,	12.50	-	12.75			13%	6%

புதிய பொருளாதாரக் கொள்கை ஒரு நிபுணரின் பார்வையில்...

பொருளாதார நிபுணரும், இன்டகிரேட்டட் ஷேர் ...ல்' என்கிற செய்திப் ...திரிகையின் ஆசிரியரும் பல ...லமாகப் பங்கு மார்க்கெட் ...றியும், கம்பெனி முதலீடுகள் ...றியும், ஆலோசனைகள் ...ங்கி வருபவருமான திரு. ...பத்தியநாதன் புதிய பொரு...தாரக் கொள்கை பற்றியும், ...தன் பாதிப்புகள் பற்றியும் ...ிமனித பொருளாதார முன் ...ற்றம் பற்றியும் சிந்தனைக் ...ிய கருத்துகளை அனுபவ ...வமாகக் கூறினார். அவற்றி...ருந்து சில பகுதிகள்:

கேள்வி : புதிய பொரு...தாரக் கொள்கையை மத்திய ... அமைச்சர் டாக்டர். ...மோகன் சிங் அறிமுகப் ...த்தியுள்ளார். இக்கொள்கை ...றிப் பலவாறாகப் பேசப் ...கிறது. இன்னும் சொல்லப் ...னால் நாட்டை அடமானம் ...த்துச் சூதாட்டத்தில் ...ங்கியிருக்கிறார்கள் என் ... அளவிற்கு டாக்டர் சிங்கை ...றம்சாட்டும் தரப்பினரும் ...க்கிறார்கள். இப்புதிய ...ாருளாதாரக் கொள்கை ...றிய உங்கள் கருத்து என்ன? ...த வகையில் இது நம் ...தாய முன்னேற்றத்திற்கு ...வும் என்று நினைக்கி...கள்?

பதில் : மிகவும் அருமை...ன முறையில் தீட்டப்பட்டது ...ன் இப்புதிய பொருளாதாரக் கொள்கை. ஆனால் இது எப்படி நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது என்பதுதான் கேள்விக்குறி. முதன் முறையாக இந்தியாவில் ஒரு பொருளாதார நிபுணர் நிதியமைச்சராகப் பதவி ஏற்று, பட்ஜெட் தயாரித்து, புதிய பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தி இருக்கிறார். எனவே விவரம் தெரிந்த ஒருவரால் தயாரிக்கப்பட்ட கொள்கை என்பதால் இது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. தனிமனிதனும் சமுதாயமும் ஒருங்கிணைந்து முன்னேறும் வகையில் இக்கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் பாதிப்புகளைப் பொறுத்திருந்துதான் சொல்ல முடியும்.

நாம் பலகாலமாக லைசென்ஸ் மற்றும் பர்மிட் முறைகளுக்கு அடிமையாகிப் போனவர்கள். லஞ்ச லாவண்யங்களையும், சிவப்பு நாடாக்களையும், அரசு முறைகேடுகளையும் சர்வசகஜமாக ஏற்றுப் பழகியவர்கள். அவரவர் காரியம் அவரவர்க்கு முடிந்தால் போதும் என்கிற குறுகிய சுயநல வட்டத்திற்குள் ஒடுங்கியவர்கள். இப்படிப்பட்ட சுயநல சமுதாயத்தில் மாற்றங்கள் கொண்டு வருவதென்பது சற்றே கடினமான காரியம் தான்.

எல்லாம் ஓபன் மார்க்கெட் சிஸ்டம் என்றழைக்கப்படும் சுதந்திரமான பொருளாதாரக் கொள்கையைக் கொண்டு வரும்போது, பர்மிட், லைசென்ஸ் போன்ற கட்டுப்பாடுகளுக்கு அவசியமில்லாமல் போய்விடுகிறது. இத்துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் முக்கியத்துவம் இழக்கிறார்கள். இதனால் லஞ்ச ஊழல்கள் பெரிதும் குறைந்து சமுதாயம் பொருளாதார மேம்பாட்டை அடையும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கேள்வி : புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதற்குப் பிறகு பொதுமக்களின் சேமிப்பு அதிகரித்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா? சேமிப்பவர்கள், குறிப்பாக மத்தியதர வகுப்பினர் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்?

பதில் : சேமிப்பு என்பது ஒருவகைத் தற்காப்பு. நாம் லட்சம் லட்சமாகச் சம்பாதித்துக் குவிக்கும்போது, நம்மிடமிருந்து வருமான வரி வசூல் செய்யும் அரசு, நாம் வருவாய் இன்றி நஷ்டமுறும் போது நம் உதவிக்கு வருவதில்லை. வயதானவர்களுக்கும், வேலையில்லாதவர்களுக்கும் அரசு எந்தவிதப் பாதுகாப்பும் தருவதில்லை. எனவே தனிமனிதச் சேமிப்பு என்பது எதிர்காலத்திற்கு இன்றியமையாததாகும்.

முன்பெல்லாம் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தார்கள். குடும்பத்தினர் அனைவரும் ஒரே தொழில் செய்து வந்தார்கள். ஆனால் இப்போது மாறிவரும் சமுதாயத்தில் கூட்டுக் குடும்ப முறை மறைந்து வருகிறது. கணவன் மனைவி இருவரும் சம்பாதிப்பதாலும், குடும்பம் சிறியதாக இருப்பதாலும் நிறையச் சேமிக்க முடிகிறது. இதனால் முன்பு எப்போதையும்விட மத்தியதர வர்க்கத்தினர் நிறையச் சேமிக்கத் தொடங்கியுள்ளனர். இது ஓர் ஆரோக்கியமான திருப்பமாகும்.

கேள்வி : வருமானவரிச் சட்டத்தின் கீழ் சில சலுகைகள் (80-L, 80CC, 80CCA) நீக்கப்பட்டிருப்பதால், மத்தியதர வர்க்கத்தினரின் வருமானமும் சேமிப்பும் பாதிக்கப்பட்டிருக்கிறதா?

பதில் : அதிக அளவு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகச்

நாணய மதிப்பு

இந்திய ரூபாய் நாணயத்தின் மதிப்பு, மற்ற நாட்டு நாணயங்களுடன் ஒப்பிடும் போது, மார்க்கெட் நிலவரப்படி எவ்வளவு, அரசின் அதிகாரப் பூர்வமான மதிப்பு எவ்வளவு என்பது தரப்பட்டுள்ளது.

நாடு	நாணயம்	மார்க்கெட் நிலவரம்	அதிகார பூர்வ விலை
அமெரிக்கா	1 டாலர்	31 – 05	25 – 40
இங்கிலாந்து	1 பவுண்டு	53 – 05	44 – 75
பிரான்சு	1 பிராங்க்	5 – 15	4 – 40
ஆங்காங்	1 டாலர்	3 – 75	3 – 20
சிங்கப்பூர்	1 டாலர்	17 – 10	14 – 75
கனடா	1 டாலர்	24 – 10	20 – 70
ஜப்பான்	100 யென்	21 – 50	18 – 13
சவுதி அரேபியா	1 ரியால்	7 – 70	6 – 40
ஐக்கிய அரபு எமிரேட்	1 திர்காம்	7 – 85	6 – 55
மலேசியா	1 ரிங்கட்	11 – 20	9 – 50

சொல்ல முடியாது. இந்தச் சலுகைகளை நீக்கியதால் பலதரப்பட்ட மக்களையும் வருமானவரிச் சட்டத்தின் கீழ் கொண்டுவர முடிகிறது.

முன்பெல்லாம் வருமான வரிச் சட்டத்தின் கீழ் கொடுக்கப் பட்டு வந்த சலுகைகளைப் பயன்படுத்தி மத்தியத்தர வகுப் பினர் நிறையத் தொகையைப் பல்வேறு தேசியச் சேமிப்புத் திட்டங்களில் சேமித்து வந் தனர். இனி இச்சலுகைகள் இல்லாததால் தேசியச் சேமிப்புக் கணக்கில் பணம் சேர்ப்பது குறையலாம். ஆனால் இதனால் மத்தியதர வகுப்பினர் பெரிதும் பாதிக்கப் படுவர் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் தேசியச் சேமிப்புக் கணக்கில் அதிக பட்ச வட்டியாக 11% மட்டுமே பெறமுடியும். அதுவே வெளி இடங்களில் முதலீடு செய்யப் படும் பணத்திற்கு 14% வரை யில் கூடுதலாக வட்டி கிடைக் கிறது. இதனால் கூடுதலாக வருமானவரி செலுத்தவேண்டி வந்தாலும் நிகர தொகை யாகக் கையில் மிஞ்சுவதை இஷ்டம்போல் முதலீடு செய்து கொள்ளலாம். பின்வரும் உதாரணத்தைப் பார்த்தால் 91-92 வரி விதிப்பிற்கும், 92-93 வரி விதிப்பிற்கும் உள்ள வித்தியாசம் புரியும்.

கேள்வி : வருமானவரியி லிருந்து தப்பிக்கக்கூடிய சேமிப்புத் திட்டங்களைக் கூற முடியுமா?

பதில் : புதிய பொருளாதாரக் கொள்கையின்படி, வருமான வரிச் சலுகைகள் நீக்கப்பட்டு விட்டதால் வரி செலுத்தாமல் சேமிக்கக்கூடிய பாதுகாப்பான திட்டம் ஏதும் இல்லை. ஆனால் பப்ளிக் பிராவிடண்ட் ஃபண் டில் சேமிக்கலாம். இதில் பணம் சேமிக்கும்போது அதி லிருந்து வருகிற வருமானத் திற்கு வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

கேள்வி : சிறப்பான சேமிப்புத் திட்டம் என்று எதைக் கருதுகிறீர்கள்?

பதில் : வரம்பு மீறாமல், வரவிற்குத் தகுந்தாற்போல் செலவு செய்து வருமானத்தைச் சேமிக்க வேண்டும். சேமிப்பு என்பதைக் குறுகிய, மத்திய மற்றும் நீண்டகாலச் சேமிப்புக ளாகப் பிரிக்கலாம்.

குறுகியகாலச் சேமிப்பு களுக்குக் கம்பெனி முதலீடுகள் லாபகரமானவை. மத்திய காலச் சேமிப்புகளுக்கு யூனிட் டுகள், இன்சூரன்ஸ், வங்கி டெபாசிட்டுகள் ஆகியவை உகந்தவை. நீண்டகாலச் சேமிப்புகளாக வீடுகள், மனைகள் மற்றும் விளை நிலங்களில் பணம் முதலீடு செய்யலாம். சிக்கனமாக வாழ் வதே சிறப்பான வாழ்விற்கு வழியாகும்.

பேட்டி : வனிதா

நிகர வருமானம் ரூபாயில்	வரிவிதிப்பு வரம்பிற்கு உட்பட்ட வருமானம்	செலுத்த வேண்டிய வரி 92-93	கையில் கிடைக்கும் நிகர தொகை	செலுத்த வேண்டிய வரி 92-93	கையில் கிடைக்கும் நிகர தொகை
50,000	27,000	1,000	49,000	4,400	45,600
10,0000	77,000	20,608	79,392	19,400	80,600
20,0000	1,77,000	74,039	1,25,963	64,200	1,35,800

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் 'பாங்க் ஆப் பரோடா'


'பாங்க் ஆப் பரோடா'வின் மண்டல அலுவலகத்தின் உதவிப் பொது மேலாளரான திரு. பி.வி. தீனதயாளு 'பாங்க் ஆப் பரோடா', பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றும் பணியை விவரித்தார். அதிலிருந்து சில பகுதிகள்:

"முதலில் உங்கள் வங்கியைப் பற்றி சற்றுக் கூறுங்கள்".

'பாங்க் ஆப் பரோடா' என்ற எங்கள் வங்கி, பரோடாவில் பரோடா மகாராஜாவினால் முதலில் தொடங்கப்பட்டது. சில ஆண்டுகள் தனியார் வங்கியாகச் செயல்பட்ட பின்பு தேசியமயமாக்கப்பட்டது. இப்போது உலக அளவில் இயங்கி வரும் 20 தேசிய வங்கிகளில் சேமிப்பில் இரண்டாவது இடத்தையும், லாபத்தில் இந்த ஆண்டு முதலிடத்தையும் வகிக்கிறது. நரசிம்மன் கமிட்டி பரிந்துரையின்படி, அங்கீகரிக்கப்பட்ட 3 அல்லது 4 தேசிய வங்கிகளில் எங்கள் வங்கியும் ஒன்றாகும். அகில இந்திய அளவில் 2300 கிளைகளும், சுமார் 20 வெளிநாடுகளில் 50 கிளைகளும் உடையது. எங்களுடைய மொத்த லாபம் 400 கோடியாகும்.

"உங்கள் வங்கியில் சேமிப்பதின் மூலம் வருங்காலத்தில் மிகவும் பயனடைய இயலும் என மக்களுக்குக் கூறி வருகிறீர்கள். வருவாயே இல்லாமல் அவதியுறும் மக்களுக்கு நீங்கள் என்ன உதவியளிக்கிறீர்கள்?"

சமீபத்தில் நான் டாக்டர் அம்பேத்கார் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்காகக் குடிசை வாழ் மக்கள் பகுதி ஒன்றிற்குச் சென்றிருந்தேன். அங்கு நான் கண்ட நிதர்சனமான உண்மை என் சிந்தனையைத் தூண்டியது. அந்த மக்கள் அண்ணல் அம்பேத்கருடைய வாழ்க்கையைப் பற்றி அறிவதற்குப் பதில், அன்று பேச வந்தவர்கள், பட்டினியின்றி வாழ என்ன கூறப்போகிறார்கள் என்பதை அறிவதற்



திரு. பி.வி. தீனதயாளு

காகவே கூடியிருந்தனர். ஒவ்வொரு குடும்பத்திலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி, வருவாயைப் பெருக்கிக் கொண்டால்தான் நல்ல முறையில் வசதியாக வாழ முடியும். மாநில, மத்திய அரசாங்கங்கள் வேலை வாய்ப்பிற்குப் பல திட்டங்களைத் தீட்டி வேலையற்றவர்களுக்கு உதவுகின்றன. இத்தகைய பல திட்டங்களோடுகூட, வங்கிகளும் சிறு தொழில் செய்பவர்களுக்கும், சுயமாக வேலை செய்து பிழைக்க உதவியாகக் கடன் உதவியளித்து வருகிறது. உதாரணமாக, 'காலணி' தைத்துப் பிழைப்பவர்களுக்குச் சிறு கடனாக ரூ. 200/- கொடுப்பதின் மூலம் 'மர ஸ்டாண்டு', 'பாலிஷ்' கருவிகள் வாங்க உதவுகிறது. 'எலக்ட்ரிகல் ரிப்பேர் ஷாப்' 'சைக்கிள் ரிப்பேர் ஷாப்' ஆகியவை நிறுவக் கடனுதவி அளிக்கப்படுகிறது.

"உங்கள் வங்கிகளில் சேமிப்புச் செய்யப்படும் நிதி. வளமான வாழ்க்கைக்கு எப்படி வழி வகுக்கிறது?"

ஒவ்வொரு குடும்பத்திலும் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளுக்குச் சிறு வயது முதலே சேமிக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும். எதிலுமே அகலக் கால் வைக்காமல், வருவாய்க்குத் தக்கவாறு திட்டமிட்டுக் குடும்பத்தை நடத்தினால் கட்டாயம் ஒரு சிறு தொகையைச் சேமிக்க முடியும்.

வருவாயில் இருந்து நாம் சேமிக்கும் சிறிய தொகை சில ஆண்டுகளில் வட்டியுடன் சேர்ந்து குட்டி போட்டுப் பெருகி விடுகிறது. நம் கண்களுக்கே தெரியாமல், நாம் சேமிக்கும் சிறு தொகை நாளடைவில் ஒரு ஆலமரமாக வளர்ந்து விடும்போதுதான் 'சேமிப்பு எவ்வளவு அற்புதமானது' என்று உணர முடியும். எங்கள் நண்பர் ஒருவரின் மகளுடைய திருமணத்திற்குப் பணம் போதவில்லை. அவருடைய மனைவி ஒரு பானையில் தான் யாருக்கும் தெரியாமல் சேமித்து வைத்த பணத்தை அவரிடம் காட்டிய போது அவருக்குக் கண்களில் கண்ணீரே வந்தது. அதேபோல் வருவாயில் ஒரு பகுதியைச்

சேமித்து வந்தால் கட்டாயம் திருமண வைபவங்கள் ஆகிய செலவினங்களுக்கும், எதிர்பாராத வைத்தியச் செலவிற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் சேமிப்பையும் முறையாகச் செய்ய வேண்டும். வங்கிகளில் நல்ல முறையில் சேவை கிட்டுவதாலும், எளிய முறையில் சேமிக்கவும், பணத்தைத் திருப்பி வாங்குவதும் சாத்தியமாக உள்ளதால் நிறைய மக்கள் வங்கிகளில் சேமிக்கின்றனர்.

எங்கள் வங்கியின் 'சேவிங்ஸ் பாங்க்' அக்கவுண்ட்டின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. எப்போதும் உள்ள 'சேவிங்ஸ், ரெகரிங், பிக்ஸட் டெபாஸிட்' திட்டங்களைத் தவிர ரெகுலர் - கம் - ஆர்.டி.திட்டம், மாத வருவாய் திட்டம், ஹெச்.எல்.ஏ. திட்டம் ஆகியவையுமுள்ளன. நாங்கள் புதிதாக அறிமுகப்படுத்தியிருக்கும் 'அக்ஷயா பென்ஷன் திட்டம்' என்பது குறிப்பிட்ட காலகட்டத்திற்கான ரெகரிங் டெபாஸிட் திட்டத்துடன், ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தொகையைப் பென்ஷன்போல் அளித்து, மிகுதியாக இருக்கும் தொகையை "டைம் டெபாஸிட்", "பாஸ்ட் ஆக்ஸஸ் டெபாஸிட் ஸ்கீம், (Fast Access Deposit Scheme) 'பிக்ஸட் டெபாஸிட் ஸ்கீம்' (செக் புத்தகத்துடன் கூடியது). 'பூனம் டெபாசிட் ஸ்கீம்' - இதில் செக் புத்தகத்துடன் கூடிய எஸ்.பி. அக்கவுண்ட்டுடன் குறுகியகால சேமிப்புத் திட்டம் 11% வட்டியைத் தருகிறது. இது 46 நாட்களுக்குக்கூட 11% வட்டியை ஈட்டித் தரும் குறுகியகால சேமிப்புத் திட்டம். இதில் சேமிக்கும் தொகை 'ஸேவிங்ஸ் அக்கவுண்ட்டில்' இருந்து "டைம் டெபாஸிட்"டிற்கு மாற்றி உபயோகப்படுத்துவதால் தேவைப்படும் காலத்திற்குப் பணத்தை எடுத்துக் கொள்ளலாம்.

இதைத்தவிர 'யதா சக்தி ஜமா யோஜனா' என்ற 'பிக்ஸட் டெபாஸிட்' திட்டத்தின் கீழ், எவ்வளவு தொகை முடியுமோ அவ்வளவு தொகையைத் தவணை முறையில் சேமிக்க முடியும். எங்கள் வங்கி 'பாப் கார்டு' என்ற 'கிரெடிட் கார்டு' முறையை அறிமுகப்படுத்தியிருந்தது. இப்போது 'பாப் எக்ஸ்குளுஸிவ்' (Bob exclusive) என்ற திட்டத்தின் மூலம் ரூபாய் 500/- செலுத்தினால் ஆகாய விமானங்கள் மூலம் விபத்து நேரிட்டால் ரூ. 10 லட்சங்களும், சாலை விபத்துகளுக்கு ரூபாய் ஐந்து லட்சங்களும், மனைவிக்கு 'நஷ்டஈடாக இரண்டு லட்ச ரூபாயும் அளிக்கப்படும். மருத்துவ உதவியாக ரூ. 15,000/-ம், விபத்துச் செய்திகளைத் தொடர்பு கொண்டு கூறுவதற்கு உதவ 15 மையங்களும், இண்டர்நேஷனல் ஹோட்டல்களில் ரூ. 15,000/- வரை தள்ளுபடியும் அகில இந்திய அளவிலான 2600 கிளைகளிலும் இந்தச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

“உங்கள் வங்கி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகிறது?”

எங்கள் வங்கியில் சேமிக்கும் ஒவ்வொரு நூறு ரூபாயிலும் 10% பணமாகவோ, அல்லது ரிசர்வ் வங்கியின் இடமாகவோ வைக்கப்படுகிறது. இது அரசாங்க வளர்ச்சித் திட்டங்களுடைய செலவினங்களுக்கு உபயோகப் படுத்தப் படுகிறது. 'ஸ்டேச்சுடரி 'லிக்விடிடி' விகிதத்தின் கீழ் வங்கிகள் சட்டப்படி 48% அரசாங்க பாண்டுகளாகவும் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட முதலீடுகளாகவும் கருதப்படும். இதுவும் அரசாங்கத்தால் நேரிடையாக எடுத்துக் கொள்ளப் படுகிறது. மீதி உள்ள 42% தொழில் நிறுவனங்களுக்கும், ஏற்றுமதி, வணிக, போக்குவரத்து சாதனங்கள் நிறுவனங்களுக்கும் அவற்றின் வளர்ச்சிக்கும் அளிக்கப்படுகிறது. முன்னோடித் துறைகளான வேளாண்மை, சிறுதொழில் நிறுவனங்களுக்கும், சிறு கடன் பெறுபவர்களுக்கும், அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்ட சிறு திட்டங்களுக்கும் அரசாங்க உத்தரவின் மூலம் கடனுதவி அளிக்கப்படுகிறது. முதலில் வேளாண்மைக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்த எங்கள் வங்கி, 1970 ஆம் வருடம் முதல் தொழில் நிறுவனங்களுக்கும் கடன் உதவி அளித்து வருகிறது.

— மாளவிகா

வீணை வித்தகர் திரை உலக மேதை எஸ்.பாலச்சந்தர்

'வீணை பாலச்சந்தர்' என்று அழைக்கப்படுகிற தனிச் சிறப்பைப் பெற்ற இசை மேதை பாலச்சந்தர் வீணைக்காகவே அவதாரம் செய்தவர் ஆவார்.

இவருடைய வாசிப்பின் போது வீணை வாசிப்பும் தெரியும், நாவிலிருந்து பொழியும் கீதமழையாகவும் அது பிரதிபலிக்கும். அப்படியொரு புதுப் பாணியை வகுத்தவர் இவர்.

ஐந்து வயதிலிருந்தே பூர்வ ஜன்ம வாசனையுடன் சங்கீத கலாதேவிக்குத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டார் இவர்.

இவர் வாசிக்காத வாத்தியங்களே இல்லையென்று சொல்லலாம். கஞ்சிரா, தபலா, ஆர்மோனியம், புல்புல் தாரா, மிருதங்கம், தில்ருபா இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு சிதார் வாத்தியத்தில் சிகரமாகத் திகழலானார்.

பிறகு நம்முடைய தென் மாநிலத்தில் புகழ் பெற்ற வாத்தியமாகிய வீணையைத் தாமாகவே அப்பியாசம் செய்து கலைமகளின் அனுக்கிரகத்தால் மகாவித்வானாகத் தன்னை உருவாக்கிக் கொண்டு, வீணா கான மழையைப் பொழியத் தொடங்கினார்.

நீண்ட நேரம் மெய்ம்மறந்து, சங்கீத ரசிகர்கள் இவர் வீணை வாசிக்கும்போது கலைமகளின் சந்நிதானத்தில் அமர்ந்து புனிதமான நாதவெள்ளத்தில் ஈடுபடுகிற அந்த மனோபாவத்தைப் பெறுவார்கள். சொல்லப் போனால் தங்களை மறந்து, ஒரு புனிதமான நாத உலகத்தில் ரசிகர்கள் ஒன்றி விடுவது வழக்கம். அப்படியொரு புதிய சகாப்தத்தை உருவாக்கியவர் பாலச்சந்தர் என்று சொன்னால் அது மிகையாகாது.

நவக்கிரகக் கீர்த்தனைகள் தீக்ஷிதரால் உருவாக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். அந்தக் கீர்த்தனைகளை எல்லாம் வாயாலும் பாடி, வீணையிலும் வாசித்துத் தெய்வீக இசைத்தட்டுகளாக நமக்கு வழங்கியிருக்கிறார்.

எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகங்களையும், 'எல்.பி' எனப்படும் நீண்ட நேர ரிகார்ட்களில் முழுங்கச் செய்திருக்கிறார்.

எத்தனையோ பட்டங்கள் இவரைத் தேடிக் குவிந்திருக்கின்றன.

அகில உலக நாடுகளிலெல்லாம் இவருடைய இசை மாரி பொழிந்திருக்கிறது.

இசைத் தத்துவங்கள் பற்றியும், அடிப்படை கோட்பாடுகள் பற்றியும், சென்ற இடங்களிலெல்லாம் இவர் இசைத்துக் காட்டி விளக்கம்



ந்த நிகழ்ச்சிகள் வரலாற்றில் பொறிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் ஆகும்.

இப்படி இசை மேதையாக விளங்கியது மட்டுமல்லாமல் திரைப்படத்துறையிலும் ஒரு புதிய மலர்ச்சியைத் தோற்று வித்தவர் பாலச்சந்தர் அவர் கள் ஆவார்கள்.

பன்னிரண்டு படங்களுக்கு மேல் நடித்திருக்கிறார்.

இவரைத் தமிழ்நாட்டின் ஆல்பிரட் ஹிட்ச்காக்' என் பார்கள். அந்த அளவிற்கு சஸ் பென்ஸ், பயங்கரம் என்ற இரண்டு உணர்வுகளையும் படங்களில் அமைத்து, பார்க் கின்றவர்கள் பிரமிக்கும்படி யாகப் பல படங்களை இயக்கி யும் இருக்கிறார்.

அந்த நாள், நடு இரவில், பொம்மை, அவனா இவன் போன்ற படங்களை உதாரண மாகச் சொல்லலாம்.

இவற்றில் 'அந்த நாள்' என்ற படத்தை இவர் இயக்கிய தற்காக அரசாங்க விருதும் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. மேலும் அந்தப் படத்தில் ஒரு பாட்டுக் கூட இடம் பெற வில்லை என்பதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

அரசாங்கம் இவருக்குப் 'பத்மபூஷன்' என்ற பட்டத்தையும் அளித்தது என்பதையும் நாம் இங்கே நினைவில் கொள் கிறோம்.

இவ்வாறு பலவகைகளிலும் புகழ் பெற்ற பாலச்சந்தர் அவர் களின் குடும்பத்தார் அவர் மறைந்து இரண்டாண்டுகள் முடிந்த நாளில், அந்த நினைவு நாளை இசை விழாவாகக் கொண்டாடினார்கள்.

பல வித்வான்கள் 12,13 தேதி களில் கச்சேரிகள் செய் தார்கள். 13ஆம் நாள் மாலை வீணை பாலச்சந்தர் அவர்கள் வாசித்த நூதன இசைக் கேஸட் ஒன்று வெளியிடப்பட்டது.

பாரதிய வித்யாபவனில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியின் போது ரசிகர்கள் திரண்டு கூடியிருந்தார்கள். முதல் கேஸட்டைச் சங்கீத கலாநிதி திருமதி டி.கே. பட்டம்மாள் அவர்கள் வெளியிட, இசை மேதை திரு என்.வி. சுப்பிர மணியம் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இசைத்துறையிலும், வய லின் வாத்தியத்திலும் மாமேதை யான குன்னக்குடி ஸ்ரீவைத்ய நாதன் அவர்கள் வீணை பாலச்சந்தர் அவர்களுடைய சிறப்பு அம்சங்களையெல்லாம் விரிவாக விளக்கிக் கூறி, நெஞ்சத்தை நெகிழ வைத்தார் என்றே சொல்லவேண்டும்.

கபிலர் விழா


இடையில் கட்டி இருக்கிற வேட்டி அவிழ்கின்றபோது தன்னையறியாமல் வேட்டி யைப் பற்றிக் கொள்ளுகின்ற கைகளின் அவசர உதவியைப் போன்று நண்பனின் துய ரினைத் துடைக்க உடன் வ கின்றவனின் குணத்திற்குப் பெயர்தான் நட்பு என்பதை வள்ளுவரின் குறள் "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்று பேசும். இதனின் விளக்கமாக வாழ்ந்த புலவர் தான் கபிலர் எனில் மிகையல்ல.

ஆம்; மூவேந்தரின் சதியால் வஞ்சகமாகக் கொல்லப்பட்ட வள்ளல் பாரியின் அருந்தவப் புதல்வியர் இருவரையும் தக்க வர்க்கு மணம் முடிக்கப் பல நாடு சுற்றினார். பல அரசர் களை வேண்டினார். திருமணம் செய்விக்கப் பெற்றதும் நண் பன் பாரியின் நினைவினை நெஞ்சில் நிறுத்தி யானும் உன்னோடு வருவேன் என்று வடக்கிருந்து உண்ணா நோன்பு மேற்கொண்டு இன்னுயிரைத் துறந்தார். இவ்வரிய காட்சி நடந்து ஏறக்குறைய இரண்டா யிரம் ஆண்டுகள் ஆனாலும், நமக்குக் குறளைப் போன்றே இன்றைக்கும் விளக்கமாக இருக்கிறது.



இந்தப் புலவன் கபிலன் வடக்கிருந்து உயிர் துறந்த மண் தான் திருக்கோவலூர். இந்த நட்பிற்கு வலிமை சேர்க்கும் இடமான திருக்கோவலூரில் ஆண்டுதோறும் திருக்கோவ லூர் பண்பாட்டுக் கழகத்தார் கபிலர் விழாவினை மே 1,2,3,4, தினங்களில் கவின்மிகு காட்சி யாய்க் கொண்டாடி வருகின் றனர். தமிழ் மாந்தர் அனை வரும் அவர்தம் வாழ்நாளில் ஒரு முறையாவது இந்த விழா வினைப் பார்ப்பது வாழ்க் கையில் நட்பு என்ற சொல் லுக்கு விளக்கமாய் அமையும்.

—டி.எஸ். தியாகராசன்.



சூன்ய கானம்

கவியரசு
நா. காமராசன்

நாசகாரப் படை - 'ராட்சஷக்
கொற்றக் குடை'யுடன்
நாலு பக்கமும் பவனி வந்தது - அலை
வீசி ... வீசி எழுந்த...
விஷ நதியின் கிளை நதியில்
'வன்முறைப்படகு' விட்டது.

'மரண மந்திரம்' ஓதிய ....
அக்கரைத் துறையில்
'துக்க தேவதை' பலிகள் கேட்டது.
வெப்பம் வீசிய தீயிலும்
வெடித்த குண்டுகள் சிந்திய புகையிலும்
கோபுரங்கள் சாம்பலானதே! — அவன்
கொள்கை என்பது 'சூன்ய கானமே..!'

வண்ண விளக்குகள் அமைந்த மேடைகள்
வாழ்த்துக் கூறும் தொண்டர் கூட்டங்கள்...
கண்களைக் கட்டியே பொய்வலை விரித்தவன் - அவன்
கனவுப் பிணமாய் மறைந்து போனவன்!

✤ 'தோராணி சங்கர்' எழுதிய 'ஹிட்லரின் காதல் ரகசியங்கள்' என்ற நூலைப்படித்தபோது எனக்குள் உருவான 'உருவக விமர்சனக் கவிதை' இது!



பேசும் நயனங்கள்

பாலாஜி பைன் ஆர்ட்ஸ் ஆதரவில் நடந்த நாட்டிய விழாவில் கனடா நாட்டைச் சேர்ந்த ஜனனி ஸ்வாமியின் பரத நாட்டியம் இடம் பெற்றது. பம்பாய் நாட்டியப் பள்ளியில் நிருத்திய கீதாஞ்சலி குருவான திருமதி ராஜி நாராயணன் அவர்களிடம் பரதம் பயின்றுள்ளார்.

தூரக்கிழக்கு நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பல நாட்டிய நிகழ்ச்சிகள் அளித்துள்ள ஜனனி பொறியியலில் மட்டுமின்றி இசையிலும் தேர்ச்சி பெற்று இசை நிகழ்ச்சிகளும் அளித்து வருகிறார். ஆட்டத்தில் அசைக்க முடியாத ஈடுபாடு. அபார வயஞானம் பேசும் நயனங்களுடன் பேசும் பாதங்கள் என்றால் மிகையில்லை.

குமாரி எஸ்.பிரியதர்ஷனி

தமிழறிஞரும் 'தமிழரசு' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான திரு.பி.சி.லிங்கம் அவர்களின் பேத்தியும், பவானி பிரஸ் உரிமையாளர் திரு. சி.வி. பிள்ளை திருமதி சாந்தா பிள்ளையின் மகள் குமாரி எஸ்.பிரியதர்ஷனி பரத நாட்டிய அரங்கேற்றம் அண்மையில் சென்னை ராணி சீதை ஹாலில் நடைபெற்றது. இவர் கலைமாமணி சுவாமி மலை திரு.எஸ்.கே. ராஜரத்தினத்தின் மாணவி.

இந்த நிகழ்ச்சிக்கு ஜுபிடர் கல்சுரல் அகடமியின் ஜுபிடர் சீனிவாசன் தலைமை தாங்கினார். மியூசிக் அகடமியின் செயலாளரும், இசை விமரிசகருமான திரு. டி.எஸ். பார்த்தசாரதி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஆல்ரவுண்டர்

வழக்கறிஞர் திரு. விஜயராகவன் - திருமதி ஆஷா விஜயராகவன் தம்பதிகளின் அருமை மகளும், பரதாஞ்சலி நாட்டியப் பள்ளி மாணவியுமான மிருதுலா விஜயராகவன் பரதநாட்டிய நிகழ்ச்சி அண்மையில் தியாகராய நகர் கிருஷ்ண கான சபா அரங்கில் இடம் பெற்றது.

எறிபந்து போட்டிகளில் முதன்மையாக நிற்கும் இவர் கிரிக்கெட், டென்னிஸ் ஆகிய விளையாட்டுகளையும் விடவில்லை. தான் ஒரு "ஆல்ரவுண்டர்" என்பதை நிலை நிறுத்தி வருகிறார். — தங்கம்





நடனம் வழி ரமணமகரிஷியின் மகிமை பரப்புபவர்

அண்மையில் ஸ்ரீகபாலி ஃபைன் ஆர்ட்ஸ் சார்பில் நடை பெற்ற நாட்டிய விழா வில் அமரர் கலைமாமணி பி.எஸ். குஞ்சிதபாதம் பிள்ளை யின் மாணவியான செல்வி ஸ்ரீவித்யா பாலசுப்ரமண்யம் அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சி இடம் பெற்றது. "ரஸா" என்னும் ரமண மகரிஷி யின் மகிமை பரப்பும் இயக்கத் தின் ஸ்காலர்ஷிப் மாணவி. பர தாஞ்சலி எனும் பரதநாட்டியப் பள்ளியை நடத்தி வருகிறார்.





ஒளிமயமான எதிர்காலம்

பார்க் – டேவிஸ் கம்பெனி ஏரியா மானேஜராக விளங்கும் திரு விஸ்வநாதன், ஸிண்டிகேட் பேங்க் தியாகராயநகர் கிளை யில் கேஷியராக விளங்கும் ஹேமா தம்பதிகளின் அருமை மகள்களுமான செல்வி தீபா, செல்வி அர்ச்சனா பரத நாட்டியம் தியாக ப்ரம்ம கான சபா ஆதரவில் இடம் பெற்றது. நாட்டிய உலகில் அருமை யான ஒளிமயமான எதிர்காலம் இவர்களுக்கு உண்டு என் பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பாங்கியில் பணிபுரிந்தே பாங்குடன் ஆடுபவர்.

அண்மையில் கபாலி ஃபைன் ஆர்ட்ஸ் சார்பில் நடை பெற்ற நாட்டிய விழாவில் குமாரி சுஜாதா சுகுமார் அவர் களின் பரத நாட்டிய நிகழ்ச்சி இடம் பெற்றது. இதுவரை 75 நாட்டிய நிகழ்ச்சிகளுக்கு மேல் நிகழ்ச்சி அளித்துள்ளார் சுஜாதா. இவரது சகோதரி மஞ்சுளா சுகுமார் கர்நாடக இசையில் வித்துவான் பட்டம் பெற்றவர். தனது தங்கையின் நாட்டியக் கச்சேரிக்கு இவர் மிக அருமையான இசை ஒத்துழைப்பைத் தருகிறார். அருமையான ஜோடிகள் என் றால் மிகை யில்லை. — தங்கம்



அடிப்படை வலிமை.

பார்வைக்கு வலிமையாகத்
தோற்றமளிப்பவை பஞ்சுபோல் பறந்து
மறைந்ததை நாம் பார்த்திருக்கிறோம்.
ஆனால், உண்மையான வலிமை என்பது
ஊறி, ஊடுருவி இருப்பது. நிலைத்து
நிற்கக்கூடியது. அதாவது, அடிப்படை
வலிமை. இன்றைய தொழில்துறையில்
அதற்கோர் ஒப்பற்ற உதாரணம் ஸ்ரீராம்
குரூப் நிறுவனங்கள்.

ஆம். அடிப்படை வலிமை. தொழில்
வல்லமை, நேர்மை, அனுபவத்திறன்,
மற்றும் உங்களின் தேவைகள்,
லட்சியங்கள் இவற்றைக் கருத்தில்
கொண்டு செயலாற்றும் குறிக்கோள்.
இக்குணங்களின் சேர்க்கைதான் அந்த
அடிப்படை வலிமை. ஸ்ரீராமின்
அடிப்படை வலிமை.

ஸ்ரீராம். ஒரு மாபெரும் மக்கள் இயக்கம்

ஸ்ரீராம் நிறுவனங்கள்

10, கஸ்தூரி எஸ்டேட், சென்னை-600 086.
தொலைபேசி: 454805/452113

ADWAVE/SGC/4383

சென்னை - 2 உள்ள ஆர்.ஜே. ப்ராசஸ் ஆப்செட் அச்சகத்தில் அச்சிட்டவர் : ஆர். ஜனார்த்தனன். ஸ்ரீராம் டிரஸ்ட், சென்னை - 600 001 சார்பில் வெளியிட்டவர் : ஏ.வி. எஸ். ராஜா. ஆசிரியர் - விக்கிரமன், நிர்வாக அலுவலகம், த.பெ.எண். 5043, 145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600 001. தொலைபேசி : 528545.